வித்தியா ரஞ்சகம்

அல்லது

அறிவிற்கு உணவு

R6
N11
12093
...IZED

பிரஜாநுகூலன் பிரசுரங்கள்.

பிரபஞ்ச விலாஸம்.

புஸ்தகம் 5.

# வித்தியா நவநீதம்

அல்லது

## அறிவிற்கு உணவு.

—:o:—

இஃது

திரிச்சிராப்பள்ளி "பிரஜாநுகூலன்" பத்திராதிபரும்
"திராவிடாபிமானி" உபபத்திராதிபரும்,
பல சிறந்த நூல்களின் ஆசிரியருமான

**எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு**

அவர்களால் இயற்றப்பட்டது.

---

**கி. இராம ஐயரவர்களால்**

பார்வையிடப்பட்டு

பண்டிதர் T. S. இராஜம் ஐயர் அவர்கள் இயற்றிய
திரிச்சிராப்பள்ளி சரித்திரத்துடன்

---

திரிச்சிராப்பள்ளி:

பாக்கியவிலாஸ் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] 1911. [விலை அணா 14.

TITLE PAGE PRINTED AT THE KALYANASUNDRAM PRESS, TRIPLICANE, MADRAS.

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் வருடம் 83
செப்பனிட்டு முடித்த
மாதம் வருடம் 83
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

120934

பிரஜாநுகூலன் பிரசுரங்கள்.

பிரபஞ்ச விலாஸம்.

புஸ்தகம் 5.

# வித்தியா நவநீதம்

அல்லது

## அறிவிற்கு உணவு.

—:o:—

இஃது

திரிச்சிராப்பள்ளி "பிரஜாநுகூலன்" பத்திராதிபரும்
"திராவிடாபிமானி" உபபத்திராதிபரும்,
பல சிறந்த நூல்களின் ஆசிரியருமான

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு

அவர்களால் இயற்றப்பட்டது.

—

கி. இராம ஐயரவர்களால்

பார்வையிடப்பட்டு

பண்டிதர் T. S. இராஜம் ஐயர் அவர்கள் இயற்றிய
திரிச்சிராப்பள்ளி சரித்திரத்துடன்

—

திரிச்சிராப்பள்ளி:
பாக்கியவிலாஸ் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] 1911. [விலை அணா 14.

TITLE PAGE PRINTED AT THE KALYANASUNDRAM PRESS, TRIPLICANE, MADRAS.

# முகவுரை.

OFFICE OF THE REGISTRAR OF B[...] 12 [...] 1911

சென்ற வருடத்தில் ஓர்நாள் இராப்பொழுது காவிரியாற்றின் கரையோரமாய் ஆலோசனை பண்ணுகச் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஸந்திரோதயமாய்ப் பத்து நாழிகை யிருக்கும். காவிரி நதிக்கரை நிர்மாநுஷ்யமான காடுபோலாயிற்று. துன்பமென்ற இருண்டபேயை யோட்டி வெற்றி கொண்டேன் என்று ஸந்திரன் சிரித்துவளர்ந்தான். இன்னும் துன்பம் எங்கேயாயினும் ஒளிந்திருக்கின் சொல்லு; நான் வெட்டித்தள்ளுகிறேன்; என குளிர்ந்த தென்றல் காதோடு சொல்லி வீசிற்று. காவிரி நங்கை தன் நாவை அலை அலையாக அசைத்து இனிமையான கந்தருவக் குரலிலே கம்பீரமான ஸங்கீதம் பாடினாள். அப்பொழுது தான் என்னுடைய ஆலோசனையும் ஒரு விதமுடிவுக்கு வந்தது.

அந்த ஆலோசனையின் பயனாகத் தான் நான் இப்போது ஜனகாமோஹனசாதுர்யம், நாகரிகபாரிஜாதம், வித்தியாநவநீதம், சுகுமாரதிலகம் ஆகிய இந்த நான்குவிதமான புஸ்தகங்களையும் பிரசுரஞ்செய்ய முற்படலானேன். இவைகளனைத்தும் என்னால் பிரசுரமாகிவரும் "பிரஜாநுகூலன்" பத்திரிகையில் அப்போதைக்கப்போது வெளிவந்தவைகளாகும்.

ஆனால் இந்தப்பதிப்பிலே சில விசேஷங்க ளிருக்கின்றன. மட்டமான கதைகள் இரண்டொரிடத்தில் கலக்கப்பட்டுள்ளது. ஆதலால் நான் ஏழை என்பதாக இதைப்படிப்பவர்கள் எண்ணிக்கொள்ளக்கூடும். ஆனால் என்னுடைய நெஞ்சம் ஏழ்மையுடையதன்று என்பதைமட்டும் அவர்கள் அறிந்து கொள்ளவேண்டுமென்பது என்னுடைய மனோவிருப்பம்.

கடைசியாக ஒருவிஷயம் மட்டிலும் இங்கு பலமாக அறிவுறுத்தற்குரியது. இந்தப் பதிப்பிலே இலக்கபேதங்கள் ஆங்காங்கு தோன்றுமானாலும் பக்க பேதங்கள் இடையாதென்பதை நமது வாசகர்கள் கவனத்தில் வைக்கவேண்டும். அத்துடன் பிரஜாநுகூலன் பத்திரிகையின் மேலும் என் மீதும் அபிமானம் பாராட்டி ஆதரணை செய்யும்படி நான் கேட்டுக் கொள்வதற்கு எனக்குச் சுதந்தரமுண்டா, இல்லையா என்பதையும் கிருபை கூர்ந்து தெரிவிக்கும்படி கோருகிறேன். ஸர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பாராக.

திரிச்சி,
1—7—11.

N.B.—இப்புஸ்தகங்கள் விரும்புவோர் திரிச்சிறாப்பள்ளி "பிரஜாநுகூலன்" ஆபீஸுக்கு எழுதிக்கொள்ளவும்.

ஓம்.

பரப்பிரம்மணே நம:

# வித்யா நவநீதம்.

## செல்வமும் சுகாநுபவமும்.

இவ்வுலகமுழுதும் ஒருவனுக்கு ஏகசக்ரமாய் ஆளும்படிக் கிடைப்பதாக வைத்துக்கொள்வோம். அதனால் அவன் வாஸ்தவமாய் அடையப்பெறுவதென்ன? எல்லாம் நீர்க்குமிழி போன்ற பகட்டுப் பொருள்களையொழிய வேறல்ல. அவனவன் ஜீவித்திருக்கிற சொற்ப காலத்தில் அவனவன் கண்டனுபவித்தது எவ்வளவோ அவ்வளவுதான் அவனவனுக்கு உண்மையானது. உலகத்தின் விளைவுகளெல்லாம் காலக்கிரமமாய்க் கொஞ்சங் கொஞ்சமாயே நமக்கு உபயோகப்படுகின்றனவாதலால் எல்லாப் பொருள்களையும் நாம் அனுபவிப்பது அசாத்தியமானது. நம்முடைய எண்ணப்படியே இவ்வுலக முழுதும் ஒருவனுக்குக் கைவசமாய்க் கிடைத்ததானால் அதனால் அவன் விசேஷமாய்ப் பெறும் பேறென்ன? மார்கழி மாதத்தில் மல்லிகை முல்லை முதலிய வஸந்த காலத்து மலர்களும், மாம்பழ முதலான பழங்களும் வேண்டுமென்றால் கிடைக்குமா? மேலும் இவ்வுலகத்தில் மறைந்தும் எளிதில் நசிக்கின்றனவாயும் சொரூபமே தெரியாதவைகளாயும் அநேகம் பொருள்களிருக்கின்றன. இவ்வகைப் பொருள்களால் அவன் பெறுகிற நன்மையும், கடலிலிருக்கின்ற பொருள்களால் கடல் முழுதும் ஆள்பவன் பெறுகிற நன்மையும் ஒன்று தான். தான் சுலபமாய் எடுக்கக்கூடிய இடத்திலுள்ள மீன் முதலிய நீர்வாழ் ஜந்துக்களும் பொருள்களுமாத்திரமே கடலதிகாரியினுடைய பொருள்கள், அவன் கைக்குக் கிட்டாத விடத்திலுள்ள பொரு

ள்களைப்பற்றி மற்றவர்களை விட அவனுக்கு விசேஷமென்ன? முத்துச்சிப்பிகளெல்லாம் அவனுக்காகவே முத்துச்சிப்பிகளையுண்டாக்கவில்லை. அப்படியே பூமியின் உட்புறத்தில் ஒருவர்க்குந்தெரியாமல் அநேகம் ஐசுவரியங்கள் அடங்கியிருக்கின்றன. ஆதலால், வாயுமண்டலத்தை சுவாதீனம் பண்ணிக்கொண்டிருப்பதனால் அவனுக்கு எவ்வளவு லாபமோ அவ்வளவுதான் இவ்வுலக முழுதும் ஆள்கிறவனுக்குக் கிடைக்கிற லாபமும். இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் இத்தன்மையன வென்றும், அவற்றின் சொரூபம் இம்மாதிரி யென்றும் தெரியாமலிருக்கிற மட்டும் அந்தப்பொருள்களின் உரிமையும் அவனுக்கு இல்லைதான்.

சகல லோகாதிபதியாயிருப்பவன் இவ்வுலகத்தில் மிகவும் சிறந்ததாயும் அருமையாயுமிருக்கின்ற பொருள்களை அனுபவிக்கிறான், மிகவும் எளியவர்கள் அற்பமான பொருள்களை அனுபவிக்கிறார்கள்; இது தான் வேற்றுமை என்னலாம். சர்வலோகாதிபதியாயிருப்பவன் சூரியனை அதிகமாய் எரியவொட்டாமல் அடக்கித் தன் சபாமண்டபத்தில் சிறிய நக்ஷத்திரங்கள் வந்து அழகாய்ப் பிரகாசிக்கச் செய்துகொள்ள மாட்டுவானா? தன்னிஷ்டப்படி பரிமளத்தோடு இளங்காற்று வீசச்செய்துகொள்வானா? தான் வாயுமண்டலத்தில் விநோதமாய்ப் பறந்து போகச்செய்து கொள்வானா? அவன் குடிகளுடைய புலத்தில் பெய்கிற மழையே அவனுடைய சிங்காரத்தோட்டத்திலும் பெய்கிறதோ, அல்லது அவனுக்கென்று தனியே வேறொரு பொன் மழை பெய்கின்றதோ?

இதுவுமல்லாமல் தன்னுடைய ஆடை ஆபரணங்களென்றும் தனக்கே யுரியவை யென்றும், எந்தெந்தப் பொருள்களை அவன் பெருமை பாராட்டி வைத்துக்கொண்டிருக்கிறானோ, அந்தப்பொருள்கள் அவனைவிடப் பிறர்க்கே அதிகமாய் உபயோகமாகின்றனவல்லவா? முதலில் அவன் திவ்வியமான பீதாம்பரமும் பட்டாடையும் தரித்துக்கொள்ளுப்படியாகிற தென்பதைப்பற்றிப் பேசுவோம். அதைத் தரித்துக்கொள்ளுகிறவன் அதனால் அடையும் பயனென்ன? சரீரத்தைச் சூடாகவும் சுத்தமா



கவும் நாகரிகமாகவும் வைத்துக் கொண்டிருப்பதுதானே. இந்த லாபம் சாதாரணமாயும் சுத்தமாயுமிருக்கிற உடைகளால் உண்டாகமாட்டாதா? உயர்ந்த உடைகளை உடுப்பதனால், மற்றவர்களைப் போலல்லாமல் அவனிடத்தில் ஒரு அழகு உண்டாகிறதென்கிறீர்களோ? பார்ப்போர் கண்களைக் களிக்கச்செய்வதுதானே அழகின் பயன்; சந்திர பிம்பம் போன்ற முகமும், தாமரை மலர் போன்ற கண்களும், தன் பிரதிபிம்பத்திலல்லாமல் நேராக யாருக்காவது தோன்றுமா? தன் அழகைத்தானே நேராய்ப் பார்த்துப் பெருமையடைகிறவன் எவனாவது உண்டோ? அழகு செய்து கொண்டிருப்பவனைக் கண்டு களிப்படைகிறவர்கள் நாம்; அவ்வழகுக்காரனோ, தன்னைக்கண்டு நாம் உவப்படைந்தோமென்பதனால் தானும் உவப்படைகிறான். ஆதலின் நம்முடைய சந்தோஷத்தினால், தனக்கும் கொஞ்சம் சந்தோஷமுண்டாயிற்றென்று அவன் வீண் எண்ணமெண்ணிக்கொள்கிறானே யொழிய அவனுக்கே சொந்தமாய் எள்ளளவும் இனிப்பு உண்டாவதில்லை.

ஒரு பிரபுவினுடைய சிங்காரத்தோட்டங்களில் புகுந்து பார்ப்பதனால் ஒரு எளிய மனிதனுக்கு உண்டாகும் ஆநந்தம் அந்தப் பிரபுவுக்கு உண்டாகும் ஆநந்தத்திற்குக் குறைந்ததன்று. எளியவனுக்கு அந்தந் தோட்டத்தில் புசிக்கப் பழம் சுலபமாய்க் கிடைக்க மாட்டாதென்றாலும், மற்றப்புலன்களுக்கு உண்டாகும் சுகம் அனைவர்க்கும் ஓரே விதந்தான். பறவைகளெல்லாம் அனைவர்க்கும் ஒரேமாதிரியாகவே கானம் பண்ணுகின்றன. பூக்களும் எஜமானனுக்கு எந்த வாஸனையோ அதே வாஸனையே எளியவனுக்கும் கொடுக்கின்றன. நல்ல காற்றும் அவன்மேல் வீசுகின்றது. நல்ல காட்சிகளும் அவன் கண்ணுக்குத் தோன்றுகின்றன. இப்படி அந்த யஜமானனுக்கு என்னென்ன சுகமுண்டோ அவையாவும் இந்த எளியவனுக்குமுண்டு. ஆனால் யஜமானன் அந்தச் சுகத்திற்காக அளவற்ற பொருளும் செலவழித்துப் பிரயாசமும் படுகிறான்; எளியவனுக்கு இவை ஒன்றுமில்லை. இது தான் இவர்களுக்கு உள்ள பேதம்.

இவ்வுலகமுழுதும் ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் இப்படியே. அதைக்கொண்டு இன்னது செய்கிறதென்று அவனுக்குத் தெரியாது. மனிதருடைய திறமைக்கு எவ்வளவு சாத்தியமாகுமோ, அதைவிட விசேஷமாய் அவன் ஒன்றையும் உபயோகித்துக் கொள்ளமாட்டான். சோறு தண்ணீர் துணி தவிர மற்றொன்றையும் அவன் சொந்தத்திற்கு உபயோகித்துக் கொள்ளப்போகிறதில்லை. சாதாரணமான செல்வத்தைக்கொண்டு நடத்தப்படுகிற காரியத்திற்கல்லாமல், ஒரு பெருங்காரியத்திற்காக இவ்வுலகம் ஒருவனுக்குக் கொடுக்கப்படுமானால், அவன் விசேஷ சாமர்த்தியங்களோடு படைக்கப்பட்டவனாயிருக்க வேண்டும். தேவதூதர்களுடைய போக்குகள் கூட அவனுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், தன் ஆஸ்தி இவ்வளவென்று கணக்கிட்டுக்கொள்ளக்கூடாது. ஒரு பூதத்தைப்போலப் பெருவயிறு படைத்தவனாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால், சவுக்கியமான தேஹஸ்திதியுள்ள சாதாரணமான ஒரு மனிதனை விட அவன் விசேஷமாய்ப் புசிக்கும்படியிராது. சூரியனைப் போல் மிகப்பெரிதாயும் பளபளப்பாயுமிருக்கிற கண்களும், மனோ வேகமாய் ஓடுந்திறமையும், பிர்மாண்டம் போலப் பெருத்த தேகமும் அவனுக்கு இருக்கவேண்டும். இல்லாவிட்டால், ஒரு சிறு குன்றின்மேலேறிச் சுற்றிலுமுள்ள காட்சியைக் காண்பதனாலும், ஒரு சிறு வீட்டிற் குவித்திருக்கும் பொன் குவியலைக் காண்பதனாலும், ஒரு சிற்றறையிற் சேர்த்திருக்கும் பலவித பூஷணங்களைப் பார்ப்பதனாலும், நாள்தோறும் சிருஷ்டிப் பொருள்களைப் பார்த்துக் கொண்டிருப்பவனுக்கு எவ்வளவு ஆநந்தமுண்டாகுமோ, அதைவிட விசேஷமாய் லோகாதிபதியாயிருப்பவனுக்கு ஒருபோதும் ஆநந்தமுண்டாகாது. ஏனெனில், ஆகாயத்தில் தோன்றும் அழகும், அங்கே வச்சிரமணிபோற் பிரகாசிக்கும் பல உருவங்களுமிருக்கட்டும், மனிதர்களுடைய கண்களிலாகட்டும் கருடன் முதலிய சில பக்ஷிகளுடைய கண்களிலாகட்டும் தோன்றும் ஒளி லோகாதிபதியின் கிரீடரத்தினங்களின் ஒளியைவிட எத்தனையோ பங்கு சிறந்ததும் அற்புதமானதுமல்லவா?



ஆதலால் ஞானமும் அறிவுமே மனதிற்கு விசேஷமாய் விநோதமுண்டாக்க முதற் கருவிகளாயிருக்கின்றன. அதிகமாய் அறிவுடையவனே மனக்களிப்பும் பெருமையும் சவுக்கியமுமாய் வாழுந்திறமையுடையவனாயிருக்கிறான். அது அறிவில்லாத ராஜாக்களுக்காகட்டும், தனவான்களுக்காகட்டும் ஒருபோதும் கிடைக்காது. இந்த விஷயத்தில் விசேஷமாய் விருத்தியடைவதற்கு அவனவனுடைய சாமர்த்தியம் அல்லது அறிவே முக்கியமானது. சிருஷ்டிப் பொருள்களுடைய தன்மையையும் அளவையும் குணத்தையும் முடிவையும் நன்றாய் அறிந்திருப்பவர்கள், அந்தப்பொருள்களைக்கண்டு களிப்படைய வல்லமையுடையவர்களாயிருந்தாலும், அதேகாலத்தில் அவர்களுக்கு இவ்வுலகத்துப்பொருள்களெல்லாம் வீணானவையென்றும் திருப்திகரமானவையல்லவென்றும் தோன்றுகின்றன. ஆதலால், அவை வீணானவை என்னும் எண்ணமுங்கூட உண்டாவதனால், அந்தச் சுகாநுபவமும் சிறந்ததன்று. அறிவோ எல்லாவற்றையும் நன்றாய் விளக்கிக்காட்டிப் பேரின்பத்தைத் தருகின்றதாதலால் அதனால் உண்டாகும் ஆநந்தத்திற்கு ஒப்பானதொன்றுமில்லை. நல்லறிவே எல்லா நன்மைக்கும் நற்றாய்.

## எறும்புகள் பாம்புகளைக் கொல்வது யதார்த்தமா?

சாதாரண ஐரோப்பிய எறும்பு மற்றைய தேசங்களில்காணப்படுகிறவைகளைப்போல் அவ்வளவு மூர்க்கப் பிராணியாகத்தோன்றுகிறதில்லை. ஐரோப்பிய வீடுகள் கொல்லைகளில் சாமானியமாய் வாழுகிற சிற்றெறும்பு, தன்னிலும் பலவீனமுள்ள பூச்சிகளையன்றி வேறொன்றையும் தாக்குகிறதாகவோ கொல்லுகிறதாகவோ யாதொரு வர்த்தமானமும் கேட்டும் வாசித்துமிருப்பதில்லை. அவைகள் தனியே மேற்கொள்ளக்கூடாத ஒரு பூச்சியைச் சந்தித்தால், மற்றவைகளுக்குச் செய்தி அறிவிக்கவே, கெஞ்ச,

நேரத்துக்குள் அநேகம் வந்து சண்டைக்குக்கூடும். எதிர்க்கப்பட்ட பிராணி ஓட்டம் பிடித்து விடும். சமர் வழக்கமாய் எறும்புகளுக்கே ஜெயமாக முடியும்.

எறும்பு வகைகளில் எல்லாம் சாரதி எறும்பு (Driver Ant) என்னப்பட்டதே அதிக பயங்கரமானது. அது ஆப்பிரிக்காவின் மேல்கரையில் காணப்படுகிறது. அவ்விடத்தில் சஞ்சரிக்கிற டாக்டர் ஸாவேஜ் (Dr. Savage) என்னும் அமெரிக்க மிஷனெரி இந்தச் சாரதி எறும்பைக் குறித்து மிகவும் விநோதமான வர்த்தமானம் தெரிவித்திருக்கிறார். அதாவது:—"இந்தப் பிராணியைவிட அதிக குறும்புத்தனமும் வெற்றிபிடிவாதமுமுள்ள பூச்சி ஒன்றுமில்லை. தங்கள் வழியில் எதிர்ப்படுகிற எந்த வஸ்துவையும் அவைகள் மூர்க்கமாய் எதிர்க்கும். ஜெயிக்கவேண்டும் அல்லது மரிக்கவேண்டும் என்பதே அவைகளது பிரமாணம். ஜீவஜந்துக்கள் யாவும் அவைகளுக்கு அஞ்சுகிறது. அவைகள் எல்லாப் பிராணிகளுக்கும் விரோதமாகவும், எல்லா பிராணிகளும் அவைகளுக்கு விரோதமாகவும் இருக்கிறதென்று சொல்வதில் பிசகில்லை. எந்தப் பெரிய பிராணியையும் அவைகள் எளிதில் மடிவிக்கும்; பல்லிகள், உடும்புகள், பாம்புகள் முதலியவை அவைகளுக்கு ஒரு பொருட்டில்லை. பெரும்பாம்பைத்தானும் அவைகள் நாசப்படுத்தினதாகச் சங்கதி தெரியும். அது இரையெடுத்து விம்மியிருக்கையில், பலநாளாக அசைவற்றுக் கிடக்கும். எவ்வளவு பிரமாண்ட பிராணியாயிருந்தாலும், அப்போது அவைகள் லேசாய் அதைப் பலி கொள்ளும்" என்பதே.

உட் (Rev. J. G. Wood) என்பவர் சொல்லுகிறது என்னவென்றால்:—"பெரிய உடும்பு ஓணான் முதலியவைகள் சாரதி எறும்புகளுக்கு இரையாகின்றன. பாம்புகள் உட்பட சகல ஊர்வனவுகளும் அவைகளால் அதமாகிறது. டாக்டர் சாவேஜ் கண்ணாரக் கண்டிருக்கிறபடி எறும்பு பாம்பைத் தாக்கும்போது முதன் முதல் அதன் கண்களில்கடித்து அதைக் குருடாக்கிவிடும். அந்தக் கேவலப் பிராணி தூரத்திலே நழுவிப்போகவுமாட்டாமல் ஓரே இடத்தில் கிடந்து, துடித்துப்பதைத்து உழலும். அக்கினியானது எந்த ஜீவசெந்துக்கும் திகிலையுண்டாக்கும். சாரதி



எறும்போ அதையும் வகைவையாமல் மினுங்குகிற தீத்தழலிலும் சாடி, எரிக்கட்டையில் தன் கொடிறுகளை ஊன்றிக்கொண்டு, அக்கினியின் காந்தியினால் விரைவில் பொரிந்துவிடும்" என்பதே.

டார்வின (Darwin) என்பவர் "தத்துவ சாஸ்திரியின் யாத்திரை" (Voyage of a Naturalist) என்ற தமது பிரபந்தத்தில் ஒருநாள் பாகியா (Bahia) என்னுமிடத்தில் ஒரு கூட்டம் சிற்றெறும்புகள் பவனிபோன வரலாறு சொல்லியிருக்கிறார். அவைகளைக் கண்ட மாத்திரத்தில் பல்லிகள், கோலியான்கள், கக்கலாத்துகள், முதலிய ஜெந்துக்களெல்லாம் வெருண்டு, நாலு திசையிலும் தலை தெறிக்க ஓட்டம் பிடித்ததுமன்றி; இப்படிப்பட்ட நிரியாணத்தினின்று தங்களைத் தப்புவிக்கும்படி அவ்வேழைப் பிராணிகள் செய்த அருமுயற்சிகள் வெகு விந்தையாய் இருந்தனவாம்.

---

## என் தாய்.

எனது பசி ஆறத்தன் இன்முலைப்பா லூட்டி
என தழுகை மாறிடக்கை யேந்தி—இனிதணைத்து
நாரொடுதுயிற்றி என்கன்னத்துமுத்த மிட்டுவந்த
தியாரெனில்என் றன்னற்றா யே. (க)

[நார்—அன்பு. துயிற்றி—துயிலச்செய்து, தூங்கச்செய்து.
முத்தமிட்டுவந்ததியார்—முத்தமிட்டு வந்தது யார்?]

திறந்தெனது கண்ணுறக்கம் தீர்ந்தால் அழுகை
பறந்தகலத் தாலாட்டுப் பாடி—சிறந்த அன்பால்
ஏரோ டெனைத்தொட்டில் விட்டாட்டித் தூங்குவித்த
தியாரே யெனில் என் தாயே. (உ)

[ஏர்—அழகு.]

யான்வீழ்ந்தால் ஓடிவந்துற் றென்வருத்தம் நீங்கவே
தேன்வீழ் இனியகதை செப்பியதும்—நானுவ
பாரிடம் பட்ட இடம் பார்த்துமுத்த மிட்டதுவும்
யாரெனில் என்றன்னற்றா யே. (ங)

[தேன் வீழ் இனிய கதை—தேன் சொட்டுகிற மதுரமான கதை.]

இவ்வா றெனக்குமிக ஏற்றமாம் அன்பு செய்தாய்
எவ்வா றெக் காலத்தி லென்னினுமே—ஒவ்வாவ
லாலுன்னை நேசித் தமர்த லொழிந்திருத்தல்
ஏலும்? உரையாயென் தாயே. (௪)

[ஒவ்வு + ஆவலால் + உன்னை. ஒவ்வு—பொருந்து. அமர்தல்—தங்குதல். ஏலும்—ஆகும். உரையாய்—சொல்வாயாக.]

ஆ ஆ! உனக்கென் பகலென் னெவ் வெண்ணமதும்
நோவேதுந் தாற்றேன் நாவல் இறைவன்—சாவாதே
நான்சிலநாள் வாழவைத்தால் நன்றியறி வோடுகைம்மா
றியான்செய்கு வேனென் தாயே. (௫)

[நாவல் இறைவன்—(எல்லோரும் புகழ்ந்து) சொல்லும் கடவுள். வாழவைத்தால்—(இந்தப்பூமியில்) வாழும்படி வைத்தால், கைம்மாறு—பிரதியுபகாரம்.]

விருத்தவய தால்நரைத்துன் மேனிதளர் காலம்
திரைத்த உன்றற் கைக்கெனது செங்கை—பரித்திடேடும்
ஊன்றுகோல் போலுதவ உன்வருத்தம் ஆற்றிடுவேன்
என்றனித்த என்றன்தாயே. (௬)

[திரைத்த—திரையை உடைய, (வயது முதிர்ச்சியால் உண்டாகும்) மடிப்பை உடைய. பரித்திடேடும்—பரித்திடும், தாங்கும்.]

தாங்கருநோ வால்உன் தலைநிமிர்ந்து நில்லாதே
தூங்கிடுகால், யானே நீ துயில்படுக்கை—நீங்கலின்றி
நின்மெயினை [illegible]த் தன்பால் நெக்குவுழி நீர்சிக்கல்
என்முறை [illegible]குமன்றோ தாயே. (௭)

[தாங்கருநோவு—சகித்தற்கரிய வியாதி. தூங்கிடுகால்—தூங்கும்காலம். துயில்—தூங்கு. நின்மெயினை—உன் உடம்பை. நெக்கு—(நெஞ்சு) நெகிழ்ந்து (உருகி). என்முறை—நான் குழந்தையாய் இருக்கும்போது வியாதியடைந்த சமயங்களில் நீ படுக்கையை நீங்காது என்னைப் பாதுகாத்தது உன் முறையாயிருந்தது போல, உனக்கு வயது சென்ற காலத்தில் நீ நோயுற்றால் அப்போது உன்னைப் பாதுகாப்பது என் முறையாகும்.]



# பிரபல ஜாலங்கள்.

சாதாரணமாய்க் கண்ணுக்குத் தோற்றுவதெல்லாம் உண்மையென்று நினைப்பது உலகவழக்கம். அப்படியே அநேகர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் நாம் பார்ப்பதெல்லாம் உண்மையென்று எண்ணுவது பிசகானது. அநேக விஷயங்கள் பார்வைக்கு மெய்போலக் காணப்படுகின்றன. ஆராய்ந்து பார்த்தால் முழுதும் மாறாக இருக்கின்றன. அறியாமையும் துரபிமானமும் கெட்டவழக்கமுமே இவ்வகையான பலபொருத்த பிழைகளுக்குக் காரணமாகின்றன. ஒரு திருஷ்டாந்தம் பாருங்கள்: சூரியன் உதயமாகிறான், அஸ்தமிக்கிறான் என்று சொல்லுகிறோம். சூரியன் உதிப்பது போலவும் அஸ்தமிப்பது போலவும் நமது கண்ணுக்குத் தோற்றுவதனால் அப்படியே அநேகர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் சூரியன் உதிப்பதுமில்லை அஸ்தமிப்பதுமில்லை. அவன் நின்ற இடத்திலேதான் நிற்கிறான். ஆயினும் சூரியன் உதயமாவது போலவும் அஸ்தமிப்பது போலவும் தோன்றுவது ஏனெனில், ஒரு விளக்குக்கு நேராய் ஒருபழம் உருண்டால் எப்படியோ அப்படிப் பூமி சூரியனுக்கு நேராக உருள்வதனால் அவ்வாறாகின்றது. இப்படியே ஒரு செப்படி வித்தைக்காரன் வெறுங்கையைக் காட்டிவிட்டுப் பிறகு அந்தக்கையிலேயே பலவிதமான பொருள்களிருக்கக் காட்டுகிறான். அவன் தன் விரலிடுக்குகளிலோ கைக்குள்ளேயோ மற்றேதோ இடத்தில் ஒளித்து வைத்துக்கொண்டிருப்பதை எடுப்பது ஒருவர்க்கும் தெரிகிறதில்லை. நமது கண்ணை மயக்கி வெளிக்கு உண்மை போலத் தோற்றுவிக்கிற மாயைகள் இப்படி அநேக முண்டு

அவற்றை நன்றாய் நிதானிக்கத்தக்க புத்திகூர்மையும் பரிசோதிக்குந் திறமையும் இல்லாமையால் அவையெல்லாம் உண்மையென்று நம்ப இடமுண்டாகின்றது. முற்காலத்தில் மதியை மயக்கத்தக்க மாயங்களும் மோசங்களும் உலகத்தில் நிறைந்தவைகளாய்க் கிடந்தன. அவற்றை அநேகர் நம்பியுமிருந்தார்கள். அக்காலத்தில் சூனியக்காரர்கள் என்று சொல்லித் திரிந்துகொண்டிருந்த அநேகம் பெண்பிள்ளைகளை நியாயாதிகாரிகள் விசாரித்துக் கொடிய தண்டனையும் விதித்திருக்கிறார்கள். அப்படித் தண்டித்ததற்குச் சரியான காரணம் ஒன்றுமில்லை. அதன் காரணங்களைக் கேட்டால் அவையெல்லாம் இப்போது யாவரும் பரிகாசம் பண்ணத் தக்கவைகளாகும். இக்காலத்தவர்கள் இத்தன்மையான மோசங்களை அதிகமாய் நம்புகிறதில்லை. இவ்வகைச் செய்கைகளெல்லாம் வஞ்சகமானவையென்னும் எண்ணம் இப்போதுதான் கொஞ்சங் கொஞ்சமாய் மனதில் பதிந்துகொண்டு வருகிறது. இப்போதிய மனிதர்கள் நன்றாய் ஆய்ந்தோய்ந்து பாராமல் ஒன்றையும் சத்தியமாக நம்புகிறதில்லை. நாகரிகமும் அநுபவமும் மேலிட்டிருக்கும் இக்காலத்திலே கூடச் சிலர் ஒவ்வொரு வேளை மதிமயங்கி வஞ்சிக்கப்படுகிறார்கள். ஏனெனில், இவ்வுலகத்தவர்களில் அநேகர் சாதாரணமான படிப்புடையவர்கள்; கண்டதையெல்லாம் உண்மையென்று நம்புகிற தன்மையுடையவர்கள்; அப்படிப்பட்டவர்களெல்லாம் புதிதாய் ஏதாவது ஒரு விநோதத்தைக் காண்பதில் குதூகலமுடையவர்களாய் எவ்வளவு அற்பமாயிருந்தாலும் தம் புத்திக்கு ஒரு வியப்பாய்த் தோன்றுவதையெல்லாம் உண்மையென்று நம்புகிறார்கள். ஆயினும் நாம் அதை அவர்கள்மேல் ஒரு குற்றமாகக் கொள்ளக்கூடாது. சாஸ்திரங்களால் வெளிப்படுத்தப்படாத அதிசயங்களும் சில உலகத்திலிருக்கக் கூடுமாகையால், ஒரு பொருள் இன்னதென்று நமக்குத் தெரியாமற் போனமாத்திரத்திலேயே, இது மாயத்தின் காரியமென்று நாம் சாதிக்கத் துணியக்கூடாது. அதிசயமாய்த் தோன்றுகிற ஒவ்வொரு செய்கையையும் நாம் பக்ஷபாதமில்லாமல் நடுநிலையாய் ஆராய்ந்தறியவேண்டும். ஆயினும் அதிலுள்ள



தீமை யென்னவெனில், அப்படிப்பட்ட சந்தேக விஷயங்களைச் சாஸ்திரப்பொருள்களைக் கொண்டு நாம் செம்மையாய்ப் பரிசோதிப்பதற்கு முன்னமே வேறுவிதமான எண்ணங்கள் மனதிற்குள்ளே புகுந்துகொள்கின்றன. மனவுறுதியில்லாத அநேகர் அவற்றிற்குச் சுலபமாய் இடங்கொடுத்துக் கடைசியில் அவற்றிற்கு அதீனமாகி, மிக்க ஆலோசனையும் மனவுறுதியுமுடையவர்களால் புத்தியில்லாதவர்களென்று இகழப்படுவார்கள். கடினமாயினும் வருந்தப்பட்டு அப்படிப்பட்ட மாயைகளுக்குள் அகப்படாமல் புத்திமாய் நடப்பார்களானால் மிக்க நலமாயிருக்கும். [illegible] நிலைமையிலிருப்பவர்கள் இப்படிப்பட்ட மாயச் செயல்களை நன்றாய்ப் பரிசோதித்துப் பாராமல் நம்புவார்களானால் அதன் பயனை அநுபவியாமற் போகார்கள்.

டாக்டர் கார்பெண்டர் என்பவர், இந்த மாயைகளைப் பற்றிய செய்கைகளெல்லாம் செம்மையாய் விளங்கும்படியாகச் சிறந்த புத்தகமொன்று எழுதியிருக்கிறார். அவர் அந்தப்புத்தகத்தில் "மாயையாகிய பெருந்தொடர்வியாதி ஒன்றின்பின் ஒன்றாய் உற்பவித்து நாளாவில் முழுதும் பரவிப்போயிற்று; அதன் முக்கியமான தன்மை ஒன்றாயிருந்தாலும், உருவம் மாத்திரம் அந்தந்தக் காலத்திற்குத் தக்கபடி வெவ்வேறாக மாறிக்கொண்டிருக்கின்றது. அற்புதமான ஒரு செய்கையைக் கண்டால் அதை அவ்வாறே கிரகித்துக்கொள்வது சிற்சில மனதிற்கு இயற்கையாயிருக்கின்றது. இதனால் இப்படிப்பட்ட பலவிதமான செய்கைகள் ஒவ்வொருவரிடத்தில் காணப்படுகின்றன" என்று சொல்லியிருக்கிறார்.

இவ்வகைக் காரணங்களால், மெஸ்மெரிஸம் ஸ்பிரிசுயலிஸம் டேபில் டர்னிங் என்று சொல்லப்பட்ட பலவித ஜாலவித்தைகள் சீமையில் ஏற்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் மதிமயக்கத்தாலும், அதனால் ஏற்பட்ட நம்பிக்கையாலும் உண்டான ஒருவகைப் பைத்தியமேயொழிய வேறொன்றுமல்ல. சிலருடைய மனதில் ஒவ்வொருவகைப் பேதமையான எண்ணமுண்டாகின்றது. அந்த எண்ணத்தை மாற்றும்படியாக என்ன நியாயம்

எடுத்து உரைத்தாலும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. உனக்கேன் இப்படிப்பட்ட எண்ணமுண்டாயிற்று என்று கேட்ட மாத்திரத்திலே அவர்கள் பெருங் கோபங் கொள்வார்கள். சாதாரணமாய் பேதைக்குணமே எங்கும் அதிகமாய்ப் பரவுகின்றன. அந்தக் குணத்திற்கு ஒருவன் எவ்வளவு வசப்படுகிறானோ அவ்வளவுக் கவ்வளவு மாயங்கள் உறுதிப்படுகின்றன. மதசம்பந்தமான விஷயங்களைப் பற்றி முற்காலத்திலும் இக்காலத்திலும் சிலர்க்கு உடம்பு தெரியாமல் கோபாவேசமுண்டாகக் கண்டிருக்கிறோம். இந்தக் கோபம் தணிந்த பிறகு அவர்களுக்கே அது [illegible]த்துக் காரணமாகின்றது. இப்படி உலகத்தில் மனிதர்களுடைய மனதை மயக்கக் காரணங்கள் அநேகமுண்டு, அவற்றால் மனிதர்கள் கவரப்பட்டிருக்கக் கண்டால் மிகவும பரிதாபகரமாயிருக்கும்.

மிக்க சமர்த்தர்களான மேன்மைபெற்ற பெரியோர்கள் கூட இவ்வகை ஜாலங்களுக்கு உட்பட்டுத் தம்மைச் சார்ந்தவர்களையும் அதேவிதமாய் நடத்துவிக்கிறார்கள். சுமார் எழுபது வருஷகாலமாய் மேற்சொன்ன மேஸ்மேரிஸம் முதலிய ஜாலவித்தைகள் விசேஷமாய் நடந்தேறுகின்றன. மெஸ்மெரிஸம் என்பது யோகநித்திரை என்று ஒருவாறு சொல்லலாம். அதாவது திடீரென்று ஒருவனை மதிமயக்கித் தூங்கச்செய்வது, பேசவொட்டாமல் வாயடைப்பது முதலிய பல மாயங்களாம். சிற்சில தருணங்களில் வியாதிகளும் குணப்படுகின்றன. வீக்கம், வலி, குத்தல், சிற்சில பிணிகள் மெஸ்மெரிஸசக்தியினால் தணியச் செய்கிறார்கள். உண்மையாய் இவ்வண்ணமே நடக்கிறதோ, அல்லாமல் ஈதனைத்தும் பிணியாளியின் நம்பிக்கைப் பலத்தின் மகிமை யோ, நிருணயிக்க ஒண்ணேம். ஆனால் வியாதி நிவாரணத்துக்கு நம்பிக்கைப்பலம் மிகவும் அநுகூலமாயிருக்குமென்பதற்கைய மெள்ளளவேனுமில்லை. இந்த நம்பிக்கையே மனோபலம். மெஸ்மரிப்பவனது மனோபலத்தினாலும், மெஸ்மரிக்கப் படுபவனது மனம் உட்படுவதனாலுமே இந்தக் காரியம் நடந்தேறுவதாக இருக்கவேண்டும். இதிலும் அநேக மோச



ங்கள் உண்டு. மருந்த ஔஷதப்பிரயோகமன்னியில் வியாதி நிவாரணம் என்பது அநேக தருணங்களில் வடிகட்டினபொய்யாகவே முடிகிறது. பல சாஸ்திரங்களும் தத்துவங்களும் கண்டறிந்த பண்டிதர்களில்கூட அநேகர் அற்புதங்களைக்காண ஆவல்கொண்டு இவ்வகை ஜாலங்களை உண்மையாக நம்புகிறார்கள்.

முற்காலத்தில் நமது தேசத்தில் மாயச்செயல்கள் அநேகம் நடந்து வந்தன. அவற்றுள் இந்திரஜாலம், மஹேந்திரஜாலம் என்பவை மிகவும் முக்கியமானவை. இந்த ஜாலவித்தைகளால் அநேகம் மாயக்காரர்கள் முற்காலத்தில் பல அற்புதங்களைக் காட்டினதாகக் கேட்டிருக்கிறோம். ஒரு நாளும் நாம் காணாத காட்சிகளை அவர்கள் காட்டுவார்கள்; திடீரென்று சபையிலுள்ளோர் அனைவரையும் மதிமயக்கித் தூங்கச்செய்வார்கள். வாயைத்திறந்து பேசவொட்டாமல் ஊமையாக்கி விடுவார்கள் திடீரென்று பேரிருள் சூழ்ந்தது போலவும், பெருஞ் சண்டைகள் நடப்பது போலவும், நாகங்கள் அநேகந் தோன்றி நாலா மூலையிலும் படருவது போலவும், அவற்றை அநேகங் கழுகுகள் வந்து கொத்திக்கொண்டு வானத்தில் பாவுவது போலவும் இப்படி அநேகவிதமான அற்புதங்களைக் காட்டுவார்கள் காளிதாச மகாகவி மாளவிகாக்கினி மித்திரம் என்னும் நாடகத்திலும், தண்டிமகாகவி தசகுமார சரிதம் என்னும் சரித்திரத்திலும் இந்திரஜாலவித்தையின் அதிசயத்தை நன்றாக விளக்கிக்காட்டியிருக்கிறார்கள். இந்த மாயவித்தைகள் முற்காலத்திலும் ஐரோப்பியர்க்கு ஒருவகைப் போதுபோக்கா யிருந்தன. அக்காலத்தவர்கள் இந்த வித்தைகள் செய்ததெல்லாம் கைக்குறிகளாலும் கண் பார்வைகளாலுமே யொழிய வேறல்ல. இப்படியே மெஸ்மரவாதியினுடைய விரல்களினின்றும் ஒருவிதப்பட்ட ஆகருஷணைச்சக்தி எதிராளியிடத்துப்போய் பாய்கின்றதென்று சொல்லுகிறார்கள். பொதுவாக அந்த ஆட்டக்காரன் ஆட்டுவிக்கிறவனை நியாயமான காரணமொன்றுமில்லாமலே ஏதோ தந்திரஞ்செய்து மதிமயங்கப்பண்ணுகிறான். மனவுறுதி யில்லாதவர்கள் அதற்கு வசமாகிறார்கள். மனவுறுதி யுடையவர்கள் ஒருபோதும் வசப்படுவதில்லை.

இப்படிப் பலவிதமாய் ஜனங்களுக்கு சந்தோஷமும் மதிமயக்கமும் உண்டாக்குகின்ற ஜாலவித்தைகளெல்லாம் அஸ்தலாகவங்களாலும், பலவகைப் பார்வைகளாலுமே முக்கியமாய் நடத்தப் படுகின்றன. இவைதவிர அவற்றால் வேறொரு அதிசயமுமில்லை. அவற்றின் நுட்பத்தை நாம் கண்டறிவோமானால் பிறகு அதில் யாதொரு புதுமையும் தோன்றாது. உதாரணமாக, எலிபிடிக்கும்போறி என்ற விநோத கதையிலே மரத்திலே மறைந்த பூனை என்றொரு படம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மரத்தில் பூனையே இல்லையென்று அதைப்பார்த்தவர்கள் எல்லோருமே சாதிக்கிறார்கள். பிறகு பூனை இருக்குமிடம் காட்டிவிட்டாலோ அதன் பின்னர் அதில் இருந்த பிரமிப்பும் ஆச்சரியமும் அற்றுப்போய் இது ஒரு தந்திரம் என்று அறிந்து கொள்கிறார்கள். ஜாலவித்தையும் இதுபோன்றதுதான். மேலும் மனிதர்களுக்கு தேகஸ்மரணையில்லாமல் மதிமயக்கமுண்டாக்கத்தக்க மருந்துகளும் சில உண்டு. அம்மருந்துகளைக் கொண்டு வித்தைகாட்டுவதில் ஜாலம் ஒன்றுங் கிடையாது. ஒருவனுடைய நாசி நுனியில் ஒரு வகைக்குச்சியை வைத்து அதையே அவனைக் கொஞ்சநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்படி செய்தால் அவன் உடனே மயங்கிப்போகிறானென்று ஒருவர் சொல்லியிருக்கிறார். அப்படிச்செய்வதனால் இரத்தநாடிகள் ஒருவிதமாய்ச் சுருங்குகின்றன வாகையால் அப்படியாகின்றது. சாதாரணமாய் நித்திரை வராதவர்கள் கூட நாசியின் கீழ் நுனியை அசைக்காமல் நிலையாக வைத்துக்கொண்டு கொஞ்சநேரம் அதேகவனமாய் மூச்சுவிடும்படி செய்தால் உடனே நித்திரை கொள்வார்கள்.

இப்படி விநோதத்திற்காகச் செய்கிற பலவித ஜாலவித்தைகள் மாத்திரமேயன்றி, ஞான திருஷ்டி யென்று சொல்லி ஒரு புதுமை காட்டுகிறார்கள். அதாவது: அதற்குறிய ஏற்பாட்டின்படி ஒருவனுக்கு ஞானதிருஷ்டி யுண்டாக்கிப் பின்பு அவனைக் கொண்டு எந்தச் செய்தியும் எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்; எதைக்கேட்டாலும் அவன் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தது போல் தெளிவாய்ச் சொல்லுவான் என்கிறார்கள். இந்த வித்-



தையிலுள்ள சூதுகளை ஒருவர் எடுத்துத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். இந்தத் திருஷ்டி வித்தையினால் அநேகர் அநேகம் குறிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியிருக்கக் கொஞ்ச நாளைக்கு முன்னே சீமையில் ஒரு சீமாட்டி இந்த ஞான திருஷ்டியாற் செய்யும் அற்புதங்களில் அதிக நம்பிக்கையுடையவளாய் அதைப்பார்க்க வேண்டுமென்று தன்னண்டையிலிருந்த தாதி யொருத்திக்கு அந்த ஞானதிருஷ்டி மந்திரத்தை ஏற்றுவித்து அடிக்கடி அதிசயங்களைப் பார்த்து ஆநந்தித்துக் கொண்டிருந்தாள். இப்படியிருக்க ஒரு சமயத்தில் அந்தத்தாதி ஞானதிருஷ்டி கொண்டு, அவளுடைய புத்திரர்களில் ஒருவன் ஏறிப்போயிருந்த கப்பலொன்று கடலில் உடைந்து போனதாயும், அது உடைகிறதற்கு முன்னமே ஒரு சிறுவன், கப்பலிலிருந்து கடலில் வீழ்ந்து இறந்ததாயும் இச்செய்திகளைக் கண்டறிந்து சொன்னாள். அதைக்கேட்டு எஜமானி, இவள் சொன்ன செய்தி உண்மைதான்; முன்னதாய் யாராவது சொல்லக்கேட்டிருப்பாள் என்றாலோ அதுவுமில்லை. இந்த விநோதம் செய்து முடிக்கப் போகிற தருணத்திலேதான் அவள் சிற்றம்மை இச்செய்தியை வீட்டிலேவந்து சொன்னாள். ஆதலால் இவள் சொன்னது ஞானதிருஷ்டியாலேதான் என்றாள். அவள் சொன்னது உண்மைதானென்று மற்றவர்களும் அப்படியே நம்பினார்கள். மற்றொருநாள் அப்படியே அவள் மோகங்கொண்டிருக்கையில், போனதடவை நீ சொன்ன செய்தி யாராவது ஒருவர் சொல்லக்கேட்டுச் சொன்னதா, நீயே கண்டறிந்து சொன்னதா என்று கேட்டதற்கு அந்தப்பெண், அப்படிப்பட்டதொன்றுமில்லை; நானே போய் இச்செய்தியெல்லாம் நேராய்ப் பார்த்து வந்தேன் என்றாள். இதையும் உண்மையென்று அநேகர் நம்பினார்கள். கடைசியில் இவையெல்லாம் வஞ்சகப் பேச்சாய் முடிந்தன. இதன் உண்மையைக் கண்டறிய மிக்க ஆவல் கொண்டு ஒருவர் எல்லாவற்றையும் பூராயமாய் விசாரித்தார். விசாரித்ததில் இச்செய்தியையெல்லாம் அவள் சிற்றம்மை ஒரு யாமத்திற்கு முன்னமே அவள் வீட்டில் சொல்லுவித்திருந்ததாகத் தெளிவாய்த் தெரியவந்தது. அதன் பிறகு

ஞானதிருஷ்டிக்காரியென்று அவளுக்கிருந்த பெருமை போய் அவள் மானபங்கப் பட்டது மன்றியில் அந்த வித்தைக்கிருந்த பெருமையும் அவ்விடத்தில் இதனோடு அழிந்துபோயிற்று. அறிவிற் சிறந்த பெரியோர்களெல்லாம் இவ்விதமாய் ஏமாந்து போம்படியிருக்க, ஒன்று மறியாத பேதைகளுக்கென்ன சொல்லுகிறது!

இப்படிப் பார்வைக்கு அற்புதமாகத் தோன்றுகிற விநோதக் காக்ஷிகளையெல்லாம், தருந்த திருஷ்டாந்த மொன்றுமில்லாமலே, தங்கள் புத்தியையே முக்கியமாய்க்கொண்டு, உண்மையென்று நம்பும்படி அநேகர்க்கு ஒருவகைத் தீர்மானமுண்டாவதற்குக்காரணம் யாதென்று விசாரிக்கப்புகில் வெகுதூரம் வாரும். முதலில் இவற்றை நம்பிப் பிறகு ஏமாந்துபோன அநேகர் இதன் நுட்பங்களை நன்றாய்த் தெரிவித்திருக்கிறார்கள். ஒன்றைப் பார்க்கும்போதே சரிதானென்று அதை அங்கீகரித்துக் கொள்வதனால் இவ்வகைத் தீமைகள் உண்டாகின்றன.

இப்படியே ஒரு பலகையின் மேல் பென்ஸிலை வைத்தால் அது நம் மனோரதங்களைத் தானே எழுதிக்காட்டுகிறதென்று ஒருவகைப் புதுமை ஒருகாலத்தில் உண்டாயிற்று. இந்த ஜாலவித்தைகளெல்லாம் பிரமிப்பவர்களைக் கண்ணைக்கட்டிப் பெரும் பொருள் தேடப் பெருத்த வர்த்தகமாயிருந்ததனால், அதைச் செய்பவர்கள் தங்கள் சூது ஒருவிஷயத்தில் வெளிப்படுமானால் அதைமற்றொரு விதமாக மாற்றிக்கொள்வார்கள். இப்படி வெகுகாலம் ஐரோப்பாவில் ஜாலவித்தைகள் விசேஷித்து அநேகரை வஞ்சித்துக்கொண்டிருந்தன. இப்போதும் அவை ஒழிந்துபோகவில்லை. ஆயினும் அவற்றில் அற்புதங்கள் ஒன்றுமில்லை, எல்லாம் மோசச்செயல்களென்றும் அந்தந்தக் காலத்தில் ஒவ்வொரு விவேகிகள் ஏற்பட்டு அவற்றை வெளிப்படையாய்க் காட்டிவிட்டார்கள்; ஆதலால் இப்போது அவ்வளவு மும்மரமில்லை.



## நித்திய பிரார்த்தனை.

ஓ அன்புள்ள பகவானே! எமது வாழ்நாள் வீணாகாமல் உன் வலியிற் செலுத்தும்படி மன்றாடுகிறோம். உனது நட்பென்னும் இனிய பாசத்தால் எம்மை நின்னோடு பந்தித்து எதனாலும் எம்மனம் நின்னைவிட்டு வேறுபடாதிருக்கவருளாய். துன்பத்திலும், இன்பத்திலும், சுகத்திலும், பிணியிலும், உழைப்பிலும், உல்லாசத்திலும், நித்திய கிருத்தியங்களிலும், இதர வியாபாரங்களிலும், எச்சமயத்திலும் என்றும் நின்னைவிடாது பற்றும்படி என்னை நின்னவனாக்கிக் கொள்வாயாக. எங்கு எத்தொழிலிற் பிரவேசித்திருந்தாலும் நின்னையே ஆசிரயித்து உன்னையே தொடர்வோமாக. எமது ஜென்ம சாபல்யமெல்லாம் நின்னையறிவதென்றே எப்போதும் மறவாதிருப்போமாக. எமது மனோவாக்குகளை நின் சத்கீர்த்தனப் பிரபாவத்தில்தானே செலுத்துவோமாக. எமது வாழ்க்கையெல்லாம் நின் சிந்தையால் மேம்பாடடையச் செய்வாய். எமது செய்கையனைத்துக்கும் நினது நட்பே அகப்பற்றும் புறப்பற்றுமாகக்கடவது. எமதுள்ளத்தின் எந்த மூலையிலாவது நின்னின்றும் வேறுபட்ட ஆசாபாசமொன்று கரந்துறையுமாயின் அதை வேருடன் களைந்திடுவாய். ஆனந்தகரமாகிய நினது சான்னித்தியமன்றி வேறொன்றையும் விரும்பாதவண்ணம் எமது பாசங்களெல்லாம் உலகத்தினின்றும் வேறுபட்டு உன்னிடத்தே வேரூன்றிச் செழிக்கும்படியருளாய். ஓ கருணைகூர்ந்த கர்த்தனே! யாம் எமது என்னும் இருவகைப் பற்றுகளுமற்று நின்னையே பற்றி சுத்தசைதன்னிய நிலையாகிய ஆனந்தத்தில் வாழ்ந்திருக்க அருள்புரிவாய். ஓம்-தத்ஸத்.

தலைபலவாய்ப் பெயர்பலவா நதிகளெல்லாஞ்
சாகரத்தி லொருநீராந் தன்மைபோலப்
பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ்சொல்லப்
பட்டதொரு பொருளினையாம் பணிதல்செய்வாம்.

---

# பிரசங்க லக்ஷணம்.

---

நல்ல பிரசங்கம் அளவிலே சுருக்கமாயிருக்கும். விசத்திலே உருக்கமாயிருக்கும். பொருளிலே பெருக்கமாயிருக்கும். ஒவ்வொரு பிரசங்கத்திலும்,

1-வது. யாரை அல்லது எதைப் பிரசங்கிக்கவேண்டும்?
2-வது. எதற்காகப் பிரசங்கிக்கவேண்டும்?
3-வது. யாருக்குப் பிரசங்கிக்கவேண்டும்?
4-வது. எதுவரையில் பிரசங்கிக்கவேண்டும்?

என்பதைக் கவனிப்பது அவசியம். பிரசங்கம் வரவர சுடர்விட்டுப் பிரகாசித்து, அனல் வீசுகிற தீயைப்போலிருக்கவேண்டும். பிரசங்கப் பிரிவுகள் ஞாபகத்தில் தங்கத்தக்கதாக,

1-வது. கொஞ்சமா யிருக்கவேண்டும்.
2-வது. ஒன்றுக்கொன்று வித்தியாசமா யிருக்கவேண்டும்.
3-வது. ஒன்றுக்கொன்று சம்பந்தமா யிருக்கவேண்டும்.

பிரசங்கத்துவக்கத்திலே படபடவென்று விகாரமாய்ப் பேசுதலும் அதினை உதைத்தல் தக்கதல்ல. கதித்த பொருளாகிய உன் நெருப்பை பிரசங்கத்தின் நடுவிலாகிலும் முடிவிலாகிலும் கொட்டலாமேயன்றி முதலிலேயே கொட்டிவிடக்கூடாது. கருத்தின் சிறப்பும் பாஷை அலங்காரமும் ஆரம்பத்திலே சபையாருக்குக் களைக்காது. பிரசங்கி எவ்வளவோ விற்பன்னமாயும் சாதுர்யமாயும் பேசியும், ஒழுங்கைக் கைவிட்டால் சபையாருக்குப் புத்தியிலாவது எழுப்புதலிலாவது அபிவிருத்தியுண்டாகாது.

1-வது. ஒழுங்கு பிரசங்கத்தைத் தெளிவிக்கின்றது.
2-வது. ஒழுங்கு பிரசங்கத்துக்கு அழகு கொடுக்கின்றது.
3-வது. ஒழுங்கினால் பிரசங்கம் சுருங்கும்.
4-வது. ஒழுங்குண்டானால் பிரசங்கம் உரங்கொள்ளும்.
5-வது. ஒழுங்கு ஞாபகத்திற்கு உதவியாகின்றது.



சங்கதி, ஒழுங்கு, வசனிப்பு இம்மூன்றும் பிரசங்கத்தின் பிரதான உறுப்புகள். எல்லா நோய்க்கும் ஒரேவித பரிகாரம் உதவாததுபோல எல்லாப் பொருள்களையும் ஒரேவிதமாக விஸ்தரிப்பதும் உதவமாட்டாது. சபையோருக்குத் தெரிந்த விஷயமொன்றை தெரியாத பேருக்கு வியாக்கியானிப்பதுபோல விஸ்தரிப்பதில் யாது பயன்? பிரசங்கமானது மொத்தத்துக்கு பிரயோஜனத்தைப் பிறப்பிப்பதாயிருக்கவேண்டும். வலிமையுள்ள பிரசங்கம் ஒரு பெரிய ஆற்றுக்குச் சமானம். ஆறு தலையான மலைகளில் சிறுமடுவாக ஆரம்பித்து, பின்பு ஓர் ஓடையாகி, ஓடுகிற மார்க்கத்தில் அநேகம் சிற்றாறுகள் சேர, ஆழ்ந்து, அகலித்து, பெருகி, பெருவெள்ளமாய்ப் புரண்டு கடலில் பாயும். அத்தன்மையைப்போல், நல்ல பிரசங்கமும் முடிவிலே மிகுந்த பலன் செய்யும். இதற்கு மாறாக ஒரு ஆறு ஒவ்வொரு கால்வாயாய்ப் பிரிந்து, தன்னிலும் தன் கால்வாய்களிலுமுள்ள ஜலம் வரவரக்குறைந்து, கடைசியில் தான் ஓடுகிற திசையும் தெரியாமல் மறைந்துபோமாகில் அதினாலே பலனென்ன? முதலிலே நன்றாய் ஆரம்பித்தும், வரவரத் தேய்ந்தும் கடைசியில் வெறும் வழவழப்பாய் முடிகிற பிரசங்கமும் அப்படித்தான் இருக்கிறது. பிரசங்கத்தைப் பதினாயிரம் பேர் மெச்சிக்கொள்வதைக்காட்டிலும், பத்து பேராவது தெரிந்து உணர்ந்துகொள்வதே உத்தமம். பிரசங்கி தன் ஊழியத்தின் மாட்சிமையை ஆழமாய் உணரட்டும்; அப்போது சாதுரியமும் அனலும் தானுகக் கிளம்பும். பிரசங்கத்தில் இருக்கவேண்டியது யாதெனில், முகவுரை, சுருக்கச் சொல்லி விளக்கவைத்தல், திருஷ்டாந்தம், திருஷ்டாந்தத்தைப் பிரித்து நியாயம் காட்டுதல், முடிவுரை. இதன்றி சபையார் முன்னிலையில், பிரசங்கிப்பது போதாது. அவர்கள் நிலைமையைச் சுட்டியும் பிரசங்கிக்கவேண்டும். பிரசங்கத்தினிடையே உதாரணம் எடுக்கவும், எடுத்த உதாரணத்தை விரித்துக் காண்பிக்கவும் விவேகமும் தெளிந்த புத்தியும் அவசியம். இதற்கு அனலான இருதயம் வேண்டும். யாதொரு நோக்கமில்லாமல் பிரசங்கிக்கக்கூடாது. இந்தப்பிரசங்கத்தில் நான் செய்கிறதென்ன? நான் நோக்கிய காரியமென்ன? நான் பிறப்பிக்கப்போகிற பயன் என்ன? என்று உன்னை நீ வினவுவது அவசியம். பிரசங்கத்தில் உபயோகிக்கும் சொற்கள் அரும்பதங்களாயிராமல் யாவரும் அறிந்த சாதாரண சொற்களாயிருக்கவேண்டும். பதப்பிரயோகங்கள் இனிமையுடன் கௌரவமாயிருக்கவேண்டும். பிரசங்கம் எல்லோருக்கும் விளங்கும்படிக்கும் வாக்கியங்கள் தெளிவும் சுருக்கமுமாயிருக்கவேண்டும். சபையார் பிரசங்கத்தை யுணர்ந்தறிந்து மனதிலே பத்திரப்படுத்திக் கொள்ளும்படி, அதிலடங்கிய போதகமும், புத்திமதிகளும் பட்டப் பகலைப்போல வெளிச்சமாயிருக்கவேண்டும். பிரசங்கத்திலே போதகத்தோடு எழுப்புதலுமிருந்தால், அதுவே சிறந்த பிரசங்கம். பிரசங்கிக்கிறது எல்லாருடைய செவிகளிலும் வி

ழும்படி பேசவேண்டும். போதகன் சொல்லும் வார்த்தைகளை எல்லோரும் தொடர்ந்து அறிந்துகொள்ளும்படி நிறுத்திப் பேசவேண்டும். நீண்ட பிரசங்கம் பண்ணாமல் கூடியமட்டும் சுருக்கிப் பிரசங்கம் பண்ணவேண்டும். பிரசங்கம் பண்ணும்போது சந்தோஷத்தோடு நின்று, தைரியத்தோடு பேசி, கொஞ்ச நேரத்திலே முடித்துப்போடு.

“ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்தொருவர்”

என்றார் ஔவையார்.

---

## தேக முயற்சி.

---

வெகு காலத்திற்கு முன் இருந்தோர் நிலைமை யுத்தத்திற்கே இடங்கொடுத்து வந்ததினால் அவர்கள் கேவலம் மிருகப்பிராயமான தேக பலமானது மனோபலத்திலும் சிறந்ததென்றெண்ணித் தேகாப்பியாசம் மாத்திரம் செய்து வந்தார்கள். தேகாப்பியாசந்தான் வித்தையின் உத்தேசம் என்றும், ஒன்றைப்பலமாய்த் தாக்கி எப்படிப்பட்ட உதைப்பிற்கும் பின் வாங்காதவனே வித்தையில் தேர்ந்தவன் என்றும் அவர்கள் எண்ணியிருந்தார்கள். இப்படியிருக்கையில் சூரரென்றும் கௌரவமுடையவர்களென்றும் பேர்பெற்ற சிற்சிலர் வாசிக்கத் தெரிந்திருந்ததினாலேயே பண்டிதர்களென்று எண்ணப்படலானார்கள். மேலும் இவர்கள் கையெழுத்துப்போடத்தக்க அளவு எழுதப்பயின்றிருந்ததால் எல்லோரும் அவர்களை மந்திரவாதிகளென்றும் சந்தேகப்படுவார்கள்; நாகரீகம் விருத்தி ஆக ஆகப் படிப்பும் கலைக்கியானமும் மனிதருடைய நிலைமையைத் தாழ்த்தமாட்டாவென்றும், தேகவலிமையுள்ள சூரனொருவன் படிப்பாளியாயுமிருந்தால் அதன் கௌரவம் அதிகரிக்க அதிக இடங்கொடுக்கிறதென்றும் மனிதர் புத்தியிற்பட்டது. பொறுமையும் கல்வி விருத்திக்கு ஒரு துணையாயிருந்தது. இப்படியே புத்தி பெருகிப்பலப்பட்டது. மனோ முயற்சியின் விருத்தியைத் தடுக்க முயன்றகாலம் போயிற்று. தேகமும் புத்தியும் நாம் பெற்ற பெருஞ்செல்வம்; அவைகளைச் சரியாய்க் கையாளுவது நமது கடமை; ஆகையால் அவ்விரண்டையும் கூடுமான அளவு நாம் பயிற்சி செய்யவேண்டுமென்றும் ஜனங்கள் இப்போது அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இது வெகு நல்லது. மனித தர்மங்களில் தேக போஷணை முக்கியமானதென்றும் மனோ வியாபாரத்துக்குத் தேகசுகம் உடந்தையானதென்றும் ஜனங்களுக்கு வரவரத் தெரிகின்றன. தேகசுகந் தப்பி



னால் மூளையும் தன்னிலை குலைகிறது. அதனால் மனோ வியாபாரம் தடைப்படுகிறது. வியாதி உபத்திரவத்தில் புத்தியின் வலி குறைந்து, கற்பனாசக்தி ஒளி மழுங்குகிறது. பெரும்பாலும் சரீர உழைப்பின்மையால் அஜீரணம் நேரிடுகிறது. ஒருக்காலுண்டாகும் அஜீரணத்தால் ராஜ்ய நஷ்டம் நேரிடவும் கூடும்; நேரிட்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு நாம் இறப்பது நிச்சயமென்று நினைக்குமிடத்தில் சரீர முயற்சி செய்பவனுக்கோ கொஞ்சமேனும் பயமில்லை. தேகாப்பியாசத்தின் பிரயோஜனம் இன்ன இன்னவென நாம் சந்தேகமறத் தெரிந்திருந்தும் நமது தேகத்தைக் கொஞ்சமேனும் பயிற்சி செய்யாதிருத்தல் வெகு ஆச்சரியகரமாயிருக்கிறது. நம்மவர்களில் நூறு பேரில் ஒருவன்கூட எதையேனும் கையினால் பிடித்துத் தொங்கும்பொழுது காலைக் கையிருந்தும் எடுத்தேந்த உயர்த்தச் சக்தியற்றவனாயிருக்கிறான். என்றாலும் அப்படிச் செய்வது கருடி வித்தையின் முதல் அப்பியாசமாம். மற்றவர்களுக்குச் சிறிதேனும் பிடிப்பில்லாதவிடத்தில் பழக்கத்தினாலே கருடி பழகினவன் கைகால்கள் கையைக் கையுறை பிடிப்பதுபோலப் பலமாய்ப் பிடித்துக்கொள்ளுகின்றன. கருடி பழகினவனுக்கு இடுக்கண் வேளைகளில் மனோதைரியம் குறைகிறதில்லை. சிறுவர்களுக்குக் கற்பிக்கும் வித்தைகளில் சிலம்பப் பயிற்சி வெகு சிறந்தது. சிலம்பப் பழக்கத்தால் தேக சுகம் அதிகரிப்பதுமன்றி மனவெழுச்சியும் உண்டாகின்றது. தேக பலமும் வியாதியும் ஒன்றுக்கொன்று ஜன்ம சத்துருக்கள். ஒன்றின் தளர்ச்சியை மற்றொன்று எதிர் நோக்கி அதன் ஸ்தானத்தை ஆக்கிரமித்துக் கொண்டு விடுவதில் அதிக தீவிரமுள்ளவை.

நாம் கையிலும் காலிலும் வலிமை யமைந்தவர்களாயினும் இடுப்பிலும் முதுகிலும் பலம் குறைந்தவர்கள். பழைய பிரதிமைகளில் வெகு அழகாய்த் தோன்றுகிற இடுப்பைச் சூழ்ந்திருக்கும் பலமான தசைநார் நமக்கு இல்லாததுபோலக் காணப்படுகிறது. ஒருவன் தேகவலிமையுள்ளவனாயிருப்பதற்குத் தசைநார் அதிக புஷ்டியடைந்திருக்கவேண்டுமென்பது அவசியம் அன்றென்று நாம் அறியவேண்டும். கஸரத்துப்பண்ணுகிறதினால் முதலில் தசைநார்கள் பெருகுகின்றன. ஆயினும் சிலநாள் பொறுத்து அழுந்திக் கட்டிபோலாகின்றன; ஏனெனில் தசைநாரின் சந்திகளில் கொழுப்பு அதிகமாக ஏறுகிறதில்லை. ஆரம்பத்தில் தேகப்பயிற்சி வெகு வருத்தமாகத் தோன்றுமெனினும் கல்வியைப்போலத் தொடங்குங்காற் றுன்பமாய் இன்பம் பயப்பனவற்றுள் இதுவுமொன்றென்க.

1902-ம் வருஷத்தில் அகமதாபாத்தில் காங்கிரஸ் மகாசபை கூடிய போது மிஸ், கோஷால் (Miss. Goshall B. A.) என்கிற வங்காள தேசத்

தைச்சேர்ந்த ஓர் மாது காங்கிரஸ் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீ சுரேந்திரநாத் பானர்ஜி அவர்களுக்கு ஒரு தந்தி அடித்தார். ஜனங்கள் சரீரப்பியாசத்தில் சிரத்தையில்லாமல் தேகத்தில் பலஹீனம் அடைந்துவருகிறார்களென்றும், ஆகவே காங்கிரஸ் சபையார் இந்துதேசவாசிகள் பலிஷ்டர்களாக இருக்கும் நோக்கத்தை முன்னிட்டு ஆதியில் இந்துதேசத்தில் வழக்கத்திலிருந்த விளையாட்டுகளைக் கைசோரவிடாமல் அவைகளுக்கு உயிர்கொடுத்து விர்த்தி செய்யவேண்டுமென்றும், அந்த விளையாட்டுகளில் தேர்ச்சியடைந்தவர்களைக்கொண்டு காங்கிரஸ் கூடும் சமயத்தில் ஒரு பெரிய விளையாட்டை நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்கு சன்மானமும் அளிக்கும்படி ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் அத்தந்தியில் குறிப்பிட்டிருந்தார். இதை அடுத்த தடவை கூடின 1903-ஆம் காங்கிரஸ் சபையார் கவனிப்பார்களென்று ஸ்ரீ சுரேந்திரநாத் பானர்ஜி அவர்கள் சொன்னார். இவர் கூறியது 1902-ம் வருஷத்திய காங்கிரஸ் ரிப்போர்ட்டில் கூடத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் கவனிக்கத் தவறிப்போனமை நம்மவர்களின் துரதிஷ்டமென்றே சொல்லவேண்டும். ஆதிகாலத்தில் மகா பலிஷ்டர்களான வஸ்தாதுகளுக்கும், மல்யுத்தக்காரர்களுக்கும், குத்துச்சண்டைக்காரர்களுக்கும், காடி கூட்டத்தாருக்கும், கத்தி விளையாடுகிறவர்களுக்கும் அரசாங்கங்களில் சன்மானம் செய்துவந்தார்கள். நம்முடைய முன்னோர்கள் இந்த வேடிக்கை வழக்கங்களை என்ன காரணத்துக்காகவும், என்ன ஆழ்ந்த யோசனையுடனும் உண்டாக்கி ஊர்ஜிதப்படுத்தினார்களென்பதை நாம் அறியத் தவறிப்போனோம்.

ஒரு தேசம் எவ்வளவு சம்பத்துள்ள பூமியாக இருந்தபோதிலும் என்ன பிரயோஜனம்? அந்த சம்பத்தை அனுபவிக்கும்படியான தேகவலிமையும் மனவல்லமையுமிருந்தாலல்லவோ தேசத்தில் செல்வம் நிறம்பியிருப்பதற்கு அழகாயிருக்கும். இப்படியின்றி ஜனங்கள் செல்வத்தை அநுபவிக்கக்கூடாமல் தேக பலஹீனமுள்ளவர்களாகவும் நோயாளிகளாகவுமிருந்து அற்ப ஆயுளில் இறந்துவிடுவார்களேயாகில் அந்த செல்வத்துக்கு என்ன மதிப்பிருக்கப்போகின்றது? ஆகவே ஒரு தேசத்துக்குப் பிரதான விஷயமென்னவென்றால் அத்தேசத்திலுள்ளவர்கள் பலிஷ்டர்களாகவும் திடகாத்திரமுள்ளவர்களாகவும் அற்ப காலத்தில் மரணமடையாமல் நீண்ட ஆயுள் உடையவர்களாகவுமிருப்பதுதான். இதற்கு வழி ஸ்ரீ அன்னிபெசண்டு அம்மையார் கூற்றின்படி பிரம்மசாரியத்தை கிரமமாக அநுசரிப்பதும் அந்தக்காலத்திற்குப் பிறகு விவாகப் பிரயத்தனம் கொள்வதும் ஒன்று; இரண்டாவது இளமை முதற்கொண்டே தேகப்பயிற்சியில் அபிமானம் வைத்து வியாயாமுயற்சி பாராட்டி வருவதுமாகுமென்பாம்.



# (DIARY) தினசரிக்குறிப்பு.

தினசரிக்குறிப்பு வைத்து வருதல் ஆங்கிலேயரிடமிருந்து நாம் ஸ்வீகரித்துக்கொண்ட பல நல்ல வழக்கங்களில் ஒன்றாகும். தன்மனோ அபிப்பிராயத்தைப் பதிய வைக்காமல், பார்த்தவுடன் தனக்குமட்டும் ஞாபகம் வரும்படியான வகையாக ஒரு சுருக்கமான குறிப்பு கொடுத்து அம்மட்டில் நில். விசேஷங்கள் இல்லாதபோது நீ என்ன செய்யவேண்டும்? ஒரு பக்கம் வீணாகிறதேயென்று உபயோகமற்ற சங்கதிகளுக்கு இடம் கொடுத்துவிடாதே. அப்பக்கத்தை விட்டுவிடு. கம்பீரமான மார்க்கத்தில் மனது செலுத்தி பெரிய விஷயங்களைப்பற்றி சற்று நேரம் ஆலோசி. பிறகு அவ்வழியில் நீ பெறும் அபிப்பிராயங்களைச் சேகரித்து அதன் சாரமான பாகத்தை மட்டும் சங்கதியில்லாத இடத்தில் பதிவு செய். அவனவனது யோக்கியதாம்சங்களை அவனவன் உபயோகிக்கும் தினசரியைக்கொண்டு கிரகித்துவிடலாம். உனது தினசரியை எவரும் பார்க்கப்படாதென்பதே உனது கருத்தாயிருக்கக்கூடும். அப்படியே நடக்குமென்று மட்டும் நீ நம்பிவிடாதே. நம்பி உன் தினசரிக்கு அதிகமான வார்த்தைகளைக் கொடுத்துவிடாதே. இதை நீ அங்கீகரிக்காவிடின் உனக்கு வரும் சங்கடங்களை எடுத்துப்பேச என்னொரு நா போதாது. எத்தனையோ ஆவசியகமென்று அன்றன்று தோன்றும் விஷயங்கள் பிறகு உபயோகமில்லாதனவாக ஆகிவிடுகிறது. உபயோகமில்லையென்று நினைத்து எழுதாதுவிட்ட விஷயங்களே ஓர் காலத்து அத்தியாவசியப்படுகிறது. வருங்காலத்தை மனதில்கொண்டு பயனுள்ள விஷயங்களையே தெரிந்தெழுத முயலுதல் மனித சக்திக்கு மீறிய செய்கையாகும். உபயோகமுள்ள விஷயங்களையே தினசரிக்குக் கொடுக்க எண்ணுகிறவன் வருடக் கடைசியில் தன் வேலையைப் பூர்த்தி செய்திருந்தாலும், பயனுள்ள விஷயங்களைப் பயனற்றனவாகக் கருதி அநேக சங்கதிகளைத்தான் விட்டுவிட்டதற்காக வருந்துவான். பயனுள்ளது இல்லாதது இவ்விரண்டையும் எழுதிவந்தவன் பின் ஒரு சந்தர்ப்பத்தில் தினசரியின் உதவி தேவைப்பட்டபோது தான் தேடிய விஷயம் விரிவு இல்லாமல் சுருங்கியும், பயனற்ற பாகங்கள் விஸ்தரிக்கப்பட்டும், சிற்சில சமயங்களில் தனது எழுத்துகளின் உருவமே தனக்கு விளங்காமலும் இருக்கக் காண்பான்.

ஆகவே நாள் என்று அலக்ஷியஞ்செய்யாமல் அதைக் கைப்பற்றினால் உடன் இருக்கும் புஷ்பமாம் உன் கரம் ஏறும். இப்படிப் பயனுள்ளது, பயனற்றதுமாகிய இரண்டையும் எழுதி வரும்போது சுருக்க லக்ஷணத்

தையும் அநுசரி. பாதி விஷயங்கள் மனப்பெட்டியிலும் அப்பெட்டிக்குத் திறவுகோலாகத் தகுந்த குறிப்புகள் தினசரியிலும் பதிவு பண்ணப்படட்டும். அப்படிச் செய்வதில் பயனுள்ள விஷயங்களை ஆரம்பத்திலும் பயனற்றதாக நீ எண்ணுபவைகளை பிறகும் வரை. எப்பொழுதும் மசி கொண்டு எழுது. அச்சு [illegible] கறுப்பு நிறத்திலேயே இருக்கட்டும்.

---

## சார சங்கிரகம்.

உலகத்திலுள்ள மற்ற எந்தச் சாதியாரும் நெசவுத்தொழில் கற்றுக்கொள்வதற்கு முன்னமே, முதல் முதல் நெசவுத் தொழில் செய்ய ஆரம்பித்தவர்கள் ஆரியர்கள் என்று தெரிகிறது. பூர்வ காலத்திலேயே இந்தியாவில் நெசவுத்தொழில் இருந்து வந்திருக்கிறதென்பதற்குப் போதுமான அத்தாட்சி வேதங்களிலேயே இருக்கிறது. ஆடை நெய்யும் ஸ்திரீ, நெசவுப்பாவும் தார்நூலும், நல்லாடை புனைந்த நாரி இவை போன்ற பல பதப் பிரயோகங்கள் ரிக் வேதத்திலே இருக்கின்றன. யஜுர் வேதத்தில் சரிகைப்புடவை, சித்திரப்பட்டு வஸ்திரம் இவைகளைப்பற்றிய பல பிரஸ்தாபங்கள் வருகின்றன. இந்தியாவில் செய்யப்பட்ட மஸ்லின் என்னும் மெல்லிய பருத்தி நூல் துணியை முதல் முதல் ரோம் தேசத்தார் வரவழைத்து அதைத்தங்கள் குல குருவாகிய ட்ருயிடருக்குக் கொடுத்தபோது அவர் அந்தத் துணியைப் பார்த்து அது ஒரு மரத்தின் மெல்லிய பட்டை என மயங்கினாராம். இப்படிப்பட்ட துணி பழய காலத்தில் டெக்காவில் செய்யப்பட்டதாகும். இதனாலேயே இதற்கு டெக்கா மஸ்லின் என்னும் பெயர் வழங்கிவந்தது.

*
* *

ஜப்பானியர்கள் ஒருபோதும் வடக்குத் திசையில் தலைவைத்துத் தூங்குகிறதில்லையாம். ஏனெனில், ஜப்பானில் இறந்துபோகிறவர்களின் தலைப்பக்கத்தை வடக்கு நோக்கி வைத்தே புதைப்பது வழக்கமாம். ஆதலால் வடக்கு நோக்கித் தலைவைத்துப் படுத்தால் அப்படிப் படுப்பவர்கள் இறந்துபோனவர்களுக்குச் சமானமாய்க் கருதப்படுவார்களாம். வெளியூரிலிருந்து வருகிற விருந்தாளிகளுக்கு இந்த வழக்கத்தைத் தெரிவிக்கவும், வடக்குத்திசையை எளிதில் அறிந்துகொள்ளவும் சாதகமாக ஜப்பானிலுள்ள ஒவ்வொரு பெரிய வீடுகளிலும் ஹோட்டல்களிலும் திசையறிகருவி வைக்கப்பட்டிருக்கிறதாம். இக்கருவி வீட்டின் மேற்கூரையில் வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஹிந்துக்கள் வடக்குத்திசையில் தலைவைத்துப் படுக்கக்கூடாதென்னும் கொள்கையுடையவர்கள். இதுவிஷயத்தில் ஜப்பானியரும் இந்தியரும் ஒரேவிதமான கொள்கையைக்கொண்டவர்களாயிருப்பது கவனிக்கத்தக்கது.



## கவித்துவம்.

---

மனிதனுடைய உள்ளுயிரைச் சென்று தீண்டிவருதற்குக் கவிதையைப் போன்ற வஸ்து வேறெதுவும் உலகத்திலே கிடையாது. கவியிலே கூறப்பட்ட எண்ணங்கள் மனித இயற்கையோடு கலந்து போய் விடுகின்றன. தனக்குத் தெரியாமலே மனிதன் அவ்வெண்ணங்களின் அடிமையாய் விடுகின்றான்.

ஆதியிலே, தமிழ்நாடு எல்லா விதங்களிலேயும் பெருமை கொண்டு விளங்கிய காலத்திலே தமிழ்க்கவிதை அதி ஸௌந்தர்யமாகத் தழைத்து விளங்கிற்று. பழங்காலத்துச் சிலப்பதிகாரம் என்ற ஒரு நூலை எடுத்துக் கொள்ளுவோம். அதிலே இருக்கும் கவிச்சுவையை நம்மால் வர்ணிக்கமுடியாது. பிற்காலத்துத் தமிழ் நூல்களிலே செறிந்து கிடக்கும் பத்து விதமான குற்றங்களை அப்பெருங்கிரந்தத்திலே தேடித்தேடிப்பார்த்தாலும் அகப்படாது. எளிமை, இனிமை, ஆழமுடைமை என்ற குணங்களிலே சிலப்பதிகாரத்துக்கு மேற்பட்ட நூல் கிடையாது. படாடோபமான வீண்கற்பனைகள் அதிலில்லை. அக்காலத்திலேயிருந்த தமிழ்ச்சாதியாரின் வாழ்க்கை யழகுகளையும், எக்காலத்துமுள்ள இயற்கைப் பெரும் பொருள்களின் அழியாத அழகுகளையும் அந்நூலியற்றிய இளங்கோவடிகள் அநுபவித்து வரைந்திருக்கும் நயம் நிகரற்றதாகும். காவிரிப்பூம் பட்டினத்துத் தொழில் முறைகளை அவர் கோத்திருக்கும் நயமொன்றுமே போதாதா? அவரது வரிப்பாடல்களின் இன்பம் சொல்லிமுடியாது. இறுதி

யிலே, அந்நூல் கதாநாயகன் மனைவியாகிய கண்ணகி தனது கணவனுக்குக் கொலைத்தண்டனை விதித்த பாண்டியன் முன்னே சென்று வாது கூறிய இடம் கற்றோர்களுக்கு நல்லமுது தரும் பாற்கடல்போன்றதாகும். நிற்க, இதுபோன்ற புராதனப் பெருநூல்கள் எத்தனையோ உண்மையான கவிதைநலம் பொருந்தி விளங்குகின்றன.

இனி நாயனார் திருக்குறளைப் பற்றிப் "போப்" என்ற தேசசுந்தரத்துப் பண்டிதர் பேராவேசத்துடன் வியந்து கூறியிருப்பதை நாம் அறியமாட்டோமா? கம்பரது திவ்விய கிரந்தத்தை நாம் புகழ்ச்சி செய்யப் போவது சூரியப்பிரகாசத்தைக் கண்ணுடையார் முன் விஸ்தரித்துப் பேசுவது போன்ற குறும்புத்தொழிலாகும். ஷெல்லி, பைரன், வொர்ட்ஸ் வொர்த், முதலிய அற்புதமான ஆங்கிலேயப் புலவர்களின் காவியாமிருதத்திலே மூழ்கியிருந்தவராகிய காலஞ் சென்ற ஸ்ரீ ராஜமய்யர் (கமலாம்பாள் சரித்திரம் எழுதியவர்) உலகத்துக் கவிசுரர்களிலெல்லாம் கம்பரே முதன்மைகொண்டவரென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார். விரிப்பிற் பெருகும். பண்டைக்காலத்திலே இவ்வாறு உன்னதஸ்திதியிலிருந்த தமிழ்க் கவிதை இப்போது என்ன நிலைமையிலிருக்கிறது? வார்த்தைகளினால் விடுகட்டுவோர்கள், தேர்கட்டுவோர்கள், பின்னல் பின்னுபவர்கள், பழங்காலத்து கழிவுக்கருத்துகளைச் சுவையற்ற மொழிகளிலே கோத்து நீண்ட நூற்களெழுதித் தலைநோவுண்டாக்குபவர்கள், யாதொரு கருத்தும் விளங்காதபடியே பாட்டெழுதும் வித்துவான்கள், நிகண்டு முழுதையும் தலைகீழாகப்படித்து அதுவே கவித்திறமைக்குப்போதுமென்று திருப்தி கொண்டிருப்பவர்கள், என்பவர்களின் கையிலே தமிழ்க் கவிதை அகப்பட்டுக்கொண்டு உருமாறிப்போய் வருந்துகின்றது. தமிழ் வல்லோரனைவரும் இப்பரிதாபகரமான நிலைமையைக் கவனித்து இதனைச் சீர்திருத்துவதற்குரிய முயற்சிகள் செய்யவேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொள்ளுகிறோம்.



## ஒரு நல்ல யுக்திக் குறிப்பு.

### வாசித்த பொருளை ஞாபகம் பண்ணும் விதம்.

நமக்கு அபீஷ்டமான ஒரு விஷயத்தின் பேரில் நாம் வாசித்தறிந்ததை எளிதில் மறந்து விடுகிறதில்லை. தனக்காக ஒருவன் பெருத்த திரவியம் வைத்திருக்கிறான் என்று கேள்விப்பட்ட மனிதன் இச்சமாசாரத்தை மறவாதிருப்பது சகஜம். நல்ல விளையாட்டுப் பண்டம் ஒரு சிறுவனுக்கு வாக்கு பண்ணப்பட்டால், இவ்வாக்கை அவன் ஒரு போதும் மறந்து விடுவதில்லை. இப்படியாக ஒன்றின் பேரிலுள்ள பெரிய தாற்பரியத்துக்கும் நல்ல ஞாபகத்துக்கும் இடையில் நெருங்கின சம்பந்தம் இருக்கிறதைக் காண்கிறோம். கவிதைப் பிரியமுள்ள மனிதன் செய்யுள் கவியாது பண்ணுவதும், சரித்திர சங்கதிகளைப் படித்தறியும் விநோதமுள்ளவன் அவைகளைத் தனக்கு ஞாபகம் பண்ணுகிறதும் சாதாரண உண்மைதான். யாதொரு விஷயத்தின் பேரில் ஒரு பிள்ளைக்குப் பிரீதியை எழுப்பிவிட்டால் அதைக்குறித்து வாசிக்கிறதை அது மனனம் பண்ணுவதும் நிச்சயமான காரியமென்று சாதிக்கலாம். ஞாபகமானது மற்றெந்த சத்துவத்தையும் போல அப்பியாசத்தினால் பலப்படுவதாயிருக்கிற தாதலின், சிறு பிராயத்தில் தானே அதைத் தக்கபடி உபயோகப்படுத்திக் கொள்வது நன்மை. தேதிகள் முதலிய பிரயோஜனமுள்ள சங்கதிக்குறிப்புகளை இளவயதில் ஞாபகத்திலே கூட்டி வைத்தால், பிற்காலத்தில் பயன்படத்தக்கதாக அவைகள் மனதில் அழுந்திக்கொண்டு, பிராயத்தில் வாசித்தறிகிறவைகளுக்குப் பெரிய சகாயமாயிருக்கும். ஞாபகத்தைக் கெட்டியாக்க வேறுவழியும் உண்டு. மனோகரமான ஒரு கதையை நீ வாசித்தபின் புஸ்தகத்தை மூடிவிட்டு, அச்சரிதையை உன் சகோதர சகோதரிகளுக்குச் சொல்லிக்காட்டப் பிரயாசைப்படு. ஆரம்பத்தில் இது கஷ்டதரமாய்த் தோன்றுவது வாஸ்தவம். ஆனால் பிரயாசம் சீக்கிரத்தில் பிரீதிகரமாவதன்றி, சங்கதி உன் மனதில் ஆழமாய் பதிந்து கொள்வதினால், அநேக ஆண்டுகள் கடந்தபிறகும் உன் ஞாபகத்தை விட்டு விலகாது. சுயதேர்ச்சியின் பேரில் நாட்டமுற்ற மாணாக்கனுக்கு இது ஒரு நல்ல யுக்திக்குறிப்பு. வாசித்த சங்கதியைத் தெளிவான சொற்களில் எழுதிவைப்பதினாலும் ஞாபகம் பலமாய் வேரூன்றும்.

## பூதப்பாண்டியன் தேவியார்.

பூர்விகத்தில் நமது நாட்டுப்பெண்கள் படித்திருந்த படிப்பும் அடைந்திருந்த நாகரீகமும் அளவிட முடியாது. தமிழிலே சிறந்த கவிதா சக்தியும், கல்வியறிவுமுடையவர்களாய் விளங்கிய

பெண்மணிகளில் பூதப்பாண்டியனது தர்மபத்தினியும் ஒருவராவார். அவரது சரித்திரம் "பெண் கல்வியால் ஒழுக்கம் கெடு"மென்பவர்களால் படித்தறியத்தக்கது! அவளது நாயகன் இறந்த பிறகு அவளும் இறக்க நிச்சயித்துவிட்டாள். அப்போது பல வித்துவான்களும் பெரியோர்களும் "உன் கணவனும் இறந்து நீயும் போய்விட்டால் எங்கள் கல்வியை யெல்லாம் யாரிடம் சொல்வோம்; நீ உயிர் விடக்கூடாது." என்று அவளைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். அதற்கவள் கவி மூலமாய்ச் சொல்கின்ற மறுமொழியை ஒவ்வொருவரும் வாசித்துத்தெளிய வேண்டும். பிறகு பெண்கல்வியின் உயர்வு ஸ்பஷ்டமாய் விடும். நாகரீகம் பெற்றுவரும் ஒரு ஜாதியாருக்கு முதலடையாளம் அவர்கள் ஸ்திரீ ஜனங்களை மதிப்புடன் நடத்துவதேயாகும். ஜனங்களுக்குள்ளே பெரும்பான்மையான இகபரஞானமும், சற்குணங்களும், பரஸ்பர சகாயசிந்தையும் அதனால் ஏற்படும் சௌகரியங்களும் மிகுதியுறுமானால் அதை நாகரீக நிலைமையென்று சொல்லுவோம்.

---

# தமிழ்ப் பாஷைக்குள்ள குறைகள்.

---

[பி. ஏ. பரீக்ஷை தேறிய ஒரு வாலிபனுடைய எண்ணங்கள்.]

வாலிபன்:—தமிழ்ப்பாஷை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. இது சீக்கிரம் அழிந்தால்தான் நமது நாடு பிழைக்கும்.

புலவன்:—ஏதப்பா, உனக்கு இந்த பாஷையிலே இவ்வளவு கோபம் உண்டாயிருக்கின்றது?

வாலிபன்:—நவீன நாகரீகத்தினுடைய சங்கதி உமக்குத் தெரியாதய்யா! மனித ஜாதி குரங்கு நிலைமையினின்றும் மாறி, காட்டு மனிதன் ஸ்திதிக்கு வந்தபோது உங்கள் தமிழ்ப்பாஷை ஏற்பட்டது. இப்போது உலகம் எவ்வளவோ மாறிப்போய்விட்டது. மனிதனுடைய அறிவு எவ்வளவோ விசாலமடைந்து போயிருக்கின்றது. வானத்திலுள்ள கிரகங்கள், நக்ஷத்திரங்கள், முதலியவற்றையெல்லாம் மனித அறிவு ஊடுருவிச் சென்றிருக்கிறது. பதார்த்தங்களின் அணுக்களிலேயெல்லாம் மனுஷ புத்தி நுழைந்து சென்றிருக்கிறது. பிரகிருதி விநோதங்களை மனிதன்



எவ்வளவோ ஆராய்ச்சி செய்திருக்கிறான். சமுத்திரத்து ஜலமனைத்தையும் குடத்துக்குள்ளே எப்படி அடைக்கமுடியும்? அதுபோலவே அளவின்றி விரிந்து கிடக்கும் மனுஷ புத்தியின் நவீன சலனங்களையெல்லாம் உம்முடைய பண்டைக்காலத்துத் தமிழிலே கொண்டு நுழைப்பது மிகவும் பிரயாசமாயிருக்கின்றது. நாம் நாகரீகமடையவேண்டுமானால் இந்தத் தமிழ்ப் பாஷையை முற்றிலும் கைவிட்டு விடவேண்டும்.

புலவன்:—"நாம்" என்று யாரையப்பா சேர்த்துக்கொள்ளுகிறாய்? உன்பாட்டிலே நீ பேசுவதைப் பார்த்தால் ஞானக்கடலின்கரை கடந்தவனாகவே நினைத்துக்கொண்டிருக்கிறாய். உன்னைப்போல் இங்கிலீஷ் படிப்பற்ற ஜனங்கள் தமிழ் பாஷையை எப்படி விடமுடியும்? ஒரு பாஷையை நீ மரக்கிளையென்று நினைத்துக்கொண்டிருக்கிறாயா? அதை ஜனங்கள் பிடித்துத் தொத்திக்கொண்டு விடமாட்டோமென்கிறார்களென்று எண்ணுகிறாயா? மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்களல்லவோ! தலைமுறை தலைமுறையாய், எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு நாட்டார் பேசிவரும் பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றுபட்டுப் போய்விடுகின்றது. மனித அறிவு வளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்துகொண்டு வரவர அந்நாட்டின் பாஷையும் விசாலமடைந்து வருகிறது. தாரித்திரியம், சரீர பலக்குறைவு, நோய், உற்சாகமின்மை முதலிய காரணங்களால் மற்ற நாட்டாரைப்போல விருத்தியடைந்துவருதல் அசாத்தியமாக இருக்கிறதென்பது ஒருவாறு மெய்யாக இருக்கலாம். அதற்குப் பாஷையைக் குற்றம் சொல்வதிலே என்ன பிரயோஜனமிருக்கிறது? ஆடத்தெரியாத தாசி கூடம் போதாதென்பதுபோலக் கதை சொல்லுகிறாயே?

வாலிபன்:—போதுமையா! பொதுப்படையாகப் பேசிக்கொண்டு போவதிலே என்ன பயனிருக்கின்றது? இப்போது ஐரோப்பியர்கள் பூமிநூல், வானநூல், கடல்நூல், பிராணிநூல், அணுநூல், முதலிய நூல்களிலேயெல்லாம் அளவு கடந்த முதிர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மின்சாரம், காந்தம், இவற்றின் குணதிசயங்களைப்பற்றி நவீன ஆராய்ச்சி வரம்பில்லாதிருக்கிறது. மின்சாரம், நீராவி என்பவற்றைத் துணையாக வைத்துக்கொண்டு மனித ஜாதியின் சவுகரியங்களுக்கும் அபிவிர்த்திக்கும் பயன்படுமாறு ஆயிரக்கணக்கான யந்திரங்களும் கருவிகளும் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வளவிலே புதிய பதங்களும் புதிய கருத்துகளும் லக்ஷக்கணக்காக உண்டாயிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் தமிழ்ப் பாஷையிலே பெயரும் கிடையாது; மண்ணும் கிடையாது. இப்படியிருக்க நீர் ஏதோ பொதுப்படையாக உருட்டிக்கொண்டு போகிறீர்!

புலவன்:—அடடா! உனது விவகாரத்தின் நுட்பத்தை என்னென்று சொல்வேன்? நீ ஓயாமல் அடுக்கிக்கொண்டுபோன நவீன ஆராய்ச்சிக் கதைகளெல்லாம் தமிழ் நாட்டு ஜனங்களுக்குள்ளே வழக்கமான பிறகல்லவோ அவை தமிழ்ப் பாஷையிலே வழங்குவதற்கு சுலபமாகும். தமிழ் நாட்டிலேயோ பொது ஜனங்களுக்கு எழுதப் படிக்கத்தெரிவது கூட அருமையாயிருக்கிறது. வயிற்றுப் பிழைப்பே பெரிய கஷ்டமாய்த் தோன்றுகின்றது. எனவே இந்நாட்டார் பொதுவாக மிகவும் அறிவு சுருங்கிப்போயிருக்கிறார்கள். இதற்கு பாஷை என்ன செய்யும்? நீராவியால் ஓட்டப்படும் ரயில்வண்டி இந்நாட்டிலே வழக்கமாயிருக்கிறது. இப்போது பொது ஜனங்கள் அதற்கு வார்த்தை ஏற்படுத்திக்கொள்ளாமலா இருக்கிறார்கள்? மின்சார சக்தியால் தந்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தமிழர்கள் வார்த்தை உண்டாக்கிக்கொள்ளவில்லையா? கோவணமில்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே பட்டு அங்கவஸ்திரத்துக்குப் பெயர் கிடையாதென்றால் அதற்கு அவர்களுடைய பாஷையின் மேல் என்ன குற்றமிருக்கிறது? துணியைக்கொண்டு கொடுத்து வழக்கப்படுத்தினால் முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக் கொள்வார்கள். தமிழ் நாட்டிலே தொழில் கைப்பாடும், ஆலோசனைமிகுதியும் ஏற்பட்டால் தமிழ்ப்பாஷை அன்றைக்கே வளர்ந்துபோய்விடும். இப்படிக்கின்றி இந்தப்பாஷையையே ஒழித்துவிடவேண்டுமென்று சொல்வது மஹா மூடத்தனமாகவல்லவோ முடியும். கண்ணிலே வியாதிகொண்டிருக்கும் ஒருவன், அதன் மூலகாரணங்களைத் தெரிந்துகொண்டு அவுஷதப் பிரயோகம் செய்யாமல் இந்தக் கண்களையே ஒழித்துவிட்டு நல்ல பிரகாசமுள்ள வேறு இரண்டு கண்களை வாங்கி வைத்துக்கொள்வது சாத்தியமா?

வாலிபன்:—ஏனையா சும்மா வளர்க்கிறீர்? நான் சொல்வதின் குறிப்பு உமக்குத் தெரியவில்லையே! தமிழ்ப்பாஷை இயற்கையிலேயே நவீனக் கருத்துகளுக்குப் பொருத்தமுடையதில்லை. இப்போது கவிதை விஷயத்தை எடுத்துக்கொள்வோம். இதற்கும் மின்சாரம், காந்தம், முதலிய பூதசாஸ்திர அபிவிருத்திகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதல்லவா? இதில்கூடத் தமிழ்ப்பாஷை என் இத்தனை சீர்கெட்டு இருக்கிறது? டெனிஸன் முதலிய நவீன ஆங்கில கவிகளையும், நம் தமிழ்நாட்டுப் புலவர்களையும் ஒப்பிட்டுப்பாரும். அதிலும் ஆங்கிலப்படிப்பற்ற தமிழ்ப் புலவர்களின் நிலைமை சொல்லவேண்டியதில்லை.

புலவன்:—யோசனையின்றி ஏனடா பேசுகிறாய்? நோய் கொண்ட மாமரத்திலே நல்ல பழம் எங்ஙனம் தோன்றும்? மரத்தின் நோயைத் தீர்த்தல்லவோ பிறகு கனியினுடைய ருசியைப் பார்க்கவேண்டும்? தமிழர்களைப் புனிதப்படுத்திப் பிறகு பார்த்தால் தமிழ்ப் பாஷையின் நறு



மணம் விளங்கும். தமிழர்கள் நேர்மையாக இருந்த காலத்தில் திருத்தக்க தேவர், இளங்கோ, கம்பர், முதலிய எண்ணிறந்த தமிழ்ப் புலவர் இருந்து அருமையான தெய்வீகப்பாடல்கள் பாடியிருக்கின்றார்கள்.

வாலிபன்:—சும்மா ஸ்தோத்திரம் பண்ணாதேயும். கம்பன், டம்பன், எல்லாம் நானும் கொஞ்சம் பார்த்திருக்கிறேன்.

புலவன்:—அப்பா, தயவுசெய்து உளறாதே. காலேஜுகளிலே கம்பராமாயணம் சொல்லித் தரப்படும் மாதிரியிலே உனக்கும் உன்போன்றாருக்கும் தமிழ்ப் புலவர்களிடம் வெறுப்பு ஏற்படுவது சகஜமேயாம். எனினும், போப் முதலிய ஆங்கிலேய வித்வான்கள்கூட பண்டைத் தமிழ்ப் புலவர்களின் ஆழ்ந்த கருத்துக்களையும், பெருமைகளையும் கண்டு மிகுந்த வியப்படைகின்றார்கள். கம்பராமாயணத்திலே சீதை தனியாக அசோக வனத்திலே யிருக்கும்போது ராமபிரான் அவ்வப்போது செய்த செய்கைகளையும் விளையாடிய விளையாட்டுகளையும் நினைத்து நினைத்து வருந்திக்கொண்டிருப்பதாகச் சில பாடல்கள் சொல்லப்படுகின்றன. அதிலே ஒரு பாட்டை உனக்கெடுத்துச் சொல்லிப் பொருள் கூறுகின்றேன். அது ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் பெறும்படி கட்டளையிடப்பட்ட காலத்திலேயும், 'ராஜ்யத்தைவிட்டு வனாந்திரம் செல்' என்று கட்டளையிடப்பட்டபோதும் ஒரேமாதிரி மனமுடையவனாக முகமலர்ந்திருந்த விதத்தைச் சீதை நினைத்துப் பார்த்துக்கொள்வதாகக் கூறப்படுகிறது. அப்பாட்டைக் கேள்:—

“மெய்த் திருப்பத மேவென்ற காலையும்
இத்திருத் துறந் தேகென்ற போதினும்
சித்திரத்தி னலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கு முகத்தினை யுன்னுவாள்.”

(பாடலின் பொருள் சொல்லுகிறார்.)

பார்த்தாயா? இதிலே என்ன ஓசை நயமும், சொல் நயமும், பொருளின்பமும் மலிந்து கிடக்கின்றன. இதை உனக்குத் திருஷ்டாந்தமாகச் சொன்னேன். இவ்வாறு கம்பராமாயணத்திலே ஆயிரக்கணக்கான பாட்டுகள் செறிந்து கிடக்கின்றன. மாம்பழம் அழுகியிருக்கும்போது தின்று பார்த்தவன் பொதுப்படையாக மாம்பழமே கெட்ட பொருளென்று நிந்திப்பதுபோல உன் பிரசங்கம் இருக்கிறது. மதுரையிலே நான்காந் தமிழ்ச்சங்கம் தோன்றிச் சில வருடங்கள் தாம் ஆயின. தமிழின்மேற் படிந்திருந்த மலினம் சிறிது சிறிதாக விடுபட்டு வருகின்றது. பெண்களுக்குப் பெற்றோரிடத்தும் மக்களிடத்தும் மூப்பு கிடையாதென்பது பழமொழி. அங்ஙனமே தமிழ் மாதையும் எண்ணி நாங்கள் வழிபட்டு வருகின்றோம்.

வாலிபன்:—போங்காணும்! "பொய் பிறந்தது புலவர் வாயில்" தெரியாதா! வருகிறேனையா. 'குட்மார்னிங் ஸார்' (Good morning sir.)

புலவன்:—தான் பிடித்த முயலுக்குக் கால் மூன்றே என்பாருடன் வாது புரிந்து ஆவதென்ன?

(இருவரும் பிரிகின்றனர்.)

## முதல் தந்தித் தபால்.

ஆயிரத்தெண்ணூற்று முப்பத்தியேழாமாண்டில், நியூயார்க் பட்டணத்தின் சர்வகலாசாலையில் சகலசாஸ்திர பண்டிதராயிருந்த மோர்ஸ் என்பவர் மின்சாரப் பிரயோகத்தினால் சைகைகள் கொண்டுபோகும் கருவியொன்று நிருமிக்கக் கருதிப் பலநாளாக முயன்றார். முயன்றும் பிரயோஜனப்படவில்லை. அப்படியிருக்குங் காலத்தில் பழய மாணாக்கரும், சாஸ்திரங்களில் ஞானத்தை வரப்பிரஸாதமாகப் பெற்றிருந்தவருமாகிய ஆல்பிரேட் வெயில் என்ற சிறுவரைச்சந்தித்து அவருடன் தன்னுடைய கருத்தையும், அதை நிறைவேற்றச் செய்த பிரயத்தனங்களெல்லாவற்றையும் வியக்தமாய் எடுத்துச் சொன்னார். அவர் சொன்னதைக் கேட்டு சற்று ஊகித்து அறிந்து, அவருடைய முயற்சிகள் பயன் பெறாதபோதிலும், அக்காரியம் சாத்தியமாகுமென்பது அவர் மனதில் ஆழமாய்ப்பதிந்தது. மறுபடியும், பண்டிதரின் வேலையை நிறைவேற்றுவதற்குப்போதுமான திரவிய சகாயம் வேண்டியிருப்பதாகவும் தெரிந்து கொண்டு, தானே வேண்டிய திரவியம் சேகரித்துக் கொடுப்பதாக வாக்களித்துத் தனக்கு அகஸ்மாத்தாய்க் கிடைத்த நற்சமயத்தைத் தவறவிடாது தானும் மனப்பூர்த்தியாய்ப் பங்காளியானார்.

இவர்கள் வேலை தொடங்குவதற்குமுன் "நியூ ஜெர்ஸி" மாகாணத்தில் "மோரிஸ்டவுன்" பட்டணத்தில் நியாயாதிபத்தியஞ் செலுத்திவந்த அவன் பிதாவினுடைய சம்மதமும் தேவையாயிருந்தது. அவர் சிற்ப சாஸ்திரத்தில் விசேஷ சாமர்த்தியமுடையவராயும் ஸ்பீட்வெல் இருப்புச்சாலைகளுக்கே சுதந்தரி



யாயுமிருந்தார். எப்பொழுதுமே அவர் தன் குமாரன் சாஸ்திரோக்தமான விஷயங்களில் வெளியிடும் அபிப்பிராயங்களுக்கு மதிப்புங் கண்ணியத்தையுங் கொடுப்பாராதலால் அப்பண்டிதரை வரவழைக்க அனுமதியுந் தந்தருளினார். இம்மூவருங்கூடிப் பிரபுவின் பொருளுதவியைக் கொண்டு தந்தித்தபாலின் சாத்தியத்தை வெளிப்படையாகக் காட்ட யந்திரவேலையைத் துவக்கலாமென்று நிர்ணயித்தார்கள். உடனே அடுத்த நாள் கடைத்தெருவில் பிரத்தியேகமாய் ஒரு பெரிய அறையொன்று திட்டஞ்செய்து மனிதர் கண்ணுக்குத் தட்டுப்படாமலிருக்கும்படிக் கபாடபந்தனம் பண்ணி பரம ரகஸியத்துடன் வேலையை ஆரம்பித்துவிட்டார்கள். இதற்குள்ளாகப் பண்டிதரும் தமது அலுவலின் பேரில் 'நியூயார்க்கு'க்குப் போய்விட்டார்.

வெயிலும் அவன் தோழனுமாகிய பக்ஸ்டரும் யந்திரத்தை நிரூபிக்கத் தங்களால் இயன்றமட்டும் அதிக சரீரப்பிரயாசத்துடன் இரவும் பகலுமாக உழைத்துவருகையில் எண்ணற்ற இடையூறுகள் குறுக்கே நின்றன. மோர்ஸ் பண்டிதர் சங்கற்பப்பட்ட தினங்களில் வேலையினது துரிதத்தையும், தனக்கு அசாத்தியமென்று காணப்பட்டதை அங்கீகரித்த அச்சிறுவனுடைய சாதகங்களையும் பார்க்க ஸ்பீட் வெல் நகரத்துக்கு வந்து போவதுண்டு. அவன் செய்த நூதன ஏற்பாடுகளில் லீவர் (Leaver-உலுக்குமரம்) சம்பந்தப்பட்டதுதான் அதிமுக்கியமாயிருந்தது. பண்டிதருடைய ஏற்பாட்டோடு திருப்தியடையாமல் தானே கோடுகள், புள்ளிகள் குறிக்கும் லீவர் ஒன்று ஏற்படுத்தினான். மோர்ஸ் ஆதியில் கருதியபடி செய்வது வருத்தமாயிருந்ததால் வெயில் தற்காலத்தில் வழங்கும் மாதிரியாக யுக்தியுடன் கண்டுபிடித்தான். அதைப் பூர்த்தியாக்குகிறேன் என்று தீர்மானித்தகாலம் சமீபித்தவுடனே வேலைமுடிந்ததென்று சொல்ல யாதொரு அறிகுறியும் காணப்பெறாமல் அவன் மனம் பதைபதைத்தது. அவன் அயலார்களுடைய விஷம அவதூறுகளினால் சஞ்சல மடைந்து கடுத்த முகத்துடன் வேலை எக்கேடுகெட்டாவது போகட்டுமென்றும், வேலைக்காரர்கள் அன்பத்தினின்று விலகிவிடலாமென்றுஞ் சொல்லி விட்டான். தனது தகப்பன் வேலையை நிறுத்திவிடக்கட்

டனை யிடுவாரோ வெனப் பயந்து, அவரது மனஸ்தாபத்திற்குப் பாத்திரனுயிருக்கவேண்டி யிருப்பதையுங் கருதி, பசித்தவேளைக் குணவில்லாமலும் அறையைவிட்டுக்குப் புசித்தும் முன்னைவிட பதின்மடங்கதிக ஊக்கத்துடன் வேலை செய்தான்.

கடைசியாக, தெய்வ சங்கற்பமாய், அவர்கள் நெற்றி நீர் சிந்த உழைத்த உழைப்பும், விடாமுயற்சியும் வீண்போக வில்லை. வெயில் தனது காரியம் பலிதமாகக்கண்ட வுடனே தன்தோழனுகிய பக்ஸ்டர் என்பவனைப் பார்த்து "அப்பா, என் வீட்டிற்குச் சென்று நமது வேலைப்பாட்டைக்கண்டு மகிழ என் தகப்பனரைக் கூட்டிவா" என்று சொன்னதும், அவன் அடங்காத பூரிப்புடன் தொப்பியைத் தூக்கி எறிந்து விட்டு வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்தோடினுன். அந்த தினம் ஞாபகத்தில் வைக்கவேண்டிய 1838-ம் வருஷம் ஜனவரி௴ 6-உ யாயிருந்தது. வெளியே போகத்தயாராயிருந்த அவன் தகப்பனர் சந்தோஷ செய்தியைக் கேட்டுக் கடைக்கு விரைந்துசென்றார். அவர் போயிருந்த அறை முழுவதும் தந்திக் கம்பிகள் அங்கு மிங்குமாக ஓடியிருந்தன. அவர் தானிப்பொழுது எழுதிக் கொடுக்கிற சமாசாரத்தை மற்றொரு அறையிலுள்ள பண்டிதர் என்னவென்று சொன்னல்தான் எனக்கு முழுநம்பிக்கை யென்று ஒரு துண்டுக் கடுதாசியில் "காத்தார் வீண்போகார்" என்ற சிறு வாக்கியத்தை எழுதிக்கொடுத்தார்.

கடுதாசியை வாங்கினதும் 'கட்டு கடகட கட்டு' என்ற அர்த்த மில்லாத தொனிகள் கேட்டோய்ந்த மாத்திரத்தில் மோர்ஸ் துரை சங்கதியின்ன வென்று சொன்னவுடன் மகனைப் பலவாறுகப் புகழ்ந்து தட்டிக்கொடுத்தார்.

ஆல்பிரெட் வெயில், வில்லியம் பக்ஸ்டர், மோர்ஸ் என்ற மூவரும் ஒருங்கு கூடிச் செய்த பிரயத்தனங்களாற்றுன் தந்தித் தபால் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது வெகுஜனப்பிரயோஜனமாக இருந்து வருகிறது.



# திருவள்ளுவர் கோயில்.

———:0:———

சென்னை மைலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் திருக்கோயிலைச் சென்று தரிசிக்கும் புண்ணியம் நமக்குச் சில தி னங்களின் முன்பு கிட்டிற்று. இரவு சுமார் ஏழு மணிக்கு நாம் இப் பெரியவர் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தோம். கற்பூர தீப வொளியிலே உயிர்த்து நிற்பது போலத் தோன்றிய அவருடைய திருவுருவத்தைக் காணும்போது எமக்கும் எமதுடன் வந்திருந்த நண்பர்களுக்கும் பரவசமுண்டாயிற்று. 1800 வருஷங்களுக்கு முன்னே மைலாப்பூரில் பிறந்து, உலகத்தில் மனிதர் இருக்குமளவும் மறக்கமுடியாத பெருங்கிரந்தமொன்றை இன்பம் ததும்பும் வார்த்தைகளிலே பாடிச்சென்ற, இந்தத் தமிழ் முனிவர், தமது சிலையிலே உயிர்கொண்டு நின்று நோக்குவாரானுல் அவர் அன்புடன் போற்றிய தமிழ்ப்பாஷை இப்போது அடைந்திருக்கும் நிலைமையைப்பற்றி அவருக்கு எத்தனை வருத்தம் உண்டாகக்கூடும் என்ற எண்ணம் எங்களனைவர் மனதிலும் ஏககாலத்திற் பிறந்தது. நெசவுத் தொழிலே எல்லாத் தொழில்களிலும் உயர்ந்ததென்று பாராட்டிய இந்த முனிவர் பெருமான் இந்தக்காலத்தில் அத்தொழில் அடைந்திருக்கும் நிலைமையைக் காண்பாராயின் "ஆஹா! இவ்வளவு இழிவான நிலைமைக்கா வந்துவிட்டது" என்றெண்ணிப் புழுங்குவாரல்லவா?

கல்விப் பெருங்கடலாக விளங்கிய இம்முனிவருக்கு இப்போது நடக்கும் பூஜையிலே பிழைகள் நிறைந்த மந்திரங்களின் முணுமுணுப்பு பிரயோகிக்கப் படுவதை இவரது திவ்ய ஹிருதயம் எவ்வாறு பொறுக்கும்? இது நிற்க, இவரது திருக்கோயிலிருக்கும் புண்ணியத்தெருவில் இக்காலத்திலுள்ள தமிழர்கள் இராப்போதுகளில் விளக்கு வைக்கக்கூட மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். இந்தத்தெருவெல்லாம் இருள் நிறைந்திருக்கிறது. கால் வைத்த இடமெல்லாம் சேறு, மூலைக்கு மூலை நாற்றம்! இப்படியா நாம் பெரியோர்களை ஆதரிப்பது? திருவள்ளுவரைப் போன்ற மகான் வேறெந்த நாட்டிலேனும் தோன்றிச் சென்றிருப்பாரானால் அவருக்குப் பளிங்குக்கோயில் இழைத்திருப்பார்கள். அக்கோயிலுள்ள தெருவெல்லாம் இராக்காலங்களில் பகல்போன்ற ஒளியும், கற்பூர வாசனையும் ஆநந்தகரமாக இருக்கும். அக்கம் பக்கமெல்லாம் தேவருலகுபோல் ரமணியமான வீடுகள் செறிந்திலங்கும். பெரிய வித்வான்கள் அந்த வீதியிலே வந்து குடியிருப்பார்கள். ஷேக்ஸ்பியர் பிறந்த ஏவன் நதிக்கரையிலுள்ள ஸ்டிராட்போர்ட் என்ற ஊரில் அந்தப் புலவர் வசித்த இடத்தை ஆங்கிலேய பாஷாபிமானிகள் ஆதரிக்கும் விசேஷத்தைப் படித்துப் பார்த்துவிட்டு நமது வள்ளுவ முனிவர் திருக்கோயிலிருக்கும் ஸ்திதியை நினைப்போமானால் மனம் புண்ணுபுலைகின்றது.

## பக்தி மார்க்கம்.

வேதாந்த சாஸ்திரத்திலே பரோக்ஷஞானம் என்றும் அபரோக்ஷ ஞானம் என்றும் இரண்டு வகையான ஞானம் உண்டு. "பரோக்ஷஞானம்" என்பது யாதென்றால், குருமுகமாகப் பிரம ஸ்வரூபத்தையும், முக்தியுண்மையையுமறிந்து அதில் அசைவற்ற விசுவாசத்தையும், பக்தியையும் அடைதல்; "அபரோக்ஷ ஞானம்" என்பது யாதென்றால் தானாகவே பிரமத்தைக் கண்டு தெளிந்து ஆனந்தமடைதல். இந்த இரண்டினுள் முதலாவதைப் பக்தி என்றும் இரண்டாவதை முக்தி என்றும் கூறலாம். இவற்றுள்ளே 'பக்தி' பரிபூரணமாக ஏற்பட்டு விடுமாயின் அடுத்த க்ஷணத்திலேயே முக்தி கைகூடிப்போய்விடும். பக்தி ஏற்படுவதுதான் கஷ்டம். அது ஏற்பட்டு விடுமானால் அப்பால் முக்தி மிகவும் எளிதாகும்.



"ஈசனிடத்திலே பக்தி எனக்கு ஏராளமாக உண்டு. அவனைச் சேர்வதுதான் நிகரற்ற பேறு என்பதை நான் அறிவேன். ஆனால் எங்கள் வீட்டுக் கள்ளுக்கடை கணக்கெல்லாம் சரிவர முடிப்பதற்கு இன்னும் ஐந்தாறு வருஷம் செல்லும். அதுவரை இந்த ஈசனைப்பற்றி நினைக்க எனக்கு ஸாவகாசம் இராது; எனினும் என் மனதிலே பிரமபதவியினிடத்தில் பலமான பக்தியிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை" என்று ஒருவன் சொல்லுவானானால், அவ்வாறு சொல்பவன் யதார்த்தமான உள்ளன்புடையவன் ஆவானா? எல்லாவற்றையும் மறந்து, எல்லாவற்றையும் துறந்து குறித்த பொருளே சதமென்றெண்ணி அதை நோக்கி அளவற்ற தாகத்துடன் செல்வதல்லவோ மெய்யான பக்தியாகும். அவ்விதமான பக்திதான் முக்திக்கு முதற்படியாகும். அதில்லாமல் உதடுமட்டிலே பக்தி பேசிப் பாசாங்கு செய்பவர்கள் முக்திக்கு ஒருபோதும் தகுதியுடையோராக மாட்டார்கள். ஒரு சாது வேதாந்த விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தபோது நம்மிடம், "பரோக்ஷஞானம் பெற்றபிறகு அபரோக்ஷஞானம் அடுத்த க்ஷணத்திலேயே வந்துவிடும்" என்பதற்குப் பின்வரும் திருஷ்டாந்தம் சொன்னார். "புதையல் இன்ன இடமிருக்கிறதென்று உறுதியாகத் தெளிவதுதான் கஷ்டமாகுமன்றித் தெளிவடைந்த பிறகு அதைப் பெயர்த்தெடுப்பதற்கு வெகு நேரம் செல்லுமா?" என்றார்.

## சமஸ்கிருத ஏட்டுப்பிரதிகள்.

மத்திய ஆசியாவில் டர்பான் (Turfan) என்கிற ஓரிடத்தில் சில சமஸ்கிருத கையெழுத்துப் பிரதிகளிருந்ததை எம். லீகாக் என்ற ஒருவர் கண்டுபிடித்ததாகவும், அவைகளை வாசிக்க ஒருவருக்கும் தெரியாமலிருந்து இப்போது பலின் பட்டணத்தில் சமஸ்கிருத பண்டிதராகிய ஹர். லியூடர்ஸ் என்ற ஜெர்மனியார் அவைகளை வாசித்து அவைகளின் கருத்தையறிந்துவிட்டாரென்

றும் தெரியவருகிறது. இந்தப் பிரதிகள் 2500-வருஷத்துக்கு முன்னால் எழுதப்பட்ட ஒரு நாடகநூலின் பாகங்களென்று இந்தப் பண்டிதர் சொல்லுகிறார். இந்த நாடக நூல் இத்தேசத்தில் எழுதப் பட்டதாகவே யிருக்கவேண்டும். ஏனெனில் 2500-வருஷத்துக்கு முன்னால் மத்திய ஏஷியாவில் சமஸ்கிருத பண்டிதர்கள் இருந்தார்களென்று நினைக்க நியாயமில்லை. அக்காலத்தில் இந்தியாவில் பௌத்த சமயம் பிரபலமாயிருந்தபடியால் இந்த நாடக நூல் எழுதினவர் அந்த மதத்தைச்சேர்ந்தவரா யிருக்கவேண்டும்.

அக்காலத்தில் பௌத்தசமயாசாரியர்கள் உலகத்தில் நாலு திக்குகளிலும் போய்த் தங்கள் மதத்தைப் போதித்தும் ஸ்தாபித்தும் வந்தார்கள். கிழக்கே சீனு, கோரியா, ஜப்பான் இத்தேசங்களிலும், பர்மா, ஸ்யாம், கம்போஜியா ஆகிய தேசங்களிலும், ஜாவா, சுமத்திரா போன்ற தீவுகளிலும் பௌத்த சன்னியாசிகள் போய் அந்த மதத்தை ஸ்தாபித்தார்கள். திபேத் தேசத்தில் அந்த மதம் வெகு பிரபலமாகி இப்போதும் அங்குள்ள பீடாதிபதியாகிய டலாய்லாமா பௌத்த சமயத்தாரின் குருவாய் விளங்குகிறார். மேற்குத் திக்கிலும் ஈஜிப்டு வரையில் பௌத்த சன்னியாசிகள் போனதாகத் தெரியவருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த மெக்ஸிகோ என்னுமிடத்தில் பௌத்த மதம் ஸ்தாபிக்கப் பட்டிருந்ததற்கு அடையாளங்கள் இன்னும் இருக்கின்றன. அங்கு இப்போது க்வாடிமாலா என்று சொல்லப்படும் பட்டணம் கௌதமாலயா என்ற பெயரின் திரிபு எனப்படுகிறது. இவ்வாறு உலகத்தில் நாலுதிக்குகளிலும் உயர்ந்த மதக்கொள்கைகளை ஸ்தாபித்து ஜனங்களுக்கு நாகரிகத்தையும் சாந்தபாவத்தையும் கற்பித்த பெருமை இந்தியாவாகிய நம் தேசத்துக்கு உரியது. மத்திய ஏஷியாவில் இப்போது கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் சமஸ்கிருதப் பிரதிகளைப்போல் வேறு பிரதிகளும் காலக்கிரமத்தில் கண்டுபிடிக்கப் படலாம். இவ்விடங்களில் வசிக்கும் ஜனங்களுடைய பூர்விகச் சரித்திரம் விஸ்தாரமாய் எழுதப்படக் காலம் வரும்போது, இந்தியாவிலிருந்து சென்ற பௌத்த சன்னியாசிகள் அவர்களுக்குச் செய்த பெரும் நன்மைகள் வெளியாகும்.



# ஓர் சமுசயவாதியும் வேதாந்தியும்.

ஒரு காலத்தில் ஒரு வேதாந்தியும் ஒரு சமுசய வாதியும் சந்தித்தனர். அப்போது பரஸ்பரம் இருவருக்கும் பின் வருமாறு சம்பாஷணை நடந்தன:—

சமுசயவாதி:— 'ஐயா! வேதாந்தியே ஓர் சந்தேகம்'.

வேதாந்தி:— 'அஃது யாது தெரிவிப்பாய்'.

சமுசயவாதி:— 'சொர்க்கலோகத்தில் வசிக்கும் புண்ணியாத்துமாக்களும் நிக்கிரைக்குமிடத்து அவர்கள் பகவானால் அக்கினிக்குழியில் வீழ்த்தப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றனர் என்று நீர் உரைக்கின்றீரே அஃது உண்மையோ?'

வேதாந்தி:— 'ஆம் அதற்கு என்ன ஆட்சேபம்?'

சமுசயவாதி:— 'நன்று. அவர்கள்தான் பாவங்களை எல்லாம் தகித்து வென்று பாபரகிதர் என்று பெயர் பெற்ற அக்கினிஸ்வரூபிகளாயிற்றே. அவர்கள் திரும்பவும் அக்கினிக்குழியில் வீழ்த்தப்படுவதால் அவர்களுக்கு என்ன துன்பமுண்டாகும்? நெருப்பை நெருப்பு என்னசெய்யும்? இதற்கு உம்முடைய சமாதானம் யாது?'

வேதாந்தி:— 'உன் சந்தேகம் இவ்வளவுதானு, இன்னும் வேறாகிலும் உளதா?'

சமுசயவாதி:— 'அதோடு போவானேன். இரண்டாவது, எல்லாம் ஈசன்செயல், ஒவ்வொன்றும் அவனுடைய ஆக்ஞைப்படிதான், "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று நீரே பன்னிப்பன்னி யுரைத்துவிட்டு, திரும்பவும் பாவத்தைச் செய்தவன் தண்டிக்கப்படுகிறான் என்று நேரிற் கண்டு வந்தவரைப்போற் பேசுகின்றீர். உண்மையில் உம்முடைய சொற்பிரகாரமே பார்க்கப்போனால் நாம் செய்வதென்ன விருக்கிறது? ஒருவன் தன் கைப்பொம்மையைக் கருத்துக் கிசைந்த வண்ணம் நடிப்பித்துக்காட்டி, பின்பு அவ்விதம் ஆடியது அதினுடைய குற்றமே என்று அதன்பேரிலேயே பழிசுமத்தி தண்டிப்பவனும் உண்டா? இதையும் விட்டால் சில சமயங்களில், யாவரேனும் துயரத்தால் மனக்கவலை யுறும்போது "அயன்விதியைத்தடுக்க யாராலும் முடியாது; அவனவன் தலை எழுத்தின்படி நடந்தே தீரவேண்டும்" என்றும் சட்டம் ஓதுகின்றீர். இங்கேயும் பாரும்: ஒவ்வொன்றும் கடவுள் ஆக்ஞைப்படியோ, அல்லது அயன் விதி

ப்படியோ நடப்பதாயிருக்கையில் மீண்டும் மனிதன் பேரிலேயே பழி போடுவது என்ன நியாயம்? இந்தப் போலி நியாயத்தை யாவர் தான் ஒப்புவர்?"

வேதாந்தி:— 'உன்னுடைய கேள்விகள் யாவும் தீர்ந்ததா?'

சமுசயவாதி:— 'இன்னும் பாரும். "அம்பட்டன் குப்பையைக் கிளறினால் அவ்வளவும் மயிர்" என்றபடி எதைப்பார்த்தாலும் அப்படியாய்ப் படித்தானிருக்கிறது. போனது போகட்டும், இவ்வளவிற்கும் காரணபூதனாய் யாரோ கடவுள் ஒருவர் இருக்கிறார் என்கிறீரே; அவருடைய மகத்துவத்தையாவது, அல்லது இந்த விஷயத்தில் உம்முடைய சொல்லையாவது உண்மையென்று நம்புவதற்கு, எங்கே அவரைக் கொஞ்சம் காட்டும் பார்க்கலாம்.'

இதைக் கேட்டு அவன் இதழ் மடியாமுன்னமே அவ்வேதாந்தி "அடிக்கறக்கிற மாட்டை அடிக்கறக்கவேண்டும்; பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக்கறக்கவேண்டும்; ஆகலால் அவனை வெல்வதற்குத் தக்க சூழ்ச்சி யாதெனில் சதுர்வித உபாயங்களிலும் தண்டோபாயந்தான் சாலவும் ஏற்றது" என்றுத் தனக்குத்தானே சிந்தித்துத் தெளிந்து, அவன் குடுமியை எட்டிப்பிடித்து வளைத்திழுத்து முதுகில் ஓங்கி ஒரு குத்து விட்டுக் கீழே தள்ளிவிட்டார். அதனால் அவன், ஆற்றற்கரிய கோபங்கொண்டு 'அடா நீ எம்மாத்திரம்' என்று அவர் மேல் நச்சரவமெனச் சீறி எழும்ப, குறிப்பறிந்த வேதாந்தியின் சீடன் தன் அபேட்சையாய் பின்னும் அவனுக்கு ஒரு உதை சன்மானம் பண்ணி, திரும்பவும் எழுந்த இடத்திலேயே வீழ்த்திவிட்டு அவருக்கு முன் நடப்பானாயினான்.

பின்பு சற்று நேரத்திற் கெல்லாம் அச்சமுசயவாதி எழுந்து அரசன் பாற் சென்று வேதாந்தியின் மேல் குறைகூறி முறையிட, அரசன் அத்தக்ஷணமே வேதவிற்பன்னரை வருவித்து, 'இஃதென்ன இன்று நம்மிடத்து எந்நாளுமில்லாத நூதனச் செய்கை காணப்படுகின்றது" என்றுவினவ, அதின் பேரில் அவர், மேல் நடந்த விர்த்தாந்தத்தை சவிஸ்தாரமாய் எடுத்துரைத்து,

"இவனை நான் அடித்ததாகச் சொல்லுகிறான், வாஸ்தவந்தான். இவனுடைய தேகமோ எலும்புதோல் மலசலாதிகளால் உருவாக்கப் பெற்றது. என் சரீரமும் அவ்வகைத்தே. ஒன்றுக்கொன்று பேதமென்பது என்னளவு மில்லாத நெருப்பை நெருப்பு யாதொன்றும் செய்யாதபோது, (அதே பிரகாரம்,) ஒரேவகையான தேகம் ஒன்



றோடொன்று தாக்குவதால் எதற்குத்தானாகட்டும் என்ன கெடுதியுண்டாகும்? என் கைக்கு இல்லாத உபத்திரவம் இவன் தேகத்தில் மட்டும் உண்டானதாக முறையிடுவது அதிசயிக்கத் தக்கதாயிருக்கிறது.

இரண்டாவது, ஒவ்வொன்றும் கடவுள் ஆக்ஞைப்படியோ அல்லது பிரமன் விதித்த விதிப்படியோ அல்லாமல் மனிதன் தன் சுயேச்சையாய் யாதொன்றும் செய்யாதபோது, அதே மனிதவர்க்கத்திற் சேர்ந்த நான்மாத்திரம் இவனை என்னிஷ்டமாய் அடித்ததாக என் மேற்குற்றமுறைப்பது என்ன நியாயம்? இதுவும் ஒருக்கால் கடவுள் எனக்கிட்ட ஆக்ஞைதானோ, அல்லது பிரமன் அவன் தலையில் விதித்த விதியோ அதனை யறிந்தவர் யாவர்?

மூன்றாவது, கடவுளைக் காட்டினாலல்லாது அவருடைய மகாத்மியத்திலோ, அல்லது என்னுடைய சொல்லிலோ நம்பிக்கை விழாதபோது, அத்தனை உபத்திரவமும், இவனுடைய சொல்லையும் உண்மையென்று நம்புவதற்கு ஏதோ அந்த உபத்திரவத்தைக் கொஞ்சம் காட்டச் சொல்லும் பார்க்கலாம்"

என்றனர். இதைச் செவியுற்ற அரசன் நன்று நன்றென அவர் திறமைக்கு மெச்சி, அவருடைய பெருமையை உள்ளவாறறியாமல் வழிமறித்து கௌரவபங்கம் செய்தது அவனுடைய தப்பிதமே என்று அவனைக் குற்றவாளியாக்கிக் கடுஞ்சிறைக்குத் தீர்ப்புசெய்தனன். சிறையினின்றும் வெளிப்பட்ட பின்பு சமுசயவாதி அந்த வேதாந்தியிடத்தில் அடைக்கலம் புகுந்து அவரையே குருவாக அடைந்து ஞானமார்க்கத்தில் வாழ்நாட்களைக் கழித்து இறுதியில் முக்தியடைந்தான்.

---

## பதப் பிரயோகங்கள்.

நாம் நமது பாஷையை விசுவாசிப்பது உண்மையானால் அப்பாஷையின் பதங்களினுடைய பொருள்களை உள்ளபடி உணர்ந்து பொருத்தமான இடங்களில் அவைகளை அமைக்கப் பழகிக்கொள்ளவேண்டும். ஒரு பையனுக்குப் பாடம் சீக்கிரமாய்த் தெரிந்துவிட்டாலும், கேட்ட கேள்விக்கு அவன் சரியாய் உத்தரம் சொன்னாலும், அவனை நல்ல பையன் என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வது சரியா பார்ப்போம். எவனுக்குப் பாடம் சீக்கிரமாய்த் தெரிகிறதோ அவனைக் கெட்டிக்காரன் என்று சொல்லவேண்டுமேயொழிய நல்ல பையன் என்று சொல்

லக்கூடாது. கெட்டிக்காரத் தனத்துக்கும் நல்ல குணத்துக்கும் வெகு தூரம். கெட்டிக்காரன் என்பதற்கும் பொருள் வேறு. தகாத காரியத்தைச் செய்யாமல் எது தக்கதோ அதைச் செய்கிறவன் நல்லவன் என்று அழைக்கப்படலாம். ஒரு சமயம் நல்ல குணமுள்ளவனுக்குக் கெட்டிக்காரத்தனம் இல்லாதிருக்கலாம். கெட்டிக்காரத் தனமுள்ளவனுக்கு நல்ல குணமில்லாதிருக்கலாம். ஆகவே இரண்டு பதங்களின் பேதா பேதங்களையும் நாம் நன்றாய் உணரவேண்டும்.

சில தருணங்களில் யாரைப் பற்றியேனும் அநுகூலமாகப் பேச வேண்டிய இடத்தில் இன்னாருக்கு நன்றியறிவிக்கிறேன் என்று சொல்வதற்குப்பதிலாக "இன்னாருக்கு வந்தனமளிக்கிறேன்" என்று சொல்வது தகுதியுள்ளதல்ல. இந்த வழக்கம் சாதாரணமாக அநேகரிடமிருந்தபோதிலும், சில சமயங்களில் அது காதுக்கு வெகு விகாரமாகக் கேட்கிறது. ஓரிடத்திலே ஒரு தனவான் ஒரு விஷயத்துக்கு நூறு ரூபாய் நன்கொடையுதவினார். அதற்கு சபா நாயகராயிருந்த கனவான் "இந்த சபைக்கு வந்து நம்மிடம் ஆதரவு பாராட்டி நன்கொடை உபகரித்த கனவானுக்கு நான் வந்தனம் செலுத்துகிறேன்" என்றார். வந்தனம் என்ற பதம் மேலோர்களுக்கே உபயோகிக்கத்தக்க தாகையாலும், அதை நன்றி என்னும் பொருளிலே உபயோகிப்பது சில சமயங்களில் அசம்பாவிதமாக முடிகின்றன என்று ஒரு பிரபல கிரந்த கர்த்தா எடுத்துக்காட்டினார். ஆகவே "வந்தனம் செலுத்துகிறேன்" என்பதைவிட "நன்றி அறிவிக்கிறேன்" என்று சொல்லுதல் மிகப் பொருத்த முடையதாகும் என்பது அவரது கருத்து. இந்தச் சாமான்ய விஷயத்திலேயே எத்தனை பிழைகள் உண்டாகின்றன பாருங்கள்! பேசப்போனையோ சாகப்போனையோ என்ற பழமொழி தகுந்த காரணம்பற்றியே யுண்டாயிருக்கவேண்டும்.

---

# அன்பு.

நம் அன்பை மேற்கொண்டாரும் நம்முடன் சந்தோஷப்பட்டாலொழியத் தனியே இன்பமடைதல் அசாத்தியம். அன்பு நம்பருவத்திற் கேற்றாற்போல உருக்கொள்கின்றது. குழந்தைப் பருவத்தில் தந்தை தாயிடத்திலும், யௌவன பருவத்தில் மனைவியிடத்திலும், வயோதிக பருவத்தில் தம் குழந்தைகளிடத்திலும், எப்பருவத்திலும் தம் சகோதர சகோதரிகளிடத்திலும் சிநேகிதர்களிடத்திலும் மக்கள் அன்பு பாராட்டுகின்றார்கள்.



அவன் அகங்காரத்தை யடக்கவேண்டும். நாம் இனி கட்டப்போகும் புது வீட்டைக் கண்டு ஏகாம்பரன் அப்படியே பிரமித்துப்போய் விடுவானென்பதில் தடையேயில்லை. இவ்வாறு திருவேங்கட முதலியார் பலவிதமாய் எண்ணிக்கொண்டு இந்த சமாசாரத்தை மிகுந்த குதூகலத்துடன் தமது மனைவி சுந்தரத்தம்மாளிடம் தெரிவிக்கலானார்.

நமது திருவேங்கட முதலியார் தங்கமான மனிதர். தமது பத்தினியிடம் வாயினால் பேசி அறியாத அத்தனை பரமசாது! கைபாலுங் காலாலுந்தான் பேசி விளையாடுவார். தெய்வம் பெண்களை எதற்காக சிருஷ்டித்தது? புருஷர்களிடம் உதைப்பிரயோகங்கள் பெற்றுக்கொள்வதற்குத்தானே! பெண்களைப் பற்றி அவர் அதிக இழிவான எண்ணம் உடையவர். அவர்களினும் கடைகெட்ட மிருகம் உலகில் வேறில்லை யென்பது இந்த மகானுபாவரின் சித்தாந்தம். ஆஸ்பத்திரியிலிருந்து சுந்தரத்தம்மாளுக்கு டாக்டர் வரவேண்டியதாகக்கூட நேரிட்டுப் போன தருணங்கள் அநேகம். என்ன செய்வாள் பாவம்! கொண்ட கணவனின் குளிர்ந்த குணத்தை நன்கறிவாள்! வாய்தவறி ஏதேனும் பேசிவிட்டாலோ அன்றைக்கு அந்த வீடு சுடுகாடுதான். தான் பத்து மாதம் சுமந்து பெற்ற பெண்ணை பாழும் படுகுழியில் எண்பது வயது கிழவனுக்கு ஐந்தாவது தாரமாகத் தள்ளி விடுவதென்றால் எந்தத் தாய்தான் ஒப்புவாள்? சொத்திருக்காம் சொத்து. புருஷனைவிட சொத்துதான் பெரிது போலிருக்குது! ஐயோ பகவானே! என் பர்த்தாவின் புத்தியைக் குணப்படுத்தும். அவரது யோசனையை மாற்றி அநுக்கிரகிக்கவேண்டும். ஐயோ பங்கஜம்! உன்னை இந்தப் பாதாளத்தில் தள்ளவா பத்து மாதம் சுமந்து பெற்றேன். உனக்கு இத்தனை கலைகளையும் கற்பித்தது இந்தக் கட்டையிலே போவானுக்கு மனைவியாவதற்கா?" ஐயோ தெய்வமே! மனமறிந்து இந்தத் தீமை நடக்கிறதே என்று பரிதபித்துக் கொண்டிருந்தாள்.

நமது நண்பர் திருவேங்கட முதலியார் பிடித்த பிடி குரங்குப்பிடிதான். அவர் எடுத்த காரியத்தை ஈசனே வந்து குறுக்கிட்டாலும் நிறுத்தி வைக்கமாட்டார். சுந்தரத்தம்மாள் தனது பர்த்தா சந்தோஷமாயிருந்த சமயம் பார்த்து விவாகத்தை நிறுத்தும்படியாகச் சொன்னார். உடனே முதலியாருக்கு வந்துவிட்டது ஆவேசம்! காலிலேயிருந்த செருப்பை எடுத்துக்கொண்டுவிட்டார். சுந்தரத்தம்மாள் அடிகளைத் தாங்கமுடியாமல் மூர்ச்சை போய்விட்டாள். மூர்ச்சையான பிறகும் எட்டி யுதைத்துக் காரியுமிழ்ந்துவிட்டு மகா கோபத்துடன் வெளிச்சென்றார். இந்த உலகத்திலே சில மூடபுருஷர்களிடம் நல்ல குணசாலிகளான பெண்கள் அகப்பட்டுக்கொண்டு ஐயோ என்னபாடு படுகிறார்கள்? ஐஸ்வரியத்தைக் கண்டு பிரமித்துப் போய் சில உயர்ந்த இடங்களில் தங்கள் பெண்களைக் கொடுத்துவிட்டுப் பெற்றோர்கள் படுந்துயரம் பேசவும்படுமோ?

நமது பங்கஜம் தன் தாயாரால் சகலமும் அறிந்துகொண்டாள். அழலானாள். சுந்தரத்தம்மாள் அவளைச் சமாதானப்படுத்தி, என் குழந்தாய்! இனி மீட்சியில்லை, வேறு மார்க்கமும் கிடையாது. இப்போது உனக்குப் பத்து பிராயமாகிறது. நான் புத்தியறிந்தது பதினைந்து பிராயத்தில்தான். அதுபோலவே உனக்கும் ஏற்படக்கூடும். இப்போது நீ சிறு பெண். உன்னைப் பற்றி உலகம் ஒன்றும் சொல்லாது. எங்குவேண்டுமானாலும் இருக்கலாம். ஆகவே உன் மனத்தைத் தைரியப்படுத்திக் கொள். ஒரு மூன்று வருஷம் வெளியூர்களிலே எவ்விடத்திலாயினும் தாமதி. சென்னப்பட்டணத்திலே என் அண்ணன் இருக்கிறான். அங்கேபோய்விடு. நடந்த விவரமெல்லாம் தெளிவாய்ச் சொல்லு. அவன் உன்னைக் காப்பாற்றுவான். நீ வீட்டைவிட்டு ஓடிப்போனாயென்ற அபவாதம் சிறு பெண்ணாகையால் உன்னைப் பாதிக்காது. மனித சகாயத்தை நம்பாமல் கடவுளையே துணையாகக்கொள். என்ன செய்வது. புருஷராஜ்யமாயிருக்கிறது! உங்கள் அப்பாவுக்கு உள்ள உண்மையான எண்ணம் யாதெனில் உனக்காகக் கிடைக்கிற 1300 ரூபாய்க்கு ஒரு பெரிய



மாடி வீடு கட்டிவிடுகிறதாம். வீடு முடிவதற்குள்ளாக அரங்கநாத முதலியார் இறந்து போவாராம், அவருக்கு இப்போது பலமான க்ஷய ரோகமாம். ஆகவே, இறப்பது நிச்சயந்தானாம். அவருக்குப் பிறகு அந்த ஏராளமான சொத்தெல்லாம் நீ அவருக்கு மனைவியாயிருந்தால், உன்னையே சேருமானதால் அந்தப் பணத்தைத் தன் வசம் செய்து கொண்டு ஏகாம்பரநாத முதலியாரைப் போலத் தானும் ஒரு செல்வப் பிரபுவாகத் தோன்ற வேண்டுமென்று மனோராஜ்யம் செய்துகொண்டிருக்கிறார். சங்கதி இப்படியிருக்கிறது. ஆகவே நீ துணிந்துவிடு. இப்போதே புறப்படு. இங்கிருந்து ரெயில் சார்ஜ் ரூபாய் இரண்டும் அணாபத்தும் ஆகிறது. விளையாடப்போவதுபோல் ரயில்வே ஸ்டேஷன் சேர்ந்து உன் மாமனிடம் போய்ச் சேரு. இந்தா பதினைந்து ரூபாய் தான் என்னிடம் இருக்கிறது. இதை வாங்கிக்கொண்டு பயணத்திற்குத் துரிதப்படு என்று கூறி முத்தன்ன முத்தந்தந்து கண்முத்துச் சிந்தினள். தாயும் மகளும் ஒருவரைவிட்டொருவர் பிரிகிறபோது பட்டபாட்டை வர்ணிக்க அந்தக் கம்பனே வரவேண்டும். தேசாபிமானிகளே! பெண்மக்கள் படுந்துயரங் கண்டீர்களா! ஐயோ!!

நமது பங்கஜம் ஆற்றொணாத் துயரத்துடன் அன்னையைப் பிரிந்து அடிக்கடி வீட்டின் திசையைத் திரும்பத் திரும்பப் பார்த்தவண்ணமே ரயில்வேஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தாள். தனக்கிருந்த கலவரத்தில் ஞாபகம் தப்பிப்போனாள். சென்னப்பட்டணம் என்ற பெயர் அவள் மனதிற்கு வரவேயில்லை. இரண்டு ரூபாய் பத்து அணா என்பது மட்டும் மனதிலிருந்தது. ஆகவே ஊரின் பெயரைச் சொல்லாமல் ரூ. 2-10-0க்கு டிக்கட் விரும்பினாள், டிக்கட் கொடுப்பவருக்கு சம்சயம் தோன்றிற்று. ஆனால் அதை வெளிக்குக் காட்டாமல் அடக்கிக்கொண்டு வெளியில் வந்து பங்கஜத்தை அழைத்துப்போய் ஒரு நாற்காலியில் இருக்கச் செய்து அவள் மனோரமாதானார்த்தம் ரூபாய் 2-10-0 உள்ள டிக்கட் ஒன்றை அவளிடம் கொடுத்து விட்டு தன் வேலையைத் தீவிரமாக முடித்துக்கொள்ள முயன்றார். ஒ

பேதையாகிய நமது பங்கஜம் அவரை நிரம்பவும் நல்ல மனிதன் என்று மதித்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். 'புக்கிங்கிளார்க்' தன்னுடைய காரியங்களை முடிவு படுத்திக்கொண்டு வெகு தந்திரமாகப் பங்கஜத்தி னிடமிருந்து அவள் வாய்மொழியாகவே சகல விஷயங்களையும் அறிந்து கொண்டார். திருவேங்கட முதலியாரின் நடத்தைப் பிசகுகள் யாருக்குத்தான் கோபத்தை யுண்டாக்காது? அதிக இரக்கமும் சினமும் கொண்டவராய்த் தான் காப்பாற்றுவதாகச் சொல்லி பங்கஜத்தை சம்மதிக்கப்பண்ணி உடன் இட்டுச்சென்றார்.

இந்த 'புக்கிங் கிளார்க்'கின் பெயர் கல்யாணராமன். இவருக்கு விவாகமா யிருக்கிறது. மனைவி அப்போது பூரண கர்ப்பிணியாய்த் தன் தாய் வீட்டிலிருந்தாள். நமது பங்கஜம் அவர் வீட்டிற்குச் சென்ற சமயம் அவரது நண்பரின் தர்மபத்தினி அங்கு வசித்துக்கொண்டிருந்தாள். அந்த அம்மாளின் பெயர் பத்மாவதி. இந்த அம்மாளுக்குப் பங்கஜத்தின் சரித்திரங்கேட்கவே அதிக பரிதாபமுண்டாகித் தன் பெண்ணைப்போலப் பாவித்து தன்னிடம் வைத்துக்கொண்டாள். பங்கஜம் புத்தகப் பைத்தியம் பிடித்தவளென்று கண்டு அவள் துயரம் மாற்ற அதுவே தக்க மார்க்க மென்று எண்ணியவர்களாய் அவள் விரும்பிய நூல்களை யெல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள். நமது பங்கஜம் இங்கு சுகமே யிருக்கிறாள். அகதிக்கு ஆகாயமே துணை!

சீதாலக்ஷ்மியின் துயரங்கள் முன்னமே பிரசுர மடைந்து விட்டன. பங்கஜம் படும் பாடும் வெளியாய்விட்டது. இனி நமது பத்மாவதியின் கஷ்டங்களைக் கவனிப்போம். கும்பகோணத்திலே இராமசாமி முதலியார் என்று ஒருவர் இருந்தார். அவருக்குப் புத்திரபாக்கியம் நீங்கலாக மற்ற சம்பத்துகள் யாவும் சம்பூர்ணமாயிருந்தது. மிகுந்த தர்மவான். ஆனால் சுயார்ஜிதமல்ல. தமது சிறிய தகப்பனாரின் சம்சாரத்தினுடைய பிதிரார்ஜிதம். அந்த சிறிய தாயார் இளமையிலேயே புருஷனைப்பறி கொடுத்து விட்டாள். தம்பதிகள் அந்நியோந்நியமாய் வாழ்வதைக்கண்டு மனது சகியாள்.

# பிரஜாநுகூலன்.

புத்தகம் 5. { திரிச்சிராப்பள்ளி. ஆகஸ்டு-மீ 1910. } சஞ்சிகை 10.



சைநாரம்

## காசி விஸ்வநாத முதலியார்.

இராஜாராம் மோகனராயர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பிரமசமாஜத்தைத் தழுவி சென்னைப்பட்டணத்தில் ஸ்ரீ இராஜகோபாலாசாரியார் அவர்கள் (1830–1867) 1864-ஆம் ௵ ஏப்ரல்மீ 7-ம் தேதி வேதசமாஜம் என்ற சபையையும், அச்சபையின் காரியங்களைப் பிரபலப்படுத்துவதற்காக 186[illegible]-ம் ௵ மேமீ 7-ம் தேதி தத்துவபோதினி என்னும் பெயரால் தமிழில் ஒரு பா

தாந்திர சஞ்சிகையையும் ஏற்படுத்தினார். இவரது காலத்திற்குப் பிற்பாடு ஷை காரியங்களை நடத்திவந்த முக்கியஸ்தர்களுக்குள்ளே ஸ்ரீமான் காசி விஸ்வநாத முதலியாரும் ஒருவராவார். இவர் கி. பி. 1806-௵ பிறந்தார். சென்னை முதலான இடங்களில் கல்வி கற்று முதலில் 'டிரான்ஸ்லேடர்' ஆனார். பிறகு உடுமலைப்பேட்டை 'டிஸ்திரிக்ட் முனிசிப்' பாகி, 1866-ம் ௵ ஆகஸ்டு மாதத்தில் கவர்ன்மெண்ட் வேலையை விட்டுவிட்டு மாதம் ஒன்றுக்கு $95\frac{1}{2}$ ரூபாய் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு சென்னைக்குத் திரும்பினார்.

அப்போது வேதசமாஜமும், தத்துவபோதினியும் மிகவும் சீர்கேடான நிலைமையில் இருந்தது. இந்த சமயத்தில் முதலியாரவர்கள் கைகொடுத்துதவினார். 1870-௵ ஆகஸ்டு௴ 15௳ தங்கசாலை வீதியில் 35வது கதவிலக்கமுள்ள தமது வீட்டில் பிரம்ம சமாஜம் என்ற பெயரால் ஒரு சமாஜம் ஸ்தாபித்தார். தத்துவபோதினிக்குப் பதிலாக பிரம்மதீபிகை என்ற மாத சஞ்சிகையைப்பற்றி 1870-௵ டிசம்பர்௴ 26ம் தேதி ஒரு விளம்பரம் வெளியிட்டு அதன்படியே பத்திரிகையையும் பிரசுரம் செய்தார். இக்தக்காலத்தில் பிரம்மசமாஜமும் 'பிரம்மதீபிகை' யும் வெகு பிரபலமாயிருந்தது. இந்த சந்தர்ப்பத்தில்தான் பிரம்ம பிரார்த்தனைப் புத்தகங்களும் பிரம்மசமாஜ நாடகமும் இயற்றி தமது "ஸ்டார் ஆப் இந்தியா பிரஸி" ல் பதிப்பித்தார். மேலும் புனர் விவாக தீபிகை, தாசில்தார் நாடகம், டம்பாச்சாரி நாடகம் முதலிய பல புத்தகங்களையும் வெளியிட்டிருக்கின்றார். இம்மகாநுபாவர் நம் தமிழ் நாட்டிற் பிறவாமல் ஆங்கில நாடொன்றிற் பிறந்திருப்பாராயின் இவர் கீர்த்தி வெகு பிரசித்தி பெற்றிருக்கும். முதலியார் அவர்களின் சிறந்த ஒழுக்கங்களைப்பற்றியும், அவரது வித்தியாப் பிரபாவத்தைப்பற்றியும், மனசாக்ஷிக்கு விரோதமில்லாமல் அவர் நடந்துவந்த நேர்மையைக்குறித்தும் அவர் இயற்றிய நூல்களால் இனிது காட்டப்படுதலின் அதனை விவரித்தல் மிகையென நீக்கப்பட்டது. கடைசியாக இவர் தமது 65-வது பிராயமாகிய 1871௵ அக்டோபர்-௴ 14௳ வெள்ளிக்கிழமையன்று பரந்தாமன் திருவடி நிழலெய்தினார். பண்டைக்காலத்துப் பிரபல கிரந்த கர்த்தர்களிலே இவருமொருவராவார்.



# கவிதாமாலை.

## பிரஜானுகூலன் பத்திராதிபர் நீடும் வாழ்க என்ற விடுகதை வினா.

### சிந்து.

* தானதனத்தான தனத்தான தனத்தான தனத்
தான தனத்தான தனத்தான.

தேசம்புகழ் சோழன் பெயரொன்று மதன் பெயரொன்று
திசைமுகன் பெயரொன்றுவானோர்
வாசதலமொன்று மலையொன்று வீமன் பெயரொன்று
மாலையொன்று பூமரப் பேரொன்று.
ஆசிதவயன் மனைவியொன்று தர்ம மடமொன்று
புக்கடூரொன்று சிவை பேரொன்று
நேசவந்தருவிலொன்று நிதியொன்று மாசற் (தான
நிச்சயப் பேரொன்று ஜாதியொன்று
பாலகுகன் பெயரொன்று தலமொன்று மிகுநதி
பண்ணூறு பெயரொன்று சுபமொன்று
சீலமுடன் சொல்வதற்கைந்தெழுத்துப் போருமதைத்
தெரிந்தப் பொருள் நடுவெழுத்தைக்
கோலமுடன் வரிசையாய் வரைந்திடப் [பிரஜானு
கூலன் பத்திராதிபர் நீடும்] இத்
தாலமிசை [வாழ்க] வெனக்கூறுமதறிந்து விடை—
சாற்றுவீர் செந்தமிழ்ப் புலவீரே.

* * * * * * *

### விடைப்பொருள்.

| | | | |
|---|---|---|---|
| செம் | பி | யன் | சோழன் பெயரொன்று. |
| மக | ர | கேது | மன்மதன் பெயரொன்று. |
| பிர | ஜா | பதி | பிரமன் பெயரொன்று. |
| பொன் | னு | லகு | தேவர் வாசஸ்தலப் பெயரொன்று. |
| முக் | கூ | டல் | மலையொன்று. |
| வல் | ல | வன் | வீமன் பெயரொன்று. |
| பவ் | ன் | மாலை | மாலையொன்று. |
| சண் | ப | கம் | பூமரமொன்று. |
| சாவி | த் | திரி | பிரமன் மனைவியொன்று. |

| | | | |
|---|---|---|---|
| சத் | தி | ரம் | தர்ம மடமொன்று. |
| சம | ரா | புரி | ஊரொன்று. |
| காந் | தி | மதி | பார்வதி பெயரொன்று. |
| கற் | ப | கம் | ஐந்தருக்களொன்று. |
| சது | ர் | த்தி | திதியொன்று. |
| மகா | நீ | லம் | மரகதப் பெயரொன்று. |
| வேட் | டு | வர் | சாதி ஒன்று. |
| சில | ம் | பன் | முருகன் பெயரொன்று. |
| திரு | வா | ரூர் | ஸ்தலமொன்று. |
| புக | ழ் | ச்சி | துதிப் பெயரொன்று |
| மங் | க | லம் | கல்யாணப் பெயரொன்று. |

இதின் நடுவெழுத்தை வரிசையாய் எழுதி வாசிக்க பிரஜானு கூலன் பத்திராதிபர் நீடும் வாழ்க வென்றாகும்.

V. மௌன குரு நத்தீர மூர்த்தி ஆசாரியார்.

---

## நட்பும் அறிமுகமும்.

அறிமுகம், நேசம் இவ்விரண்டையும் நாம் நன்குய்ப் பகுத்தறியவேண்டும். சிலர் நமக்கு அறிமுகமாய் இருக்கலாம். அவர்களை அவ்வளவுடனே வைத்துக்கொள்ளவேண்டுமேயன்றி நமது சிநேகிதர்கள் என்று சொல்ல இடங்தரக்கூடாது. பாலும் நீரும் ஒரேரூபமான பதார்த்தங்களாகவே இருந்தபோதிலும் இவ்விரண்டிற்கும் எவ்வளவு பேதம் இருக்கின்றது? அவ்வளவு பேதம் நட்புக்கும் அறிமுகத்துக்கும் உண்டாம். பாலிலே அறிமுகமாகிய ஜலமும், பாலாகிய நட்பும் ஆக இரண்டும் கலந்து அமையப் பெற்றிருக்கின்றது. அந்தப் பாலை நாம் நன்றாகக் காய்ச்சினால் அறிமுகமாகிய ஜலம் முழுதும் வற்றி வற்ற நட்பாகிய பாலின் சுவை அதிகரித்துக் கடைசியில் பிராண நட்பாகிய பால்கோவா வாக; அதாவது திரட்டுப்பாலாக ஆகின்றது. அந்தப் பால்கோவாதான் பிராண நட்பு. அதுவே முதிர்ந்த பக்குவமான நட்பு. அதுவே மனைவிக்குச் சமமான நட்பு. அறிமுகமான ஜலமும் நட்பான பாலும் சேர்ந்து அவஸ்தையிலே ஆரம்ப நட்பு



ஆகிய பாலாக இருக்கிறது. பிறகு அந்தப்பாலைக் காய்ச்சிப் பலவிதமாகத் துன்புறுத்தியுங்கூட அந்தப்பாலின் சுவையிலே சிறிதும் குறைவு ஏற்படாமல் கஷ்டம் அதிகரிக்க அதிகரிக்கப் பொறுத்துக் கொண்டு; அந்தக் கஷ்டத்தைத் தாங்காது வெளியேறிவிட்ட அறிமுகமாகிய ஜலத்தின் பிரிவையும் சகித்துக்கொண்டு, இப்படிப் பல கஷ்டங்களையடைந்தாலும் தனது சுவையிலே தாழ்ச்சியின்றி முன்னிலும் அதிகரித்த ருசியுடையதாய்த் திரண்டு பிராண நட்புக்குச் சமமான பால்கோவாவாக உருமாறுகின்றது. அறிமுகமான ஜலம் நட்பாகிய பாலுடன் சேர்ந்திருந்தபோதிலுங்கூட பாலுக்குக் கஷ்டம் வரும்போது அதாவது அதைக் காய்ச்சும்போது அறிமுகமாகிய ஜலம் வற்றிப்போய்விடுகிறது. அதாவது பாலைவிட்டு அகன் கஷ்டகாலத்திலே ஜலம் பிரிந்துபோய் விடுகிறது. அறிமுகத்தின் யோக்கியதையெல்லாம் இவ்வளவுதான். மனைவி எப்படி ஆரம்பத்தில் சாதாரணமான பெண்ணாயிருந்து பிறகு கணவனது கஷ்ட சுக ஸாமஸ்தங்களில் பங்கு பெற்று அவனுக்குப் பிராணேஸ்வரியாக ஆகிவிடுகிறாளோ, அவ்வாறே அறிமுகமும் நட்பும் சேர்ந்தது போன்றுள்ள ஆரம்ப நட்பாகிய ஜலசம்பந்தங்கொண்டுள்ள பாலானது நிலைகளும் முற்றும் முற்றும் அறிமுகத்தைத் அப்புறப்படுத்திவிட்டு கடைசியில் தனிப்பாலாக அதாவது பால்கோவாவுக்கு சமமாக பிராண நட்பாய் நின்று எத்தனை இடருற்றபோதும் மாறாத திடமும் வல்லமையுங் கொண்டு பரிமளிக்கிறது.

அறிமுகமாகிய ஜலம் பிரயோஜனமுள்ளதுதானா? அதை விட நட்பாகிய பாலும் அறிமுகமாகிய ஜலமும் சேர்ந்து இருக்கிற பால் மிகச் சிறந்ததன்றோ? இதனிலும் சாலச் சிறந்தது அறிமுகத்தினின்றும் வேறுபட்டுத் தனியாக ஆகிவிட்ட பால்கோவாவாகிய பிராண நட்பு அல்லவா? நன்றாக்கொன்று எவ்வளவு வித்தியாசங்கொண்டிருக்கின்றது பாருங்கள்.

அறிமுகம்:— இது தாரிக்கும் ஜலத்துக்குஞ் சமானமானது.

ஆரம்ப நட்பு:— இது உபமானத்திற்கும், ஜலமும் பாலும் சேர்ந்திருக்கிற பாலுக்கும் சமமானது.

பிராண நட்பு:— இது மனைவிக்கும், தனிப்பாலாகிய பால்கோவாவுக்கும் சமமானது.

கெட்டுப்போன பாலாயிருந்தால் அதைக்காய்ச்சிப் பால்கோவா செய்யும்போது இடையே முறிந்து நீராகிப்போம். அப்பால் அது பால்கோவா செய்யவராது. ஜலத்துடனும் அது சேராமல், பாலுடனும் அது சேராமல், பால்கோவாவும் செய்வதற்கு வராமல் கீழே ஊற்றிவிடும்படியான நிலைமைக்கு வந்துவிடுகிறது. அதுபோலவே சில துஷ்டர்கள் நட்பினர்போல் அவர் காரியார்த்தமாக நம்முடன் நேசித்துறவாடி வருவர். அறிமுகமாயுள்ளவர்களைவிட அதிக உயர்வுள்ளவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்வர். கெட்டுப்போன பால் நல்ல பால் போன்று காணப்பட்டு பிறகு அதன் ஸ்வபாவகுணம் வெளிப்படுவதுபோல, இத்துஷ்டர்கள் நட்பினர்கள்போலிருந்து ஏமாற்றிவந்தாலும், கஷ்டகாலத்திலே உடனிருந்து பிராண நட்பாகாமற் கெட்டுப்போன பால் பால்கோவா செய்யத் தொடங்கும்போது உடைந்து போவதுபோல இவர்களும் பிரிந்துபோய்விடுவார்கள்.

ஆகவே நாம் ஒரு பசுவினைத் தெரிந்தெடுத்துக்கொள்வதில் எவ்வளவு பரிசிரமப்படுகிறோமோ அவ்வளவுக்கு இரட்டிப்பாக ஒரு உத்தமமான நட்பைச் சம்பாதித்துக்கொள்வதில் சிரத்தை எடுத்துக்கொண்டு வெகு சாவதானத்துடன் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

இப்படி ஆராய்ந்து தெரிந்தெடுத்துக்கொள்ளுதல் பிராஜாபத்திய மணத்துக்குச் சமமானது. (பிராஜாபத்திய மணமென்பது தாய் தந்தையர்களே முன்னின்று ஒருவனுக்குப் பெண் தேடி மணமுடித்து வைப்பது.)

பரஸ்பரம் மனதிலே ஒருவிதமான கவர்ச்சியுண்டாகி ஒருவரையொருவர் அறியாதவர்களாக ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்தாலும் மனதினால் சம்பந்தப்பட்டு தன் மனதை இன்னொருவன் மனத்திற்குள் புகச்செய்து, அவன் மனத்தைத்தான் கிரகித்து இப்படியாக மனத்தால் ஒன்றுபட்டு அந்நியோன்னியமாகும் நட்பை, கண்டதுங் காதல் கொண்டு ஒருமைப்பட்டுப் போய்விடுகிற ஸ்திரீ புருஷர்களின் இஷ்ட பூர்த்தியாகிய காந்தர்வ விவாகத்திற்குச் சமமாகச் சொல்லலாம். இது சேர்க்கைய நட்புங்



காதலும் ஒரு தன்மைத்து என்று சிறப்பித்துச் சொல்லிக்கொள்ளப்படுகின்றது. இங்ஙனம் ஒன்று சேர்வதற்கு பூர்வவாசனை இருந்தாலொழிய இவ்வாறு அமையச் சந்தர்ப்பம் நேரமாட்டாது. இவ்வாறு அமையப் பெறுவதற்குத்தான் நட்பு என்ற சிறப்புப்பெயர் பொருத்தமுடையதாகும். நட்பானது முற்பிறப்பு வாசனையைச் சம்பந்தித்ததாகவே பெரும்பாலும் இருக்குமென்பதற்கு நட்புந் தயையுங் கொடையும் பிறவிக்குணம் என்ற ஆன்றோரின் அமுத வாக்கே போதிய சான்றாம்.

## துன்மார்க்க மைந்தன்.

"துன்மார்க்க மைந்தன் தன் தாய்க்குச் சஞ்சலத்தையுண்டாக்குகிறான்" என்பது ஞானிவாக்கு. தாய், தகப்பனிலும் மகனின் துன்மார்க்கத்தைப் பொறுத்து அவனைத் தழுவும் குணம் அவளுக்கிருப்பதால், அப்படிப்பட்டவளையும் துன்மார்க்க மைந்தன் சஞ்சலப்படுத்துகிறவனாயிருக்கிறானென்பது இதன் பொருள். இப்படிப்பட்டவனால் தாய்க்கே சஞ்சலமுண்டாகுமென்றால், தகப்பனுக்கு எவ்வளவதிக முண்டாகுமென்று சொல்லவேண்டியதில்லை. சீமையிலே சில தினங்களுக்கு முந்தி ஒரு தாசில் தன்னுடைய துன்மார்க்க மைந்தனை வாரண்டில் பிடித்து மாஜிஸ்டிரேட்டின் முன் ஒப்புவித்தார். அவனுடைய துன்மார்க்கத்தனத்தை விளக்க, அவர் காட்டிய இரண்டு கடிதங்கள் சாக்ஷிகளாயிருந்தன. அவைகள் அவர் மகனால் அவருக்கு எழுதப்பட்டவை. அவைகளிலொன்று: "இனிமேல் உன் உதவி எனக்குத் தேவையில்லை. நீ உன் வேலையை செய்து தவறிப்போனாய். நீ இன்னும் ஒருமாதம் உயிரோடிருந்தால், சாபம் பெற்று ராஜபுருஷனும் அருவருக்கப்படுவாய், நீ தற்கொலை செய்துகொள். உன் கல்லறை கனப்பண்ணப்படாமலும், உனக்காக ஒருவரும் அழாமலும் போவதாக." இரண்டாவது கடிதம்: "எத்தனை வருஷம் கடந்தாலும் நான் உன்னை நாசப்படுத்துவது நிச்சயம். என்னுடைய கோபத்திற்கும் நிர்மாணத்துக்கும் எல்லையில்லை. நீ செய்ததற்குப் பதில் வாங்குவேன். உனக்காக நரகமும், அதன் கொடிகளாகிய சாத்தான்களும் காத்திருந்து கொண்டிருக்கின்றன." இந்த கடிதம்

அவனின் வாழ்க்கையில் பிழைக்க எதுவாயினது. கடைசியாக கோர்ட்டில் தகப்பன் பிள்ளைக்காகப் பெருமுயற்சி செய்தும், தான் கம்பக்ரும் அவனை ஆதரித்தும் அவன் அவ்வாறு எழுதக் காரணம் தெரியவில்லையென்றார். பிள்ளை கோபத்தால் எழுதிவிட்டேன் என்றான். இன்னும் அவனை நன்றாய் தனி விசாரணை செய்து மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்தார். தகப்பன்மாரை மனவருத்தப் படுத்திக்கொண்டு ஊர்பொறுக்கிகளாகத் திரியும் அநேகம் பிள்ளைகளுக்குப் பாடமாக இது எழுதப்பட்டது. அப்பன் மாண்டால் அப்பன் அருமை தெரியும். உப்பில்லாவிட்டால் உப்பின் அருமை தெரியும் என்பது நேர்த்தியான பழமொழி.

---

## சுருட்டுக் குடிப்பவர்களுக்குப் போதனை.

டாக்டர் ஸ்காலர் என்பவர் தமது பலவருஷ அனுபோகத்தில், புகையிலைச்சுருட்டு குடிப்பவர்களின் வாய், பல், வயிறு, குடல், இருதயம், தோல் இவைகளைப் பரிட்சித்து எழுதி யிருப்பதாவது:— "சுருட்டு குடிப்பவர்கள் ஆகாரபோசனம் சாப்பிடாமலாவது, வெறும்வயிற்றோடு இருக்கும்போதாவது சுருட்டை வாயில் வைக்கக்கூடா தென்பதைப் பிரதமப் பிரமாணமாகக் கொண்டு கொள்ள வேண்டும். சரீர பிரயாசமான வேலைகளாகிய ஓட்டம், பாட்டம், ஓட்டம், இருசக்கர பைசிகில் வண்டி சவாரி, மலையேற்றம், தண்டுவலித்தல் முதலிய நேரங்களில் சுருட்டை உபயோகிக்கலாகாது. குதிரைக்காரரும் பிரான்ஸ்தேசக்காரரும் கையாளும் கெட்ட வழக்கத்தைப்போல் புகையை மூக்கின் வழியாய் விடப்படாது. கண்ணிலும் மூக்கிலும் புகைபடாதபடி சுருட்டுக்குழாயை நீளமாய் வைத்துக்கொள்ளவேண்டும். சிறிய குழாயை உபயோகிக்கப்படாது. சுங்கான் பிடிப்பது முதலானவையும், அதிகடித்த சுருட்டும் புகைக்கொடாத சிகரெட்டுமாம். ஒரு சுருட்டில் 5-ல் 4-பாகத்தைப் பிடித்தவுடனே சுருட்டை எறிந்துவிடவேண்டியது. எப்போதும் சுருட்டுக்கட்டுணி மிகத் தீமையானது. அதில் விஷமிருக்கிறது. சிகரெட்டுகளெல்லாம் பொதுவில் கெட்டதுதான். அதிலும் சீமைநாட்டுச் சிகரெட்டுகள் மிகக்கெட்டது. சுருட்டுக் குடிப்பவர் எப்போதும் தம் வாயைக் கழுவவேண்டும்.



சாப்பிடும்போதுமட்டுமல்ல, படிக்கப் போகும்போதும் மத்தியான நேரங்களிலுங்கூடப் பலதரமும் கழுவவேண்டும். அப்படிக் கழுவும் ஜலத்தில் ஒருகரண்டி சுத்திசெய்த உப்புப்போட்டுச் சுத்தமாய்ப் பல்லிடுக்கு முதலிய இடமெல்லாம் நன்றாய்க் கழுவிக் கொப்பளித்துமிழ வேண்டும். சுருட்டையாவது சுங்கானையாவது அதிகநேரம் வாயில் வைத்துக்கொண்டிருப்பதைவிட்டுக் கையில் வைத்துக்கொண்டிருந்து வேண்டியபோது மட்டும் வாயில் வைக்கவேண்டும்."

இந்த டாக்டர் சொல்லுவது முற்றும் சரியான அனுபோகமுறைதான். ஆனால் சுருட்டுக்குடிக்கக் கற்றுக்கொள்வதற்குக் காரணம் பிரதமத்தில் விளையாட்டு துஷ்ட சேர்க்கை முதலிய இன்னும் பலவாகும். இந்த வழக்கம் முற்றிவிட்டவர்கள், இதில் வெறுப்பாய்ப் போம்போது இவர்களே கற்றுக்கொண்ட விருத்தாந்தத்தை யறியலாம். இப்படிக் கற்றுக்கொண்ட பிறகு இதினால் கெடுதி நேரிடாதபடி தடுப்பதற்கு ஷை டாக்டர் சொல்லுகிற நக்ஷ வேலைகளைச் செய்வதற்குப் பெரும்பாலார் சோம்பலினால் இசையமாட்டார்கள். சோம்பலினாலே சுகாதாரத்தையும் நம்பாமல் கிடக்கிற ஜனங்களுக்கு இப்படிப்பட்ட புத்திமதிகளெல்லாம் தேவையாகிறதில்லை. கடைசியாகச் சகலரும் தாந்தாங்கள் கெட்டு செய்துகொண்ட வழக்கம்போல் தங்கள் பின்னேரையும் செய்யவிடாமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்து இவ்வழக்கமே பரவாதபடிச் செய்துவிடும்பக்ஷத்தில் நல்லதுதான். சுருட்டுக்குடிப்பதே கெட்டதுதான் என்று இவ்வழக்கமுடையவர்களே சொல்லும்போது இதைத் தடுப்பதற்கு யாரும் தடைசொல்ல மாட்டார்கள். ஆய்விட்ட கெட்ட வழக்கத்திற்குப் பரிகாரம் செய்ய விக்கிரமம் எடுத்துக்கொள்ளுவதைவிட அவ்வழக்கத்தைத் தலைகாட்டாமலே செய்வது மிக்க மேன்மையாம்.

---

## அநுபவம்.

மாறி மாறி வரும் இன்ப துன்பங்களால் மனது கெடாதிருக்க மனிதன் நாளும் முயலவேண்டும். இகலோக சம்சாரத்தில் இடையிடையே தோன்றி இன்னல் கொடுக்கிற காரியங்கள் எத்

தனையோ உள்ளன. இவ்வளவிலும் பட்டுத் தெளிந்தோர் படைத்துள்ள அநுபவம் சாமான்யமான தன்று. 'படிப்பு பெரிதா அநுபவம் பெரிதா' என்று நாம் ஆராயப் புகுவதிலிருந்து அநுபவத்திற்கு மிஞ்சின ஞானமும் அதனினும் மேம்பாடான படிப்பினையும் கிடையாதென்ற தீர்மானத்திற்கு வரவேண்டியவர்களாகிறோம். மேலும் மனிதனுக்கு ஒவ்வொரு தினத்திலும் ஒவ்வொரு புது அநுபவம் படிகிறது. நாள்தோறும் லோக வாழ்க்கையிலே ஒவ்வொரு படிப்பினையை அவன் கற்றுக் கொள்கிறான். உலகமானது ஒரு உபாத்தியாயராகவும் அதில் வசிக்கும் ஜனங்கள் மாணாக்கர்களாகவும் இருக்கிறார்கள். ஒரே ஆசிரியரிடத்தில் கல்வி பயின்ற பல மாணவர்கள் பலவித நிலைமைகளையடைய உபாத்தியாயர்மட்டும் தமது தொழிலை விடாதிருக்கின்றார். உலகம் எப்போதும் ஒரே தன்மையை யுடைத்தாயிருந்தாலும் அதிலே வாசம் புரியும் பிரஜைகள் மட்டும் பலவிதங்களாக மாறுபட்டுப் போகிறார்கள். இவர்கள் கொண்டுள்ள அநுபவஞானம் பின்னும் பல விதங்களிலே விசேஷமான மாறுதல்களைப் பெற்றுவிடுகின்றது. "பத்திரிகையின் அபிவிர்த்தி" என்ற வாக்கியம் எப்படி, "சந்தாதார்களின் அபிவிர்த்தி" என்று குறிக்கப் படுகின்றதோ அதுபோல "உலகம் பலவிதம்" என்ற பழமொழியானது ஜனங்கள் அடைந்திருக்கிற பலவித வேற்றுமைகளைச் சுட்டிக் காட்டுவதா யிருக்கின்றது. பூலோக வாழ்க்கையிலே புதிதாகப் புகுபவர்கட்கு தனக்கு முன் சென்று பாடுபட்டவர்களுடைய அநுபவமானது, சமுத்திரத்திலே தவறி விழுந்து தத்தளிப்பவனுடைய பார்வைக்கு ஒரு சிறு படகு புலப்படுவதை யொத்ததாகும். கல்விக்கு விலையுண்டு. அநுபவத்திற்கு விலையில்லை.

---

## நாகரீகம்.

"நாகரீகம்" என்னும் தெய்வமாது இவ்விந்தியாவையே தனது ராஜதானியாக்கிக்கொண்டனள். அவள் பிறந்தவிடமும் வளர்ந்தவிடமும் நம்மிந்துதேசமே. அவள் தனது ராஜதானியினின்று ஒரு யாத்திரைசெய்து திரும்புதற்கெண்ணிப் பாரசீகம் அரபியா முதலிய ஆசியாநாடுகள் கண்ணுற்றுப் பின்னர் வழியே



எகிப்து முதலிய ஆப்பிரிக்க நாடுகளைப்பார்த்து, அதன்பின் கிரீக்கு இத்தாலி முதலிய ஐரோப்பியநாடுகளிற் சென்றுதங்கி அதன்பின் ஐரோப்பாவைச் சார்ந்த ஆங்கிலநாட்டிற் சிறிது காலம் போக்கினள். இன்னும் அவள் புறநாடு காண்டலிற் கொண்ட பேரவாவினால், நிர்மலகமாய அமெரிக்காவையடைந்து அதன்பின் முடிவில் ஆசியகண்டத்தின் கீழ்க்கரையாகிய ஜப்பானியதேயத்தில் வந்து தற்காலம் தங்கியிருக்கின்றனள். இன்னும் சில நூற்றாண்டுகளிலோ அல்லது சில்லாண்டுகளிலோ தனது ராஜதானிக்கு வந்து சேருவள் என விவேகானந்தர் கூறியிருக்கின்றார். இதன் பொருளாவது; நாகரீகமானது முதன்முதல் நம்மிந்தியாவிற்றோன்றி உதித்ததென்பதாம் நம்மினின்றே புறநாட்டார் நாகரீகமடைந்தனரென்பதுமே. இது சரித்திரபூர்வமாயும் சற்றேறக்குறைய ஒத்திருக்கின்றது. ஆயின், நாகரீகமாவதியாது? ஓர் ஆங்கில அறிஞர், மனிதன் தன் செயற்கையாலடைந்த உன்னதமும் உயர்வுமுள்ள பதவி நாகரீகமாமென்றனர். அன்றியும் நாகரீகமென்னும் பதமே "நகரம்" என்பதின் சம்பந்தமெனப் பொருள் தருதலால் நாகரீகம் நகரத்தன்மை யெனவும் அநாகரீகம் நாட்டுத் தன்மையெனவும் கொள்ளலாம். ஆங்கிலமொழியின் வழிச்சொற்றாலும் இப்பொருளே விளங்கும்.

---

## பூசாரிகளும் பிசாசுகளும்.

பூசாரிகளுக்கும் பிசாசுகளுக்கும் உறவு அதிகம் போலும். பிசாசுகள் உண்டா இல்லையா என்னும் சந்தேகம் அநேகருக்கு உண்டு. வெகுபேர் பிசாசு உண்டென்று நம்பியிருக்கிறார்கள். குடியில்லாத வீடு, தண்ணீரிறைக்காத கிணறு, வெட்டி வெகு காலமான குளம், நீண்டு வளர்ந்த ஆலமரம், புளியமரம், இலுப்பைத்தோப்பு, யாரேனும் இறந்தவிடம், சுடுகாடு முதலிய விடங்களில் பிசாசுகள் வசிக்கின்றனவாம். இந்தப் பிசாசுகளில் சில ஆண்களாகவும் சில பெண்களாகவும் தோன்றுகின்றன வென்றும் இவ்விரண்டுக்கும் பாதமில்லை யென்றும் சொல்லுகிறார்கள். இந்தப் பிசாசுகளை ஓட்டுவதில் பூசாரிகளும் மலையாளிகளும்

கைதேர்ந்தவர்களாம். இந்துமதஸ்தர்களில் சிலருக்கு கர்ப்பம் உண்டாகாமற்போனால் பேய் பிடித்திருக்கிறதென்றும் அதற்கு யாரேனும் பூசாரியைக் கொண்டு இரணைக் கட்டச் சொல்லவேண்டுமென்றும் பிரஸ்தாபிக்கின்றனர். இங்கிலீஷ்காரர்கள் இவ்விராஜ்யத்தை யாளத்தொடங்கியும், நாகரீகம் முற்றியும், நல்ல படிப்பும், தெளிவான புத்தியும் உண்டாகியும்; இரயில், தந்தி, டிராம் வண்டி, பினல்கோடு, ஹைகோர்ட்டு, போலீஸார் முதலியன தோன்றியும் இந்தப் பிசாசு பிரஸ்தாபம் இன்னும் இருந்துகொண்டிருப்பது ஆச்சரியம்! நம்மவர்களில் எந்தப் பெண்ணுக்காவது சரீரம் இளைத்தால் பிசாசு பிடித்திருக்கிறதென்கிறார்கள். ஜுரம் கண்டால் பேயின் காரியம் என்கிறார்கள். மூளைகெட்டு பித்தம் அதிகமானால் முனி பிடித்திருக்கிறதென்கிறார்கள். பிசாசு பிடித்த பெண்ணை பூசாரிகளுக்கெதிரில் உட்கார வைத்தவுடன் பூசாரி அந்தப் பெண்ணை (அதாவது அந்தப்பெண்ணின் மேலிருக்கும் பேயை) நீ யாரென்கிறான். "நான் சங்கிலிக்கருப்பன் என்கிறது." பிறகு பூசாரி நீ இந்தப்பெண்ணை எப்போது பிடித்துக்கொண்டாய் என்கிறான். பேய் "நான் இவள் தனியாகக் குடத்தை யிடுப்பில் வைத்து தண்ணீர் எடுக்கவேண்டி குளக்கரைக்கு வந்தவுடன் பிடித்துக்கொண்டேன்" என்கிறது. பூசாரி "நல்லது, இனி இவளை விட்டுப்போ" என்கிறான். சங்கிலிக்கருப்பன் "நான் இவளை விடமாட்டேன். நீ என்ன செய்வாய்?" என்கிறது. அதற்கு "பூசாரி உன்னை அடித்துத் துரத்துவேன்" என்றவுடன், கருப்பன் இன்னும் மூன்று நாளைக்குள் போகிறேன் என்கிறது. இந்தலை சம்பாஷணை பூசாரிகளுக்கும் பிசாசுகளுக்கும் நடப்பதால் நாம் அவ்விருவருக்கும் அதிக உறவு இருக்கவேண்டுமென்று எண்ணுகிறோம். மேலும் பிரத்தியக்ஷமான பிசாசு பூசாரியாகவே தீர்மானிக்கவும் பிரியப்படுகிறோம். வைத்தியரைக் கண்டவுடன் வியாதிகள் புறப்படுவதுபோல மந்திரவாதிகளைக் கண்டதும் பேய்கள் புறப்படுகின்றன. மனதிலிருக்கும் பேயை ஓட்ட முயன்று உண்மையான பேயாகிய மந்திரவாதியிடம் தமது பெண்களை ஒப்புக்கொடுத்து ஏமாப்புற்றவர் எண்ணிலர். மந்திரம் கால் மதி முக்கால் என்ற பழமொழி ஆழ்ந்த கருத்துடையது.



# பேசிகள்.

பேசிகளென்பவை, தேகத்தினின்றுண்டாகும் சகல அசைவுகளுக்கும் மூலகருவிகள். அவை, மெதுவான சிவப்பு நிறமுள்ள அநேகசிறு சதை இழைகளாய் நரம்புகள் திரண்டு படல்படலாக தேகமெங்கும் செல்லும். பனைமட்டையில் நார்கள்சேர்ந்திருப்பதைப் போன்று மிருக்குமென்னலாம். இப்பேசிகள் வளைய வேண்டிய இடங்களில், அதிக உறுதியான அல்லது அசைவு குறைந்த முனை எழுவாயென்றும், அதிக அசைவுள்ள முனை பற்றுவாயென்றும் பெயர்களோடு அமைந்திருக்கின்றன. பனைமட்டைநார்களின் மத்தியில் தூசுகள் இருப்பனபோல், இப்பேசிகளின் நரம்பு இடைவெளியில் மஞ்சள் நிறமான ஒரு கொழுப்புப் பற்றியிருக்கின்றது. அந்தக் கொழுப்பு உணவின் பலத்தினால் உண்டாவது. இது அதிகப் பட்டால் அப்படலங்கள் பருத்து தேகம் மிக்கப்பருத்துவிடும். இக்கொழுப்பு சமஅளவாக விருக்கவேண்டியதேயன்றி அதிகமாயும் குறைந்தும் விடப்படாது. இக்கொழுப்பு, ஆகாரமில்லாதபோதும், வியாதி, அரோசிக முதலியகாலத்தும் குறைவதால் (நீற்று ஒழுகிப்போவதால்) தேக அளவு குறையும். இக்கொழுப்புதான் "பலம்" என்பது. அதிக சுமையை சுமக்கவும், பலத்த வேலைகளைச் செய்யவும் புகும்போது அப்படலங்கள் இக்கொழுப்பின் பலத்தால் தளராதிருந்து மிக்க உரமாய் நிற்கின்றன. அளவுக்கு மிஞ்சிய போது படல்கள் எழும்பாது. தொய்ந்துபோம். பெருந்தேகிகள் அற்பவேலைக்கும் மாத்திரமோசாததற்குக் காரணமிதுவே. ஆகையால் ஆகார வஸ்துக்களின் சக்திகளைக் கவனித்து அளவாயுண்டு பேசிகளைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதுடன், வேலைக்கு வேண்டி பேசிகள் அசையவும், அதற்குத் தக்கபடி ஓயவும் செய்யவேண்டியது. இப்படிச் செய்தால் பேசிகள் நல்ல இரத்தோட்டத்தைப் பெற்றுப் பலமாயிருக்கும்.

## ஜாதிபேதம்.

ஏழுவகைத் தோற்றத்துள்ளும் உருவமாறுதல்களினாலும், உணவு, வசிக்குமிடம், அறிவு இப்பேதங்களினாலும் பலவகுப்புகளாகப் பிரிகிறோம். மனிதர்களுக்குள், நிறம் அளவு பேதந் தவிர, மற்ற வித்தியாச மமையாததாலவர்களுக்குள் ஜாதிபேதமில்லை. ஆனால் இப்போது சொல்லிக்கொள்ளும் பிரிவுகள் அறிவாளிகளால் பிரிக்கப்பட்டதென்னலாம். மனிதன் ஐந்தறிவையும் ஐந்தாயுதமாகக் கொண்டு பல கிருத்தியங்களைச் செய்யவேண்டியவன். இவனுக்குள் கொள்வன, விலக்குவன ஏற்படாவிட்டால் இன்னது செய்வது, இன்னது செய்யாதது எனும் விவரம் தெரியாதவனாய்த் தன் வாழ்நாளை அவலஞ் செய்துவிடுவன். இதற்காகவே புத்திமான்கள் ஆதியில், ஜனங்களில் எவரெவர் எந்தெந்தத்தொழில் செய்திருந்தார்களோ அந்தந்தப்பெயரைவைத்துப்பிரித்து ஒவ்வோர் பிரிவுக்கும் தலைவனை ஏற்படுத்தி அவர்கள் சொல்லுகிறபடி நடக்கும்படியாகப் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினர். பூர்வத்தில் அக்கட்டுப்பாட்டிற்குள்ளாய் ஜனங்கள் நடந்து வந்ததினால் அப்போது சகலமும் ஒழுங்காகவே நிறைவேறி வந்தன. ஒவ்வொரு கூட்டமும் அப்படி அப்படியே சகஜீவியாய் வாழ்ந்தன. ஜாதிபேதமில்லாவிட்டால், ஒருவன் ஓர் கலியாணஞ்செய்ய பூமியிலுள்ள ஜனங்களுக்கெல்லாம் சாதம் போடவரும். பூமி முழுஜனங்களையும் ஒருவனால் கட்டியடக்கமுடியாது. பிரஜாவிருத்தி அதிகமாய்விடும். பூமியிலிடம் போதாது. இன்னும் இதையொட்டிய பல கெடுதிகளும் நடக்கும். ஆனால் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி யென்று சண்டைபோடுவது மட்டும் பெருமூடத்தனமென உறுதியாய்ச்சொல்வோம். ஜனமதிப்பு கொஞ்சமாயுள்ள தேசங்களுக்கு ஜாதிபேதம் வேண்டியதில்லை. நமது விரல்கள் எல்லாம் ஒரே அளவாயிருந்தால் எந்தவேலைதான் செய்யமுடியும்? முதலில் இறுகப் பிடிக்கத்தான் கூடுமா? ஜாதிபேதத்தைவிடத் தகுந்த விடத்தில் விட்டும் அநுசரிக்கவேண்டியபோது அநுசரிக்கவும் பழகவேண்டும். சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் என்றார் ஒளவையார்.



## தாகம்.

இருதயத்தை அடுத்து, நீர்மயமாயும் கடல் பஞ்சைப் (Sponge-ஸ்பஞ்ஜ்) போன்றதாயுமிருக்கிற நுரையீரலுக்குத் தக்க தண்ணீரில்லாதபோது அது சுருண்டு அதன் கொத்துமுளையிலிருந்து உள்நாக்கின் அடிமுளையிற் பற்றியிருக்கும் சவ்வுக்குயிறு வரையில் வறண்டு உள்நாக்கு, நாக்கு இவற்றின் ஈரத்தைக் கிரகிக்கும்போது நமக்குத் தாகம் நன்றாய்த் தோன்றுகிறது. இரத்தாசயத்திற்கு வேண்டிய ஜலத்தில் சிறிது குறைந்தாலும் அதை உடனே தெரிவிப்பது நுரையீரல்தான். அதற்காகவே அது இருதய சமீபத்தில் அமைந்தது. இவ்வித தாகத்தையடக்கப் பேதை ஜனங்கள் பண ஆசையால் பற்பல கெட்ட போதை வஸ்துவைக் கலந்து வைத்திருக்கும் மோசக்காரர்களுடைய ஆர்ப்போதனைக்குள்ளாய் அவர்களால் கொடுக்கப்படும் சாராய முதலிய கெட்ட வெறுந் தண்ணீர்களைக் குடிக்கிறார்கள். இதனால் அந்த பூப்போன்ற நுரையீரல் முதலிய அவயவங்கள் வெந்து, அவைகளைப்பொட்டி தேகமெங்கும் மிகவாய்ச் செல்லும் மெல்லிய நரம்புகள்: சவ்வுகள், மூளை முதலியவைகள் கெட்டு அவர்கள் மூடர்களாயும், பைத்தியக்காரர்களாயும் ஆய்விடுகிறார்கள். குடிப்பழக்கமுள்ளவர்களில் சற்குணவான்கள் காணப்படுதே கிடையாது. குடியினால் சடிதிமரணமும் நேரிட்டிருக்கிறது. தாகமெடுக்கையில் சாப்பிட வேண்டியது சுத்தஜலமேயாம். சாராய முதலியவற்றைத் தாகத்துக்கென்று அருந்துவதில்லை யானாலும் பழக்கம் அப்படிச் செய்யும்படி வற்புறுத்துகிறது.

# படிப்பின் பெருமை.

மனிதர்களுக்குப் படிப்பே பெருந்துணையாம். அது அவர்களுக்கு எவ்வகை நன்மையையும் விளைவிக்கின்றது. எவர்க்கும் படிப்பு மிக மனக்களிப்பு உண்டாக்குகின்றது; ஓர் உயர்ந்த ஆபரணமாகின்றது; சிறந்த சாமர்த்தியமும் சம்பாதிக்கின்றது. ஏகாந்தமாய் உட்கார்ந்திருக்கும் பொழுது படிப்பு மிக்க மனமகிழ்ச்சிதரும்; பண்டிதர்களுடைய சபையிலே போய்ப் பிரசங்கம் செய்யும் பொழுது அத்தனையும் ஓராபரணமாகும்; யுக்தா யுக்தமறிந்து வியாபாரங்கள் நடத்துவதில் மிகத்திறமையுண்டாக்கும். அந்தந்த சமயங்களில் அததற்கு ஏற்றபடி யோசித்து நடப்பதும், நியாயாநியாயங்களை அறிந்து நியாயாதிகாரிகள் தீர்ப்பு செய்வதும், பின்னும் பற்பல காரியங்களைத் தக்கபடி நடத்துவதும் இவை முதலிய வெல்லாம் படிப்பினால் அமைந்த திறமையேயன்றி வேறென்ன? படிப்பில் நெடுநேரம் பொழுதுபோக்குவது சோம்பலாகும்! அதை ஆபரணமாக அடிக்கடி உபயோகிப்பது மிகவும் இகழ்ச்சியாகும்; படிப்பின் திறமையை அதிகமாக உபயோகிப்பதும் பொல்லாங்கு செய்வதாகும். படிப்பானது அவரவருடைய சுபாவசித்தமான குணங்களைப் பரிபூரணமாக்குகின்றது. இயற்கையான திறமைகள் இயற்கையாய் உற்பத்தியாகின்ற செடிகள் போன்றவை. படிப்பாகிய ஆயுதத்தைக் கொண்டு அவற்றின் தழைகளைக் கழித்து வந்தாலல்லது அவை செம்மையாக வளரமாட்டா. அந்தப்படிப்பையும் உலக நடவடிக்கைகளைக்கொண்டு ஒரு நிதானத்தில் நிறுத்தாவிடின் அதன் செய்கைகள் யாவும் அளவு கடந்ததாகிவிடும்.

தந்திரசாலிகள் படிப்பைப் பகைக்கிறார்கள்; ஒன்றும் தெரியாத சாமானியர்கள் படிப்பைப் புகழ்கிறார்கள்; விவேகிகள் அதை உபயோகப்படுத்துகிறார்கள். விவேகிகள் தங்கள் புத்திக்குத்தோன்றிய படியே நடப்பதில்லை; பிறருடைய அபிப்பிராயங்களை நன்றாய்க் கண்டறிந்து அதற்கேற்க நடக்கிறார்கள். நாம் படிப்பது ஆக்ஷேபனை செய்வதற்கும் எதிர்த்துப் பேசுவதற்கும்



அன்று; எதையும் உண்மையாக நம்பி அப்படியே அங்கீகரிப்பதற்கன்று; வீண்வாதாடிப் பொழுது போக்குவதற்கன்று; எதையும் ஆய்ந்து ஆலோசித்து யுக்தப்படி நடப்பதற்காகவே.

படிக்கவேண்டிய பலபுத்தகங்களுள் சிலவற்றை ருசியை மாத்திரம் பார்த்தறிந்து கொள்ளவேண்டும்; சிலவற்றை அப்படியே விழுங்கிவிடவேண்டும். சிலவற்றை நன்றாக மென்று தின்று, ஜீரணப்படுத்திக் கொள்ளவேண்டும். அதாவது இங்குமங்கும் உள்ள விசேஷங்களை மட்டும் கண்டறிந்து கொள்ளவேண்டிய புத்தகங்கள் சில; ஒருவாறு முழுதும் படிக்கவேண்டியவை சில; சிறிதும் தப்பாமல் முழுதும் மிக்க ஊக்கத்தோடு கருத்தாய்ப் படித்து முற்றும் மறவாது வைத்துக்கொள்ளவேண்டியவை சில; பிறரைக்கொண்டு படிக்கச் செய்து அவற்றின் முக்கிய தாற்பரியத்தை மட்டும் எழுதிவைத்துக்கொள்ளவேண்டியவை சில; அற்ப விஷயங்களும் உபயோகமற்ற விஷயங்களும் உள்ள புத்தகங்களுமே இவ்விதமானவை.

படிப்பினால் மனிதன் பூரணனாகிறான்; சிந்தனையினால் சமுசயமற்றவனாகிறான்; எழுதுவதனால் தவறற்றவனாகிறான். விஷயங்களை எழுதிவைத்துக்கொள்ளாதவனுக்கு ஞாபகசக்தி விசேஷமாகவேண்டும்; சிந்தனை செய்யாதவனுக்குப் புத்தி அதிகமாகவேண்டும்; படியாதவனுக்குத் தான் படியாதவனல்லவென்னப் பார்ப்போரைப் பிரமிக்கச்செய்யச் சூது விசேஷமாகவேண்டும்.

சரித்திரங்களைப் படிப்பதனால் மனிதர்களுக்கு ஞானம் அதிகமாகும். காவியங்களைப் படிப்பதனால் சாதுரியம் அதிகமாகும். கணிதத்தில் பழகுவதனால் புத்திகூர்மை உண்டாகும். பிரகிருதி தத்துவ சாஸ்திரங்களைப் படிப்பதனால் ஆழ்ந்த அறிவும் நியாய புத்தியும் உண்டாகும். தர்க்கசாஸ்திரமும் அலங்கார சாஸ்திரமும் படிப்பதனால் வாதம் செய்யத்திறமையுண்டாகும்.

புத்திசாதுர்யத்திற்கு எவ்விதமான இடையூறுமில்லையென்றும், படிப்பைக்கொண்டு அதை மிகவும் சீர்திருத்தலாம். சரீ

ரத்தில் உண்டாகும் உபாதிகளுக்குப் பலவிதமான தேகப் பயிற்சி பண்ணிப் பரிகாரம் செய்வது போல், புத்தி செம்மைப் படுவதற்கும் பயிற்சி செய்யலாம். பந்தாடுவது குடல்களுக்கும், வில்லடித்து வேட்டையாடுவது சுவாசப்பைக்கும், இருதயத்திற்கும், மெதுவாய் உலாத்துவது இரைப்பைக்கும், சவாரி செய்வது சிரசுக்கும் வலிவு தரும். இப்படியாகச் சரீரப்பயிற்சி பலவுள. அதேவிதமாகவே புத்தி நிலையில்லாமல் அல்லாடுகிறவன் கணிதசாஸ்திரம் படிக்கலாம். அதில் உள்ள நியாயங்களை நிரூபித்துக்கொண்டிருக்கும் பொழுது புத்தி சிறிதளவு சலிக்குமானால் மறுபடியும் அடியைப்பிடிக்கவேண்டியது தான். அதாவது மறுபடியும் முதலிலிருந்து அந்த ஆராய்ச்சி தொடங்கவேண்டுமென்பது பொருள். பகுத்தறியும் திறமையில்லாதவன் உபாத்தியாயத் தொழில் கற்கலாம். இவ்வாறே ஒவ்வொரு விதமான மனக்குறையை மாற்ற ஒவ்வொருவழியுண்டு. படிப்பிலே திறமையுள்ளவர்கள் வியாசம் எழுதும் பொழுது தாங்கள் கற்ற கல்வியின் ஆழத்திலிருந்து பொறுக்கிச் சேர்த்து சிரமப்பட்டுக் காரியத்தை முடிப்பார்கள். படிப்புடன் லோக அநுபவமும் வாய்ந்தவர்கள் அந்த அநுபவத்துடன் படிப்பின் தொடர்ந்து வரும்படியாகச் செய்து யாதொரு சிரமுமின்றி வெகு சுலபத்தில் வியாசம் எழுதி நிறைவேற்றுவர். யாரோ சில கொடியர்களுக்குப் படிப்பு பொல்லாங்குக்கு ஏதுவாகிறதென்றாலும், வெகுவாகக் கொடுமை முரட்டுத்தனம், மடமை முதலிய குற்றங்களை நீக்கி, ஐயம் திரிபற எல்லா விஷயங்களையும் எளிதாக விளங்கச் செய்கிறது. கடைசியாக படிப்பு சன்மார்க்கத்துக் கடுத்ததாக நின்று, அந்த சன்மார்க்கத்தைச் சிறப்பிக்கத் தக்கவிதமாக அதை நாம் பயிற்சி செய்து கொள்ள வேண்டியது.

---

## ஸ்ரீ வேதநாயகம் பிள்ளை.

இப்பெரியவர் 1826-ம் வருடம் திரிசிரபுரத்துக்கடுத்த வெள்ளான் குளத்தூரிலே வேளாளர் மரபில் கிறிஸ்துவ குடும்பத்



தில் ஜனனமாகி பத்து வயதளவும் அவ்விடமிருந்து தமிழ் வாசித்து, பதினொரு வயது முதல் திரிசிரபுரத்தில் பூரணபாண்டித்தியராகிய தியாகப்பிள்ளை யவர்களிடத்தில் இங்கிலீஷ்பாஷை அப்பியாசித்து 1848-ம் வருஷத்தில் திரிசிரபுரம் பிரின்ஸிபல் சதர் அமீன் கோர்ட்டில் ஐந்து வராகன் சம்பளமுள்ள "ரிகார்டு கீப்பர்" வேலையைப் பார்க்கலானார். இளம்பருவத்திலேயே இவருக்குக் கவி பாடும் வரம் அமைந்திருந்தது. 1850-ம் வருஷத்தில் திருச்சி ஜில்லா கோர்ட்டில் பஹ்தாரி திரான்ஸ்லேட்டராக நியமனமடைந்தனர். அதற்கப்பால் 1856-ம் வருடத்தில் கும்பகோணம் டிஸ்திரிக்டு ஜட்ஜி "மே பிச்சாப்பு" துரையவர்களிடத்தில் முன்சிப் வேலைக்காக டிப்ளோமா பரீக்ஷை கொடுத்த 70-80 பெயரில் ஜட்ஜிஸ் ஸர் முத்துசாமி ஐயர், திவான் பகதூர் இரகுநாத ராவ் இவர்களுடன் இக்கியவரும் சேர்ந்து முதலாம் பரீக்ஷையில் தேறி சர்டிபிகேட் பெற்றார்கள். அதன்பின்னர் 1857-ம் வருஷத்தில் சீர்காழி முன்சீபாயிருந்து 1859-ம் வருஷத்தில் மாயூரம் முன்சீபாகி, 1872-ம் வருஷம் வரையில் சர்வீஸ் நடாத்திவந்தார். அப்போது டிஸ்திரிக்ட் ஜட்ஜாயிருந்த மேவைடர் நெல்சன் துரைக்கும் இவருக்கும் நேரிட்ட மனஸ்தாபத்தினால் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு பென்ஷன் பெற்றுக்கொண்டார். முதல் கிரேடு (First Grade) முன்சீபானதால் மூன்றத்தொரு பென்ஷன் மாதம் ரூபாய் [illegible] கிடைத்து வந்தது. வேலையை விட்ட சமயத்தில் அவர் பாடிய கவியிதென்று.

"கண்டுகொண் டேசப்புதும் போகாமனமைத் தரிக்கவே
பண்டெந்தோர்க்கின்று தாய்ப்புலம் வைத்துப் பரிந்தழைத்துக்
இன்டுமின்டு சொல்லி வாரதிருந்தனர் செய்கையெல்லாம்
கண்டுகொண்டோயினித் தொண்டுகொண்டோகல் கடவுளுக்கே."

இவர் உத்தியோகத்தை விட்டபின்பு மாயூரம் முனிசிபாலிட்டியில் சேர்மேனாக இருந்து ஊருக்குப் பல நன்மைகளைச் செய்து வந்தார். இவர் பேரில் மகா வித்வானாகிய மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களால் குளத்தூர்க் கோவை என்று ஓர் பிரபந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அதிலோர் கவி.

"கனியிற் பொலிபொழில்சூழ் குளத்தூரன் கசிந்துதந்த
வனியிற்பொலியும் புகழ் வேதநாயக வள்ளல்கட்டு
துனியிற்கருப்பு தினல் சோலினிக்கு தாவளிய
பனியிற் பொலிபிறைபோல் உணர்க்கும் பாண்மதியே."

இவர் தமது அந்தியகாலத்தில் தமது இஷ்டர்களுடன் சல்லாபம் செய்துகொண்டிருந்து விட்டுப் பின்னர் தமது ஆத்ம காரியங்களை முடித்துக்கொண்டு சுஞ்ஞானஸ்தையெனப்படின்றி 1889ம் ஞு ஜூலை 21-உ ஆதிவாரம் இரவு 11-மணிக்குப் பரந்தாமன் திருவடி நீழலெய்தினார்.

அவராற் செய்யப்பட்ட பிரபந்தங்களிவை:—

(1) நீதிநூல், (2) பெண்மதிமாலை, (3) பிரதாபமுதலியார் சரித்திரம், (4) சர்வசமய சமரச கீர்த்தனைகள், (5) சத்தியவேதக் கீர்த்தனைகள், (6) திருவருண்மாலை, (7) திருவருளந்தாதி, (8) தேவமாதா அந்தாதி, (9) தேவதோத்திரமாலை, (10) பெரியநாயகி அம்மன் பதிகம், (11) தயாபரக் கண்ணிகள், (12) 1805-ஞு முதல் 1862-ஞு வரையிலுள்ள ஹைகோர்ட்டு தீர்ப்பு ரூலிங்ஸ் முதலானவைகளைச் சங்கிரகித்துத் தமிழில் மொழி பெயர்த்த விஷயங்களடங்கிய "சித்தாந்த சங்கிரகம் முதலியனவாம்.

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

---

# எஜமானனும் அவன் வேலைக்காரனும்.

விஜயரங்கன்:—முத்தையா! நமது வீட்டில் ஏதேனும் விசேஷமுண்டா?

முத்தையன்:—ஐயா! அதையேன் கேட்கிறீர்கள் நமது நமது நாய் இறந்துபோயிற்று.

விஜ: ஐயோ! பேதை நாய்க்குட்டி இறந்தா போயிற்று? அது எப்படிச் செத்தது?

முத்: ஐயா! அது விலாப்புடைக்க ஊனைத் தின்றுவிட்டு செத்தது.

விஜ: அப்படியா! ஓ பெருவயிறு படைத்த நாயே! உனக்கேன் இத்தனை கொழுப்பு? முத்தையா! அதற்கவ்வளவு ஊன் எங்கே கிடைத்தது?

முத்: ஐயா! குதிரையினிறைச்சியைத்தின்று மாண்டது.

விஜ: குதிரையினிறைச்சியா! அதற்கவ்வளவு தின்னும்படி எங்கேயிருந்து கிடைத்தது?

முத்: எல்லாம் உங்கள் தந்தையின் குதிரைகள்தான்.

விஜ: ஆ! அவைகள் அனைத்தும் இறந்தனவோ?

முத்: ஆமையா, இடிப்புமுறிய வேலை செய்ததனால் மாண்டுபோயின.

விஜ: அப்படி இடுப்பு முறிய வேலை வாங்கியதேன்?



முத்: தண்ணீர் கொண்டுவருவதற்காக.

விஜ: தண்ணீர் கொண்டுவருவதற்கா? அவ்வளவு தண்ணீர் எதற்காக?

முத்: பின்னே நெருப்பை அவிப்பதெப்படி?

விஜ: நெருப்பா! நெருப்பெங்கேயடா பிடித்தது?

முத்: ஐயா! உங்கள் தந்தையாரின் வீடு எரிந்து சாம்பலாயிற்று.

விஜ: ஐயோ! நம்முடைய வீடு எரிந்தா போயிற்று? அதில் நெருப்பு எப்படி பிடித்தது?

முத்: உங்கள் அன்னையார் போனபோது பந்தம் பிடிக்கவில்லையா?

விஜ: ஐயோ! கொடிது, கொடிது! தாயுமிறந்தனளோ?

முத்: ஆமையா; என்ன செய்கிறது? அன்றுமுதல் அவன் நொந்து இளைத்து வாக்காளன்.

விஜ: என்று முதலடா?

முத்: உங்கள் தந்தை இறந்த நாள் முதலாய்த்தான்.

விஜ: தந்தையும் இறந்துபோனாரோ?

முத்: ஆம் போய்விட்டார்; பாவம், அவர் அந்த செய்தியைக் கேட்டதுமுதல் படுத்த படுக்கையை விட்டு எழுந்திருக்கவேயில்லை.

விஜ: எந்த செய்தி கேட்டபின்பு?

முத்: அந்த துக்க சமாசாரம் கேட்டதுமுதல்தான்.

விஜ: இன்னமுமா துக்க சமாசாரம்! இன்னும் என்னென்ன சொல்லப் போகிறாய்?

முத்: என்; சீனதேசத்துக்குப் போயிருந்த உங்கள் கப்பல் வரும் வழியில் நடுக் கடலில் மூழ்கிப்போக; இருந்த சொத்துக்களையெல்லாம் கடன்காரர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இனி ஒரு காசுக்குங்கூட வழி இல்லை; இந்த செய்தி தங்களுக்கு சொல்லவேண்டுமென்றுதான் இங்கே இவ்வளவு காலம் தங்கள் வரவுக்கு எதிர் பார்த்திருந்தேன்.

விஜ: பேஷ் நல்ல சேவகன்! அது சொல்வதற்கு உன்னை விடக் கிடையாது இந்தசமாசாரத்துக்கு நாலு நாழிகை காக்கவைக்கவேணுமோ? என்று சொல்லி இருவரும் பிரிந்தார்கள்.

---

# பணக்காதல்.

(ஓர் லோபியின் கூற்று.)

தாஷ்டிக சம்பூர்ண சந்தோஷ சம்பிரம
கோஷ்டி புரியுமய கோலாகலப் பணமே.

தெய்பணமே எங்கள்வீட்டுத் திகழ்பணமே திருப்பணமே
பூம்பணமே புகழ்ப்பணமே பொன்பணமே செம்பணமே
என்னுயிரே என்னுடலே என்குருவே எனையீன்ற
அன்னையுமே அப்பனுமே அமைந்தருள தெய்வமுமே.

பேசுமீன் பாவையாம் பிரபலவாழ்வுங்கெடவே
போகக் கருத்தெவ்வுழலுமந்திரி நீயல்லவோ?

மக்களுக்கும் உன்னோர் வஞ்சனையாய் பாகமிட்டு
சக்கட்ட முட்டிவைக்கும் தாயாதி நீயல்லவோ?

அர்ப்பரிக்கும் மூத்தமனையாட்டிமகன் தொந்தமறச்
சாப்பாட்டில் நஞ்சுவைக்கும் சக்களத்தி நீயல்லவோ?

அடியெடுக்க நடைபழக்க அன்னை தந்தை விழுங்காத
தடியெடுத்துக் காத்திருக்கின்ற சற்புத்திரன் நீயல்லவோ?

சித்தமிரங்காமல் தெய்வமறிய கொன்று
சத்தியத்தைச் செய்திடும் பொய் சாக்ஷியதும் நீயல்லவோ?

செவ்வெல்லாம் இன்சொல் கடுமொழி செவியில் வந்து நுழையாமல்
கல்லாய்வு வரவர காண்கண்டு மகிழ்ந்தேனே!

அன்னியன்னி யன்முதலை யபகரிக்கப் பத்திரங்கள்
கள்ளத்தனமாய் எழுதிக் களத்தகுடி யாகேனே!

சிறந்த லண்டன் பட்டணவாழ் ஜெயராணி முத்திரையில்
பிறந்தபணம் செல்லாமல் பெட்டிவந்து சேராதோ!

புகன்மதி வெள்ளிதனிலே புகலரிய பணக்காரன்
இலவெருத்தன் மனைதும்பர் எல்லாரும் சொல்லாரோ!

வைத்தவிதி யாவரும் மதுவுரைப்போல் பின் காணும்
செத்தாலும் பணத்தோடே சிவலோகம் சேர்வேனே.

ஆராரிவரை யையிலும் அவதூறு செய்யினும்
போனாலுமென் பணப்பையைப்பிடித்துத் திரிவேனே.



## வியாஜ்யம் வறுமைக்குக் காரணம்.

வழக்குடைய இரு பக்ஷத்தாரும் இணங்கிச் சமாதானமாய்ப் போவதனால் உண்டாகும் அநுகூலம் பெரிது. வழக்காடிப் பணத்தை யிழக்கிறவர்களுடைய காரியத்தைச் சற்றுப் பார்க்கலாம். அது பசுக்காரனுக்குப் பால் கிடையாமல் வழியில் போகிறவன் அபகரிக்கிறது போலிருக்கிறது. இதற்கு உதாரணமாக அடியில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் சித்திரத்தைக் காண்க:—



இதோ ஒரு நல்ல கறவைப்பசு; வாதி மேற்படி பசு தன்னுடைய தென்று கொம்புகளைப் பிடித்து முன்னுக்கு முக்கி இழுக்கிறான்; பிரதிவாதியோ அப்பசு தன்னுடைய தென்று வாலைப் பிடித்துப்பின்னுக்கிழுக்கிறான்; லாயரோ இதுதான் சமயமென்று இடையில் மாட்டுமடியை நீவி பாலைக்கறந்து கொண்டிருக்கிறான். இந்தப்பாவனை சரியான ஒப்பனை. இதன் கருத்தை நாம் சொல்லாமலே நமது நண்பர்கள் கண்டு கொள்ளலாம். வியாஜ்யத்துக்குப் போகிறவனுக்கு ஒன்பது காரியங்கள் இன்றியமையாதது (1) வேண்டிமான திரவியம். (2) மிகுதியான பொறுமை. (3) தகுதியான வியாஜ்யம். (4) திறமையான வக்கீல். (5) தகுந்த ஆலோசனை. (6) வாஸ்தவமான சாக்ஷியம். (7) நேர்மையான பஞ்சாயம். (8) உத்தம நீதியதிபர். (9) நல்ல அதிர்ஷ்டம். இந்த ஒன்பதும் கைகூடிவருதல் எவ்வளவு கஷ்ட சாத்திய மென்பதைக் கவனியுங்கள்.

## எழுத்து மாற்றுச் சொற்கள்.

எழுத்து மாற்றுச் சொல்லாவது ஒரு சொல்லிலுள்ள எழுத்துக்களை மாற்றி வேறு விதமாகக் கோப்பதனால் உண்டாகும் மற்றொரு சொல்லாம். இதனடியிற்கண்ட சொற்களிலுள்ள உயிர்களையும் மெய்களையும் பிரித்துத் தக்கவாறு கோத்தால் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பிரசித்தமான மிருகத்தின் பெயராகும். வற்றவிடத்தில் தந்நகரத்தை றன்னகாரமாகவும் றன்னகரத்தைத் தந்நகரமாகவும், மகரத்தை இனமெல்லெழுத்தாகவும் மாற்றிக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1. குஞானரி. | 9. பிறன். | 17. கழுவோ ரேருகை. |
| 2. உன் கன்னரி. | 10. ஆடுசுபம். | 18. உரக்கும். |
| 3. யாஞெ. | 11. சேகரி. | 19. கல் மைஞெ. |
| 4. கைன்பை. | 12. உண்டிசெல். | 20. குரவில்லா வாக்கும். |
| 5. இடத்து. | 13. குழலிசைப்பு. | 21. இன்றும் பன்னம். |
| 6. எம உடை. | 14. உடா. | 22. உண்டிக்கார் அம்மா. |
| 7. ஆன்லக. | 15. அரன்யாம். | 23. காலய. |
| 8. கலையான். | 16. காம். | 24. சிறைத்து. |

இச்சஞ்சிகையைப் படிக்கும் சிறுவர்கள் இச்சொற்களைத் தாமே பிரித்து மிருகத்தின் பெயராக மாற்றிக்கொள்ள முயலட்டுமென்று இவற்றிற்கு இங்கு விடை எழுதாதுவிட்டனம். இந்த அப்பியாசம் இலக்கணப் பயிற்சிக்கு மிகவும் பிரயோஜனகரமானது. விடை விரும்பினால் 15-பக்கத்துக்குப் பிறகு காணலாம்.

---

## பருவம் எனக்குப் பதினேழானபொழுது!

[மணஞ்செய்வதற்குமுன் தலைவன் தன் நாயகனுடனிருந்த நிலையை நினைத்து வருந்தி சொன்ன பாட்டின் மொழிபெயர்ப்பு.]

பருவம் எனக்கு ஆகப்பதினேழு, அப்பொழுது உமக்கு இருபத்து மூன்று, அந்த யௌவன காலத்திலே பூலோக வாழ்வினிடத்து நமக்கிருந்த வைபவம் ஆ! ஆ!! அன்றுள்ளபடி இன்றளவும் என் நினைவினின்று நீங்காதிருக்கின்றது!



இவ்வுலகு இப்பொழுதிலும் அப்பொழுது என் கண்ணுக்கு மிக இனிதாயிருந்தது. நாமிருவரும் செய்து கொண்ட பிரமாணத்தைச் செவிகூர்ந்து கேட்ட மந்தமாருதமானது அத்தனை மிருதுவாக நம்மீது வீசியது! கண்டு பேசக்குறித்திருந்த மரத்தின் கீழ் கனஇருளில் காதோதி வாக்குத்தத்தம் செய்தோம். அம்மம்ம! அப்பொழுது பருவம் எனக்கு ஆகப்பதினேழு! உமக்கு இருபத்து மூன்று!

ஆற்றின் அலை மெல்லெனத் ததிப்புரண்டு சலசலவென்று ஒலித்த ஒலி மனதிற் கினிதென்று உலக்கும் கீர்த்தனை பாடியது போலிருந்தது; பழய கல்வாரியில் நின்று நாம் பார்த்த கண்ணுக்கு இவ்வையகமெல்லாம் பொன்வனமாயிருந்தது. அங்கே நின்று ஒரு முத்தம் தந்து என் உள்ளம் கவர்ந்தீரே; ஆ! ஆ! அப்பொழுது பருவம் எனக்கு மெத்தவல்ல பதினேழு; உமக்கு இருபத்து மூன்று!

பிரயத்தில் நாமிருவரும் சந்தித்தபோது நமது இருவருடையவும் கண்கள் எவ்வளவு கூட்டமையாக ஒன்றையொன்று கவனித்தன. பரன் புரம் தேகஸ்பரிசம் எத்தனை சந்தோஷத்தையும் இனிமையையும் உண்டு பண்ணிற்று.

தொன்று தொட்டுள்ள பெருங் குன்றுகள் வெகு தொலையில் தெரிந்தன; வானத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன; இரா முப்பது நாழிகையும் சிறந்து இனிதாகி ஆகாயம் அன்பு கூர்ந்திருந்தது. என்னுடைய பதினேழு வயதில் நானும் நீரும் இருந்த இருப்பை, இந்த என்னுடைய இருபத்து மூன்று வயதில் நீர்பரிவுகூர்ந்து நினைப்பதுண்டா? இதைக்குறித்து என்மனதில் பலகால் விருப்புடன் வியப்புண்டாகின்றது.

நாம் இவ்வண்ணம் கொண்டாடிச் சுகித்து வெகு நாட் செல்லவில்லை; செல்லாதிருந்தும், உமது பிரிவை எண்ணி நான் மனம் நொந்து வருந்தி அழுத கண்ணீரானது அருவிபோற் பெருகி நீர் முன்பு என்பால் உள்ளன்பு உருகி முத்தி செய்த முகமானது அதில் நனையும் படியாக நேர்ந்துபோயிற்று. முன்வாழ்வை முழுதும் மறந்திடுவேனாகில், ஆ! எத்தனை பாக்கியம்! எனது ஆசைக்கண்மணியாரே! நீர் பத்தினி விரதம் தப்பியதேன்? பருவம் எனக்குப் பதினேழு, உமக்கு இருபத்து மூன்று கழிந்த பின்பு என் கண்ணுக்கு இவ்வுலகக்கோலமும் மாறியது!

ஆற்றங்கரை நெடுக இராக்காற்று வீசும்பொழுது என் இருதயம் அம்மதுரவார்த்தைப் பிறந்த சுபமுகூர்த்தத்தை விரும்பி வருந்தி நினைக்கின்றது. வருந்தினும் அந்த நினைவு எனக்கு இனிதாயிருக்கின்றது. ஆ! கெட்டேன்! அவ்வாழ்வு இனி ஏது! பின்னும் ஒரு முறை எனக்குப் பதினேழு, உமக்கு இருபத்துமூன்று வருமோ! சென்றுபோன நாட்களின் பெருமையே பெருமை! அந்நாள் இனித்திரும்புவதுமுண்டோ! ஐயோ!!

---

## முத்து முத்தம் முத்தி.

முத்தமிடுதல் என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிகழ்வதில்லை. அன்பு மிகுதிப்பட்டபோது வெளிப்படும் உட்குறிப்பாயிருக்கின்றது. தாய் மக்களிடத்தும், குழந்தைகள் அன்னையிடத்தும், ஸதிபதிகள் பரஸ்பரமும் முத்தமிட்டுக்கொள்கின்றார்கள். முத்து அதிக விலை பெற்ற பொருளாக மதிக்கப்படுவது போல் முத்தமும் சிலாக்கியமாய் கொண்டாடப்படுகிறது. முத்து கிடைப்பது கஷ்ட சாத்தியமாயிருப்பது போலவே முத்தமும் அருமையாய் பெறப்படுகிறது. இக்காரணங்களால் முத்துக்குள்ள பெருமையை நோக்கி இதற்கும் முத்தம் எனப்பெயரமைந்ததோவென்பதும்; முத்தம் என்ற பதம் முத்து என்ற பதத்தினின்றும் தோன்றிற்றோவென்பதும் ஓர் ஆசங்கை. பின்னும் முத்து என்பதின் அருமை கருதியே, முத்து என்பதினின்றும் முத்தி என்றாயிற்றோவென்றும் ஐயுறத்தக்கதாயுள்ளன. முத்து கடலில் உற்பத்தி. முத்து விரும்புவோன் கடலில் மூழ்கியே எடுக்கவேண்டும். அவ்வாறாகவே, மாதர், மக்கள் இவர்களின் முத்தம் அபேக்ஷிப்போர் ஸம்சாரமாகிய சமுத்திரத்தினுள் மூழ்கியே பெறல்வேண்டும். அதனுள்ளேயே மூழ்கி விடப்படாது. அப்படி மூழ்கி விடுபவன் தனக்குத்தானே நாசத்தைத் தேடிக்கொள்பவனாகிறான். கடலில் மூழ்கியவன் தன் கைக்கு முத்து கிடைத்துவிட்டபோதிலும், உடனே மேலெழாமல் அவ்விடத்திலேயே அம்முத்துக்களிருக்குமிடத்திலேயே சற்று தாமதிக்க முயலுவானாயின் உடனே அவன் சுவாசம் விடமுடியாமல் மரணபுரம் சேர்கின்றான். அவன் கையில் முத்து கிடைத்துவிட்டிருந்தும் அதையநுபவிக்கும் வலிமை குன்றி, எந்த முத்து தனக்கு சந்தோஷம் தருமென்று எண்ணினானோ அந்த முத்தைக்கொண்டே தனக்குக் கெடுதியை வருவித்துக்கொள்கிறான். அதுபோலவே முத்தம் விரும்பி ஸம்சாரக்கடலினுள் மூழ்கச் செல்வோரும் தமக்கு முத்தம் கிடைத்தவுடனேயே அக்கடலினின்றும் மேலெழுந்துவிட முயலவேண்டும். அங்ஙனம் முயன்று மேலெழுந்துவந்து அந்த முத்தத்தின் பயன்களை அனுபவித்து ஆனந்தப்படும் வழியைக் கண்டறிந்துகொள்ளவேண்டும். [அதாவது ஸம்சாரத்தில் இருந்தாலும் அதில் தாமரையிலை நீராகப் பற்றற்ற மன



முடன் வாழ்ந்து தனது சிந்தனையனைத்தையும் கடவுளிடத்தில் திருப்பி அந்த சாயுச்சிய பதவியை அடைவதற்கு அம்முத்தங்களையே (அதாவது அம்முத்தங்களை உற்பத்தி செய்கிறவர்களையே) தனக்கு சகாயமான கருவிகளாகப் பண்ணிக்கொள்ளவேண்டும்.]

கடலில் மூழ்குபவருக்கெல்லாம் முத்து கிடைத்துவிடுகிறதில்லை. ஏதோ ஒரு சிலர்தாம் அருமையாய் அடையத் தகுதியுடையோராகின்றனர். அங்ஙனமே ஸம்சார ஸமுத்திரத்தில் மூழ்குவோரெல்லோருக்குமே இனிய முத்தங்கள் சித்திக்கிறதில்லை. பூர்வ புண்யவசம் பலிக்கப் பூரித்த சிலருக்கே அந்தபாக்கியம் சிலாக்கியமாய் ஏற்படுகிறது. முத்தைக் காட்டிலும் முத்தம் சிறந்தது. காதலனும் காதலியும், தாயும் மக்களும் ஒன்றின் பின் ஒன்றாக வரிசை வரிசையாக உண்டாக்குகிற முத்தங்கள் கோர்க்கப்பட்ட மாலைக்குள்ள பெருமையும் சிறப்பும் எண்ணற்ற விலை மதிப்புள்ள முத்து மாலைக்கு ஒருபோதும் கிடைக்கமாட்டாது. இவ்வாறான சிறப்பு மிகுந்த முத்தங்களின் முடிவு முத்தியில் முடிவதாக இருக்கும்படி சீர்திருத்திக்கொள்ள முற்படுபவனெவனோ அவனே மாண்புமானாப்பெயர் பூண்டோன் எனப்படுவான். முத்து, முத்தம், முத்தி என்னும் இம்மூன்றினையும் புருஷார்த்தங்களில் மூன்றாகிய பொருள், இன்பம், வீடு என முறையே பாராட்டிக்கொண்டாடுக. இம்மூன்றுக்கும் அறத்தின் துணை முன்னிற்க.

## நான்கு முக்கிய நதிகள்.

பூர்வ காலத்தில் கங்காநதி தேவலோகத்திலிருந்ததென்கிறார்கள். அதைச் சம்பந்தித்த புராணகதையும் ஒன்றுண்டு. வட இந்துஸ்தானத்தில் உள்ளவர்கள் அநேகர் தம் இஷ்டர் யாராவது தேசாந்தரம் போயிருந்தால், அவர்கள் க்ஷேமமாய் வருவார்களா மாட்டார்களா வென்று சகுனம் பார்ப்பதற்காகவும், அவர்களுக்கு க்ஷேமம் உண்டாகும்படிப் பிரார்த்தனையாகவும் கங்கையில் விளக்கேற்றி மிதக்க விடுவதுண்டு. அந்தவிளக்கு அப்படியே அசையாமல் மிதந்துபோமாகில் அவர்களுக்கு க்ஷேமமென்றும் அமிழ்ந்து அணைந்துபோனால் அபாயமென்றுங் கண்டு கொள்வார்கள்.

கங்கையைப் போலவே யமுனா நதியும் புராதன புண்ணிய நதிகளில் ஒன்றாகும். அதில் தான் ஸ்ரீகிருஷ்ண பகவான் காளிங்கமர்த்தனம் செய்தருளினார். இந்நதிக்கு சமீபத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் அரசு புரிந்த வடமதுரை இருக்கின்றது. பிற்காலத்தில் இதில் சேர்த்துவைக்கப்பட்டிருந்த அளவற்ற திரவியத்தை குச்சினி ராச்சியத்தின் மகம்மது என்பவன் கொள்ளையடித்தான்.

கங்கா நதியும் யமுனா நதியும் மகா புண்ணிய தீர்த்தங்களென்று அநேக யுகங்களாகப் பெயர்பெற்றிருக்கின்றன. இவைகளின் அற்புத மகிமையைப்பற்றி எடுத்துரைக்காத வேத புராண சாஸ்திரங்கள் ஒன்றுமில்லை. இந்தத் தீர்த்தங்களை ஸ்தாலிகளில் அடைத்து நமது ஜனங்கள் பக்தி சிரத்தையுடன் கொண்டுபோய் இப்படி இந்தியா முழுவதும் உபயோகப்படுத்துகிறார்கள். இந்நதிகளின் தீர்த்தத்தைப்பற்றி தற்காலத்து ஐரோப்பிய வைத்திய சாஸ்திரிகள் மெச்சிப்பேசுகிறார்கள். கங்கையும் யமுனையும் மலைப்பிரதேசங்களிலிருந்து விழுந்துவரும்போது, தேகாரோக்கியமான மூலிகைகளும் உலோகங்களும் பதிந்து கிடக்கும் தரைகளில் அரித்தோடி அவற்றின் ஸாரங்களை எடுத்து வருகின்றன. "காலராவின் காரணமும் அதைத் தடுக்கும் விதமும்" என்ற புஸ்தகம் மிஸ்டர் E. H. ஹென்கின் என்பவர் எழுதியிருக்கிறார். அதன் முகவுரையில், காலரா பூச்சிகள் ஜீவித்து வளருவதற்கு வேண்டிய ஆகாராதிகள் கங்கா, யமுனா தீர்த்தங்களில் இல்லாததோடு, அப்பூச்சிகளைக் கொல்லக்கூடிய ரஸங்களுமிருக்கின்றன; இந்த ரஸங்கள் அந்நதிகளில் எப்படி வந்தன என்பதைப்பற்றி இப்போது சொல்லக்கூடவில்லை என்று எழுதுகிறார்.

ஹிந்துக்கள் கங்கையையும் யமுனையையும் மேன்மையாகக் கொண்டாடுவது போலவே கிறிஸ்துவ, மகாமேதானிகளெல்லாம் அருக்கிதேசத்திலுள்ள யோர்தான் என்னும் நதியை புண்ணிய நதியாகக் கொண்டாடுகிறார்கள். அவ்வாற்றின் மகிமையைப்பற்றிய பலகதைகளிருக்கட்டும்; அவற்றுள் முக்கியமான தென்னவெனில், அந்த நதியண்டையிலேதான் கிறிஸ்து நாதருக்கு ஞானஸ்நானம் கிடைத்தது; ஆனது பற்றியே அது மிகவும் மேன்மையாகக் கொண்டாடப்படுகின்றது. அந்நதி மானிடருடைய பாவத்தை மட்டுமே போக்கடிப்பதில்லை; எவ்வகைத் துன்பமும் அணுகாதபடி மன்னுயிர்களைக் காபாற்றுகிற தென்றும் சிறப்பிக்கப்படுகின்றது.

இவ்விதமாகவே ஆப்பிரிக்கா தேசத்தார் நைல் என்னும் நதியைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இத்தனை வருஷகாலமாகியும் இந்த நதியின் உற்பத்தி ஸ்தானம் இன்னும் செவ்வையாய்க் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரு நாளும் மழைபொழியாத விசாலமான அந்தப் பூமியில் வருஷாவருஷம் ஒரே அனாவ்ருஷ்டிக் காலத்திலேயே பெருக ஆரம்பித்துப் பலநாள் வரையில் வெள்ளம் பெருகி ஆற்றோரங்களில் மிகவும் செழிப்பான படுகைகள் உண்டாக்கி அக்ஷேத்திரங்களைப் பண்படுத்தி வெகுகாலமாய் அத்தேசத்துக் குடிகளைக் காத்து வருவதனால் ஆப்பிரிக்கா தேசத்தார் அதையே தெய்வமென்று கொண்டாடுகிறார்கள்.





# எனது நெடுங்கனவு.

நடந்த வாரத்தோர் நாளிரவு யான் கடிமணம் புரிந்த கட்டழகியோடு கவலையில்லாமையாய் உறங்குங்கால் கண்டதொரு காக்ஷி! மாட்சியுடைய மகா விநோதானந்தக் கனவு! அதையான் கண்டு இன்புற்றவண்ணம் உலகமுங் கண்டின்புறுமாறு ஈண்டு வரைவான் துணிந்தனன்.

உலகத்து மனிதர்கள் எல்லோரும் அவரவருடைய துர்ப்பாக்கியங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வரும்படியாக பிரமதேவர் தேசமெங்கும் ஒரு விளம்பரம் செய்தார். அவைகளையெல்லாம் கொண்டுவந்து கொட்டுவதற்காகப் பெரிய மைதானமொன்று இடமாய் ஏற்படுத்தப்பட்டது. உலகத்திலுள்ள மனிதர்கள் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராய் மேல் விழுந்து நெருக்கிக்கொண்டு ஆள் தூக்கமாட்டாத மூட்டையும் தலையுமாய் வந்து, அவரவர்கள் துர்ப்பாக்கிய மூட்டைகளையெல்லாம் ஒரு குப்பையாய்ப் போட்டுக்கொண்டிருந்தார்கள். சிறிதுநேரத்தில் அந்த துரதிஷ்ட மூட்டைகளெல்லாம் ஒரு பெரிய பர்வதத் தனையாகி மேகமண்டலத்தை நெருங்கியும் தாண்டிப்போயின. அவ்விடத்தில் அதி சுந்தரமான வடிவுடைய ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள். அவள் பெயர்தான் ஆசை. அந்தப்பெண் ஒவ்வொரு மனிதனையும், அவனவனுக்கு வேண்டிய மூட்டையைக் கட்டிக்கொடுத்து அவனவன் தோளிலேற்றி அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுவருவதே வேலையாயிருந்தாள். ஒருவன் ஒரு மூட்டையைக் கொண்டுவந்து எறிந்தான், அதை அவிழ்த்துப் பார்த்ததில் தரித்திரமாயிருந்தது. இன்னொருவன் தான் சுமக்கமாட்டாத சுமையொன்றைத் தூக்கிக்கொண்டு

வந்து அந்தக்குப்பலில் எறிந்தான். அதைப் பரிசோதித்ததில் அது அவனுடைய பெண்சாதியாயிருந்தது. வேறொருவன் இன்னொரு மூட்டையைக் கொண்டுவந்து எறிந்தான். அதைப் பிரித்து நோக்கியதில் தன் மூடத்தனத்தைக் கொண்டுவந்து போடுவதற்குப் பதிலாக தன் நன்னடக்கையைக்கட்டி எறிந்திருப்பதாகத் தெரிந்தது.

ஆய்ந்து பார்த்தளவில், அந்தக் கும்பலெல்லாம் வெகுவாய்த் தெய்வகதியாக நேரிட்ட அங்கக் குறைவுகளாயிருந்தன. பாவமாகட்டும், தோஷமாகட்டும், கெட்ட நடத்தையாகட்டும் ஒன்றுகூட அந்தக் குப்பலில் வந்து விழவில்லை. அவரவருடைய துராசை, கோபம், மாற்சரியம் முதலிய கெட்ட குணங்களையெல்லாம் நீக்கிக்கொள்ள யாவர்க்கும் இது ஒரு நல்ல தருணமாய் வாய்த்ததென்று எண்ணிக்கொண்டிருந்தேனாகையால், அதற்கு முழுதும் மாறாக நடந்த இப்படிப்பட்ட நடத்தையைக் கண்டு எனக்கு உண்டான வியப்பை நான் என்னென்று சொல்வேன்!

இவ்விதமாக உலகத்து மானிடர்கள் அனைவரும் துர்ப்பாக்கியங்களையெல்லாம் கொண்டுவந்து போட்டபோது ஒரு புதுமையை அவர்கள் காண நேரிட்டது. தாங்கள் யார் யாரிடத்தில் எதெதைச் சவுக்கியமென்றும் சந்தோஷமென்றும் நினைத்திருந்தார்களோ, அதது அவரவர்க்குப் பெருந்துக்கமாகவும் தலைமூட்டையாகவும் இருந்ததென்பதைக்கண்டு வியந்தார்கள். இப்படி யாவரும் தங்கள் தங்கள் துர்ப்பாக்கியங்களைப்பற்றிப் பரபரப்பாய் இருக்கும் சமயத்தில் அவரவர் தந்தமக்கு இஷ்டமான மூட்டையை எடுத்துக்கொண்டு தங்கள் வீட்டுக்குப் போகலாமென்பதாய்ப் பிரமதேவர் மற்றொரு விளம்பரம் செய்தார். அந்த விளம்பரத்தைக் கேட்டவுடனே ஆசையானவள் முன்போலவே அதிக சுறுசுறுப்பும் பரபரப்புமாய், அவனவனுக்கு வேண்டிய மூட்டையை எடுத்துக்கொடுத்து அவனவனைத் தன் வீட்டுக்கு அனுப்புகிற வேலையிலிருந்தாள். அதற்காக ஜனங்கள் அப்போது மேல்விழுந்து பட்டபாட்டை வர்ணிக்க என்னால் தரமன்று. அத்தருணத்தில் நான் கண்ட காக்ஷிகளை இங்கே சற்று விவரிக்க விரும்புகின்றேன்.

தன் ஆஸ்திக்குப்பின் பாத்தியஸ்தன் ஒருவனை வேண்டித் தலையும் நரைத்துதாடையும் ஒட்டிக் கிழவனான பெரிய மனிதனொருவன் தன் துர்ப்பாக்கியத்தைக் கொடுத்து அதற்குப்பதிலாக மிகக் கோபங்கொண்டு ஒருவன் எறிந்துவிட்ட பெற்றோர்க்கு அடங்காத பிள்ளையொருவனைப் பெற்றுக்கொண்டு போனான். அடங்காப் பிடாரியான அம்மகன் அரை நாழிகைக்குள்ளே அந்தக்கிழவனைத் தாடையில் அறைந்து, தலைமயிரைப் பிடி



த்திழுத்து மண்டையையும் பிளக்கப்போனான். அதுகண்டு அந்தக் கிழவன் வெகு வருத்தத்தோடு அந்தப் பிள்ளைக்குத் தகப்பனண்டைபோய், அவன் மகனை அவனே எடுத்துக்கொண்டு தன் பொருளைத் தனக்குத் திருப்பிக் கொடுத்துவிடும்படி வேண்டினான். ஆயினும் அவர்கள் இருவரும் வேண்டுமென்று விரும்பி எடுத்துக்கொண்டதை ஒருவர்க்கும் திருப்பக்கூடவில்லை.

அப்போது பெண்பிள்ளைகளும் பலபேர், இத்தருணத்தில் அழகான அவயவங்கள் தேடிக்கொள்ளவேண்டுமென்று அதற்காக வெகு அவசரமாய்ப் போவதும் வருவதுமாயிருந்தார்கள். ஒருத்தி தன் நரைத்த மயிரை மாற்றிச் செம்பட்டை மயிரைத் தேடிக்கொண்டிருந்தாள். மற்றொருத்தி தன் சிற்றிடையை மாற்றிப் பருத்த தோள்கள் வேண்டுமென்றாள். சில தரித்திர மாதர்கள் ஐரோப்பிய லேடிகளாய்விட விருப்பங்கொண்டார்கள். சில ஏழைப்பெண்கள் தாசிகளாக விரும்பினார்கள். சில தாசிகள் சமுசாரிகளாக விரும்பினார்கள்; பெண்ஜாதி வேண்டுமென்று ஒருவன் இன்னொருவன் எறிந்துவிட்ட பெண்ஜாதியை எடுத்துக்கொண்டான். ஆனால் சில நிமிஷங்களுக்குள் அவளுடைய பொல்லாத குணத்தைக் கண்டு தேர்ந்து 'ஐயோ அப்பா' இந்தப் பெண்டு பிடித்துப் போனாலேனும் என்று பிரலாபித்தான். அமெரிக்கர் லௌகீகத்தையும் இந்துக்கள் வைதிகத்தையும் தங்களுக்குள் மாற்றிக்கொண்டார்கள். ஆனாலோ சில நாழிகைக்குள்ளாக புதிதாகத் தாங்கள் பெற்றதை எறிந்துவிட்டுப் பழையபடி மாற்றிக்கொள்ள விரும்பி முறுமுறுத்தார்கள். இப்படியாக, தங்களுக்கு இஷ்டமாய்ப் புதிதாக ஒன்றைப் பெற்றுக்கொண்டதும் முன்னிருந்த பொருளைவிட அது மிகவும் கேடுகெட்டதென்று கண்டறியாதவர் ஒருவருமில்லை. இப்படியே சகலமான பேர்களும் தங்களுடைய பொருளைக் கொடுத்துப் புதிதாய் ஒன்றைப் பெற்றுக்கொண்டபோது இவ்விதமாகவே அனைக்கக் கண்டேன். துறவறத்தை இச்சித்த இல்லறவாசியும், இல்லறத்தை ஆசித்த துறவறவாசியும் தாங்கள் கோரியது கிட்டியவுடன் ஐயோ இந்தக்கேடு கெட்டது எதுக்கென்று துக்கித்தார்கள்.

இப்படிப் புதிதாய் அவரவர்க்குக் கிடைத்த சுகங்களைத்தாங்க அவரவர்க்கு இயற்கையாய்க் கிடைத்த வல்லமையே போதுமானதாயிருந்ததோ, அல்லது அவற்றைப் புதிதாய்த் தாங்க அதிகமாய் முயற்சிசெய்ய வேண்டியிருந்ததோ அதுமட்டும் எனக்கு நிதானிக்கக்கூடவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஒருவன் தன் நீண்ட முகத்தைத் தள்ளி அகன்ற முகத்தைத் தரித்துக்கொண்டு வந்தான். அப்போது அந்த விகாரத்தைப் பா

ர்த்து எனக்கு உண்டான சிரிப்பை அடக்கக்கூடவில்லை." அதைக்கண்டு அவன் தன்னை யாவரும் பார்த்துப் பரிகாசம் பண்ணுகிறார்களென்று தெரிந்து மிகவும் வெட்கமடைந்தான்.

இப்படியாக அந்த துரதிர்ஷ்டங்கள் ஒன்றுகூடிய பர்வதம் முழுதும் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக சமமாய்ப் பகுத்துக்கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்டு திரும்பும்போது தத்தம் பாகத்துக்கு வந்த துரதிர்ஷ்டத்தைப் பார்த்து ஒன்றுந் தோன்றாமல் அனைவரும் அங்கேயே இங்கும் அங்கும் தவித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவ்விடத்தில் எங்கே பார்த்தாலும் மோனமோனவென்று விசனப்படுவதும், குற்றங்கூறுவதும், குறைப்படுவதும், புலம்புவதுமாயிருந்தது.

இவ்வாறு மனிதர்கள் எல்லோரும் ஒருமிக்கப் படுகிற பரிதாபத்தைப் பார்த்து மனமிரங்கிப் பிரமதேவர், இப்போது யாவரும் எடுத்துக்கொண்ட மூட்டைகளையெல்லாம் அப்படியே கும்பலாகக் கொண்டுவந்து போட்டு, அவரவருடைய பழைய மூட்டையையே எடுத்துக்கொண்டு போகும்படி மற்றொரு கட்டளையிட்டனுப்பினார். அந்தக் கட்டளையைக் கேட்கவே அனைவரும் மிக்க மனமகிழ்ச்சிகொண்டு தங்கள் தலையில் ஏற்றிக்கொண்டிருந்த மூட்டைகளையெல்லாம் வெகு சீக்கிரத்தில் அங்கே கொண்டுபோட்டார்கள். இவ்வளவு நேரம் யாவரையும் மயக்கி மூட்டை கட்டிக்கொடுத்து அவ்விடத்துக்கு அழைத்துவந்து வேலை செய்துகொண்டிருந்த ஆசை என்பவளும் உடனே மறைந்துபோனாள். மிகவும் சுந்தரமான வடிவத்தோடு மற்றொரு தெய்வப்பெண் அவ்விடத்துக்கு வந்தாள். அவளுடைய நடக்கைகளெல்லாம் மிகவும் நிதானமாயிருந்ததுந் தவிர, அவளுடைய தோற்றமும் பார்வையும் யாவருக்கும் உற்சாகமுண்டாக்கத்தக்கதாயிருந்தது. அவளுக்குப் பொறுமை என்று பெயர். அவள் அந்த துரதிர்ஷ்ட மலையண்டை வந்து நின்றவுடனே, அந்த மலை முன்னிருந்ததில் மூன்றிலொரு பங்குகூட இராமல் அவ்வளவு குன்றிப்போயிற்று. அதென்ன ஆச்சரியமோ! உடனே அவள் அவரவர் துர்ப்பாக்கியத்தை அவரவர்க்குத் திருப்பிக்கொடுத்து, அதனை வைத்துக்கொண்டு அவ்வளவோடு பொறுத்து வாழவேண்டிய விதத்தைக் கற்பித்து அனுப்பினாள். நமது அதிர்ஷ்டத்துக்குத் தக்கபடி ஏதோ ஒன்றை ஏற்றுக்கொண்டு போம்படியில்லாமல் இப்படியாயிற்றேயென்று மிகவும் சந்தோஷமும் திருப்தியும் அடைந்து அனைவரும் போய்விடக்கண்டேன்.

உலகத்திலுள்ள மானிடர்களுடைய துர்ப்பாக்கியங்களையெல்லாம் ஒரு பெரிய மலையாகச் சேர்த்துப் பின்பு அதை யாவருக்கும் சரிபங்காகப்



ங்கிட்டுக்கொடுக்கும்படியிருந்தால், இப்போது தாம் மிகவும் வருத்தப்படுவதாக நினைத்துக்கொண்டிருப்பவர்களெல்லாம், அப்படிப் பங்கிடுவதனால் தமக்குக் கிடைக்கிற பாகத்தைவிடத் தமக்கு எப்போதும் இருப்பதே மேலானதென்று தெரிந்துகொள்ளுவார்களென்றும், எவனொருவனை நாம் மிகவும் சுகியென்று நினைக்கிறோமோ, அவனுடைய சுக துக்கங்களையும் நம்முடைய சுக துக்கங்களையும் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்வதாயிருந்தால், அப்போது தந்தமக்கு இருக்கிற கஷ்ட நஷ்டங்களே பிறருடையவைகளை விடச் சுலபமானவை யென்று யாவர்க்குந் தோன்றுமென்றும் இந்த சொப்பனவஸ்தையிலிருந்தும் நான் கிரகித்துக்கொண்டேன்.

பின்னும் இந்தக் கனவினின்றும் கண்டறியக்கூடிய பலவிதமான நீதிகளுள்ளும் நான் முக்கியமாய்க் கற்றுக்கொண்ட நீதி ஒன்று. அதென்னவெனில், நமக்கு நேரிடுகிற சங்கடங்களைக்கண்டு நாம் மனவருத்தப்படக்கூடா தென்பதும், பிறருடைய சவுக்கியங்களைப்பார்த்துப் பொறாமைப்படக்கூடா தென்பதுந்தான். பிறருடைய கஷ்டநஷ்டங்களை நாம் எப்படிச் சரியாய் ஊகித்தறியக்கூடும்? எப்போதும் பிறருடைய துன்பங்களை எளிதாக நினைக்கக்கூடாது. நம் அண்டை அயலாருடைய வருத்தங்களையெல்லாம் இரக்கமும் பரிதாபமுமாய்ப் பார்த்து இயன்றளவு உபகரித்தும் வரவேண்டும்.

---

## ஸ்ரீமான் கி. இராமய்யர்.

பக்தர்களுடையவும் பெரியோர்களுடையவும் சரித்திர ஆராய்ச்சியானது, நம்மையும் அவ்வாறான மாக்ஷிமையான ஸ்தானத்திற்குக் கொண்டுவருதல் கூடுமென்பதை நினைப்பூட்டி அதற்கு ஆயத்தமாகும்படி நம்மைத் தூண்டுதல் புரிகின்றது.

எனைத்தானும் நல்லவை கேட்க
அனைத்தானும் ஆன்ற பெருமைதரும்.

காவிரிப்பூம் பட்டினத்தில் சௌமிய-௵ (இங்கிலீஷ் 1849) கார்த்திகை-௴ 11-ம் தேதி ஸ்திரவாரத்தன்று பிரம்மஸ்ரீ கி. இராமய்யரவர்கள் பிறந்தார். இளமையிலிருந்தே அவரது பால்ய லீலைகள் ஒவ்வொன்றும் ஞானமார்க்கத்தைத் தழுவியதாகவே இருந்தது. தெருத்திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 11-வது பிராயமுதல் 16-வது பிராயம் வரையில் ஸமஸ்கிருதம், தமிழ் முதலியபாஷை

களை அப்பியஸித்து வந்தார். அதில் ஸ்வல்பகாலத்திற்குள்ளாக அதிகமான அபிவிர்த்தியும் பாண்டித்தியமுமடைந்தார். 16-வது ஆண்டு முதல் 20-வது ஆண்டுவரையில் ஸம்ஸ்கிருதத்திலுள்ள புராணங்கள் ஸ்மிருதிகள் இதிஹாஸங்களில் எதெது அச்சிலில்லாமலும் அபூர்வமானதாயுமிருக்கிறதோ அப்படிப்பட்ட கிரந்தங்களை ஏட்டுப்பிரதியிலிருந்தும் கடிதத்தில் ஸம்ஸ்கிருதலிபியில் எழுதிவைப்பதானார். 20-வயதுக்குமேற்பட்டு 28-வயது வரையிலும் சாஸ்திரஜ்ஞர்களாயிருக்கப்பட்ட வித்வான்களை அடுத்து வேதாந்த சாஸ்திராப்பியாசத்தில் பிரஸ்தானத்திரயம் ஸூத்ரபாஷ்யம் முதலான சாந்திபாடம் (அதாவது உபநிஷத்துகளை அத்தியயனம் புரிதல்) செய்துவந்தார். அதற்கு மேல் 29-வயது வரையில் புண்ணிய க்ஷேத்திரதரிசனம், புண்ணிய தீர்த்தாடனம் முதலியவை நடத்தினார். அந்தயாத்திரை முழுமையும் அநேகமாய்க் கால்நடைதான். அன்றன்றைக்குத் தங்குகிற ஊரில் பிக்ஷாடனத்தினால் ஒரே ஒரு வேளை நதி தீரங்களில் க்ஷுத்பாதையை நிவர்த்தி பண்ணிக்கொள்ளுகிறது. இவ்விதமாகவே அந்த யாத்திரைமுழுவதும் நடந்தது. அதற்குமேல் 30-வது வயது முதற் கொண்டு 35-வது வயது வரையில் அதாவது 1878-79-80-81-82 இந்த ஐந்து வருஷங்களும் தரும வைத்தியசாலையொன்று ஸ்தாபித்து ஸ்வதேசமுறையில் சாஸ்திரரீதியாய் ஔஷதங்கள் தயாரித்து, பிணியாளர்களுக்கு தருமமாக வைத்தியம் செய்துவந்தார். மேற்கண்ட ஐந்துவருஷங்களுக்குள் சுமார் சற்றேறக்குறைய 20,000 ஜனங்களுக்கு மருந்து தரப்பட்டிருக்கும். அவ்வளவும் தர்மமாகவே கொடுக்கப்பட்டன. அதற்காக சுமார் 13,000-ரூபாய்வரையில் செலவாயிற்று. இந்தக்காலத்தில் பாலும் பழமுமே ஆகாரமாகக்கொண்டு யோகாப்பியாஸம் செய்துவந்தார். அதன் பிறகு 36-வது வயது முதற் கொண்டு ஸம்ஸ்கிருத புஸ்தகசாலை ஸ்தாபிக்க ஆரம்பித்தார். அதுமுதல் சுமார் 20-வருஷங்கள் வரையில் அரிய பெரிய சிரமத்தோடு பல இடங்களிலிருந்தும் கிரந்தகோசங்கள் சேகரிக்கப்பட்டன.

சென்னை, கல்கத்தா, பம்பாய், லக்நௌ, ஸ்ரீகாசி, லாஹோர், பூனா, ஜெர்மனி முதலான பல இடங்களிலிருந்தும் கிரந்தங்கள்வர



வழைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில் சேர்ந்திருக்கிற கோசங்களின் மொத்தம் சுமார் 2,000 வால்யூம் வரையிலிருக்கலாம். இதற்கான சகல செலவுகளும் சுமார் 6,000 ரூபாய்க்கு மேற்பட்டுவிட்டது. பின்னும் அவரால் நடத்தப்பட்ட தானதர்மங்களும் அவர் செய்வித்த கைங்கரியங்களும் அபரிமிதமானவை. அநேக பத்திரிகைகளை ஆதரித்து வந்தார். தக்க தருணத்தில் வேண்டிய திரவியசகாயம் செய்து அவைகளைக் கைதூக்கி உதவினார். தூத்துக்குடி ஸ்வதேசிக்கப்பல் கம்பெனி விஷயமாகவும் அதிகமான சிரமமெடுத்துக்கொண்டார். ஸ்திரீவித்யாப்யாஸத்தில் அதிக அபிமானமுள்ளவர். இந்தியாவின் மறுபிறப்பு, அது தற்போது இழந்துவிட்டிருக்கின்ற புராதன நாகரீகத்தையும் வைதீகாநுசாரணைகளையும் மீண்டும் அடையப்பெற்று காலத்திற்கேற்றவாறு அவைகளைத்திருத்தி அமைத்துக்கொண்டு செல்வதிலிருந்துதான் ஏற்படவேண்டுமென்பது ஸ்வாமிகளின் அபிப்பிராயம்.

நல்லார் ஒருவருளரேல் அவர் பொருட்
டெல்லார்க்கும் பெய்யுமழை.

இப்போது ஸ்வாமிகள் ஒருவிரதம் ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்குரிய நியமமாவது; ஆகாரமில்லாமலும், நிஷ்டையுடனும், கிடைத்தால் ஒருவேளை பால்பழம் இவைகளை ஸ்வீகரித்துக் கொள்வதுமாகும். இம்மாதிரி பன்னிரண்டு வருஷகாலம் நடந்தேறவேண்டும். விரதம் ஆரம்பித்து இப்போது 18-மாதங்களாகின்றன. ஸ்வாமிகளின் தற்போதைய வாசஸ்தலம் மேலையூராகும். இது கும்பகோணத்துக்கு ஸமீபத்தில் இருக்கின்றது. இராமச்சந்திரன் கோபாலன் என்ற இரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். ஸ்வாமிகளுக்குத் தற்போது 62-வயது நடக்கிறது.

---

## தினகர உதயம்.

பால பாஸ்கரன் கீழ்த்திசைக்கண்ணே தோன்றினன். ஜனங்களெல்லோரும் நித்திரை நீங்கித் தத்தம் அலுவல்களைக் கவனிப்பாராயினர். உதயமானால் யாருக்கு ஆநந்தம்—யாருக்கு துக்கம்?

ஆநந்தம் யாருக்கு? புதிதாய்க் கல்யாணமான யுவகனுக்கு; என்னத்திற்கு? என்னத்திற்கென்றால்; அவனுடைய கன்னிகைப் பருவமுள்ள மனைவிக்கு வயது ஒருநாள் அதிகமாச்சுது. இன்னும் யாருக்கு? கடன் கொடுத்தவனுக்கு; என்னத்திற்கென்றால்; ஒரு நாள் வட்டி யேறிற்று. இன்னம் யாருக்கு? ஒரு வாரத்தில் திரும்பி வருகிறேனென்று சொல்லிப் போன அந்நிய தேச சஞ்சாரியான யுவகனுடைய யுவதிக்கு; ஏனென்றால் கணவன் பின் திரும்பிவரும் நாளில் ஒருதினம் குறைவாயிற்று. இன்னம் யாருக்கு? தாயாருக்கு; ஏனென்றால் அவளுடைய கைக்குழந்தை ஒரு தினம் வயதில் பெரிதாயிற்று. இன்னம் யாருக்கு? ஜெயிலிலிருக்கும் திருடனுக்கு; என்னத்திற்கு? அவனுடைய தண்டனையில் ஒருநாள் குறைவு பட்டது.

துக்கம் யாருக்கு? தினதக்கிகளான தரித்திரர்களுக்கு; என்னத்திற்கு? இன்றையதினம் மறுபடியும் வயிற்றில் பசியுண்டாயிற்று. இன்னம் யாருக்கு? கடன் வாங்கினவனுக்கு; ஏனென்றால் தினந்தோன்றியதால் கடனின் பாரம் அதிகமாயிற்று. இன்னம் யாருக்கு? துஷ்டபுத்தியுள்ள பாலகர்களுக்கு; என்னத்திற்கு? தாயார் தகப்பனார்கள் மறுபடியும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவார்கள். இன்னம் யாருக்கு? ரூபவதியான யுவதிக்கு; என்னத்திற்கு? அவளுடைய யௌவனத்தில் ஒருநாள் குறைந்துவிட்டது. இப்படியாக யாருடைய சுகதுக்கங்களையும் கவனியாமல் பிராதக்காலமானது பூமண்டலத்தைச் சந்திக்க நெருங்கிற்று.

எல்லாப் பிராதக்காலங்களும் சமானமேயிருக்கும். நேற்றுப்பிரகாசித்த அதே சூரியன் இன்றும் வழக்கம்போல் குணதிசைச் சிகரம் வந்து சிறிது சிறிதாகத் தனது அக்கினி அவதாரத்தை எடுத்துக்கொண்டு கிரமமாக மேற்குப்புறம் புறப்பட்டு போகிறான். எல்லாப் பிராதக்காலங்களிலும் புஷ்பங்கள் மலர்கின்றன. தினம்போல் குளிர்மையான காற்று; அதே சூரியனுடைய ஸ்வர்ணமயமான கிரணங்கள்; இப்படியிருந்தாலும் ஒரு பிராதக்காலத்துடன் இன்னொரு பிராதக்காலம் சேர்ந்து போகாது. என்னத்திற்கு? கழிந்துபோன பிராதக்காலத்தில் யார் நூறாயிரம் தாஸிகளினால் சேவிக்கப்பட்டு அபரிமிதமான ஐஸ்வரியமுடையவர்களாகி ஏராளமான யானை வாகனாதிகளில் ஏறி விரிந்த கையுடன் தரித்திரர்களுக்கு தானம் செய்துகொண்டிருந்ததைப் பார்த்தோமோ, இன்றைதினம் பிராதக்காலத்தில் பார்த்தால் அதே புருஷன் சகாயமில்லாமல் வறுமையானவனாய்க் கிழிந்த துணிகளை யுடுத்தி வெறுங்கால்களினால் நடந்து கால்கள் பாளம் பாளமாய் விரிந்து பணக்காரர்களுடைய வாசல்கள்தோறும் பிச்சையெடுத்துக்கொண்டிருக்கிறான். கழிந்துபோன நேற்றைய பிராதக்காலத்தில் யார் கெட்டியாய்ச் சிரித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தோமோ, இன்றையதினம் பிராதக்காலத்தில் அதே மனுஷ்யன் இறைந்த குரலுடன் ஆகாசத்தை எட்டும்படியாக அழுதுகொண்டிருக்கிறான். கழிந்துபோன நேற்றைய பிராதக்காலத்தில் ப்ரஹ்மஸாது பரமஹம்ஸனென்று தெரிந்து யாருக்கு நமஸ்காரத்தைச் செய்துகொண்டிருந்தோமோ, அந்தமனுஷ்யன் இன்றையதினம் என்னமாயிருக்கிறான்? நேற்றுப்பார்த்ததுபோல் இல்லை; அவன் ஸ்திரீலோலனாய் கேளீஸரோவரத்தில் மூழ்கி எழுந்திருக்கிற அம்ஸனாய் இருக்கிறான். கழிந்துபோன நேற்றையதினம் யார் பரமஹிந்துவாய் ஸநாதனஹிந்து தர்மத்திற்கு ப்ரவர்த்தகனாய் இருந்தானோ, அவனை இன்றையதினம் பிராதக்காலத்தில் பார்த்தால்; அவனது வீட்டு வாசலில் நகிம்கான் சமேதனாய் பட்லர் மாதிரி ஆகாரத்தட்டைப் பிடித்து நின்றுகொண்டிருக்கிறான். கழிந்த தினம் காலையில் நானாவித சாஸ்திர சம்மதமான யுக்திகளைச்சொல்லிக்கொண்டு சாஸ்திராலோசனைச் செய்துகொண்டிருந்த பிராமண சிரேஷ்டனை இன்று காலையில் பார்க்கும்போது அவன் யூரோப்பியன் "பஸ்டு கிளாஸ்" "ஓட்டலில்" (First Class Hotal) மேஜையின் முன்புறம் உட்கார்ந்துகொண்டு வாடின முகமுள்ளவனாய் நிகிருஷ்டமான குடிவெறியில் ஆசக்தனாய்க் காணப்படுகின்றான்.



பிரபஞ்சத்தின் அநுபவ விநோதம் தற்காலத்தில் இவ்வாறாகவே இருக்கின்றது. ஒரு சூரியோதயத்தில் எவ்வளவு சம்பவங்கள் இந்தப் பிரபஞ்சத்திலே நிகழ்ப்பெறுகின்றனவென்பதைச் சிந்திக்கும்போது உலக சிருஷ்டியின் விசித்திரத்தை நினைந்து நினைந்து வியப்புறவேண்டியவர்களாகிறோம்.

## நோயாளிகளை உபசரிக்கும் முறைமை.

நோயாளிகளுக்கு மருந்து, பத்தியம் முதலிய பரிகாரங்கள் கொடுத்து, அவர்களை படுக்கைவிட்டெழுப்ப ஸ்திரீகளே புருஷர்களைவிட நல்ல தாதிகள். ஆனால் மிக்க ஆவலால் மாத்திரம் காரியம் ஆகிவிடுவது கடினம். ஆவலுடன், அறிவு, தேகபலன் பட்சம், திடம், சுறுசுறுப்பு, பொறுமை இவைகள் கூடியிருந்தால் நலம். பின்னும் இவையெல்லாம் ஒருங்கே கூடியிருந்தும், ஒன்று மாத்திரம் ஸ்திரீகளுக்கு இருப்பது பிரையாசை; அதாவது தைரியம். இவ்வித தைரியம் போர்க்களத்தில் யுத்தவீரர்கள் உண்டாயிருக்கும் வீரத்தன்மையைவிட உயர்ந்தது. ஆகவே இவ்வித குணநிசயங்கள் ஒருங்குகூடிய ஒருதாதியிருந்தால், அதனாலேயே பாதி

தீர்ந்துவிட்டது என்பார்கள் பெரியோர்.

நோயாளிகள் இருக்குமிடங்களில் அமைதியாயிருக்கவேண்டியதென்பது மிக்க அவசியம். அமைதி என்றால், சாதாரண நித்திய கருமங்களையும் விட்டு எல்லாவிதசத்தமும் ஒழிந்து இருத்தல் வேண்டுவதல்ல. ஏனெனில், இதனால் நோயாளியின் அமைதி கெடாது. அவ்வமைதி கெடக் காரணங்கள் (1) மிக ஜாக்கிரதையுடன் விரலையூன்றியும், பெருவிரலின் நுனியின் மேலும் நடத்தல், (2) குசுகுசு எனப்பேசல்; நோயாளியின் நித்திரையறையில் மெள்ள தாழ்ந்த ஒலியுடன் மொழிதல் நலம். குசுகுசுவெனல் நித்திரையைக் கெடுக்கும். (3) உஷ்கிஷ் என்றிரைதல், இதுவுங் கொடிது. (4) அதிக சத்தமுண்டாக்கத்தக்க உடுப்புகளை அணிந்துகொண்டு, படுக்கையறையில் நடத்தல் விவேகமின்மை. (5) நோயாளியின் அறைக்குள் செல்லவேண்டுமானால் கூச்சமில்லாமலே செல்லலாம்; அவ்விதமல்லாமல், கதவைத்திறக்க ஒரு நாழியும், கதவுக்கு வெளியே மூனுநாழி பிணபிணவென்று பேசுதலும், இவை நோயாளிக்குத் துன்பமே ஒழிய வேறல்ல. ஏனெனில் இந்த 3, 4 நாழிகையும் நோயாளி கண்மூடிக்கொண்டிருந்தபோதிலும், அது நித்திரைசெய்யாததால், தேகமெலிவினால் கண்களை மூடிக்கொண்டு மனதை கூர்மையாகச் செலுத்தி, சுற்றிலும் நடக்கும் செயல்களைக் கவனிப்பான்.

நோயாளியோடு பேசும்போது, அவன் கால்மாட்டில் நின்று பேசக்கூடாது. படுக்கையின் பக்கத்தில் தலையணைக்கருகேயிருந்து பேசுதல்வேண்டும். இப்படியல்லாவிட்டால், நாம்நிற்கிற இடத்தில் நோயாளி தன்கண்களைச் செலுத்தவேண்டியிருப்பதால், அவனுக்கு வருத்தங்கொடுத்தலாகும்.

தாதிகள் தங்களுக்கு தூக்கம் வரும்போது படுக்கைக்குப் போதல் சுகம்; அவ்விதமல்லாது, சிலர் தங்களுக்கு நோயாளிகளிடத்திலிருக்கும் அன்பின் பெருக்கத்தாலோ, அல்லது அறிவின்மையாலோ, நாழிகை முப்பதும் விழித்திருக்கிறார்கள். இதனால் தங்களுக்கு வினையுஞ் சுகவீனமுந் தவிர, தாங்கள் மிக ஜாக்கிரதையோடும் விழித்திருந்து பரிகார முதலிய செய்யவேண்டிய காலங்



களில் தூங்கிவிழுந்தும், ஐயோ நமக்காக நம்மினிய மனைவி தூக்கம் விழிக்கின்றாளே என்று நோயாளியை ஏக்கமுறச்செய்தும் தங்கள் அறிவீனத்தை வெளியிடுகிறார்கள்.

சிலர் நோயாளிகளுக்குப் போஜனத்தின்மேல் பிரியமுண்டாக்க அநேகவித உண்டிகளைச் செய்துகொடுப்பார்கள். இது வைத்தியசாஸ்திரத்திற்கு விரோதமாவதுமன்றி, நோயாளிகளின்மேல் அன்பிருந்தால், புத்தியுள்ள தாதிகள்செய்யாத விதமுமாம். சாதாரணமாய் வியாதி ஆரம்பத்திலே, வியாதிக்காரர்களுக்கு எவ்வித போக்கியமான உணவானாலும் ருசிக்கிறதில்லை. அந்த காலத்தில் பசியை உண்டாக்கவேணுமென்று முயல்வதைவிட வைத்தியன் உத்திரவுசெய்த பத்தியங்களை வேறுமொன்றே ருசிக்கிற விதஞ்செய்து நோயாளிக்குக் கொடுத்தல் மிகவும் நன்மையாகும். இதைவிட்டு தின்பண்டங்கள் அநேகவற்றைபெடுத்து விவரித்து இது வேண்டுமா, அதுவேண்டுமாவென்று நோயாளியைத் தொந்தரை செய்தல் அறிவின்மையின் விளைவாய்த் தோன்றுகின்றது. மேலும் அந்நோயாளிக்கு ஏதேனும் வேண்டுமானால் தானே வேண்டிப் புசிப்பான். அவ்விதம் தான் வேண்டாததை நாம் பலாத்காரம் செய்து கொடுத்தால், நாம் செய்யும் தொந்தரவை நீக்கிக் கொள்ளவேணுமென்று அப் பதார்த்தத்தைப் புசிக்கத் தலைப்படுவான். ஓர் நாள் ஒரு வைத்தியர் ஓர் நோயாளியண்டை இருக்கும்போது, அந்நோயாளிக்குப் பாத்தியஸ்தியான ஒரு அம்மை அங்கு வந்தனளாம். அவ்வம்மையாரை, அம்மா! நீர் யாதொரு தொந்தரவும் செய்யக்கூடாது என்று அவர் சொல்ல, அவளும் எனச் சொல்லி, உள்ளே நுழைந்தவுடன், நோயாளியைப் பார்த்து "அப்பா, சற்று தலையைத் தூக்கட்டுமா? இன்னொரு திண்டு கொண்டுவரட்டுமா? தலை இன்னுஞ் சற்று உயர்ந்திருக்க வேண்டுமா? கொஞ்சம் விசிறட்டுமா? படுதாவைச் சற்றுத் தூக்கத்தான்வேணும்; இந்தா கொஞ்சம் ரொட்டி கொண்டுவருகிறேன். அது தான் இந்தவேளைக்கு நல்லது; இன்னொரு தலையணை போட்டுக்கொண்டால் உத்தமம். கொஞ்சம் காப்பிவேண்டுமா? ஐயோ; நீங்கள் கொஞ்சம் காப்பி சாப்பிட்டுப் பாருங்கள்? நிரம்பச் சுகமாயிருக்கும். உடம்பு எப்படியிருக்கிறது? இப்

போது உமக்கும் ஜாதகம் போதாதாமே. நான் ஒரு கனவு கண்டேன், தேர் வந்தது; என் தலைவிதி எப்படி யிருக்கோ என்று இவ்விதக் கேள்விகள் கொஞ்சமாக ஓர் இருபது முப்பது கேட்டு விட்டாளாம். இவ்வித அன்பால் நெருங்கிய ஓர் மாது கொடுக்கும் துன்பம் மிகவும் கொடிது. ஆதலால்தான் பேதைமையுடைய மாதரைவிட மனோதைரியமும் பயிற்சியும்கூடிய ஆண்மக்களே இந்தக் காரியங்களுக்கு நன்று என்கிறார்கள்.

## எழுத்து மாற்றுச் சொற்கள்.

[விடைப் பொருள்.]

1. குதிரை.
2. குள்ள நரி.
3. ஓநாய்.
4. பூனை.
5. குடத்தி
6. எருமை.
7. கானை.
8. கல்யானை.
9. பன்றி.
10. பசு மாடு.
11. கேசரி.
12. சுண்டெலி.
13. கழுதைப்புலி.
14. ஆடு.
15. மதனை.
16. மான்.
17. கோவேறு கழுதை.
18. குரங்கு.
19. கலைமான்.
20. வாலில்லாக்குரங்கு.
21. முள்ளம் பன்றி.
22. காண்டாமிருகம்.
23. யானை.
24. சிறுத்தை.

## கடிகை முத்துப் புலவர்.

1. கடிகை முத்துப் புலவர் என்று பெயர் பூண்டுடைத்த இந்த வித்துவான், திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த சமஸ்தானமாகிய எட்டியா புரத்திற் பிறப்பு வாய்ந்தவர். இவர் இருந்[illegible] 18-ம் நூற்றாண்டென்றே துணியப்படும். அஃதெங்ஙனம் கொள்ளப்பட்டதெனில், நம்புலவர் அவ்வெட்டியாபுரத்தை அரசாண்ட சகவீர ராம வெங்கடேசுர எட்டம நாயக்கரது வாசல் வித்துவானாயிருந்தனராதலின் இவர் அந்நூற்றாண்டுப் புலவரென்றோம். இவர் அவ்வரசனது வாசல் வித்துவானென்பதற்கு அச்சமஸ்தானத்திலேயே கர்ணபரம்பரையாக யாம் கேள்விப்பட்டதும்



திருப்பந் திலையு மோர்கரமே கண்டே ஞெலுந் குகரமே
காமப் பயது மூர்க்கரமே கனையைத் தொடுத்தான் சீக்கரமே.
வருத்தம் புரிவா ரநேகரமே வல்லார் மடவார் கிகரமே
மாமால் வெங்கடேசு ரெட்டனை வருவான் வருவானென் றிருக்கேன்
இருத்தும் படிக்கு மனோகரமே செய்தா னினித் திவாகரமே
இனியில் வருவா வெனக்கரமே தெரிய வுதித்தான் சக்கரமே
பொருந்தத் திருகண் ணுகரமே போர்வேட் கிலைவீ ரகரமே
பூவை யாருஞ் சேகரமே புகழ்ந்தேன் ரத்தி னகரமே.

என்ற கவியும் இதுபோன்ற பிறகவிகளும் ஆதாரங்களாகின்றன.

2. இவருடைய கல்விப் பயிற்சியைக் குறித்துச் சொல்லுதற்கு மேற்கூறிய கவியொன்றே தக்க ஆதாரமாம். இவர் செய்த பிரபந்தங்களெல்லாம் விசேஷமாக ரஸமுடையனவாகவே யிருக்கின்றன. இவரால் செய்யப்பட்டனவாய்ச் சொல்லிக்கொள்ளும் பிரபந்தங்களுள் மூன்று மாத்திரம் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவை சமுத்திரவிலாசமும், திக்குவிசயமும், திருவிடைமருதூரந்தாதியுமாம்.

3. இனி மேற்கூறிய பிரபந்தங்களின் நயங்களைப்பற்றி எழுதப்புகுவோம். முதலாவதாகிய சமுத்திரவிலாசமென்பது நூறு செய்யுட்கள் அடங்கியது. இதற்குக் கழிக்கரைப்புலம்பல் என்று மற்றொரு நாமமுண்டு. சமுத்திரக் கரையோரத்திலே இருந்து தலைமகனைப்பிரிந்து ஆற்றாமையால், மன்மதனுடைய பேரிகையாகிய கடலானது உத்கோஷிக்கத் தலைமகள் வருந்தாநிற்றலே இந்நூலின் விஷயமாகும். இதிலே இவருடைய கற்பனாசாமர்த்தியமும், சுதந்தர யூகமும் வர்ணனாத்திறனும் இனிது விளங்குகின்றன. சிற்சில கவிகள் சமுத்திரத்திற்கும் அரசனுக்கும் சிலேடையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சில செய்யுட்கள் காமபிரம், மடக்கு முதலிய சொல்லணிகளைப் பொருந்தியிருக்கின்றன. தமிழ் நூற் பயிற்சியொன்றுமேயுடையார் இப்பிரபந்தத்தினை மிகவுங் கொண்டாடுவார்கள்.

4. இரண்டாவதாகிய திக்குவிசயம் என்பது திருநெல்வேலிச் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு சிறு சமஸ்தானமாகிய சிவகிரிக்கு அரசனான வரகுணராமவன்னியனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொ

ண்டு விளங்குகின்றது. இது அவ்வரசனுடைய செல்வம், சிறப்பு அதிகாரம், பராக்கிரமம் முதலியவற்றை விரித்துக் கூறுகின்றது. இதிலே 320 கவிகளுள. இது சற்று எளியநடையிலமைக்கப்பட்டுளது.

5. இனி மூன்றாவதாகிய திருவிடைமருதூரந்தாதி கும்பகோணத்திற்கடுத்த திருவிடைமருதூரிலேயுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்டது. இது அந்தாதியமத்திற் சற்றேனும் வழுவாது நூறுபாடல்களாலாகியது. இவ்வந்தாதியில் அநேகங்கவிகள் துறைப்பொருளமைந்துள்ளன. அந்தாதித் தொடையும் பாட்டுகளின் போக்கும் வெகு நேர்த்தியாயிருக்கின்றன. இவர் இப்பிரபந்தத்தைச் செய்ததினாலே இவரைச் சைவரென்று கொள்ளுதற்கு இடமுண்டு. மேலும் இந்நூலொன்றுதான் நம்புலவர் செய்தவற்றுட் கடவுள்மேலது என்று தோன்றுகின்றது.

6. இவர் மேற்கூறிய பிரபந்தங்களைத் தவிர்த்து அநேகந் தனிப்பாக்கள் செய்திருக்கின்றனர். அவை மிகவும் ஆச்சரியகரமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சில மடக்கு என்னும் அலங்காரத்தோடும் சிறந்த சத்தார்த்தங்களோடும் விளங்குகின்றன. இத்தனிச் செய்யுட்களெல்லாம் ஊ. புஷ்பரதச் செட்டியாரா லச்சிடப்பட்ட தனிப்பாடற்றிரட்டு என்னும் ஓர் அருமையான புஸ்தகத்திற் காணலாம்.

---



# குழந்தைகளுக்கான

# விஷயங்கள்.

---

## அலை எழும்புவதேன்?

சமுத்திரத்தில் அலைகள் பெரிது பெரிதாய் எழும்பி ஒன்றின்பின் ஒன்றாகப் புரண்டுவந்து கற்கட்டடமான கரைகளில் பகிலென்று மோதவும், கரையோரங்களிலுள்ள மணல்களின்மேல்



மெதுவாய்ப் பாயவும் காண்கிறோம். அதைப் பார்க்கிறவர்கள் அனேகர் கடலில் அலை எழும்பி வருகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆயினும் கடலில் அலை உண்டாவதேனென்று அதைப்பற்றி யாராவது ஆச்சரியப்பட்டதுண்டா? அதற்குக் காரணம் என்னவென்று எவரேனும் விசாரித்ததுண்டா? சற்றே நிதானித்துக் கேளுங்கள். அதன் காரியத்தை தெரியக்காட்டுகிறோம்.

இந்தப் பிரபஞ்சத்தில் எந்தப்பொருளும் அதன் பிரமாணத்துக் கேற்றபடி மற்றெந்தப் பொருளையும் தன் இடத்துக்கு இழுக்கின்றது. சூரியன், பூமிக்குந் தனக்கும் இருக்கின்ற தூரத்திற்கேற்றபடி பூமியை இழுக்கின்றது. அப்படியே பூமி, தன் பரிமாணத்துக்குத் தக்கபடிச் சூரியனை இழுக்கிறது. இப்படியே பூமியும் சந்திரனும் ஒன்றுக்கொன்று இழுத்துக் கொண்டிருக்கின்றன. சூரியன் சந்திரன் முதலிய மற்றக் கிரகங்களும் இவ்வாறேதாம் ஒன்றுக்கொன்று இழுத்துக் கொண்டிருக்கின்றன. இதனால் சந்திரன் அதனின் தூரத்திற்கும் பரிமாணத்திற்கும் ஏற்றபடி எல்லாவற்றையும் இழுக்கக் கூடியதென்று தெரிகிறதல்லவா? இந்த பூமியைவிட அதன்மேல் இருக்கிற ஜலமானது சந்திரனுக்கு ஸமீபமாதலாலும், நிலத்தைப்போல் ஜலமானது அவ்வளவு கடினமின்றாதலாலும், பூமியை விடச் சமுத்திரத்தையே அதிகமாகச் சந்திரன் தன் இடத்திற்கு இழுக்கின்றது. அதனால் உண்டாகிற காரியம் என்னவெனில், சமுத்திரத்திற்கு நேராய் உயரச் சந்திரன் வரும்போதெல்லாம் சமுத்திரத்தில் அலை எழும்புகின்றது. அப்படியே சந்திரனுக்கு நேரான பக்கத்துக்குப் பின்புறத்தில் நீரைவிட நிலமே சந்திரனுக்குச் சமீபமாய் இருப்பதால் அங்கே பூமிதான் அதிகமாய் இழுக்கப்படுகின்றது. அதனால் அந்தப் பக்கத்தில் ஜலம் கொஞ்சம் உப்பலாகவே யிருக்கும்.

இவற்றைச் சந்திரன் எப்படி இழுக்கின்றதோ அதேவிதமாகவே சூரியனும் இழுக்கின்றது. அதனாலேதான் அமாவாசை தினங்களில் சந்திரன் சூரியன் இரண்டும் ஒரேபுறமாய் நின்று

சமுத்திர நீரை இழுப்பதனால் ஜலம் விசேஷமாய்ப் பொங்கி அலைகள் மிகப்பெரிதாய்க் கிளம்புகின்றன. அப்படி ஜலம் அதிகமாய்ப் பொங்கிவந்து கடற்கரையோரத்திலுள்ள பலவீடுகளை அழித்துவிடக்கூட நாம் கண்டும் கேட்டும் இருக்கின்றோமல்லவா? அப்படியில்லாமல் சூரியன் ஒருபுறத்திலும், சந்திரன் ஒருபுறத்திலும் நின்று இழுக்கிற காலங்களில் அலைகள் விசேஷமாயில்லாமல் அடங்கியேயிருக்கும்.

இன்னும் சற்றே நிதானித்துப் பார்ப்போமானால், சமுத்திரத்தில் அலைகிளம்ப ஆரம்பிக்க நாளுக்கு நாள் ஒருமணிநேரம் ஏன் அதிகமாய்ச் செல்லுகிறதோ அதற்கும் காரணம் இன்னதென்று தெரிந்துகொள்ளலாம். சந்திரன் ஸ்திரமான கிரகமல்ல; ஏறக்குறைய 28 தினத்தில் பூமியைச்சுற்றி ஒருதரம் ஓடுகிறது. இன்றையதினம் இராத்திரி பத்துமணிக்கு திருச்சிராப்பள்ளிக்கு நேராய்ச் சந்திரன் வந்ததானால்; பூமி தினம் ஒரு சுற்று சுற்றிக்கொண்டிருப்பதனால்; சந்திரன் அதே இடத்தில் நிலையாய் இருக்கிறபக்ஷத்தில், மறுநாள் பத்துமணிக்கே சந்திரன் சரியாய் திருச்சிராப்பள்ளிக்கு நேரே வந்து சேரும். அப்படியில்லாமல் அதேகாலத்தில் சந்திரனும் கொஞ்சதூரம் ஓடுகிறதானபடியால், பத்து மணிக்கு சரியாய் வருவதில்லை; பத்தடிக்குச் சுமார் ஐம்பது நிமிஷத்துக்குப் பிறகு சந்திரன் திருச்சிராப்பள்ளிக்கு நேராய் வருகிறது. அதாவது: மறுநாள் பதினொன்று அடிக்கச் சுமார் பத்து நிமிஷத்திற்கு முன்னே அலை எழும்புகின்றது. இப்படிச் சந்திரனும் சூரியனும் ஜலத்தை இழுக்கிறதென்றால், அது இப்பூமியை விட்டு ஏன் ஆகாயத்தில் எழும்பிப் போய்விடவில்லை யென்று கேட்கிறீர்களோ? ஜலம் பூமியின்மேலேயே இருப்பதால், சூரியன் சந்திரன் முதலியவற்றைப் பார்க்கிலும் பூமியே ஜலத்தை அதிகமாய் இழுக்கின்றது. அதனாலேதான் நீர், நிலத்தை விட்டுப் போய்விடும்படியான காலம் நேரிடுவதில்லை. அலை எழும்புவதேன் என்ற வினாவுக்கு இந்த விடை போதுமானதாயிருக்கலாமென்று நம்புகிறோம். எதுவும் உற்றுப்பார்த்தால் உண்மை விளங்கும்.



## வேடிக்கை விநோதங்கள்.



முதல் நரிப்பிரபு வெகு அவஸரமாக எழுதிக்கொண்டுபோகிறார். இன்னொரு நரிப்பிரபு என்ன எழுதலாமென்பதாக தமது கையைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு யோசித்தவண்ணமிருக்கின்றார். ஹா ஹா! எத்தனை ஸௌந்தரமான உருவங்கள் பார்த்தீர்களா! உலகத்திலே அறிவாளிகள் என்று சொல்லப்படுவோரெல்லாம் உள் தத்துவத்தில் சரியான நரிப்பிரபுக்கள் தானென்ற ஒரு பிரபல கிரந்தகர்த்தாவின் கூற்று அதிகப் பொருளமைந்தது. கல்வியானது பகுத்தறிவைக் கூர்மைப்படுத்திவிடுகிறது. உலக அநுபவத்தில் அத்தக் கூர்மையான அறிவுமுதிர்ச்சி, நல்வழியில் செலுத்தப்படாமல் அநியாயத்தவறான காரியங்களுக்கே ஒரு உபகரணமாகக் கொள்ளப்படுகிறது. ஒரு குற்றவாளி ஒரு வக்கீலினிடத்திலே போய் யோசனை கேட்கிறான். இன்னின்ன விதம் செய்தால் அவன் குற்றம் நிரூபிக்கமுடியாமல் தடுத்துவிடுதல் கூடுமென்கிறார். இது அறிவின் காரியந்தானே. நரி எதனால் சிறப்பிக்கப்படுகிறது? தந்திரம் காரணமாக. அந்த தந்திரத்தின் உற்பத்தி எதிலிருந்து? அறிவுமுதிர்ச்சியிலிருந்து தோன்றுகிறது. ஆகவே அறிவாளிகளை நரிக்கு உவமையாக ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். பின் எதனால் அறிவாளிகள் விலக்கிக்கப்படுகிறார்களென்றால், ஆயிரம் தவறான விஷயங்கள் தங்களுக்குத் தெரிந்திருப்பினும் அவைகளைத் தங்களின் காலின்கீழ் மிதித்துக்கொண்டு அடக்கியாண்டு தங்களுடைய அறிவுச்சுடரின் துணைபற்றி நல்வழியொன்றினையே நாடி உலகத்துக்கு க்ஷேமம் விளைக்கக்கூடிய திறமை அவர்களுக்கு வாய்க்கப்பெற்றிருக்கின்றமையின் அவர்களை உலகம் கொண்டாடி கௌரவிக்கின்றது. அவ்வொரு காரணார்த்தமாக அவர்களும் அறிவாளிகள் என்று புகழப்படுகிறார்கள்.

# மனோ தத்துவ சாஸ்திர உண்மைகள்.



## 1. துணிகின்றேன்.

என் துணியக்கூடாது. உலகத்திலே மனிதனைவிட உயர்ந்தது ஒன்றுமில்லையல்லவா? நான் மனுஷ்யன். அநந்தமான சக்தியுள்ளவன். ஏனைய ஜீவவர்க்கங்களினும் சிரேஷ்டதரமானவன். கடவுளை மனதார வாழ்த்தி வழிபடுவதற்கு என்னால் கூடும். ஏனெனில் எனக்குப் பேசும் சக்தி யுண்டு. ஆகவே துணிவு கொள்வதற்கு எனக்கு இரட்டிப்பு உரிமை இருக்கின்றது.

துணிகின்றேன்—ஏனெனில் என்னுடைய வேதாந்த தர்மத்தின் முதலாவது உபதேசமும் கடைசியின் உபதேசமும் நீ துணியக்கடவாயாக என்பதேயாகும்.

துணிகின்றேன்—நான் எதற்குத்தான் துணியமாட்டேன்; எவ்வித ஆசைதான் எனக்குப் பெரியதாகும்? எந்த உத்தேசம் துர்லபமாகும்? எந்த எண்ணம் எனக்கு அசாத்தியமானது? என்னுடைய இச்சையெல்லாம் பரமாத்மாவை யறியவேண்டுமென்பதுதான். பகவான் சொல்லுகிறார்:—

ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம்ஸரணம்வ்ரஜ,
அஹந்த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாஸுச:

எல்லாத் தருமங்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணமாக அடைவாயாக; நான் உன்னை ஸமஸ்த பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்; துக்கிக்கவேண்டாம் என்கிறார். இதுவே என்னுடைய மதம்.

துணிகின்றேன்—எனக்கு மோக்ஷசுகம் எப்போது லபிக்கும்? என் மனத்தை யடக்கியாளப் பிரயத்தனிப்பதே என் விசாரம். அதுவே என் முயற்சி. அதற்காகவே துணிகின்றேன். நான் துணிந்த காரியம் இந்த ஜென்மமென்று சொல்லப்படுகிற சிறு பொழுதிலே கைகூடாவிடினும் உடனே மீண்டும் மறு பிறப்பெடுத்து வந்து அதை நிறைவேற்றிவிட வல்லேன். என்னால் கூடும். நான் செய்வேன்.



துணிகின்றேன்—ஏனெனில், துணிந்த காரியத்தை நிலை நிறுத்தும் வல்லமை எனக்குண்டு; நான் மனுஷ்யன். என்னால் எதுவும் கூடும். நான் செய்வேன். என் மனோ சக்தியையும் என் மனோ பலத்தையும் அதன் வியாபகத்தையும் நான் நன்றாக அறிந்திருக்கிறேன். அந்த சக்தியும், பலமும், வியாபகமும் என்னுள் இருக்கும்போது என்னால் முடியாததெது? நான் ஏன் ஒப்பற்ற ஆத்ம ஞானியாகக்கூடாது? என்னால் எதுதான் சாத்தியமாகாது?

துணிகின்றேன்— நிஷ்காம்யசக்தி என்னுள்ளத்தில் குடிகொண்டுவிட்டது. இனி எனக்கு ஏது கவலை? நான் செய்வதெல்லாம் நிஷ்காம்யமாகும். அதாவது பிரயோஜனத்தை விரும்பிச் செய்யாததாகும். ஆகவே எனக்கு இந்த முயற்சியிலே எவ்வித நஷ்டமும் கிடையாது. ஸ்ரீ கிருஷ்ணன் கீதையிலே செய்த உபதேசம் என்னெஞ்சில் தகித்துக்கொண்டிருக்க, அவனே என் ஆத்மாவாகப் பிரகாசித்து என் சித்தமாகிய தேரை நடத்திக் கொண்டிருக்க நான் எதைத்தான் துணியக்கூடாது? எதைத்தான் பூர்த்தி செய்யவொண்ணாது? "அறிபவன் துணிவுகொள்ளலாம்". நான் அறிகின்றேன். அதுகொண்டே துணியவும் செய்கின்றேன். என் மனம் எனக்கு வசப்பட்டுவிட்டது. அதை முழுமையும் வசப்படுத்தி எனக்கு அடிமையாக்கிக்கொண்டுவிட்டேன். இந்த இச்சையை வெகு சீக்கிரத்திலே இதோ நிறைவேற்றிவிடப்போகின்றேன். நான் செய்வேன். எதுவும் என்னால் கூடும். இதோ அதினிமித்தம் துணிகின்றேன். மனோதத்துவ சாஸ்திர மர்மங்களை நான் நன்றாக உணர்ந்திருக்கிறபோது எனக்கு எதுதான் அசாத்தியம்? நான் ஏன் துணியக்கூடாது? இதோ துணிகின்றேன். "துணிந்தவனுக்கு சமுத்திரமும் முழங்கால்".

---

## 2. வசீகர ஜோதி.



வசீகர ஜோதி எவ்விடமிருந்து, என்னவிதமாக, எப்படிப் பாய்கிறதென்பதைப் படத்திலே நன்றாகப் பார். மெஸ்மரிஸம் செய்கிறவனுடைய கைவிரல்களினின்று ஒருவிதமான ஆகருஷணைச்சக்திப் பிரகாசம் வெளிப்பட்டு எதிராளியிடத்துப் போய்ப் பாய்கின்றது. அந்த ஜோதியில் அதிக பிரமிப்பைக்கொண்டவனை அதிலேயே வைத்

துப்போகிறான். அதனால் மூர்ச்சை அதாவது தூங்காமல் தூங்கத் தொடங்கிவிடுகிறான்.

மெஸ்மரிசம், ஜாலவித்தைகள் முதலியன பலவும் வசிகர சக்தியினுள் அடங்கும். வசிகர சக்தி செயற்கையால் அமைவது உண்டெனினும் இயற்கையில் பொருந்தப் பெற்றிருத்தலே சால்புடைத்தாம். விசேடமாகக் குழந்தைகள், மாதர்கள் இன்னோர்பால் அதிகமான வசிகரம் காணப்படுகின்றன. உலகமுழுமையுமே மேற்குறித்த இரு பாலாருக்கும் அடிமைத் தொழில்புரிய ஆகத்தயாய் முற்படுகின்றது. அருமையாய் சில புருடர்களிடத்தும் வசிகரம் பிரதிபலிக்கின்றது. சந்தித்த மாத்திரத்தில் நண்பர்களாவதும் காதல் கொள்வதும் ஆகிய இவைகளெல்லாம் வசிகர சக்தியின் விநோதந்தான். பிரசித்த கீர்த்திவகித்த பாவலர், படைத்தலைவர், தேசபக்தர்கள் முதலானோரெல்லாம் இவ்வசிகர சக்தியின் உதவிகொண்டுதான் ஜனங்களை ஆண்டனர். விசேஷமாக இவ்வசிகரம் அரசனிடத்து விளங்கக்காணலாம். வசிகர சக்தியானது முகத்தில் ஒருவிதமான தேஜஸை உண்டுபண்ணி அதனால் சகலரையும் மயக்கி விடுகின்றது. அரண்யத்தில் புலியானது பிராணிகளைப் பிடித்துப் பக்ஷிக்கும் விதமும் இவ்வசிகர சக்தியின் துணைகொண்டுதான். புலியின் கண்களில் ஒருவிதமான வசிகரமும் பிரமிப்பும் காணப்படுகின்றன. அதற்கு வசப்பட்டுப்போய் அதினின்றும் தப்பித்துக்கொள்ள முடியாமல் உயிரை யிழக்கின்றன. பூனையும் புலியினத்தைத் தழுவியதாகும். பூனை எலியை எப்படிப்பிடிக்கின்றது? புலியைப்போலவே வசிகர சக்தி பூனையினிடத்திலே அதன் கண்களில் விளங்குகின்றது. எலிகள் பூனையின் கண்களிலே ஜொலிக்கும் வசிகர சக்தியினால் மயங்கி பிரமிக்கும்வேளையில் பூனை அதன் மீது விழுந்து அதனை பக்ஷிக்கத் தொடங்குகின்றது. பூனையினிடத்து விளங்கும் இவ்வசிகர சக்தியின் மகிமையால் மனிதர்கள் கூட சிலசமயங்களில் பூனையின் கண்களைக்கண்டு மயங்கி தங்கள் பலத்தையெல்லாம் மறந்து பயப்பிராந்தியடைந்திருக்கின்றனர். வசிகர சக்தி அக்ஷரங்களிலும் கூட மறைந்து நிற்கின்றன. புரா



101



தன ஞானிகள் வசிகரம் நிறைந்த அக்ஷரங்களை ஒன்று சேர்த்து மந்திரங்களாக் உருவகப்படுத்தி இருக்கின்றனர். இம்மந்திரங்களை மனதில் தியானமூலமாக நன்றாகப் பதியச்செய்துகொண்டால் மந்திரங்களின் வசிகரம் அதனுடன் பழகிய மனிதனுக்கும் உண்டாகிவிடுகின்றது. தேள், சர்ப்பம் முதலியவற்றின் விஷங்களை எடுத்துவிடும் செய்கை அம்மாதிரியான பழக்கத்தினாலேயே அமையப்பெறுகின்றது. வசிகர சக்தி பொருந்திய அக்ஷரமாலைகளான மந்திரத்தை உருவேற்றி, அம்மந்திரத்துடன் தனது மனதையும் ஐக்கியப்படுத்தி, அம்மந்திர வசிகரத்தைத் தான்பெற்று அந்த வசிகரத்தினால் எதிரியின் மனதைத் தன்பால் கிரகித்துக்கொண்டு, தான் விஷமிறங்கி விட்டதென்று சொல்வதை எதிரியின் மனது நம்பும்படியாகச்செய்து அவனுக்கு ஏற்படுகிற நம்பிக்கையின் பலத்தினாலும் அதன் காரணமாகத் தோன்றும் திடமான சிந்தனு சக்தியாலும் அவ்விஷத்தைத் தடுத்து—இவ்வாறாக விஷ நிவர்த்தி செய்துவிடுகிறான்.

ஏககாலத்திலே ஆயிரக்கணக்கான ஜனங்கள் கோயிலுக்கு ஓடுவதேன்? அவ்விடங்களிலே பூர்விகர்கள் தங்களிடம் காணப்பட்ட வசிகர சக்தியை வியாபிக்கும்படியாக, மந்திரங்களாலும் மற்றும் பலவித சாதூர்யங்களினாலும் செய்துவிட்டுப் போயிருக்கிறபடியால் அவ் வசீகரமாகிய காந்தமானது இரும்பாகிய ஜனங்களை, அவர்கள் வெகு தூரத்திலிருந்தபோதிலும் அவர்களின் மனதைக் கவர்ந்து அவ்விடத்துக்கு அவர்களை இழுத்துக்கொண்டு வந்துவிடுகின்றது. ஆலயத்துக்குட் போனதும், அந்த வசிகர சக்தியானது அதிகமான பலத்துடன் அவர்களை இழுப்பதால் பாவகாரியங்களைச் செய்யப் பயந்து நல்வழி நாடுகின்றனர்.

எல்லாவற்றிலும் பெரிய வசிகர சக்தி கடவுளிடம் அமையப்பெற்றிருக்கின்றனவென்பது மறுக்கப்படாத உண்மை. அவரது அருளினைப்பெற்ற ஞானிகட்கு அவரிடத்திலிருந்து இவ்வசிகரம் இவர்களாலும் பிரதிபலித்து, அதனால் பிரஜைகளனைவரையும் இங் தமக்கு அடங்கி நடக்கும்படி வசிகரப்படுத்தி விடுகின்றனர். பூர்விகனம் விசேட வசிகரம் பொருந்தப் பெற்ற ஞானிகள், விக்கிரகங்கள், மகான்களின் ஸ்தாபனங்களான தேவாலயங்கள், [illegible] புண்ணியதடாகங்கள் முதலியனவெல்லாம் அவர்களிடத்து [illegible] பலித்த வசிகர சக்தியைத் தாமும் உடையப்பெற்றனவாய் உலகத்து நாலுமூலைகளிலிருந்தும் ஜனங்கள் தம்மை நாடிவரும்படியான ஜோதியைக் கொண்டிருக்கின்றன.

12.09.34

தற்காலத்தில் புதிதாக அநேக ஆலயங்கள் நிர்மாணிக்கப்பெற்றும் பிராசீனகாலத்திலுண்டான தேவாலயங்களின் வசீகர காந்தி இப்புதிய தேவாலயங்களில் காணப்பெறாததைச் சிந்திக்கும்போது வசீகர சக்தி பொருந்திய ஞானிகளின் காரியங்களுக்கும், அஃதில்லாத சாமானியர்களின் ஸ்தாபனங்களுக்கும் உள்ள வேற்றுமை கரதலாமலகம்போல் தெளிவாகிறதைக் காணலாம்.

சில ஆலயங்களில் கோவில் அதிகாரிகள் ஜனங்களை முரட்டுத்தனமாகத் தள்ளித்துரத்தியுங்கூட, அடிமேலடி விழுந்தபோதிலும், விக்கிரகங்களை விட்டுப் பிரிவதற்கு முடியாமல் அடிக்கடி பார்த்துப் பார்த்து ஆனந்தங்கூர்ந்து அதிலேயே லயப்பட்டுப் போய்விடுகின்றனர். காரணம் அவ்விக்கிரகங்களினிடத்துள்ள வசீகர சக்தியானது அவர்கள் மனதைக் காந்தம் இரும்பை இழுக்கின்றவாறு தன்னுள் இழுத்துக் கொள்கின்றது. இங்ஙனம் விசேட வசீகரம் அமையப்பெற்ற இடங்களையே யாத்திரா ஸ்தலங்கள் என்ற பெயரால் நாளதுவரையும் அழைக்கப்பட்டு வருகின்றது.

வசீகரத்திற்கு இன்ன இடம் தான் இருப்பிடம் என்பது இல்லை. அது கல்லுகளிலும் இருக்கலாம். உதாரணமாக நம்மை விட்டுப் பிரிகிறவர்களிடமிருந்து அவர்கள் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்வதற்காக அவர்களுக்குச் சொந்தமாயுள்ள பொருள் ஒன்றை நாம் ஆவலுடன் பெற்றுக்கொள்ள ஆசிக்கின்றோம். அந்தப் பொருள்களைக் காணுந்தோறும் அப்பொருளுக்குடையவர்களின் ஞாபகம் நமது நினைவிற்கு வந்து சில தருணங்களில் அவர்களின் ரூபத்தையும் நமது மனக்கண்களால் காண நேரிடுகின்றது. இதனால் நாம் அறிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால் அவர்களின் சாயை, அவர்களுடைய வஸ்துக்களிலும் பிரதிபலித்து அதனால் ஏற்படுகிற வசீகரமானது அவ்வஸ்துக்களிலும் படிந்து அவர்களின் நினைவை நமக்கு உண்டாக்குகிறதென்பதுதான்.

இராமேஸ்வரம் கோயிலைப் புதுப்பிக்க நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் முயன்றகாலை பொது ஜனங்கள் அதை எதிர்த்து வெகுதூரம் போராடி நிற்கவில்லையா? ஏன் இப்படி எதிர்க்க வேண்டும்? கிலமானதைப் புதுப்பிப்பதில் என்ன பிசகு? இதன்



உண்மையை நாம் தீர விசாரிக்கப்போனால், மகா ஞானிகளால் எண்ணற்றகாலத்துக்கு முன்பாக எழுப்பப்பட்ட ஆலயங்களில் உபயோகமற்ற கற்கள் முதற்கொண்டு ஆலய முழுமையும் அந்த ஞானிகளின் சாயை சூழ்ந்துகொண்டு, அவர்களிடம் தோன்றிய வசீகர சக்தியைத் தன்னுள் கிரகித்துக்கொண்டு நிற்றலால், அவ்வசீகர சக்தியில் லயப்பட்ட மகாஜனங்கள் அந்தப் பழைய அலங்கார சோபிதம் மாறுவதைக் காண மனது பொறாதவர்களாகிறார்கள். அதற்கு விக்கினம் நேரினும் சகிக்கலாற்றாது தவிக்கிறார்கள்.

இவைகளெல்லாம் வசீகர சக்தியின் அதிசயங்களை நமக்கு நன்கு தெரிவிப்பனவாகும். ஒரு பெரிய மனிதரை ஒரு புதுக் கட்டடத்துக்கு அஸ்திவாரக்கல் போடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஏன்? இப்பெரிய மனிதரிடத்துத் தோன்றும் வசீகரச் சாயை அவரது ஹஸ்தங்களால் தொடப்பட்டுப் போடப்படுகிற அஸ்திவாரக் கல்லிலும் பிரதிபலித்து அதன் மூலமாக அக்கட்டடத்துக்கு ஒரு வசீகர சக்தி அமையும்படியாகச் செய்துகொள்ளவும், அதனிடத்து பின்னாளில் தோன்றும் இவ்வசீகரத்தினால் ஜனங்கள் அதனிடத்து அபிமானத்தோடு ஐக்கியப்பட்டு நிற்கும்படியாகவும் நேரிடுவதினால் இவ்வழக்கம் ஆசரிக்கப்பட்டு வருகிறது. இராமாநுஜர், சங்கரர், இயேசு, மகம்மது, புத்தர், ராஜா ராம்மோகன்ராய், விவேகாநந்தர் இவர்களெல்லாம் இயற்கையிலேயே ஞானிகளாதலால் உலக முழுமையும் உள்ள ஜனங்கள் யாவரையும் தம்மிடத்தில் தோன்றும் வசீகர சக்தியினால் வெகு சுலபமாகத் தமது வசம் செய்துகொண்டுவிட்டனர். அவர்களின் மதஸ்தாபனமும் ஆழமாய் வேரூன்றி வியாபிக்கலானது.

பாரத யுத்தத்திலே கர்ணன் துரியோதனன் முதலியவர்கள் அர்ச்சுனனைச் சம்ஹாரிக்கத் தங்களால் இயலாததற்கு கிருஷ்ணபகவான் அருச்சுனனுக்கருகிலேயே இருப்பதுதான் காரணமென்றனர். அவர்மட்டும் அரைநிமிஷம் அப்படிச் சற்று விலகியிருந்தால் உடனே அர்ச்சுனனது சிரம் நிலத்தில் புரளச் செய்துவிடுவோம் என்றனர். இதையறிந்த கிருஷ்ணபகவான் நல்லயுத்த சமயத்தில் ரதத்தில் கட்டிய குதிரைகளை அவிழ்த்துக் கொண்டு

அவைகளுக்கு ஜலம் காட்டச் சென்றுவிட்டார். அருச்சுனன் தனியே நிற்பதைக் கண்டு கர்ணன் துரியோதனன் முதலானோர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். ஆயினுமென்ன? திடீரென்று அவர்களிடம் ஒரு மாறுதல் காணப்பட்டது. வந்த காரியத்தை மறந்து பரஸ்பரம் தங்கள் கௌரவப் பிரதாபங்களை வாயாரச் சொல்லியும் ஒருவரையொருவர் புகழ்ந்துகொண்டும் சல்லாபித்து நின்றனர். வெகு நேரத்திற்குப்பால் கிருஷ்ணபகவான் குதிரைகளுடன் அருச்சுனன் பக்கம் நெருங்கினார். உடனே அவ்வக்களை ரதத்தில் பூட்டி அருச்சுனன் சரமாரியாக அஸ்திரங்களைப் பிரயோகம் செய்தான். இப்போதுதான் துரியோதனாதியர்க்கு விழிப்புவந்தது. ஐயோ! வந்த காரியத்தை மறந்து என்னென்னவோ கதைகளையெல்லாம் பேசிக் கொண்டிருந்தோமே என்று ஓட்டமெடுத்தனர். இவ்விடத்திலே வசிகர சக்தியின் சாதனத்தைப் பார்த்தீர்களா? கிருஷ்ணபகவான் அருச்சுனனுக்கருகில் இல்லாதிருந்தும், அவனுக்கு துரியோதனாதியோர் தீங்கு சூழாதவாறு அவர்கள் ஒவ்வொருவருடைய மனத்தையும் தம்முடைய வசீகர சக்தியினால் தம்மிடம் இழுத்துக்கொண்டு அவர்கள் வந்த காரியத்தை மறந்து போகும்படி செய்துவிட்டார். மெஸ்மரிஸ் ஜால வித்தைகள் செய்வோரும் இப்படியே எதிரியின் நினைவைத் தடுமாறச் செய்து மறக்கவைத்து விடுகின்றனர். கடைசியாக இந்த உலகம் நிலை நிற்பதும் வசீகர சக்தியினால்தான். பாஷையினிடத்தும் வசீகர ஜோதி பாய்கின்றது. ஒரே பாஷையைப் பேசுவோர் பெரும்பாலும் ஒன்றுபட்டிருப்பதற்குக் கூட அப்பாஷா வசீகரமே காரணம். இவ்வித வசீகர சக்தி தெய்வ பக்தியுடையாரிடத்தில்தான் விசேடமாக விருத்திபெற்று விளங்குகிறது. இவ்வசீகர சக்தி செயற்கையில் அடையப் பெறுவதற்கு ஒரு பயிற்சிச் சாலை அமெரிக்காவிலே இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. பிராசீன காலத்தில் பிரபலமாயிருந்து காலபேதத்தால் அழிந்துபோன இந்தியக்கலை ஞானங்களிலே இவ்வசீகர சக்தியும் ஒன்றென்ப.

---

105





## 3. நம்பிக்கையின் அற்புதச் செயல்கள்.

—:0:—

நாம் வசிக்கும் பரதகண்டமே ஞானத்துக்கிருப்பிடம். இங்கிருந்துதான் பிற தேசத்தார்கள் ஞானம் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கைப்பற்றிச் சென்றார்கள். மகரிஷிகள் அலைந்து திரிந்த இடம் இவ்விந்தியாதான். ஆத்மவிசாரணை இத்தேசத்தில் தான் முதல் முதல் உண்டாயிற்று. ஆத்மாவுக்கு அழிவில்லை என்பதும் ஸர்வேசுரன் ஒருவர் இருக்கிறார் என்பதும் இவ்விந்தியாவில்தான் ஆரம்பத்தில் தெரியவந்தது. நமது தேசத்திலிருந்துதான் தத்வசாஸ்திரமும் வேதாந்தமும் பிரபஞ்சங்களில் பரவியது.

கவிதையிலே இந்நாடு எய்தப்பெற்றிருந்த உயர்வு சொல்லுந்தரமன்று. தர்மசாஸ்திரத்திலே பாரதவாசிகள் அடைந்திருக்கும் சிரேஷ்டதரமான நிலைமையைப்போல இன்றுவரை உலகத்தில் யாரும் அடையவில்லை. கணிதசாஸ்திரம் இவ்விடத்தில் தான் முதலில் விஸ்தாரமாகவும், நாகரீகத்துடனும் அமைக்கப்பட்டது. புராதன கிரேக்க நகரத்திலும், ரோமநாட்டிலும், கணக்கு ஒரு சாஸ்திரமாகவே கருதப்படவில்லை. 365 என்று எழுதவேண்டுமானால் நூறு, நூறு, நூறு; ஐம்பது, பத்து; ஐந்து என்று எழுதுவார்கள். ஒன்று ஸ்தானத்திலே 5 போட்டு பத்து ஸ்தானத்திலே 6 போ

ட்டு நூறு ஸ்தானத்திலே 3 போட்டால் முந்நூற்றறுபத்தைந்தாக வாசிக்
கலாமென்ற ஏற்பாடு நாம் தான் முதலிலே கண்டுபிடித்தோம். இதனால்
கோடி, சதகோடி வரை நாம் மடமடவென்று தொகைகளை எளிதாக எழு
திக்கொண்டு போக இயன்றது. புராதன ரோம கிரேக்கர்களைப்போலச்
சங்கடப்படவேண்டிய அவசியமில்லாது போயிற்று. இதனின்றும் நமது
கணக்கு நூல் மேன்மேலும் அபிவிர்த்தி பெற்று ஓங்குவதாயிற்று. அரா
பியர்கள் இந்நாட்டிலிருந்து கணக்கு நூல்பயின்று கொண்டுபோய் ஐரோப்பி
நாட்டிலே சுமார் பதினொன்றாம் நூற்றாண்டிலே பரவச்செய்தார்கள். அதன்
பிறகுதான் உலக முழுமைக்கும் கணக்கு நூல் என ஒரு சாஸ்திரம் தெரி
யத்தொடங்கிற்று.

முன்னிருந்த பெருமையையிப்போது சொல்வதால் என்னபயன்
என்பார்கள் சிலர். அப்படிச்சொல்வது முற்றிலும் பிசகு. முன்னிருந்த காரி
யங்களை ஆராய்ந்து தான் பின்னால் ஆகவேண்டிய காரியங்களைச் செய்ய
வேண்டும். அஸ்திவாரத்தைப் பார்த்துத்தான் வீடு கட்டவேண்டும். ஊற்
றத்தைப் பார்த்துத்தான் வாய்க்கால் வெட்டவேண்டும். நம்முடைய முன்
னோர்கள் மகான்கள் என்பதை நாம் முதலில் அறியவேண்டும். நம்முடைய
ரத்தம் யாரிடமிருந்துண்டாயிற்று? அதற்கு அப்போதிருந்த சக்தி என்ன?
என்பதைத்தெரிந்துகொண்டு, அதற்கு இன்னும் அதிக சக்தி உண்டாகு
ம்படி நாம் முயலவேண்டும். பூர்வீக மகரிஷிகளிடம் இயற்கையாகவே வசீ
கர ஜோதி பிரதிபலித்துக்கொண்டிருந்ததென்பதை முன்னொரு அத்தி
யாயத்தில் தெரிவித்திருக்கிறோம். நாம் அந்த சக்தியை இப்போது இழந்து
விட்டோம். வசீகர ஜோதி நம்மினின்றும் பிரிந்து போய் விட்டதால் நம
து செயல்கள் ஒன்றும் கைகூடிவரவில்லை: ஆனாலென்ன? பெரிய விருக்ஷம்
பழுத்துப் பழம் உதிர்ந்து கீழே விழுந்து காய்ந்து உலர்ந்து மறுபடியும்
அதன் விதைகளிலிருந்து இன்னும் பெரிய அநேக விருக்ஷங்கள் உண்டா
கின்றனபோல் கஷ்டங்களிலிருந்துதான் ஸௌக்கியங்களுண்டாகின்றன. மேற்
கூறிய உதாரணத்தால் ஆதியில் நமது வேதாந்தங்களில் நம்மவர்களுக்கு
இருந்த பற்று நடுவில் சிற்சில காரணங்களால் குறைந்திருந்தாலும் இனி முன்
னிருந்ததைவிட அதிகமான பற்று உண்டாகும் காலம் ஸமீபித்திருக்கிற
தென்று அறிகிறோம். வேதாந்தமாகிய மகாவிருக்ஷத்தின் ஊர்த்துவமூ
லம் இப்போதே உண்டாயிருக்கிறது. இதை வாஸ்தவமென்று அறிய விரு
ம்பினால் மனோதத்துவ சாஸ்திரவிசாரம் ஜனங்களுக்கு உண்டாயிருப்பதை
ஒரு உதாரணமாகப் பாராட்டலாம். எப்போது ஒருவன் துணிகிறேன்
என்று துணிந்து ஒரு காரியத்தில் தனது கவனத்தைச் செலுத்துகிறானே
அப்போது அவன் அதில் சித்திகொள்ளத்தடையென்ன? நம்முடைய ரத்
தம் மகான்களுடையதென்பதையும், நாம் அம்மகரிஷிகளின் ஸந்ததியார்



தான் என்பதையும் நன்றாக உணர்கிறோமானதால் மனோதத்துவ சாஸ்திர
உண்மைகளை நாம் சுலபமாகவே ஸ்வீகரித்துக்கொண்டுவிடலாமென்றும்,
அவற்றை எளிதில் அப்பியஸித்து சித்தியடைதல் வெகு சுலபசாத்தியமென்
றும் நாம் நம்பிக்கொள்ளவேண்டும். நம்பிக்கை தான் முக்கியம். நம்பி
க்கை தான் ஒருவனை ஈடேற்றுவிக்கின்றது. நம்பிக்கையின் விசித்திரச்
செயல்களைப்பற்றி 1888-ம் வருஷம் ஆகஸ்டு மாஸத்திய ஜனவிநோதினிப்
பத்திரிகையிலே திவான் பகதூர் கிருஷ்ணமாசாரியார் அவர்கள் அக்காலத்
தில் நடந்தேறிய ஸமீப ஸம்பவங்களை ஒரு உதாரணமாகக் குறிப்பிட்டுக்
காட்டியிருக்கின்றார். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

1. இது இங்கிலாந்தில் நடந்தது. "பாஷாணம் ஜாக்கிரதை"
என்ற ஒரு கடிதத்துண்டை சீசாவில் ஒட்டி அதில் வெளிக்குத்தடவுகிற
மருந்தும், உள்ளுக்கு சாப்பிட வேறொரு புட்டியில் மருந்தும் ஒரு துரை
சானிக்குக் கொடுக்கப்பட்டது. அவள் அதை அருந்தி வருகையில் அவ
ளுடைய மைத்துனன் ஒருவன் பரிஹாஸார்த்தமாக "பாஷாணம் ஜாக்
கிரதை" என்று ஒட்டப்பட்டிருந்த கடிதத்துண்டை எடுத்து பாஷாண
மல்லாத உள்ளுக்குக்கொள்கிற அவிழ்தமுள்ள புட்டியின் மீது ஒட்டிவிட்
டான். ஆனால் புட்டிகள் இடமாறவில்லை. வழக்கப்படி துரைசானி இ
டத்தின் நிதானத்தால் பாஷாண மருந்தை வெளிக்குத் தடவியும், உட்
கொள்ளவேண்டிய அவிழ்தத்தை உட்கொண்டும் ஆனபிறகு சில நிமிஷங்
களுக்கப்பால் மீண்டும் அவ்விடம் வர அப்போதுதான் அவளது கண்கள்
கடிதம் மாற்றப் பட்டிருப்பதைக் கவனிக்கலானது. உடனே ஐயோ
பாஷாணம் சாப்பிட்டுவிட்டேனே என்று கலங்கினாள். மூர்ச்சையா
னாள். பிறகு மைத்துனன் உண்மை கூறியும், நிகழ்ந்தன தெரிவித்தும்
அவளுடைய மனோவிருத்தியும் தப்பெண்ணமும் கொஞ்சங் கொஞ்சமாக மாறி
ஒருவாறாக அவள் குணப்படுவதற்கு நாலைந்து தினமாயின.

2. இது பிரான்ஸ் தேசத்தில் நடந்தது. மனோதத்துவசாஸ்திர உண்
மைகள் சிலவற்றைக் கண்டறிய விரும்பிய பிரபல வைத்தியரொருவர் சக்
கிரவர்த்தியின் அநுமதி பெற்று, மரணசிக்ஷை விதிக்கப்பட்ட ஒரு குற்ற
வாளியைச் சந்தித்தார். அவனை நோக்கி அப்பா, வெகு சுலபமாக நீ மரிக்
கும்படி செய்கிறேன். முகத்தில் ஒரு குல்லா போட்டு மூடி விடுவோம்.
ஓர் வகை ஊசியைக்கொண்டு உன் தேகத்தில் குத்தி அதிலிருந்து ரத்
தத்தை இன்னொரு பாத்திரத்தில் வடித்துக்கொள்வோம். முதலில் ரத்தம்
அதிகம் வரும்; பின் வரவரக் குறைந்து நின்றுவிடும். உடனே நீ இறப்
பாய் என்றார். அதற்கு அவன் இணங்கினதாக, அப்படியே குல்லாவை
அணிவித்து அவன் முகத்தை மூடிவிட்டனர். ஓர் ஊசியால் கொஞ்சம் கீற
ப்பட்டது. ஒரு புட்டியிலிருந்து இன்னொரு புட்டிக்கு ஜலத்தை அதிகவே
கமாகவும், பிறகு சிறிது சிறிதாகச் சத்தத்தைக் குறைத்தும் கடைசியில்

கொஞ்சமாகவும் ஊற்றி வந்து அப்பால் நிறுத்திவிட்டார்கள். ஜலம்விழும் சப்தம் நின்றதும் குற்றவாளி தனக்கு மரணவேளை வந்துவிட்டதென்று நம்பிக்கொண்டானதால் அலறி விழுந்து பிராணமூர்ச்சையடைந்து மரணபுரம் சேர்ந்தான்.

3. இது திரிசிரபுரத்தையடுத்த ஒரு கிராமத்தில் நிகழ்ந்தது. அங்கோர் ஆலமரத்தில் பேய் இருப்பதாகப் பெரும் வதந்தி. அதை மறுத்து ஒருவன் தான் இரவு 12 மணிக்கு அம்மரத்தில் ஆணியடித்துவிட்டு வருவதாக வீரம் கூறி அவ்வாறே சென்று மரத்திலேறி ஆணியும் அடித்தான். ஆனால் அவசரத்தில் தன் சொக்காயையும் சேர்த்து அடித்துவிட்டானாக; பிறகு திரும்பும்போது சொக்காய் இழுப்பது கண்டு பேய்தான் இழுக்கிறதென்று நம்பி அலறினான். அந்த நம்பிக்கையே அவனைக் கொன்றுவிட்டது. அவனும் பிணமாய்த் தொங்கலானான்.

4. அதிகாலையில் வெற்றிலை பறிக்கச்சென்ற ஒருவனை, நாகஸர்ப்பமொன்று தீண்டிற்று. ஏதோ கடித்ததென்று இருந்துவிட்டான். பிறகு மாலையில் மீண்டும் வெற்றிலைக்காக அங்கு செல்லவும் ஸர்ப்பத்தைக்காணவுமாகி காலையில் கடித்தது அதுதானே என எண்ணினான்; நம்பினான். உடனே விஷக்குறிகள் தோன்றி விஷம் சிரசுக்கேறி தேகவியோகமானான்.

5. மனோசக்தியினாலும் நம்பிக்கையினாலும் விளையத்தக்க விசித்திரங்களை அறிய ஐரோப்பாவில் மற்றொரு தேசத்திலே நாலைந்து கனவான்கள் அவாக்கொண்டு நல்ல தேகாரோக்கியஸ்திதியிலிருந்த ஒருவனைப் பார்த்து அப்பா, ஐயையோ! நீ என்ன அதிகமாய்த் தேகம் மெலிந்து போயிருக்கிறாய். வெகு சீக்கிரத்தில் நீ இறந்துபோவாய் போல்தோன்றுகின்றதே என்று ஒரு கட்டுப்பாடாய் அடிக்கடி சொல்லிக்கொண்டே வந்தார்கள். இவர்கள் இந்தப்படி கூறிக்கொண்டு வருந்தோறும் தேகாரோக்கியஸ்திதியிலிருந்த அவனும் நாளாவர்த்தியில் பற்பல வியாதிகளினால் மெலிந்து நிலையடைந்து இறுதியில் இறந்தும் போயினன்.

மெஸ்மரிஸம் என்பது என்ன? அதாவது ஒருவனைத் தூக்காமல் தூங்கவைக்கும் நிலைமைக்குக்கொண்டுவருதல், இவ்வித மெஸ்மர் சரியைகளை அநேகர் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். மெஸ்மரிப்பவனது மனோபலத்தினாலும், மெஸ்மெரிக்கப்படுபவனது மனம் ஒட்டாதிருந்தாலும், மெஸ்மரிப்பவனைத்தானக்காண, அவன் கண்கள் களைத்துமூடுண்டு போகிறதாம் முதலில் நித்திராவஸ்தைக்கும் பிறகு ஸ்வப்னாவஸ்தைக்கும் வழியேற்படுவதாகக் காணப்படுகின்றது. மெஸ்மரிக்கப்படுபவன் அதிகமான மனோபல முள்ளவனானபொழுதும், அவன் அந்த மெஸ்மரிஸத்தை நம்பாமலும்



தன் மனத்தை அதற்கு உட்படுத்தாமலும் மெஸ்மராவஸ்தையைத் திக்கரித்து இருக்கையிலும் நித்திரை மயக்கம் உண்டாகமாட்டாது. ஆகவே நம்பிக்கையின் பலம் தான் எல்லாவற்றுக்கும் ஆதிகாரணமென்பது இப்போது நன்றாக விளங்கக் காணலாம். நம்பிக்கெட்டவரில்லை. யாரை? கடவுளையும் சான்றோர்களையுமென்க. அவ்வாறின்றி செத்துப்பிறக்கும் சிறு மானிடரை நம்பி இலவுகாத்த கிளிபோலாவதை இவ்விடம் விவரிக்க வரவில்லை. எனவே திட்டமான நம்பிக்கை பாராட்டுங்கள். நம்பினால் வம்பில்லை. நம்பிக்கை உயர்வளிக்கும். முத்தியளிக்கும். சகலமுந்தரும். அவநம்பிக்கைப்படுவோர் குரு உபதேசத்திற்கு யோக்யரன்று. சர்க்கரை என்று தெரியக்காட்டியும் அவநம்பிக்கையில் வீழ்வாருக்கு அது அவர் மனப்படி பாஷாணமாகவே பிரதிபலித்து அவ்விஷத்துக்குரிய சேஷ்டைகளை எல்லாம் விளைத்துவிக்கும். மனித சரீரம் மகா உன்னதமானது. அதற்கிருக்கிற பெருமையைப்பற்றி அவநம்பிக்கை பாராட்டுவோன் அபிவிர்த்தியை இழந்தவனாகிறான்.

மனிதனே ஸகல பிராணிகளுக்கும் மேலானவன். மனுஷ்ய சரீரமே எல்லா சரீரங்களுக்கும் மேலானது. தேவதைகள் மோக்ஷமடையவேண்டுமானாலும் மனிதர்களாய்ப் பிறந்தே தீரவேண்டும். தமோகுணத்திலிருந்து ஸகல பிராணிகளும் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் அவைகள் நீசமானவை. மிருகங்களுக்கு ஞானசக்தி கிடையாது. தேவர்கள் ஞானமடைய வேண்டுமானால் பூலோகத்திற் பிறக்கவேண்டும். மனுஷ்ய ஜென்மமொன்றினால்தான் முக்தி யடையக்கூடும். தன்னையறிந்தவன் தலைவனாவான். என்னை யான் நன்றாக அறிகின்றேன்; இதோ துணிகின்றேன்.

இராமாயணத்திலே ஒரு விஷயம் குறிப்பிடுகிறோம். அநுமார் ஸமுத்திரத்தைக்கண்டு பிரமித்துத் தன்னால் சமுத்திரம் கடப்பது கூடாமையென்றார். பிறகு அவரால் கூடுமென்று விளக்கி, அவரது சக்தியை விவரித்துக் காட்டியவுடனே முன்கொண்ட அவநம்பிக்கையை யகற்றி ஸாகரம் தாண்டல் சுலபவிஷயமென்று நம்புவாராயினர். தாண்டவும் போயினர். இலங்காபுரமும்சேர்ந்தார். அவரது சக்தியை அவர் அறிந்து அதில் நம்பிக்கைகொண்டுவிட்டாரானதால் இலங்கையிலிருந்து திரும்பும்போது பிறருடைய தூண்டுதலின்றி தானே கடல் தாண்டி வந்து சேர்ந்தார். நம்பிக்கையின்மை என்கிற வித்தினின்றும் ஸந்தேகம் என்கிற விருக்ஷம் உற்பவித்து, பிறவிப் பிணியும் அதைச் சம்பந்தித்த பலவும், அதன் காய் கனிகளாக மாறி அல்லலை விளைக்கின்றது.

## 4. மனோபலம்.

நம்பிக்கையின் அவசியத்தைப்பற்றி மேலேசொன்னோம். இப்போது நம்பிக்கையுடன் மனோபலமும் வேண்டுமென்கிறோம். மனோபலத்தினால் மகா அற்புதகரமான காரியங்களநேகத்தைச்செய்யலாம். ஜனவசிய மிருகவசியங்களுக்கும், செய்ய சாத்தியப்படாக் காரியங்களைச் செய்வதற்கும் இதுவே முக்கியமான கருவியாயிருக்கிறது. அங்கிலேயபாஷையில் மெஸ்மரிஸம் என்று சொல்லப்படும் சக்திக்கு மனோபலமே மூலசாதனம். சிருஷ்டி மர்மங்களெல்லாவற்றிலும் மிகவும் இரகசியமானவை மனோமர்மங்கள். பஞ்சபூதங்களினாலாக்கப்பட்ட இம்மானவ சரீரத்தினுள் ஏதோ ஒரு சக்தி குடிகொண்டிருந்து, மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளினால் வெளியுலகத்து ஞானத்தைக் கிரகித்து, புத்திக்கும் சுகதுக்கமுதலியவற்றிற்கும் இருப்பிடமாய், காரியகாரணத்துக்கு மூலமாயிருப்பதாகப் பிரதிபிம்பமும் நமக்குப் புலப்படுகின்றது. இவ்விசித்திர சக்தி மனம் என்று சொல்லப்படுகின்றது. மனத்தின் மகிமை யநேகவிதங்களாய் இருக்கின்றன. இம்மனத்தை அடக்கியாண்டு நமது வசப்படுத்திக்கொண்டு விடவேண்டும். 1. தனக்கு வசப்பட்ட மனது, 2. உறுதியுள்ள நம்பிக்கை இவையிரண்டும் மானஸ சாஸ்திரீயமான பயிற்சிக்கு பிரதான்யமானவை.

---

## 5. சுவாசபந்தனமும் சரீராப்பியாஸமும்.

மனத்தை யடக்கியாளும் மகிமைத்தன்மை இம்மகிதலத்தில் எவருக்கும் நன்றுதலருமை. புகா மனோவைராக்கியசீலரான விசுவாமித்திரரே தமது மனத்தையடக்க வசமற்று போயினரெனின் அதன் திறமை சொல்லற்பாலதோ? மனத்தின் செயல்களை உன்னியே அதைக் குரங்குக்கு ஒப்பிடுவாராயினர். அப்பப்பா! மனிதர்களுடைய வாழ்நாளில் இந்தமனம் நடத்தாத குரங்கு சேஷ்டைகள் கூறுந்தகைமைத்தோ? அத்தகைச்சிறப்பு நலம் புனைந்த இம்மனமானது ஸ்வாஸபந்தனத்தால் வசப்பட்டுப்போய்விடுகின்றது. ஒரு தினத்திற்கு 21-ஆயிரத்து 600 சுவாசம் பாய்கின்றது. இதை வாசி யோகத்தால் நாளாவட்டத்தில் குறைத்துக்கொண்டே வந்து கும்-



பித்து உள்ளே பூரித்துவிட்டால் அதனால் ஐம்புலனடங்க மனதும் வசப்பட்டுப் போகின்றது. இது கருதியே குந்தினையா குரங்கே உன் சந்தடி யடங்க என்று பழமொழி யுண்டாயிருக்கின்றது. அதாவது அக்காலை மனமானது தன் சேஷ்டைச் செயல்கள் யாவுமற்று ஒரு நிலைப்பட்டு அடங்கிப்போய் விடுகின்றது.

இப்படிச் சுவாஸபந்தனம் செய்தற்கு சரீரப்பயிற்சி பிரதான்யமானது. சரீரப்பயிற்சியில் லயப்பட்ட மனதானது அந்த ஸந்தர்ப்பத்தில் மிகவும் அடங்கிக்காட்டுகின்றது. ஒரு மலை மீதேறும் பொழுதேனும், அதிவேகமாக ஓடும்பொழுதேனும் சுவாசம் அதிகமாகப் பாயாமல் கொஞ்சங்கொஞ்சமாக அடங்கிக் காட்டிக்கொண்டே பெருமூச்சாக இருந்திருந்து பாய்கிறது. தூக்கமாட்டாத பாரம் ஒன்றை மூச்சுப்பிடித்துத்தூக்கு என்கிறான். அப்போதென்ன தெரிகிறது? மூச்சைப்பிடிக்க முயலுகிறபோது மனோ சக்தி வெளிப்பட்டு அந்த சக்திபலத்தால் அந்த பாரத்தைத் தாங்கிக்கொள்ள வல்லவனாகின்றான். சரீராப்பியாசத்தினால் தேகத்துக்குப் போதுமான சக்தியை யுண்டாக்கிக் கொள்ளவேண்டும். உனது தேகம் உனக்கு ஒரு சுமையாகத்தோன்றும்படி நீ பழக்கப்படுத்தாதே. எவ்வளவு தூரம் அதை இலகுவாக்கிக்கொள்ள ஸாத்தியமோ அவ்வளவுக்கும் நீ முயற்சி செய். ஒரு மரத்தின் மீது நீ ஏறுகிறாய். ஆயினும் உன்னால் ஏறமுடிகிறதில்லை. ஏன்? உன் கைகள் உனது தேகபாரத்தைத் தாங்க சக்தியற்றதாயிருப்பதாக உனக்குத்தோன்றுகின்றது. அதிக கனதியான சரீரத்தைத் தூக்கிக்கொண்டு மரமேற உன்னால் கூடாமற் போகிறதாக நீ நம்புகிறாய். ஒருபிடிவாதமாக சாதிக்க முயன்றாலும் அதிகமான பெருமூச்சு உண்டாகி உன்னைக் களைப்பின் பள்ளத்தில் தள்ளிவிடுகிறது. இப்படியே விரைந்து ஓட முயலும்போதும் அதிக சிரமம் சம்பவிப்பதாக உனக்குத் தோன்றுகிறது. உனது தேகம் உனக்குக் கனதியாகக் காணப்படுகிறது. இது ஒருவிதமான ரோகம் என்றே பேசவேண்டும். இதற்கு மீட்சி மார்க்கம் உனக்குத் தேவையா? அதை ஆசையுடன் பெற்றுக்கொள்ள நீ விரும்புகிறாயா? ஆம், என்றால் பின் வருவனவற்றை நன்றாகப்படி.

உபவாசம் என்ற பதத்துக்கு (சர்வேஸ்வரனுடைய) சமீபத்தில் வசித்தல் என்று பொருளாகும். (உப-சமீபத்தில், வாசம்-வசித்தல்.) இத்திவ்ய உபவாசமானது உள்ளன்பும், மெய்ச்சிரத்தையும் விசுவாசமும் நாளடைவிற்குறைந்து கடமைக்காக நிறைவேற்றுகிற ஒரு வெளிச்சடங்காசாரமாய் மாறி நடைபெற்று வருகிறது. காலைமுதல் மத்தியானமட்டும் ஒருவேளை புசியாதிருந்து, மத்தியானத்தில் சட்டரஸபதார்த்தங்களுடன் சம்பிரமமாய் உண்டு, அந்தியில் பலவித பலகார பக்ஷணங்களையும் காப்பி, டீ (Tea) முதலியபானங்களையும் அருந்தி உறங்குவதுதானு உபவாசம்? ஆகார விஷயத்தில்மட்டும் சிறிது பேதஞ்செய்துகொண்டு மற்றை நாட்களைப்போலவே உபவாச நாட்களிலும் வம்பு வழக்கு பேசிக்கழிக்கின்றனர். உபவாசம் ஏன் ஏற்பட்டது? கொழுக்கட்டை வடை சுண்டலுக்காகவா? அல்ல; இரத்தத் திமிரைச் சிறிது குறைத்து, மனத்திலெழும்பும் துர்எண்ணங்களையடக்கி, ஸத்கருமாநுஷ்டானங்களில் மனோதத்துவங்களை உபயோகிப்பதற்கல்லவோ உபவாசம் ஏற்பாடாயினது? குளிக்கப்போய் இங்ஙனம் சேற்றைப் பூசிக்கொள்வது மானுஷீகரீதியாகுமா ?

---

## 7. பக்தி ஸாதனம்.

எப்போதும் சித்தசுத்தி முக்கியம். ஸத்ஸங்கம் நல்ல சகவாஸம் அவசியம். மூன்று வேளைகளிலும் கடவுளை வழிபாடு செய். வமிச விருத்தியின் நிமித்தம் பிரவர்த்திக்கிற காரியத்தை ஒரு புண்ணியச் செயலாகப் பாவித்துக்கொள். ஈஸ்வரபக்தியுடன் அந்த விஷயத்தை முடித்துக்கொள். அதனால் சிரேஷ்டதரமான ஸந்தானங்கள் வாய்க்கப்பெற்று நல்லகதி சேர்வாய். பக்தியின் மகிமை பகருவதருமை: பகவானிடம் நாம் கொள்ளும் பரமப்பிரீதியே பக்தி யெனப்படுகிறது. ஆனால் உலக ஆசையிருக்குமளவும் உண்மையான பக்தி யுண்டாகமாட்டாது. ஆனதால் ஸர்வமும் ஈஸ்வரார்ப்பணம் செய்துவிடு என்று பெரியோர்கள் கூறுகின்றனர்.



இவ்வித நிஷ்டையில்லாவிட்டால் உண்மையான பக்தி உண்டாகமாட்டாது. மூடர்கள் சிற்றின்பங்களில் வைக்கும் அழிவற்ற ஆசையை ஹேபகவானே! நான் உம்மிடம் வைக்கும்படி நீர் கிருபை செய்யும் என்று பிரஹலாதர் சொல்லுகிறார். பகவானே சொல்லுகிறார்:— எவர்கள் என்னை எப்போதும் பக்தியுடன் உபாஸிக்கிறார்களோ அவர்கள் என்னையடையும் மார்க்கத்தை நானே காட்டுகிறேன் என்கிறார்.

இந்திரிய நிக்கிரகம் செய்வதவசியம். இந்திரிய சேஷ்டைமட்டுக்கு மிஞ்சியிருப்பவர்கள் பக்தர்களாயிருப்பதருமை. மனோற்சாகமுடையவர்களே பக்தி செய்யக்கூடும். பலமான ஹிருதயமுடையவர்கள் அஸாத்தியமான காரியங்களையும் செய்து முடிப்பார்கள். வைரத்தைப்போன்ற மனதையுடையவர்களே மாயையைக் கடந்துசெல்வர். உலகத்தாரை நேசிக்கிறேன்; உலகத்துக்கு நன்மை செய்கிறேன் என்று சும்மா சொல்லிவிட்டால் முடியுமா? பகவானை நேசித்தாலன்றி உலகத்தை நேசித்ததாக ஏற்படாது. பகவானை விசுவாஸித்தால் அவருக்குச் சொந்தமாகிய உலகத்தையும் நேசித்ததாக முடியும்.

முதலில் உன் மனதைப் பக்தியில் திருப்பு. அதில் உன் மனதைப் பழக விடு. அடிக்கடி அமைதி நிலையிலிருக்கப் பழகு. இடைவிடாத அப்பியாஸத்தாலன்றி வேறெவ்வகையாலும் இந்நிலைமையை யடைய முடியாது. உனக்காக ஒரு பிரத்தியேகமான இடத்தைத் தெரிந்துகொள்ளும்படி மேலே சொல்லப்பட்டதல்லவா. அந்த இடத்திலே அதிகாலையில் நான்கு மணிக்குப் போய்ச் சேர். இதற்கு முன்னதாகவே ஸ்நானம் முதலியன முடித்திருக்கவேண்டும். நன்றாக வைராக்கியமாக உட்கார். "துணிகின்றேன்" என்ற மந்திரத்தை ஐந்து தடவை சொல். உன் மனதைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தித் தூண்டிவிடு. பிறகு உன் இஷ்டதெய்வ நாமத்தை மனதில் நினைத்துக்கொண்டு ஒவ்வொரு தடவையும் நகக்கண்களைப் பார்த்தபடியே கைவிரலை விட்டு எண்ணிக்கொண்டுவா. 108 ஆனவுடன் அமைதியாக இரு. அப்பால் மறுபடியும் தொடங்கிக்கொள். இப்போது மனதின் செயல் உனக்கு நன்குவிளங்கும். அது பல இடங்களில் ஓடிப்போகக் காண்பாய்.

சலியாது பிடித்து உன் வசப்படுத்த முயலவேண்டும். இதில் நீ தளர்ச்சி காட்டாதே. உனக்கு எதிரி யார்? உன் மனந்தான். அதையடக்கப்பார். 108 தடவை ஆனாலும் மறுபடியும் 108 தடவை தியானிக்கத்தொடங்கு.

---

## 8. தியானம் என்பது என்ன?

புருஷனைப்பிரிந்த ஸ்திரீ தன் தோழிகள் பேசும்போது மனதைப் புருஷனிடமும், சரீரத்தைத் தோழிகளிடமும் வைப்பதுபோல் பகவானைப்பிரிந்த பக்தர்கள் சரீரத்தை உலக வியவகாரங்களிலும், அந்தக் கரணத்தை ஈஸ்வரனது பாதாரவிந்தங்களிலும் வைப்பர். பக்தியை ஸம்பாதிப்பது கஷ்டமேயன்றி, அது கிடைத்துவிட்டால் அதைவிட வேறு ஆநந்தமொன்றுண்டோ? இதற்கு வேறு உதாரணம் வேண்டாம். புருஷனிடம் உண்மையான பிரீதியுள்ள ஸ்திரீ அவனுடைய ரூபத்தையே தன் மனதிற்கொண்டு அவனுடைய ஸம்பாஷணைகளையே அடிக்கடி ஞாபகத்தில் வைத்து ஆநந்தப்படுகிறாள். அதுவே போதுமானது. எத்தனையோ நாட்களுக்குமுன் ஒருவர் வீட்டில் உண்ட பக்ஷணத்தை நினைத்து நாக்கில் ஜலமூறுவது வழக்கமன்றோ? அநேக நூற்றாண்டுகட்குமுன் ஸாக்ரடிஸ் என்ற தத்துவசாஸ்திரி பேசிய பேச்சுகளை இப்போதும் கேட்டு ஆநந்தப்படுகிறோமல்லவா? கம்பன் கவி எத்தனை இன்பம் விளைவிக்கின்றது? இவ்வற்ப காரியங்களைத் தியானிப்பதாலேயே ஒருவித ஆனந்தம் ஜனிப்பது உண்மையாயின் பரமானந்த மூர்த்தியாகிய பகவானுடைய ஸ்மரணை ஸந்தோஷத்தை விளைக்குமென்பதில் தடையென்ன? தியானம் என்பது ஓர் பாத்திரத்திலிருக்கும் எண்ணெயை மற்றொரு பாத்திரத்திலூற்றும்போது, இடைவிடாமல் சேர்ந்தபடியாய் விழுவதைப்போல், குறித்த ஒரு பொருளைப்பற்றியே நினைவு கொண்டிருப்பதாம். இவ்விதமாகக் கொஞ்சம் பக்குவதிசைக்கு வந்ததின்மேல் கீழ் வருவனவற்றை அப்யஸிக்கவேண்டும்.



## 9. மனோவசிய அப்பியாஸங்கள்.

1. பிரதமத்தில் நாடிகளை சுத்தம் செய்யவேண்டும். வலது மூக்குத் துவாரத்தை பெருவிரலால் அழுத்திக்கொண்டு இடது மூக்கு துவாரத்தின் மூலமாய் காற்றையிழுக்கவேண்டும். பிறகு தக்ஷணமே இடது மூக்குத் துவாரத்தையழுத்தி வலது மூக்கு துவாரத்தின் வழியாய் அக்காற்றை வெளியே தள்ளவேண்டும். மறுபடியும் வலது துவாரத்தின் வழியாய் மூச்சையிழுத்து இடது துவாரத்தின் வழியாய் வெளியே விடவேண்டும். இம்மாதிரி அவரவர் சக்திக்குத் தக்கபடி ஒவ்வொருநாளும் காலை, பகல், அந்தி, அர்த்தராத்திரி முதலிய காலங்களில் மூன்று, நான்கு அல்லது ஐந்து சந்தர்ப்பங்களில் அப்பியாசம் செய்தால் ஒருபக்ஷம் அல்லது ஒரு மாதத்தில் நாடி நரம்புகள் சுத்தப்படும். மற்ற அப்பியாஸங்கட்கும் இது சாதகமாய் இருக்கும். இதை நீடித்து மணிக்கணக்கில் செய்து தேர்ச்சிபெறு.

2. உன் மனதுக்குள் யாதொருவிதமான சிந்தனைகளும் வாராதிருக்கப்பழகு. உன் மனப்பெட்டியை முற்றிலும் காலியாக்கிவிடு. அந்த வெறும் பெட்டியை நன்றாக மூடிவிடு. எண்ணம், யோசனை, முதலிய துஷ்டர்களெல்லாம் ஒருங்குகூடி மூடியிருக்கும் பெட்டியை எவ்விதத்திலேனும் திறக்க முயலுவர். நீ ஏமாந்து போகாதே. மகா ஜாக்கிரதையாய்க் காவல் செய். நிர்மலமாக உன் மனதை வைத்துவிடு. காலையில் நான்கு மணிக்கும், மாலையில் 5 மணிக்கும் இந்தப் பயிற்சியைக் கைக்கொள். முதலில் 5 நிமிஷம் பழகு. கஷ்டமாயிருந்தால் சற்றுப் பொறுத்து செய். இந்த வழக்கத்தை தினத்துக்கு தினம் அதிகப்படுத்து.

3. பூஜார்ஹமான படமொன்றை உன்னெதிரில் வைத்துக்கொள். அதிலே உன் மனத்தையும் கண்ணையும் செலுத்து. அரை மணி நேரம் அப்படியே நில். நாளடைவில் இந்தப் பழக்கத்தின் நேரத்தை அதிகப்படுத்திக்கொள். இதனால் உனக்கு வசீகர திருஷ்டி உண்டாகும். உன் கண்களில் வசீகரந் தோன்றும். அந்த வசீகர காந்திக்கு எவரும் வசப்பட்டுப் போவார். பரம

சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்து எதிரிலிருப்பவர்களை சாம்பராக எரித்துவிடுவதுபோல, நீயும் உன் வசீகர திருஷ்டியால் பிறரை மயங்கச்செய்யலாம்.

4. வெளிக்கண்ணால் படத்தைப் பார்த்ததுபோல அகக்கண் அதாவது மனக்கண்ணாலும் பார்க்க முயல். கண்ணை மூடிக்கொள். நீ பார்த்த படத்தின் உருவம் அகக்கண்ணுக்குத் தோன்றும்படியாகப் பயிற்சிசெய். அகக்கண்களுக்குத் தெரியாவிடில் மறுபடியும் 3-வது அப்பியாசத்தை அநுசரி. எதுவும் ஸாவதானமாகவும் சாந்தமாகவும் பயிற்சி புரி. கடைசியில் உன் மனக்கண்ணால் காணும் சக்தி உனக்குள் தோன்றிவிடும். நினைத்தபோது பார்க்கும்படியாகப் பழகு. இதில் பழகியபிறகு இன்னொரு படத்தை எடுத்துக்கொண்டு 3-வது அப்பியாஸம் செய்து பிறகு உன் மனக்கண்ணால் பார். முன்னிலும் சீக்கிரமாக உனக்குத் தெரியும். இப்படிப் படங்களை மாற்றிக்கொண்டே போ.

5. உருவ வெளித்தோற்றம் உன் மனதுள் தோன்றியதற்கப்பால் உன் இஷ்ட தேவதையை மனக்கண்ணால் பார்க்க எண்ணு. உடனே தோன்றும். நீ அதற்கு நமஸ்காரம் செய்வதாக நினை. அப்படியே நீ அதற்கு நமஸ்கரிப்பதை உன் மனக்கண்களால் அறிவாய். பூஜை முதலியன நடத்துவதாக சிந்தனை புரி. அங்கும் அப்படியே நடக்கக் காண்பாய். மகான்கள் அநுஷ்டிக்கும் மானஸிக பூஜை இதுவே. வெளிக்கரணங்களால் செய்யப்படும் பூஜையைவிட அந்தக்கரணங்களால் நடத்தப்படும் பூஜையின் உயர்வு பேசவும் படுமோ!

6. மானஸ பூஜையிலே நன்றாகப் பழக்கமடைந்தபிறகு உன் மனதை இன்னொருவரிடத்தில் செலுத்து. நித்திரை செய்துகொண்டிருப்பவனைக் கூர்மையாகக் கவனி. சிறிது நேரத்திற்கப்பால் அவன் விழித்துக்கொள்வான் என்று உன் மனத்துள் நினை. பிறகு "விழித்துக்கொள்" என்று உன் மனதுக்குள் சொல். உன் கண் பார்வையை அதிகக் கூர்மையாக்கிக்கொண்டுவிடு. தக்ஷணமே அவன் விழித்துக்கொள்ளக் காண்பாய். இப்படியும் பழக்கப்படு.



7. அப்பால் ஒருவனைப் பார்த்தவுடனே "நீ தூங்கிவிடுவாய்" என்று அவனுக்கு சொல். உன் நேத்திர திருஷ்டியை அவன் கண்களிற் செலுத்து. உனக்குள் அவனைத் தூங்கச்செய்யும் சக்தியிருப்பதாக நம்பு. உன் கைவிரல்களை அவன் கண்களுக்கு நேராகச் செலுத்தி உன் மனோசக்தி வியாபகம் உன் கைவிரல்களினின்றும் வெளிப்பட்டு எதிரியின்மீது பாய்வதாக சிந்தித்துக்கொள். சிறிது நேரத்துக்கெல்லாம் "அவன் தூங்கிவிடுவான்" என்று உன் மனதுக்குள் சொல்லிக்கொண்டு உன் கண்ணையும், கைவிரல்களையும் ஆடாமல் அப்படியே வைத்துக்கொண்டு நின்ற நிலையில் நில். உன் வசீகர திருஷ்டியை அவன்மீது செலுத்து. உன் மனதை அவன் மனதுடன் சேர்த்து வியாபிக்கப்பண்ணு. உடனே அவன் தூங்கிவிடுவான். முதல் பரீக்ஷையின்போதே இது சித்தியாகமாட்டாதாயினும் அதை சித்திபடுத்திக்கொள்ள நீ ஆசைபட்டுப் பிரவர்த்திக்கவேண்டும்.

8. உன் மனோசக்தி வியாபகத்தால் இதோ நான் தூங்கிவிட்டேன் என்று எண்ணிக்கொள். உடனே படுத்துக்கொள். சில நிமிஷங்களுக்கப்பால் தூங்கிவிடுவாய். நினைத்த நேரத்தில் நித்திரிக்கும் சக்தி அமையப்பெற்றவர், நினைத்த தருணத்தில் தூக்கத்தினின்று எழுந்திருக்கவும் கூடும். உன்னை இவ்விதம் செய்துகொள்ளப் பழகியதற்கப்பால் மற்றவர்களை அப்படியே செய்வித்தல் சுலபமாக நிறைவேறும்.

9. எவ்வித உழைப்பும் செய்து உன் தேகம் தளர்ச்சியுற்று சோர்வெய்தியபோது ஏகாந்தமான ஓரிடத்தில் கால்மணி நேரம் அமைதிநிலையிலிருக்க உனக்குப் பூரண சௌக்கியமுண்டு. எதுவும் மிதமிஞ்சக்கூடாது. அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு. அதனால் அபாயம் நேரும். பிரதிதினமும் தேகத்திற்கும் மனதிற்கும் வெவ்வேறு விதமான பயிற்சிகளிருக்கவேண்டும். ஒரு விதமான உயர்ந்த நிலைமையையடையும் வரை மேற்கூறிய பயிற்சிகளைச் செய்வது அவசியம். நீ எதிர் பார்க்கிற அவ்வுயர்ந்த ஸ்தானம் உனக்குக்கிடைப்பதாக. எதுதான் உனக்கு அஸாத்தியம்? நீயோ மனிதன். உன்னால் எதுவும் கூடும். நீ அதை நிறைவேற்றியே தீர்வாய். ஏனென்றால் நீ அபாரமான சக்தியுள்ளவன்.

அந்த சக்தி வெளியிலில்லை. உன்னிலேயே மறைந்து நிற்கிறது. அந்த சக்தியை நீ உணர்ந்துகொண்டுவிட்டாயானால் அப்புறம் உலகமே உனக்கு வசியமாம். பிரதமத்தில் கடவுள் உன்னிடம் வசியபபட்டுப்போகிறார். பிறகு அவரது சிருஷ்டியும் உனக்கு அடிமையாகின்றது. நீ எது கோரினாலும் உடனே நிறைவேறிவிடுகிறது. நீ ஞானியாகிறாய். உலகத்தை மயக்கவும், வசீகரிக்கவுமே இவ்வித்தையை நீ ஆரம்பத்தில் கற்க இச்சைகொண்டபோதினும் நீ, அதில் சித்திபெற்றுவிட்டாயானால் உனது நினைவுகள் மாறுதலடைந்துவிடுகின்றன. உனக்கும் உலகத்துக்குமுள்ள சம்பந்தம் அற்றுப்போகின்றது. "ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும். ஞானியின் எதிர் பார்ப்பு முக்தி." அது அவருக்கு விரும்பியபோது கிடைத்துவிடுகின்றது. அப்போது தான் மனித ஜன்மம் தனது நோக்கத்தை நிறைவேற்றியதாகின்றது. இத்தகையோர் தான் மானிடர் என்னப்படுவார். "அரிதரிது மானிடராதலரிது" என்று ஔவையார் சிறப்பித்து வியந்தமையும் இத்தகைய உயர்பதவி நாடிய மானிடர்களைப் பற்றியேயென்க.

## 10. மானஸீக ஜாலங்கள்.

இல்வாழ்க்கை இனிது நிகழற்பொருட்டு விரதங்கள் என்றும், அவ்விரதங்களையே வேறுவிதமாக மாற்றிப் பண்டிகைகளென்றும் நியமித்து அதை இல்லறத்தார் கொண்டாடி வருமாறு அமைத்துள்ளார் முன்னோர். உண்மையை யாராயுமிடத்துப் பண்டிகைகள் துக்கத்தையகற்றி உற்சாகம் புகட்டி நல்வழிகாட்ட, விரதங்கள் யோகப்பியாஸ மார்க்கத்துக்கு ஸாதகம் செய்ய, இவ்விரு விதங்களாலும் இல்வாழ்க்கை யினிது விரும்பப்பட்டு அது க்ஷேமமாக நடைபெறுவதாகின்றது. இதனால் நாம் அறிவது யாதெனில் பண்டிகை விரதாதிகள் முதலியனவெல்லாம் இல்வாழ்க்கையைச் சிறப்பிக்கும்பொருட்டே ஏற்படுத்தப்பட்டுள்ளனவென்பதுதான். அதுபோலவே யோகசாதனங்களை அநுசரித்து மனதையடக்கி, வசப்படுத்தி, தனது இருதய கமலத்தில் பகவானைக் கண்டு மானஸீக பக்தி செய்து, உயர்பதவி நாட அதிக தாகமுள்ளவர்களாகி, கடவுளுடைய ஸாமீப்யத்தை யடையவேண்டுமென்ற அடக்கமுடியாத அவா தோன்றும்படியாக; ஓர் ஏற்பாடு செய்ய



வேண்டுமென்று உத்தேசித்து, இல்வாழ்க்கையைச் சிறப்பிக்க பண்டிகை விரதாதிகள் நியமிக்கப்பட்டதுபோல், பரமசூட்சுமமான மானஸீக ஜாலங்களை புராதன மஹாரிஷிகள் தமது யுக்தியால் நிர்மாணித்து, மானஸீக பூஜாஸக்தி, கடவுளுடைய சாமீப்பியம் முதலிய பேறுகளடைவதற்கு இந்த ஜால வித்தைகள் ஒருவித உபகரணங்களாக இருக்குமாறு ஸ்தாபனம் செய்திருக்கிறார்கள். அவைகள் கோகரணவித்தை, கஜகரணவித்தை, மந்திரவித்தை, இந்திரஜாலவித்தை, மகேந்திரஜாலவித்தை முதலிய பலவாம்.

கோகரணவித்தை:— கோ = மாடு. மாடுகளுக்கு ஸ்வபாவமாகவே உள்ள வித்தையாதெனில் தன் தேகத்தின் தோலை ஆட்டிக்கொள்வதாம். ஈ முதலியன உட்காரும்போது அவற்றினை ஓட்ட, அதன் தோலை அசைக்க அவைகள் ஓடிவிடுகின்றன.

கஜகரண வித்தை:— கஜம் = யானை. யானையினிடத்து தன் காதுகளை ஆட்டிக்கொள்ளும் வித்தை இருக்கிறது. தனக்கு அபாயம்நேர்ந்து விட்டதென்று தெரிந்த காலங்களில் தனது பெரிய தேகத்தை சூக்ஷ்மமாக்கிக்கொண்டு வெகு சீக்கிரம் வேகமாய் ஓட்டமெடுக்கின்றது. இப்படி தனது மாம்ஸ பருவத்தை சூக்ஷ்மமாக்கிக்கொண்டு விடுவது ஒரு பெரிய சக்தியன்றோ?

இந்திரஜால வித்தை:— புராணேதிஹாஸங்களில் படித்த கேட்ட விதமாகவே தேவேந்திரஸபை மற்றும், அதன் விநோதபாகங்களெல்லாம் நேரில் தானே ஒரு நிமிஷத்தில் காட்டுவது.

மந்திரவித்தை:— பூர்வ காலத்தில் விருக்ஷங்கள் மலைகள் முதலியவற்றைப் பிடுங்கி எறிந்து யுத்தமாடினார்களென்று சொல்லப்படுவதை பிரத்தியக்ஷமாகக்காட்டுதல்.

மகேந்திர ஜாலவித்தை:— கொலை முதலியனவற்றை உண்மையாகவே பிரத்தியக்ஷத்தில் காட்டுவது. பிறகு கொலையுண்டவன் உயிர்த்தெழுந்து ஸபையோரெதிரில் வந்து நின்று பிரமிக்கச்செய்தல்.

இந்த ஜாலங்களெல்லாம் என்ன? இதைஎப்படிச் செய்கிறது? இது மனித சக்திக்கு சாத்தியமா என்கிறீர்களோ? துணிகின்றேன் என்கிற மந்திரோபதேசத்தைக் கைக்கொண்டு அதற்கப்பாலே சொல்லப்பட்ட ஒவ்வொரு காரியத்தையும் செவ்வையாக அப்பியஸித்து மனதையடக்கித் தனது வசப்படுத்திக்கொண்டு விட்டால் பிறகு அவனுக்கு உலகமே வசம்தான். சரீரபலமுள்ளவனொருவன்

எப்படி தேகதிடமில்லாத ஒருவனை ஒரே அடியில் கீழே தள்ளி தனக்கு அடிமையாக்கிக் கொள்கின்றானோ அதேவிதமாக மனோசக்தியில் பழகிய ஒரு மனோசக்திக்காரன் அவ்வித சக்திப்பயிற்சியற்ற மற்றொருவனுடைய மனோதைரியத்தைத் தனதுவசம் செய்துகொண்டு, தான் தன்மனத்துள் நினைக்கும் நினைவுகளையெல்லாம் அவனுக்கு ஒரு காக்ஷியாகத் தோன்றும்படி செய்கிறான். பேதை மனமோ இந்த மனோசக்திக்கு எதிர் நிற்க முடியாமல் சோர்ந்துபோய் கண்டதனைத்தும் நம்பி விடுகிறது. பின்னும் மனோசக்திக்காரன் நின்ற நிலையிலேயே நின்றுவிட்டு கோரணவித்தை, கஜகரணவித்தை இவைகளை எல்லாம் தன்மனோசக்திப் பிரபாவத்தினால் தேகத்துக்குக் கட்டளைகொடுத்து அதேவிதமாகவே நடத்திக் காட்டுகிறான். ஒரு சிறு அறுகம்புல்லைக் கிள்ளியெறிந்து இதோ ஆலமரத்தைப் பாரென்றால் அது ஆலமரமாகவே பேதை மனத்தினுக்குத் தோன்றும். இப்படியே ஒரு சிறு கல்லை எறிந்து பெரிய மலையென்றாலும் நம்பிவிடுவான்.

இந்த வித்தையிலே பிரபஞ்சவாசிகள் பிரமித்துப்போம் விதமாக வித்தைகாட்டுவோன் அநேகமான கீர்த்திப்பிரதாபங்கள் கொண்டவனாய்க் கௌரவமடைகிறான்.

அந்த கௌரவத்தை ஆசித்தாவது இந்தவித்தைகளைக் கற்றுக்கொள்ள உத்தேசித்து பணிதாவளிப் சிறுபான்மையோரும் துணியமாட்டார்களாவென்றும், அப்படித் துணிந்து கற்றுக்கொண்ட பின் அதிலிருந்து படிப்படியாக பகவத் விஷயமாகத் தங்கள் மனதைச் செலுத்தி கடவுளுடைய ஸாமீப்பிய பதவியை விரும்பி முக்திக்கு யோகியர்களாய் ஜென்மசாபல்யம் பெற்றுக்கொள்ளட்டுமே என்கிற ஜீவகாருண்ய சிந்தையாலும் பூர்வீக மகரிஷிகள் பழத்தைக்காட்டிக் குழந்தைகளுக்கு மருந்தூட்டுவதுபோல முக்திக்கு ஸாதகமாயிருக்க இந்தமானஸிக ஜாலங்களை ஏற்படுத்திவிட்டுப் போயிருக்கின்றார்கள்.



ஆ ஆ! அவர்களின் கருணைதானிருந்தவாறு என்னே! என்னே!! மெஸ்மரிஸக்காரனுடைய கைவிரல்களினின்றும் வசீகராந்த ஜோதி வெளிப்பட்டு எதிரியின்மீது பாய்கிறதை முன்னொரு படத்தில் விளக்கியிருக்கிறோம். இப்போது கைவிரல்களினின்றும் அந்த ஜோதி புறப்படுகிற விதத்தை மட்டும் தனியாகப் பிரித்து இந்தப் படத்தில் காட்டியிருக்கிறோம்.



இந்தியாவுக்குப் புராதனமான கலைக்கியானங்கள் 64-க்குள்:—

1. யோகசாஸ்திரம்.
2. மந்திரசாஸ்திரம்.
3. உச்சாடனம்.
4. வசீகரணம்.
5. இந்திரஜாலம்.
6. மகேந்திரஜாலம்.
7. வாயுஸ்தம்பம்.
8. திருஷ்டிஸ்தம்பம்.
9. வாக்குஸ்தம்பம்.

இந்த ஒன்பதும் மெஸ்மரிஸ வித்தைக்கு அநுகுணமுள்ளதாய் இருக்கின்றன. அதிக வைபவமுள்ள இந்த அரிய வித்தைகள் காலமகாத்மியத்தால் பாரதவருஷத்தினின்றும் மறைந்து போயின.

பிறதேசத்தார்கள் இந்தியாவின் மீது படையெடுத்துவந்த போது அவர்களுடன் சில சரித்திரக்காரர்களும் வந்திருந்தார்களாதலால் அவர்கள் மூலமாக மற்றசாஸ்திரங்களைப் போல இந்த மானஸிகஜால சாஸ்திரமும் மேற்றித் தேசங்களுக்கு எட்டலாயிற்று. விசேடமாக அமெரிக்க தேசத்தார்கள் இதில் அதிக அபிமானமுடையவர்களாய் அது விஷயத்தில் அதிகமான சிரமமெடுத்துக்கொண்டு அதை உயிர்ப்பித்திருக்கின்றனர். மேலே தெரிவித்த மானஸிக ஜாலங்களைத்தான் வேறுவிதமாக மாற்றி ஆங்கிலேயபாஷையில் மெஸ்மரிஸம் என்று சொல்லுகிறார்கள். மெஸ்மர் ஸக்தியை மேலே தெரிவித்திருக்கிற விஷயங்களின்படி அனுஷ்டித்தால் சுலபத்தில் பெற்றுக்கொண்டுவிடலாம். அமெரிக்கர்கள் மானஸிக ஜாலத்திற்கொண்ட அவாதான் அவர்களை ஹிந்து மதத்தில் விருப்பங்கொள்ளும்படி செய்திருக்கின்றது.

மெஸ்மரிஸக்காரன் தனக்கு எதிரில் எவரையாவது உட்கார வைத்துக்கொண்டு, கொஞ்சநேரம் அவருடைய கண்களுள் தீவிர திருஷ்டிகளுடன் உற்றுப்பார்த்துப் பிற்பாடு அவருடைய முகமுதல் கீழே அடிகள் வரைக்கும் கைவிரல்களுடன் மந்திரித்தது போலத் தடவியும் விசிறியும் அவரை உறங்கச்செய்யக்கூடுவர். இதுவேயன்றி அவ்வித நித்திராவஸ்தையிலிருக்கும்பொழுது அவர் மூலமாய் அநேகமான விசித்திர காரியங்களையுஞ்செய்விப்பர். கண்கள் திறக்க ஒண்ணாது—எங்கே திறந்துபார் பார்ப்போம்—என்று அவனுடன் மெஸ்மர்காரன் சொல்லியக்கால், எவ்வளவு முயற்சிசெய்த போதிலும் அவன் கண்களைத் திறக்க முடியாதவனாகவே இருப்பான். அதோ பார், உன்னுடைய துணி எரிவுண்டு போகிறது என்று சொன்னால், அவன் தடுமாற்றமுற்றவனாய் வஸ்திரங்களையவிழ்த்துப்போடுவான். அதோ நதி காண்கிறது நீந்து என்றால், நீந்துவதுபோல கால்கைகளை விரித்து நீச்சுபோடுவான். உன் காலில் பாம்பு சுற்றிக்கொண்டிருக்கிறது என்று சொன்னபோழுது பயப்பட்டெழுந்து கொண்டு பாம்பையிழுத்தெறிவதற்காகப் பிரயத்தனம் பண்ணுவான். பானகமென்று உப்பு நீரைக் கொடுத்தாலும் குடித்துத்திருப்தியடைவான். உன்கையில் பழம் இருக்கிறது

தின்னென்றால், மெய்யாய்ப் பழம் தின்பதுபோலவே தின்று ஸந்தோஷப்படுவான். நீ தெருவில் திரியும் நாயென்றால், நாய்போலவே குலைக்கத்தொடங்குவான். கடைசியில் மெஸ்மரிப்பவன், அவனுடைய அடிகள் முதல் முகம்வரைக்கும் விரல்களுடன் மேற்புறமாய் விசிறினால், அவன் அயர்வெழுந்து, முன்னே நடந்ததொன்றுமறியேனென்று சொல்வான். மெஸ்மரின் வித்தையால் தூங்காமல் தூங்கச்செய்யும் நிலைமைக்குக் கொண்டுவருகிற மாதிரியை அடியில் பதிப்பித்திருக்கும் சித்திரத்தில் காண்க.



மனுஷியர்களைக் காட்டிலும் பட்சிகளையும் மிருகங்களையும் மெஸ்மரிப்பது சுலபமாக இருக்கும். மெஸ்மர்சக்தியின் பெரும் பிரயோஜனம் வியாதிநிவாரணத்தில் காணப்படுகின்றது. யூரோப் கண்டத்தில் சில டாக்டர்கள் சஸ்திரவைத்தியஞ் செய்யும்போது, லாகிரி மருந்துகளினால் மயக்கத்தை யுண்டுபண்ணுவதற்குப் பதிலாய், மெஸ்மர் சக்தியின் மூலமாய்ப் பலத்த நித்திரையைத் தூண்டி சஸ்திரம் செய்வார்கள். அவ்வித நித்திராவஸ்தையில் கொஞ்சமாயினும் வாதை தோன்றாது. இதுவேயன்றி வீக்கம், வலிக்குத்தல் முதலிய சிற்சில பிணிகளையும் மெஸ்மர் சக்தியினால் தணியச்செய்கிறார்கள். எல்லாவற்றிற்கும், செய்பவனது மனோபலமும் அவன் உண்டாக்கும் அச்சமும் காரணங்களாய்த் தோன்றுகின்றன.



## 11. ஆசாரியன் அவசியமென்பது.



அரேபியாவிலிருந்து வெகு காலத்துக்குமுன் அநேக ஜனங்கள் ஆப்பிரிக்கா வழியாய் ஜிப்ரால்டர் என்னுமிடத்தையடைந்து ஸ்பெயின் தேசத்திற்குள் பிரவேசித்தனர். ஆங்கிருந்த அநாகரிகர்களான ஸ்பானியர்களை ஜெயித்து அத்தேசத்தைத் தங்களுடைய ஆதீனமாக்கிக்கொண்டு, அவ்விடத்திலுள்ள டோலிடோ, கார்டோவா, செவில், கிரானடா முதலிய முக்கிய பட்டணங்களில் ஸர்வகலாசாலைகளை ஸ்தாபித்தனர். இம்மகம்மதியர்கள் தங்களுடைய இஸ்லாம் மதத்தைப் பரப்புவதற்காகஜிப்ரால்டரிலிருந்து பிரினீஸ்மலை வரையும் சென்றனர். பின்னர் பருவதம் குறுக்கிட்டதாலும் பின் பலன் இல்லாததாலும் படையெடுத்துப்போகும் ஆசையை விட்டு ஸ்பெயின் நாட்டைமட்டும் நாகரிகமாய் ஆண்டு வந்தனர். நிலங்களையுழவும், பல சாஸ்திரங்களைப் பயிலவும், நீதிகளை விளக்கி இராஜ்யபரிபாலனஞ் செய்யவும் தொடங்கியதால் ஸ்பானியர்கள் ஆச்சரியமடைந்து மெள்ள கணிதம், தத்வம், இரஸாயனம் முதலிய சாஸ்திரங்களைத் தாங்களும் கற்றுத்தேர்ச்சியடைந்தனர். குதிரைகள் மீதேறி சண்டைபோடவும், கத்திகளைச் சுழற்றவும் மகம்மதியர்களிடம் கற்றுக்கொண்ட ஸ்பானியர் பிற்காலத்தில் இவர்களையே தங்கள் தேசத்திலிருந்து விரட்டிவிட்டனர். அப்பால் செல்ல முடியாமல் பிரினீஸ்மலை தடுத்துவிட்டது. இப்பால் [illegible]

வரமுடியாமல் மத்தியதரைக்கடல் தடை செய்தது. ஆதலின் மகம்மதியர்கள் கடைசியாகப் பராஜயத்தை யிழந்து திரும்பினார்கள். அவர்கள் ஆண்டகாலத்தில் நம்மிந்து தேசத்தில் வழங்கிய சாஸ்திரங்களெல்லாம் ஐரோப்பியர்க்குத் தெரியவந்தன. பிரான்ஸ், ஜெர்மன், முதலிய புறநாடுகளிலிருந்து அநேக வித்யார்த்திகள் கார்டோவா, டோலிடோ, முதலிய நகரங்களில் ஸ்தாபிதமான கலாசாலைகளிற் படிக்கவந்தனர். இவர்களாலே ஐரோப்பா முழுவதும் கணிதம், தத்வம், இரஸாயனம் முதலிய ஆரியசாஸ்திரங்களெல்லாம் பரவி இப்போது மேல்நாட்டாராகிய ஐரோப்பியர் நாகரீகர்கள் என்ற பிரஸித்தியை யடைந்தனர். கிழக்கேதான் சூரியன் உதயமாகிறது. அதுபோல் கிழக்கண்டமாகிய பாரதகண்டத்திலிருந்துதான் சகல சாஸ்திரங்களும் ஐரோப்பாவுக்குப் போயின. இப்போதும் ஜெர்மனியில் அநேகர் ஸம்ஸ்கிருத பாஷையைப் பயின்று உபநிஷத்துக்களின் வேதாந்த சாஸ்திரத்தின் மகத்வத்தையறிகின்றனர். பூர்வாசாரியர்களின் கட்டுப்பாட்டுக் குள்ளடங்கி இந்தியர்கள் கப்பலேறி தேசாந்தரங்களுக்குப் போகாதிருந்தும் மகம்மதியர்களோ பாரதவருஷத்திற்கு வந்து சாஸ்திராராய்ச்சி செய்து ஸ்பெயினுக்குச் சென்றதால் அவர்களால் மெஸ்மரிசம் முதலிய மானஸீக வித்தைகளும், பிறவும் மேற்கு தேசங்களில் பரவலாயினவென்பது நிச்சயம்.

ஞானபூமியாகிய பாரதவருஷத்தில் இந்த மானஸீக ஞானமானது முக்திக்கு ஸாதனமானதாகப் பூர்வம் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்திலோ முக்திக்கு சாதனம் என்ற பாகம் அவ்வளவாகப் பாராட்டப்படாமல் லௌகிக சுகங்களுக்கு உபகரணமாகக்கொண்டு பிரயோகிக்கப்படுகின்றது. காரணம் அந்த அறிவானது லௌகிக பூமியென்று கூறத்தகுந்த மேற்குப்பிரதேசஸ்தர்களால் பரப்பப்படுதலால் அவர்களையநுசரித்து அந்த மானஸீக ஞானமும், அதின் முக்திநோக்கம் போய் லௌகிக விசாரத்திற்கேற்றபோதனையாக மாறுபடலானது. இந்த சந்தர்ப்பத்தில் ஸ்வாமி விவேகானந்தரது அமிர்தவசனமொன்றை எடுத்துக்காட்டி நினைப்பூட்டுதல் பொருந்தும். இங்கிலாந்து முதலிய தேசங்களில் ராஜதந்திரமே முக்கியமான புருஷார்த்தம். வேறு சில நாட்டாருக்கு சிங்காரமான ஸுகவாழ்க்கையே பிரதானமானது.



இந்தியாவிலோ மோக்ஷமே முக்கியமான புருஷார்த்தம் என்கிறார். இடத்திற்கேற்றபடி நிலைமைகள் ஏற்படுவதுபோல மெஸ்மரிஸமும் ஸ்தலத்திற்குத் தகுந்தது போன்ற அமைப்புக்கொண்டதாயிற்று. அதாவது முக்தி நோக்கமாயில்லாமல் லௌகிக ஸம்பந்தத்தைத் தழுவியதாக வேறுபட்டுப்போனது. காலமகாத்மியத்தின் அற்புதமே அற்புதம். ஐரோப்பியர்கள் இகலோக சுகத்துக்கு மெஸ்மரிச வித்தையை உபயோகப்படுத்துவதுபோல பரலோக சாதனத்திற்கு பயிற்சி செய்யவில்லை. கடைசியில் ஒன்று சொல்லுகிறேன். அப்பியாஸம் அதி அவசியம். ஒவ்வொருநாளும் நான் சொல்வதை நீ கேட்டுக்கொண்டிருக்கலாம். அப்பியாஸம் செய்யாவிட்டால் சிறிதேனும் பிரயோஜனமுண்டாகாது. எல்லாம் அப்பியஸிப்பதிலிருக்கிறது. யோகவிஷயங்கள் அநுபோகமில்லாதவர்களுக்குப் புலப்படா. ஒவ்வொன்றையும் நாம் அநுபவித்து அதன் உண்மையை உணரவேண்டும். சக்கரையைச் சாப்பிட்டவனே அதன் ருசிகரத்தை கிரகிக்கக்கூடும். நம்முடைய முன்னோர்கள் மகான்கள் என்பதை நாம் முதலில் அறியவேண்டும். நம்முடைய ரத்தம் யாரிடமிருந்து உண்டாயிற்றென்று கேள்வி கேட்கவேண்டும்? அதற்கு அப்போதிருந்த சக்தி என்ன? என்பதைத் தெரிந்துகொண்டு அதற்கு இன்னும் அதிக சக்தி உண்டாகும்படி முயலவேண்டும். அதற்காகத் துணியவேண்டும். இதோ துணிகிறேன் துணிகிறேன் என்று துணியுமிடத்து ஸர்வசித்திகளும் நீ அடையப்பெற்றுவிடுவாய்.

ஆனால் ஒன்று; எப்படிப்பட்ட சாமான்ய வித்தைக்கும் குரு முக்கியம். எப்படித் தாய்தந்தையரின்றி மக்கட்பிறப்பு இல்லையோ அவ்விதமாகவே குருவும் சிஷ்யனும் ஸந்தித்துப் பயிற்சி பண்ணப்பட்டாலல்லாமல் வித்தையாகிய புத்திரோற்பத்தி கைகூடி வரமாட்டாது. குருவில்லா வித்தை பாழ் என்பதை மனதிற்கொள்ளவேண்டும். ஆயினும் ஸர்வலோக சரண்யனாகிய ஜகதீசனையே குருவாகப் பாவித்து அவரையே துணையாகப் பற்றிக்கொள்ளத்தக்க பக்குவமனமுடையாருக்கு மனிதகுரு தேவையில்லை. மகாபாரதத்திலே ஒரு உதாரணமுண்டு. ஏகலவ்யனென்பவனை வேடன் மகனென்று சொல்லி, துரோணாசாரியார் துரியோதனாதியர்களி

டமுள்ள தாஸஜன்யத்தால் அவனைத் தன் சிஷ்யனாக அங்கீகரிக்காமலிருந்தார். ஆயினும் ஏகலைவ்யன் அவரையே குருவாக எண்ணி அவரைப்போல ஒரு பதுமை செய்து அதனிடத்தில் உயர்ந்த ஆசார்யனிடத்தில் செய்யவேண்டிய வழிபாடுகளைச் செய்துகொண்டு, அந்த ஆசார்ய பக்தி மகாத்மியத்தால் துரோணரது மற்ற சிஷ்யர்களிலும் அதிகமான தேர்ச்சியடைந்து அர்ச்சுனனைவிட மேம்பட்டவனானான். பள்ளமுள்ள இடத்தில் நீர் தங்கும் என்பதுபோல முயற்சியுள்ளவனுக்குக் குரு எப்படியும் கிடைப்பார்.

---

## 12. சமீப திருஷ்டாந்தங்கள்.

### 1. மகேந்திரஜாலம்.

18—9—03 லோகோபகாரிப்பத்திரிகை.

இந்தியாவில் மத்தியமாகாணத்திலே சில தினங்களுக்கு முன்னர் இந்திரஜாலக்காரனொருவனால் வெகுஜன ஸமூகத்திலே செய்யப்பட்ட மகேந்திர ஜாலவித்தையை மார்னிங் போஸ்ட் என்னும் பத்திரிகை மிகவும்புகழ்ந்து கொண்டாடுகிறது. அவ்வித்தைக்காரன் ஒரு கயிற்றுப் பந்தைக்கொண்டு வந்து அதன் ஒரு தலையை அவிழ்த்து நிலத்திலடிக்கப்பட்டிருந்த ஒரு முளையிலே கட்டிவிட்டுப் பந்தையெடுத்து ஆகாயத்தில் வீசிவிட்டான். அப்பந்து விரிந்து விரிந்து சென்று மேகமண்டலத்தில் மறைந்தது. கண்ணுக்கெட்டியவரையில் கயிறு, கம்பியை நீட்டி வைத்ததுபோல் பிரகாசமாகவிருந்தது. இவ்வாறு கயிறு மேலே போய் நின்றவுடன் அவ்வித்தைக்காரன் மகன் ஓடி வந்து அக்கயிற்றைப் பற்றி மேலே ஏறிச்சென்றான். சிறிது தூரஞ்சென்றவுடன் தந்தை அவனை யழைத்து இறங்கிவருமாறு கட்டளையிட்டான். அச்சிறுவன் அவ்வார்த்தையைச் செவியிற் கொள்ளாது மேல்நோக்கி ஏறினான். தந்தை பின்னரும் பன்முறை தடுத்துரைத்தும் அச்சிறுவன் கேளானாய் மேலே சென்றான். அது கண்டு தந்தை பெருங்கோபமுடையவனாய் ஒரு வாளாயுதத்தை யெடுத்து வாயிற் கௌவிக்கொண்டு தானுமக் கயிற்றைப்பற்றி யேறிச்சென்றான். இதற்கிடையில் மைந்தன் நிற்கின்ற ஜனசமூகத்தின்



கண்ணுக்கெட்டாமற்சென்று மேகமண்டலத்தில் மறைந்தான். தந்தையுங் கடுஞ்சொற்களைக் கூறி என் சொல்லுக்கமையாத இப்பயலை துண்டஞ்செய்து வீசிவிட்டுவருவேன் பாருங்களெனச் சொல்லிக்கொண்டு விரைந்தேறி மேகமண்டலத்துள்ளே மறைந்தான். சிறிது நேரத்தில் பார்த்துநின்ற ஜனங்கள் பிரமித்துக் கலங்கும்படியாக இரத்தத் துளிகள் மழைத்துளிகள் போல முதிர்ச் சிந்தின. அதன் பின்னர் அச்சிறுவனுடைய கால் கைகள் ஒவ்வொன்றாக விழுந்தன. அதன் பின்னர் தலையும் முண்டமும் விழுந்தன. இவையெல்லாம் வித்தைக்களத்திலே விழுந்து கிடந்து துடிக்கத்தொடங்கின. அதன்பின்னர் சிறிது நேரத்திலே தந்தை இரத்தக்கறை உடம்பெங்குமாகக் கயிற்றைப் பற்றிக்கொண்டு கீழே வந்து கயிற்றை யிழுத்துக் குவித்து அக்கயிற்றையும் வாளையும் புத்திரனுடைய உடற் கூறுகளோடு கம்பளியால் மூடினான். மறுகணத்திலே கம்பளியை நீக்கப் புத்திரன் முன்போலவே விளங்கினான். அது கண்ட ஜனங்கள் சந்தோஷமுடையவராகி அவனை மெச்சிக்கொண்டாடி ஸன்மானித்தார்கள்.

ஜாலம் (Tricks.) என்று யாவரும் எளிதாக வாயாற் கூறிவிடலாம். அதனைச் சாதிப்ப தெப்படி யென்றால் யாவரும் வாய் மூடுவர். ஒவ்வொன்றுக்கு மொருவாறு ஒவ்வொரு சமாதானங் கூறும் ஐரோப்பிய சாஸ்திரங்கள் இதற்குச் சமாதானங் கூறவறியாது திகைக்கின்றன. துண்டந் துண்டமாகக் கூறுசெய்த சரீரத்தை எந்தச் சத்திர சிகிச்சை உடனே பொருந்தச் செய்தது?

---

### 2. ஒரு யோகியின் செய்கை

13—3—03 லோகோபகாரிப் பத்திரிகை.

யோகீஸ்வர ரொருவர் காலஞ்சென்றதைக் கண்ணாரப் பார்த்த ஒரு ஐரோப்பிய துரை அவர் பிழைத்து எழுந்திருந்ததைப்பற்றி அடியில்வருமாறு எழுதுகிறார். நான் ஒரு நாள் என் ஸ்நேகிதர்களோடு உலாவிக்கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவன் என்னை தன்னோடு ஓரிடத்துக்கு வரவேண்டுமென்று அழை

ந்தான். நான் சந்தோஷத்துடன் அவனுடன் சென்றேன், ஒரு சுத்தமான வீட்டில் தேஜஸ்வியான யோகீசுவரர் ஆஸனத்திலுட்கார்ந்திருந்தார். நான் ஜாதியில் ஐரோப்பியனாயிருந்ததால் ஹிந்துக்களின் ஆசார விஷயங்களில் வெகுநாள் வரை அருவெறுப்புக் கொண்டிருந்தேன். ஆனால் அவ்வைராக்கியம் அவரைக்கண்டதும் என் தேகம் பரவச மாயிற்று. அவர் ஸம்ஸ்கிருதத்தில் அபாரமான விஷயங்களை சிஷ்யர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார். அவருக்கு மதபேதமில்லையென்று தோன்றிற்று. எனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியாததால் அவர் பேசுகிறதை இங்கிலீஷிலும் நான் பேசுகிறதை ஸம்ஸ்கிருதத்திலும் தர்ஜுமா செய்தான் என்னுடன் வந்த ஸ்நேகிதன். அவரை முதல் தடவை பார்த்தது முதல் நான் அடிக்கடி அவரிடம் போக மனங்கொண்டேன். அவரும் என்னிடம் பிரேமத்தை பாராட்டிவந்தார். சில நாட்கள் வரை ஒரு காரியமாய் வேறிடம் சென்றிருந்தேன். அக்காலத்தில் என் நேசன் ஓடிவந்து இன்றையதினம் யோகீசுவரர் இறக்கப்போகிறா ரென்றும் அவர் மரணமடையுமுன் உங்களைப்பார்க்க அபேக்ஷைப்படுகிறாரென்றும் சொல்ல, நான் தாமஸம் செய்யாமல் யோகியைப் பார்க்க வந்தேன். அன்றையதினம் அநேகர் வந்திருந்தனர். அத்தேசத்து அரசரும் வந்திருந்தார். யோகி எல்லோரையும் பார்த்ததுபோல் பிறகு என்னுடன் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு சிஷ்யனையழைத்து இனி பிராணன் நில்லாது என்று முன்னும் பின்னும் ஆடினார், கண்கள் மூடிப்போயின; தீர்க்க நித்திரை வந்துவிட்டது. அதுவரையிலும் வேதாந்த ஸ்தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்த சிஷ்யர்கள் அவர் சரீரத்தைப் படுக்கவைத்து நாக்கையுள்ளே தள்ளி வாயுமார்க்கத்தை மூடி ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டனர். அவ்விடத்திலிருந்த மகாராஜா தம்மிடம் அந்தப் பெட்டியைக் கொடுக்கும்படிக் கேட்க அவர்கள் அவ்விதமே கொடுத்தார்கள். அரசர் பெட்டிக்கு மொஹர் வைத்து அநேக சிபாய்களைக் காவல்வைத்தார், நாற்பது நாட்களானதும் குரு எழுந்திருப்பாரென்று சிஷ்யர்கள் சொன்னபடியால் அந்த தினத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்த பிரஜைகள் 41-ம் நாள் வந்து சேர்ந்தனர். நானும் போனேன். பெட்டியைக் கொண்டுவந்தார்கள். முத்திரை மொஹர் முதலியவை அப்படியே யிருந்தன. பெட்-



டியைத் திறந்ததும் எவ்வித துர்நாற்றமும் வீசவில்லை. சிஷ்யர்கள் குருவை எடுத்து ஸ்நானம் செய்வித்தனர். கைகால்கள் அசைந்தன. மறுபடி அவர்கள் யோகியின் நெற்றியில் ஒருவித மூலிகாரஸத்தைப்பூசி மூக்கிலும் பிழிந்தார்கள். உடனே நாக்கு ஸ்வாதீனத்துக்கு வந்தது. சிஷ்யர்கள் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கையில் யோகிக்கு ஸகல அவயவங்களும் ஸ்வாதீனத்துக்கு வர அவர் கண்திறந்து மகாராஜாவை அடையாளம் கண்டுபிடித்து எங்களுக்கெல்லாம் ஸமிக்ஞையால் தன் மனோபாவத்தைத் தெரிவித்தார். நாங்கள் இதைக்கண்டு ஸந்தோஷித்த மடைந்திருக்கையில் அவர் எழுந்திருந்து யாருடனும் பேசாமல் எங்கேயோ போய் விட்டார். இதுவரையிலும் அவருடைய ஸமாசாரமே தெரியவில்லை.

---

## 3. ஓர் மௌன சாமியார்.

### 2-2-11 சுதேசமித்திரன்.

காஞ்சி க்ஷேத்திரத்திற் கருகிலும், பாலாற்றுக் கரையிலுமுள்ள மாமண்டூரில் சமுத்திரம் போன்ற ஏரிக்குக் கரையாயமைந்துள்ள குன்றின் மேல் சாது ஒருவர் அன்ன ஆகாரமின்றித் தமது தேகமுழுமையும் துணியால் மூடிக்கொண்டு படுத்த படுக்கையாயிருந்து வருவதைக்கண்டு தரிசிக்க வரச் செல்லும் ஜனங்களோ அதிகம். இதை யறிந்த நமது கவர்ன்மெண்டார் மேற்படி மகான்மேல் சூரிய வெப்பம் வீசாதிருக்கச் சிறு பந்தல் போட உத்தரவு செய்திருக்கின்றனர். மேற்படி மகான் வீற்றிருக்கும் இடமானது சகலருடைய மனதையும் அவ்விடமிருந்து திரும்பவொட்டாமல் தடுக்கிறது. இவ்வித நிர்மானுஷ்யமான குன்றைத் தேடிவந்து வீற்றிருப்பவரை நாம் தரிசிக்கச் சொல்லுதல் இப்பொது யுக்தமல்லவாயினும், அவருக்கு நம்மால் யாதோர் சிரமமும் நேரிடாது தரிசித்து வருவது சிலாக்கியம்.

* * * * * * *

அன்பர்காள்! மேலே தெரிவித்த உதாரணங்களால் இக்காலத்திலும் மகான்கள் ஆங்காங்கு காணப்பட்டு, மனித திருஷ்டிக்குப் புலப்படாமல் தக்ஷணமே மறைந்து விடுகிறார்களென்ற உண்மையை நாம் கிரகித்துக் கொள்ளவேண்டும்.

உலகிலுள்ள எந்த மனிதனாயினும், இவ்விதமாக மனத்தை அடக்கியாளுகிற பயிற்சியை சாதிக்கவேண்டுமென்றெண்ணி பல முயற்சிகள் செய்துகொண்டு [illegible]ரும்போது இடையே தடைகள் எப்படியும் தோன்றும்; தோ[illegible]றுமற் போகாது. பலன் மகிமை, அந்தப் பலனைப் பெறும் வழியில் உண்டாகிறது. கஷ்டத்தின் அளவைக்குறித்து, அரைப்பணம் பெறவேண்டுமென்ற ஒருவன் அரைமணி நேரம் வேலை செய்வானாயின், ஐந்து பணம் பெற வேண்டுமென்ற ஆசையுள்ளவன் கட்டாயம் பத்து மணிநேரம் கஷ்டப்பட்டு வேலைசெய்ய வேண்டும். கர்மம் எவ்வளவோ அவ்வளவுக்கே பலனும் ஏற்படும். இனி இக்காரியத்திற் பிரவேசிக்கில் எதிர்ப்படும் தடைகள் மூன்றுண்டு. அவையாவன;— தெய்வத்தாலாதல், பொருளின்மையாலாதல், மெய்வருத்தத்தாலாதல். இம்மூன்று தடைகளையும் முயற்சியுடையானொருவன் வெகுசுலபமாக உதறிவிட்டுப் போய்விடலாம். இதேக்கனே இவ்வுலக இயல்பு என்றறிந்திருப்பவர்களை இந்த இடையூறுகள் ஒன்றும் செய்யாவாம். தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும் என்றார் திருக்குறளாசிரியர்.

கடைசியாக, எல்லாவற்றிலும் ஆத்ம சக்தி அவசியமென்று மறவாது [illegible] நல்ல நீதியைக் கடைப்பிடியுங்கள். உபதேசங்களை [illegible] பயிற்சிகொண்டு ஸ்மரணைப் பெறுங்கள். சன்மார்க்கமே [illegible]த்திற்குப் பிரதானமானது. சன்மார்க்கமே சுவர்க்கத்துக்குப் பெறும் வழி. சன்மார்க்கமே சுவர்க்கத்துக்குத் திறவுகோல். சன்மார்க்கமே மோட்சத்துக்கு மார்க்கமாம்.

(முற்றிற்று.)

---

* மெஸ்மரிஸ ஸம்பந்தமாக அதிகமான விவரங்களுடன் ஒரு புஸ்தகம் எழுத வேண்டுமென்று உத்தேசம்.



# கைத்தொழிற் குறிப்பு.

1. பைஸிக்கில்களுக்குப் [illegible]படும் எண்ணெய்:—

ஸ்பெரம் ஆயில் (Sperm Oil) 8 பங்கு.
பாரபின் ஆயில் (Parafine Oil) 3 பங்கு.
கற்பூரம் ... ... ... 1 பங்கு.

மூன்றையும் சேர்த்து எடுத்துக் கொள்ளவும். சீமையிலிருந்து வரும் பைஸிக்கில் எண்ணெய்க்கு ஒப்பாக இருக்கும். இதைப் போடப் போகும் இடத்தைக் [illegible]ராஸின் எண்ணெயால் கழுவிச் சுத்தப் படுத்திக் கொள்வது நல்லது.

2. இமிடேஷன் தந்தம்:—

இமிடேஷன் என்றால் ஒப்பனை அல்லது சாயல் என்று அர்த்தம். இமிடேஷன் தந்தம் என்றால் தந்தத்தைப்போல செயற்கையில் உண்டுபண்ணுவது. இதனால் கைவளையல்கள், பொத்தான்கள், குடைகளின் கைப்பிடிகள் முதலியன செய்கிறார்கள்.

காஸ்டிக் லயிம் (Caustic lime) 100 பங்கு.
ஜலம் ... ... ... ... ... ... 30 பங்கு.
மக்னீஷியா (Magnesia) 2 பங்கு.
கால்ஷியம் கார்போனேட் (Calcium Carbonate) 16 பங்கு.
பாஸ்போறிக் ஆஸிட் திராவகம் (Phosphoric acid diluted) 75 பங்கு.
ஜிலாட்டின் (Gelatine) 15 பங்கு.
படிக்காரம் ... ... ... ... ... 5 பங்கு.

இவைகளை நன்றாகச் சேர்த்துக் கொண்டு எந்தெந்த விதமான சாமான்கள் செய்யவேண்டுமோ அந்த விதமான அச்சுகளில் வார்த்து எடுத்துக் கொள்ளவும்.

3. பயிர்களைத் தின்றுவிடும் புழுக்களைப் போக்க:—

உருளைக் கிழங்கின் கொடி இலை முதலானதைக் கொண்டு கஷாயம் வைத்து அதைச் செடிகளின்மீது தெளித்துவிட்டால் புழுக்கள் இறந்துபோம்.

4. ரப்பர் ஸ்டாம்புக்கும் எழுதுவதற்கும் இங்கி:—

நீலப்பவுடரை (Blue) எழுதுவதற்கு உபயோகித்தால் [illegible]டல்கள் [illegible]க்கிரம் கெட்டுப்போகாது. அதிகமாக ஜலம் சேர்த்துக்

கொண்டு வருகிறால் அந்த விசுவாசங்கள் அறிவதில்லை. குறைத்துக் கொண்டால் அதை யாவர் வேடாம்பு இவ்விரண்டும் உபயோகப்படுத்தலாம். பார்வைக்கு நன்றாயும் இருக்கும்.

5. பல்பொடி (கல்யாண முறை.)

கருவேலம் பட்டையைக் காயவைத்து இடித்துத் தூள் செய்து வெந்திரகாயம் பன்னீர் அத்துடன் 30-ல் ஒரு பாகம் படிக்காரமும் சேர்த்துக் கொண்டால் போதுமானது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்பது பழயகாலத்து வார்த்தை.

## சுவையான குறிப்புகள்.

இங்கிலீஷ் பாஷையின் எட்டு வார்த்தைகள் அடங்கிய ஒரு வாக்கியத்தில் அப்பாஷையின் 26 எழுத்துக்களையும் காணலாம்.
Pack my box with five dozen liquor Jugs.

ஒரு குழந்தையை நோக்கி உனக்குப் பிரியமான பொருள் எது என்று ஒரு பாதிரியார் கேட்டதற்கு, அது தன்னுடைய தாயாரின் கைகளைச் சுட்டிக் காட்டி அதுதான் எனக்குப் பிரியமானது என்று பொருள்பட பேசினதாம். அபிப்பிராயம் பிரயங்கோள். வயது பருவத்துக்குத் தக்கபடி எண்ணங்கள்.

எது சுலபம்? எது கஷ்டம்? உன்னை நீ அறிந்துகொள் என்று சொல்வது சுலபம். உன்னைத்தானே அறிந்துகொள்வது கஷ்டம்.

அசோகவனம் சிலோனில் நூவரா எலியா என்ற இடத்தில் இப்போதுமிருக்கிறது. அவ்வனம் தற்போது, இருண்ட சுனையான இடமாயும் கண்களுக்கு குளிர்மையான காட்சியைக் காட்டக் கூடிய பிரதேசமாயுமிருக்கின்றன. சீதா பிராட்டியார் மந்தசன் அமர்ந்த கல், குளித்த இடம், பாதத்தின் பதம் பட்ட இடம் இப்பொழுதும் காணலாம். இக்கலை சுப்பாறையுள்ளே பிருந்து வெள்ளி, செவ்வாய்க் கிழமையன்று மந்தான் அமர்ந்த கல்லிருடன் பூக்களும் அப்பாறைச் சுனையிலிருந்து வருகிறது. இதை அநேகர் பாவமாகவும் தீர்த்தமாகவும், அருந்துகின்றார்கள்.

பிரான்ஸ் தேசத்தில் பிரசுரமாகும் ஒரு வைத்தியப் பத்திரிகை, ரோகிகளுக்கு ஆகாரத்தில் உப்பைக் குறைத்து சிகிச்சை செய்வதால் சீக்கிரம் அநுகூலம் கிடைக்குமென்று சில



வைத்தியர்கள் அபிப்பிராயப் படுவதாகச் சொல்லுகிறது. இந்த அபிப்பிராயத்தை ஜர்மனிய வைத்தியர்கள் அங்கீகரிக்கத் தலைப் பட்டிருக்கிறார்கள். கறப்பான் வந்து அவஸ்தைப்படும் குழந்தைகளுக்கு உப்பை நாலில் ஒரு பாகமாகக் குறைத்து ஆகாரம் கொடுத்து வந்தால் ஒரு மாஸத்திற்குள் குணமாகி விடுமென்று கண்டு கொண்டிருக்கிறார்கள்.

நூர்ஜிஹான் இராணி.—ஒரு தார்த்தாரி தேசத்தானும் அவனது மனைவாட்டியும், அவ்விருவரும் தாமே வேண்டுமென்று விரும்பிச் செய்துகொண்ட கலியாணம் அவர்களுடைய சுற்றத்தாரொருவருக்கும் சம்மதமில்லாமலிருப்பது கண்டு வேறொரு தேசத்துக்காவது போய் கஷ்டப்பட்டு வாழலாமென்று ஆலோசித்து சுயதேசத்தைவிட்டு ஓடிப்போனார்கள். பலநாள் பயணம் அடவிகளில் திரிந்து கஷ்டத்தை யநுபவித்தனர். தாகத்திற்கு ஒரு சொட்டு ஜலமும் கிடைக்கப்பெறுமல் தாகவிடாயால் வருந்தி அவனது காதலி மூர்ச்சையாகி, அவ்வேளை வழியில் மரணமாகவும் முடிந்தது. இவ்விருவருக்கும் பிறந்த பெண் குழந்தை ஒன்றுண்டு. அது பாலில்லாமல் நடுக்காட்டில் யமனுடன் போராடிக் கொண்டு நிற்கிறது. அதன் தந்தையோ மற்றோரிடத்தில் விழுந்து சாகக்கிடக்கிறான். இந்த அநாதைக் குழந்தைதான் பிற்காலத்தில் ஜிஹாங்கிர் எனும் மகம்மதிய சக்கிரவர்த்திக்குப் பத்தினியாகி நூர்ஜிஹான் என்ற பெயருடன் விளங்கினள். இப்போது சிறந்த பரிமளத்திரவியமாய் எங்கும் வழங்குகிற பன்னீர் அத்தரென்பது இந்த நூர்ஜிஹான் கண்டு பிடித்ததுதான்.

---

## அச்சுக் கலப்பு.

ஒ ர க ரி ர ை
ம ஜ ர ா ன் த அ
ப த் ய ப வ ா ஜ் ரு
ர் ரா ம் இ ய ஜ ை ர ா
ே ப டு ர ா் த ா ஸ்ரீ ய க

இந்தியா தேசத்தின் பெயர்களை ஒருங்கே சேர்த்து அச்சுக்கோர்த்து வைத்திருந்ததானது அஜாக்கிரதையாய் கைதவறி இடறியதில் இப்படிக் கலைந்துபோய்விட்டது. இந்த எழுத்துக்களை ஒன்றாகச் சேர்த்து சிரமப்படுத்தினால் ஆறுவிதமான பெயர்களாகும். உல்லாசப் பிரியர்களுக்கு இது ஒரு ஸல்லாபமான நல்ல பொழுது போக்கு. சீட்டாட்டத்தைவிட இது நல்ல வேலை.

## ஆல்பரூனி என்ற அரபிக் கல்விமான்.

காஜினி மஹமத் என்ற மஹமதிய அரசன் 900 வருஷத்துக்கு முன்னால் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது, அந்த அரசனுடன் ஆல்பரூனி என்ற ஒரு அரபிக்கல்விமான் வந்து, அப்போது இந்தியாவிருந்த நிலைமையைப்பற்றி அநேக முக்கியமான சங்கதிகளை எழுதினதுமன்றி, ஹிந்துக்களுடைய சாஸ்திரங்களையும் கற்று, அரபிபாஷையில் மொழிபெயர்த்தார். ஆல்பரூனி இந்தியாவுக்கு வந்தகாலத்துக்கு முன்னாலேயே ஹிந்துசாஸ்திரங்கள் அரபிஜாதியாருக்குத் தெரிந்திருந்தன. கபில முனிவரின் ஸாங்கிய சாஸ்திரத்தையும் பதஞ்சலியின் யோக சாஸ்திரத்தையும் அரபிப்பாஷையில் அவர் மொழிபெயர்த்தெழுதியதை அந்த ஜாதியார் பார்த்து வியந்தனரென்று சொல்லப்படுகிறது. பகவத்கீதையிற் சொல்லப்பட்டிருக்கும் தத்துவங்கள் தம்முடைய சொந்த மதத்தின் கொள்கைகளுக்கு ஒத்தனவென்று ஆல்பரூனி சந்தோஷப்பட்டாராம். கிரீஸ்தேசத்தாரது மதத்தைப்போலவே ஹிந்து சாஸ்திரங்களால் போதிக்கப்படும் மதம் உள்ளதென்றும்; இந்த இரண்டு மதங்களும் தம் ஜாதியாரது மதத்தையொத்திருந்தன வென்றும்; உலகத்தில் எத்தேசங்களிலும் ஞானவான்கள் கடவுள் ஒருவரே, அவர் சிருஷ்டித்த மானிடர்க்கத்தார் சகோதரர் போன்றவர்கள் என்று கருத, பாமரஜனங்கள் கடவுளைப் பலவிதமாய் ஆராதிப்பதும் ஜனங்களைப் பலவேற்றுமையுடன் கருதுவதுமாய்ப் பிரிவுபட்டிருக்கிறார்களென்றும்; இந்தக் கல்விமான் தமது புஸ்தகத்தில் சொல்லுகிறாராம். தம்மை இந்தியாவுக்கு அழைத்துவந்த காஜினி மகமது இந்தியாவில் செய்த கொடுமைகளை ஆல்பரூனி ஒப்பவில்லை யென்று சொல்லப்படுகிறது. இவர் அப்போது இந்தியாவைப்பற்றி அரபிப் பாஷையில் எழுதின புஸ்தகம் இப்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு லண்டனிலுள்ள கீகன் பால் (Kegan, Paul, & Co.,) அண்டு கம்பெனியாரால் பிரசுரம் செய்யப்பட்டு 25 ஷில்லிங்குக்கு விற்கப்படுகிறது.



## ஜான் மில்ட்டன் என்ற மகாகவி.

ஜான்மில்ட்டன் என்ற ஆங்கில மகா கவி 1608-ம் வருஷம் டிசம்பர்-மீ 9-ம் தேதி லண்டன் நகரில் பிறந்தார். இவரது பிதா புராதன கிரந்தங்களில் நல்ல பாண்டித்தியமும், சங்கீத கியானத்தில் தேறின நுண்ணறிவும் படைத்தவர். "தந்தை எவ்வழி மைந்தரவ்வழி" என்பதாக 15 பிராயத்திலேயே மில்ட்டன் இரண்டு சங்கீதங்களைச் செய்யுள்களாக மொழிபெயர்த்தது மாத்திரமல்ல; ஒரு சிறு குழந்தை இறந்து போனதின்பேரில் "ஐயோ! பூக்குமுன்னே பொறிந்துபோன பூவே!!" என்றிவ்வாறாக ஒரு பாட்டும் பாடினார். இந்த மழலைப் பாட்டுகளிலும்கூட அவரது புத்தி தீக்ஷணியம் நன்கு தென்படுகின்றது. லத்தீன் பாஷையில் அவருக்குத் தீர்க்க பாண்டித்தியம் இருந்ததுமன்றி லத்தீன்பாஷை வாசகங்களை அர்த்தபுஷ்டியும், சத்த புஷ்டியும் அமைந்த அலங்காரம் மிகுதியா எழுதுவார். ஆகவே லத்தீன் பாஷையை பூர்வாசிரியர்கள் எழுதின சிறப்போடு தீஞ்சுவை கனிய, இழுக்குவழுக்கில்லாமல் செம்மொழியாய் எழுதின உத்தமாசிரியர்களுக்குள் ஆதியானவர் மில்ட்டனையொழிய மற்றொருவரல்ல என்று ஹாம்டன் கூறிய செய்தியாக ஜான்சன் பண்டிதர் சொல்லுகிறார்.

தற்காலத்தில் இத்தேசத்திலுள்ள கற்றோருக்குப் பேச்சும் புழக்கமும் அனைத்தும் இங்கிலீஷ் பாஷையிலே நடப்பதுபோல அக்காலத்தில் அந்தச் சீமையிலுள்ள கற்றோர்க்கு லத்தீன்பாஷை மூலமாய்த்தான் சகல வியவகாரமும் நடந்தேறினது. யார் என்ன நூல் எழுதினாலும் லத்தீன்பாஷையில்தான் எழுதுவார்கள். ஊர் நடபடிக்கை இப்படியிருக்க, மில்ட்டனார் லத்தீன்பாஷையில் ஒப்போரும் மிக்கோருமில்லை என்று எண்ணத்தகும் பாண்டித்தியம் தமக்கிருந்தாலும் தமது சுயபாஷையில் அபிமானமுள்ளவராய் 1627-ம் வருஷத்தில் விடுமுறை அப்பியாஸம் என்றொரு பாடல் எழுதித் தமது சுயபாஷையைப் போற்றினார்.

முகத்திலே திறந்தகண்ணும் நெஞ்சிலே இருத்திப் பொத்தின கருத்துமாக, 1638-ம் வருஷம், பாரிஸ், நைஸ், ஜினீவா,

பைசா, என்னும் நகர்களின்வழியாய் பிளாரன்ஸ் நகரத்துக்குப் போனார். சூரியன் பூமியைச்சுற்றி ஓடுகிறதென்று சாதித்ததற்காகச் சிறையில் வைக்கப்பட்ட பேர்போன கணிதசாஸ்திரியாகிய கலிலியோ என்பவரை காராக்கிருகத்தில் சென்று சம்பாஷித்தார். சிறையிலடைத்த அக்கிரம கொட்டியத்தைக் கடிந்துகொண்டார். இங்கிருந்து ரோம நகர்க்குஞ் சென்று கடைசியில் ஊர்த்திரும்பினார்.

இதன்பின் அவர் லண்டன் நகரில் ஒரு பள்ளிக்கூடம் போட்டுக் காலந்தள்ளிவந்தார். மில்ட்டனுக்குத் தாரம் மூன்று. புத்திரிகளும் மூவர். 1652-ம் வருஷத்தில் அவருக்குக் கண்ணொளி முற்றிலும் மங்கிவிட்டது. சரியான குருடனது நிலைமைக்கு வந்துவிட்டார். அப்பால் தமது பெண்களைக்கொண்டு தாம் செய்த கவிகளை எழுதச்செய்வார். ஒரு பேர்போன கண் வைத்தியன் ஒருவனைத் தருவிப்பதாக அவரது ஆத்ம நண்பர் ஒருவர் முயன்றகாலை அவருக்குப் பின்வருமாறு எழுதினார்.

நீர் சொல்லுகிற வைத்தியன் ஒருவாறு என் கண்ணை சொஸ்தப்படுத்தக் கூடியவராயிருந்தாலும், நாம் நமக்கு வைத்த பங்கு இவ்வளவு தான் என்று எண்ணி என் மனதைத் தேற்றிக் கொள்வதோடு * * * * * கடவுள் எனக்கு முன் நடந்து வழி காட்டி முன்னும் பின்னும் என்னைப்பிடித்து நடத்துகிறவரைக்கும் நான் ஸந்தோஷமாய் அவருடைய சித்தத்துக்கடங்கி என் கண்களுக்கு ரஜா கொடுக்க விரும்புகிறேன் என்றார். தாம் செய்த பூங்காவனப்பிரளயம் (Paradise lost) என்ற நூலின் முதல் இரண்டு காண்டங்களிலும், பாதாள இருளைக்குறித்து அதை விவரித்தபின் மூன்றாவது காண்டத்தில் பரலோக ஒளிக்கு ஏறி அதை விவரிக்கத் தொடங்குகையில், தமது கண்ணொளி மங்கினதைக் குறிப்பித்து, கல்லும் உருகத்தக்க குரலோடு அங்கலாய்த்து, தமது ஊனக்கண் ஒளிமழுங்கினாலும் ஞானக்கண் மிகத்தெளிந்து காணாத காக்ஷிகளைக்கண்டறிந்து விவரிக்கும்படி அருள்நேடிப் பரஞ்சோதியை நோக்கிப் பிரார்த்திக்கின்றார்.



"உயிரளிக்கும் உன்னொளியை விரைந்து நான் தேடிவந்தேன்
தேடிநான் அடையவந்தேன் நோய நீ எனது கண்ணை.
இமைத்திமைத்துச் சிமிழ்த்தாலும் எவ்வொளியும் காணாமல்
பாரிலே உழலுகின்ற பாவிகண் அவிந்து ஐயோ
விடியாத இருள்மூட விதியேயோ விதியேயோ!"

பரஞ்சோதி என்னெஞ்சில் புகல்போல நீ உதித்து
மனக்கண்ணின் தத்துவங்கள் மருள்நீங்கத் தெளிவித்து
மானிடரின் கண்ணுக்கு மறைவான இரகசியத்தை
கண்ணுள்ளோர் காட்சியைக் கடந்த மெய்க்கருப்பொருளை
கண்டு நான் விரித்துரைக்கக் காட்சிதாராய் உன் சரணம்!

அவரது பெண்மக்கள் அருகில் உட்கார்ந்து பூர்வநூல்களையும் மூலவேதாகமத்தையும் வாசிக்கச்சொல்லிக் கேட்டுக்கொண்டிருப்பார். இரவிலே கடவுள் தியானத்திலிருந்து, புறக்கண் மூடியிருந்தாலும் அகக்கண் தெளிந்து மனோதிருஷ்டியால் மண்ணையும் விண்ணையும் ஊடுருவப்பார்த்து பல்லலங்காரப் பண்போடு செய்யுள் அடிகளைச் செய்து திருத்தி மனதில் நிறுத்திக்கொண்டு பொழுதுவிடிந்தவுடனே தாம் சொல்லச்சொல்ல அவற்றை பிறரைக்கொண்டு; விசேடமாகத் தமது புத்திரியைக்கொண்டு எழுதுவித்து வருவதை வழக்கமாகப் பாராட்டலானார். இவரது நூல்களிலே ஒரு பதத்துக்கு அதே பொருளுள்ள மறுபதத்தைப் போட்டுச் சற்றே மாற்றினாலும் அல்லது ஓரடியின் பொருள்கோளை அணுவளவு திருப்பினாலும் செய்யுளுக்கு அலங்காரமாயிருக்கும் சுவை, ஓசை, இசை, இனிமை, அணி, அடுக்கு அனைத்தும் அடியற்று கவிப்பயன்கள் காணாத நாட்டுக்குக் குடியோடிப்போகுமென்று மகாகல்விமானாகிய மக்காலே (Lord Mecally) என்னும் பிரபு சொல்லியிருக்கிறார்.

சிறு பிராயமுதல் கல்வியில் நாட்டங்கொண்டு, சதாகாலமும் புஸ்தகமும் கையுமாய், இராக்கண் பகற்கண் விழித்துப் படித்தபடியால் இப்படிக் கண்ணொளிகுன்றிப்போயிற்று. கடைசியாக அவர் 1674-ம் வருஷம் நவம்பர்-மீ 8-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று பரமபதமடைந்தார். அவருடைய சரீரம் ஜைல்ஸ் தேவாலயத்தில் சேமிக்கப்பட்டது. மக்காலே பிரபு சொல்லுகிறபடி

[illegible]ட்டதுடைய பொரைக் [illegible]ட்டாலும் செவிக்கின்பம், கண்டா லும் கண்ணுக்கின்பம், அவருடைய கருத்துகள் கற்பகச்சோலை யிலிருக்க இறங்கிவந்த அமிர்த புஷ்பங்களையும், அமிர்தக் கனி களையும் [illegible], மனதுக்கு சந்தோஷமாயும், உயிருக்கு சஞ்சீவியாக [illegible] இருக்கின்றது.

பொ[illegible] காவல் [illegible] பொல்லாத [illegible]
என்ன[illegible] என்னைக்க எத்தனையாய் என்னையே[illegible]
[illegible] எனை [illegible] ஆபத்துகள் எனைச்சூழ்ந்து
[illegible] [illegible] யாக அடியேன் கிடந்தாலும்
எப்[illegible] என்றாரே! என்கவியை [illegible]
என்சவ்வை [illegible]ர்கள் இமமாகக் கற்பதற்கு
[illegible] படித்தாலும் [illegible] படிக்க வைப்பாய்!

—:0:—

# சிற்றுயிர்மேல் அன்பு பாராட்டல்.

[illegible]ணிலும் பற்பல் மடங்களும் கோபுரமும்
[illegible]லும் சாலையும் சோலையும் பார்க்கலாம்
[illegible]னிலும் சிற்றுயிர் மேல்வைக்கும் அன்பையே
[illegible]லும் பூமியில் பார்ப்ப தரியதே!

எந்த [illegible] மெய்பொருள் அஞ்செய்து
வந்த [illegible]ன்பங்கள் மாற்ற உயிர்தரும்
இந்த [illegible] பீசன் படைப்போ! [illegible]
[illegible] பத்தைத் தடுத்தலும் நீதியோ?

[illegible] வில்லெனிற் பாரில்லை; இல்லை
[illegible] புல்லெனிற் காலுந் [illegible]
உடையில்லை யாடின்றேல், [illegible] உண்டோ
[illegible] குதிரை இன்றேல் [illegible].



# குழந்தைகள் பக்கம்.

## சமுத்திரம் உப்பாயிருப்பதேன்!



நாம் வசிக்கும் பூமியைச் சுற்றிலும் கடல் சூழ்ந்திருக்கின்றதென எல்லோரும் அறிவோம். நவீன சாஸ்திரப்படிக்கன்றி பூர்விக கிரந்தங்கள்கூட இந்த தேசத்தை ஜம்புத்தீவு என்று கூறுகின்றன. நாம் விசேஷகாலங்களில் செய்துகொள்ளும் சடங்குகளுக்கு ஆரம்பம் செய்யும்போது, அதாவது சங்கல்பம் செய்யும்போதுகூட ஜம்புத்வீபே என்று சொல்லுகிறோம். இதனையேதான் தமிழறிஞர்கள் 'நாவலந்தீவு' என்[illegible]. தீவு என்பதெல்லாம் நான்குபுறமும் நீர் சூழ்ந்த பூமியைத்தான் சொல்லுவது. ஒருபுறம் நீர் சூழாமலிருப்பின் அதனை தீபகற்பம் என்று சொல்லப்படும். ஆகையால் நிலமுழுமையும் நீரால் சூழப்பட்டே இருக்கின்றது என்பது சித்தாந்தம். அன்றியும் நீர் கடினமாகத்தான் நிலமாகும்.

இப்படிச் சூழப்பட்ட நீருக்கு சமுத்திரமெனப் பெயரேற்பட்டிருக்கிறது. இச்சமுத்திரத்திலுள்ள நீர் எத்தன்மையது என்று எவரைக்கேட்டாலும் உவர் நீரெனத் தடையின்றி விடை கூறுகின்றனர். அப்படி இருப்பதற்குக் காரணமென்னவென்று விசாரித்ததுண்டோ? அதனையறியவேண்டியது அவசியமன்றோ? [illegible]னெனில் இவ்வளவு பெரிய பூமியைச் சூழ்ந்திருக்கும் நீருக்கு உப்[illegible] [illegible]டுதல் சாத்தியமன்று. முதலாவது சமுத்திரத்தைத் தோண்டுதல் [illegible] இயலுமோ? தோண்டி நீர்விட்டு அதற்குப்பிடுதல் சாத்தியமோ? ஆகையால் இவ்வுப்பு எப்படி உண்டாயிற்று என்று விசாரிப்போம்.

சாதாரணமாக பூமியில் பலவித மண்களிருக்கின்றன. அவைகளில் இத்தனைவகைக்குத் [illegible] இன்னவிதமாக இருக்குமென [illegible] ஏற்பட்டிருக்கிறது. இதற்கு பூகர்ப்பசாஸ்திரம் (Geology) எனப்பெயர். இதன்படிதான் [illegible] பொழுது இன்னின்னவிடங்களில் வெள்ளி, தங்கம், இரத்தினம் நிலக்கரி, இரும்பு முதலியவைகளிருக்கின்றனவெனச் சொல்லப்படுகின்றது. இதேபோல் பூமி

மட்டத்தின் கீழ் ஒரு பாகத்தில் உவர்மண் இருக்கின்றது. அதனுடன் பூமியின் ஜலம் சம்பந்தப்பட்டே இருப்பதாலும், பூமிக்கு சிறு துவாரங்கள் இருப்பதாலும் இவைகளின் வழியாய் இந்த உப்புஜலத்தில் கலக்கிறது. சிலர் பூமிக்கு சிறு துவாரங்களிருக்கின்றன வென்றமாத்திரத்திலே நகைக்கக்கூடும். சாதாரணமாக தரையில் நீரோ எண்ணெயோ விழுமானால் அந்த இடத்தில் ஜலம் தங்காது மண்ணுடன் கலந்ததைக் காண்கிறோம். அதைவிட்டு பொன் வெள்ளி இரும்புமுதலிய உலோகங்களினாலாகிய தகடுகளின்மேல் விடுவோமானால் விட்டது விட்டபடியே நிற்கக்காண்கிறோம். ஆகையால் பூமிக்கு தன்னுள் கிரகிக்கும் சக்தி இருக்கின்றது. அதற்குச் சிறு துவாரங்களிருக்காவொழிய உள் செல்லுதல் கூடாதகாரியமெனச் சொல்லாமலே தெரிந்த விஷயம். அதுவன்றி பூமியின் மேற்பரப்பில் உப்புக் கரியப்பார்க்கிறோம். ஆகையால் உப்புக் கசிவும் குன்றுமன்றி. இது கசிந்து சமுத்திரத்துடன் கலக்கிறது.

இதுவுமன்றி சாதாரணமாக மழைக்காலங்களில் நல்ல ஜலமாகவிருக்கும் ஒரு தடாகம் வெயில்காலத்தில் சற்று கரிப்பாகக் காண்கிறோம். கரிப்பாகவிருப்பதென்றால் சற்று உவர்ப்புத்தானே? இதே மாதிரியொரு ஆழமான தடாகத்தை வெகு காலம் சூரிய வெப்பத்திற்கு விடுவோமாயின் அது கரிப்பு அதிகமாகுமன்றோ? ஆகையால் இயற்கையில் உஷ்ணத்தால் கரிப்பு உண்டாவதுடன், கீழிருந்து பூசாரத்தாலும் உப்பு சேருமாயின் அந்த நீர் உப்பாயிருக்க என்ன தடை?

ஆயினும் எவ்வளவோ நல்ல ஜலம் வந்து எவ்வளவோ கலக்கிறதே, அப்பொழுது உப்பு மாறுகிறதென்றால், ஆம், உண்மைதான், நீ நல்ல ஜலம் கலக்குமிடத்திற்போய் ஜலம் எடுத்து ஒன்றிரண்டு நாள் கழித்துப் பார்ப்பையாயின் நல்ல ஜலமாகத்தான் சமுத்திர நீரும் காணப்படும். அப்படி அமோர் இந்த ஜலம் வேகத்துடன் செல்லும் பாகங்களாயில் காணப்படும். அதற்குமேல் உப்பாகத்தானிருக்கும். இயற்கையிலுண்டாகும் உப்பை நீக்குதல் இயலாதகாரியமன்றோ?

ஸ்ரீ எஸ். சோமசுந்தர தேசிகர்.



## பிஷப் சானிங்கு.

இவர் ஒரு பெரிய பாதிரியார். சிறந்த குணக்ஞர். அதிகமான ஆராய்ச்சி செய்திருக்கிறார். நமது கிறிஸ்துவ ஸகோதரர்கள் அநேகர் தாங்கள் ஆலயத்துக்குச் சென்றுவருவதை ஒரு கடமையாகக்கொண்டிருக்கின்றனரே தவிர, தங்கள் மனதை நல்வழியிற் செலுத்தி ஞானமடையவேண்டுமென்கிற முக்கியமான விஷயத்தைக் கவனிக்கத் தவறிப்போய்விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உபயோககரமாயிருக்க பிஷப் சானிங்கு கூறியிருப்பதை அடியில் உதஹரித்திருக்கின்றோம்.

உன்னுடைய மனதை நீ நல்லவழியில் திருப்பாதவரை ஏசுநாதராயினும் அல்லது வேறுயாராயினும் உனக்கு இவ்வுலக சுகத்தையாவது அல்லது பரலோக சுகத்தையாவது கொடுக்கமுடியாது. உன் மனம் நல்லமனமானால் உனக்கு சகல சுகங்களுமுண்டாகும். இல்லையேல், நீ இயேசு இயேசு என்று எத்தனை முறை கதறினாலும் பிரயோஜனப்படாது. ஏசுநாதர் என்னை ரக்ஷிப்பார் என்று பேசுவதில் சிறிதேனும் பலனில்லை. உன்னை நீதான் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். உன் மனதை நல்வழியில் திருப்பி யாருக்கும் தீங்கு செய்யாமலிருந்தால் உனக்கு எல்லா சுகங்களும் கிடைக்கும்.

## உற்றுப்பார்த்தால் உண்மை விளங்கும்.

### எழுத்து மாற்றுச் சொற்கள்.

எழுத்து மாற்றுச்சொல்லாவது ஒரு சொல்லிலுள்ள எழுத்துக்களை மாற்றி வேறுவிதமாகக் கோப்பதனால் உண்டாகும் மற்றொரு சொல்லாம். இதனடியிற் கண்ட சொற்களிலுள்ள உயிர்களையும் மெய்களையும் பிரித்துத் தக்கவாறு கோத்தால் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பிரசித்தமான பறவையின் பெயராகும். ஏற்றவிடத்தில் நகரத்தை ணகரமாகவும் ணகரத்தை நகரமாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1. மாக்க. | 6. ருதரு. | 11. மேழா. |
| 2. தாலை. | 7. மீயல். | 12. கர்விருரு. |
| 3. புதாகர். | 8. கவிபு. | 13. பாடிமனான். |
| 4. துரிகவா. | 9. கயன். | 14. புகழுருர். |
| 5. கதிகர். | 10. டாகை. | 15. மாலை. |

இந்த அப்பியாஸம் இலக்கணப்பயிற்சிக்கு மிகவும் பிரயோஜனகரமானது. உடனே விடை எதிர் பார்க்கும் சோம்பேறிகள் சில பக்கங்களுக்கு அப்பால் காணலாம்.

### 2. கணித வினா.

ஒரு மனிதனிடத்தில் அநேகம் பழங்கள் இருந்தது. அப்பழங்களை

2-பங்கு வைத்தால் 1-மீதி.
3-பங்கு வைத்தால் 2-மீதி.
4-பங்கு வைத்தால் 3-மீதி.
5-பங்கு வைத்தால் 4-மீதி.
6-பங்கு வைத்தால் 5-மீதி.
7-பங்கு வைத்தால் 6-மீதி.
8-பங்கு வைத்தால் 7-மீதி.
9-பங்கு வைத்தால் 8-மீதி.
10-பங்கு வைத்தால் 9-மீதியானது.

11-பங்கு வைத்தவுடன் மீதியில்லாமல் சரியாயிருந்தது. அப்படியானால் அவனிடத்தில் இருந்த மொத்தப் பழங்கள் எத்தனை?

ஸ்ரீ மா. வே. சோலைமுத்து ஆசாரி.

---

## நேத்திர ஸம்ரக்ஷணம்.

கண்கள் சோர்வடைந்திருக்கும்போதும் வெளிச்சம் குறைவாயும் அல்லது அதிகமாயிருக்கும்போதும் திருஷ்டித்துப் பார்ப்பது பிசகு. 2. நாம் படிக்கும்போதும் எழுதும்போதும் விளக்கு வெளிச்சம் இடது புறத்திலிருந்து வரும்படி வைக்



வேண்டும். 3. படிக்கும் அறை குளிர்ச்சியாயும் நமது காற்றோட்டமாயும் கழுத்து தாராளமாயும் வைக்கவேண்டும். 4. படிக்கும் புஸ்தகம் கண்களுக்கு 15-அங்குல தூரத்தில் நேராக இருக்கவேண்டும். வண்டியின்மேல் பிரயாணம் செய்யும்போதும் படுத்திருக்கும்போதும் படிக்கலாகாது. 15-அங்குலத்துக்கு மேற்பட்டால் தூரதிருஷ்டியும் குறைந்தால் ஸமீபதிருஷ்டியும் உண்டாய் நேத்ர ரோகங்கள் ஏற்படும். (6) காலையில் சாப்பிடும் முன் எழுதுகிறதாவது படிப்பதாவது அல்லது வேலைசெய்வதிலாவது கண்களை உபயோகப்படுத்தக்கூடாது. (7) வியாதிக்காரனயிருந்து ஆரோக்யமடைந்தவேளையில் நேத்ரங்களை உபயோகிப்பது பிசகு. (8) விநோதார்த்தம் கண் முழிகளைத் திருப்பக்கூடாது. (9) கண்களுக்கு தூரதிருஷ்டி அல்லது ஸமீபபார்வையுண்டாயிருந்தால் தக்க சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். (10) நடக்கும்போது திருஷ்டியை தூர உபயோகிப்பதும் அடிக்கடி மாற்றுவதும் நேத்திரத்துக்கு அபாயம். (11) கண்ணீர் வரும்படியான காரியங்களைச் செய்யக்கூடாது. (12) கடுமையான நோய்கள் வந்தபோது உத்தமனான நேத்திர வைத்தியனிடம் காட்டவேண்டும். (13) அஞ்சனம், கலிகம், முதலியவைகளை உபயோகிப்பது தவறு. (14) நித்திரையிலிருந்து எழுந்தவுடன் அதிக வெளிச்சத்தைப் பார்க்கக்கூடாது. ஒரு வெளிச்சத்துக்கு இன்னொரு வெளிச்சத்தைக் கிரகித்துக்கொள்வதற்கு சக்தியுண்டு. சூரியனை நமது கண்கள் கண்டவுடன் தமது பிரகாசத்தை சூரியனிடம் பறிகொடுத்து விடுகின்றது. நமக்கு அப்போது பார்ப்பதெல்லாம் இருட்டாகவே தோன்றும். பிறகு கண் பழையபடி தனது பிரகாசத்தை அடைகிறது. (15) நிர்மலவாயு சஞ்சாரமில்லாத அறைகளிலும், ஆகாரமில்லாததாலும் அதிக போஜனத்தாலும் கண்களுக்கு நோயுண்டாகும். (16) மெகசீர் கண்களில் இறங்கி அதுகாரணமாகவும் பார்வை கெட்டுவிடும். இதற்கு சிகிச்சை:— ஒரு தோலா அபின், ஒரு விசாடம் எள்ளெண்ணெய், புளியிலைச் சாறு ஒரு படி, எண்ணெயையும் சாற்றையும் கலந்துகொண்டு அதில் அபினியைக்கரைத்துவிட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். அபின் வாசனையுண்டானதும் அது பக்குவமாகக் காய்ச்சி

ணத்திற்கு அடையாளமென்று கண்டுகொண்டு இறக்கி ஆறவைத்து தாம்பிரபாத்திரம் நீங்கலாக வேறெதிலேனும் பத்திரப்படுத்திக்கொள்ளவும். வாரத்துக்கு மூன்று தடவை காலைஸ்நானம் நல்லது. நன்றாக வறவேண்டும். ஸ்நானம் செய்த தினம் புளி மட்டும் நீக்கிப் பத்தியமிருக்கவேண்டும். இது அநுபவ முறை. (17) பிரமேக ரோகத்தில் நீர்த்தாரையிலிருந்து வெளிப்படும் ஜலம் முதலியவற்றில் கைபட்டிருந்தால் நன்றாகக் கழுவவேண்டும். அந்தக்கை கண்களில் பட்டால் அத்தூர்நீர் கண்களில் இறங்கி கண்ணைக் கெடுத்துவிடும். (18) அன்றன்று ஸ்நானம் செய்து கொண்டபிறகுதான் வெளிப்படவேண்டுமென்ற கட்டுப்பாடும், வாரத்திற்கிரண்டு முறை எண்ணெய் ஸ்நானமும் நேத்திரஸம்ரக்ஷணத்திற்கு நல்ல மார்க்கங்கள். "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணிபனுக்குக் கொடு" என்று பெண்களும் சொல்லுவார்கள். ஐயோ! கண்ணில்லாதான் வாழ்க்கை எத்தனை பரிதாபகரமானது? அவனுக்கு இவ்வுலக ஸுகம் ஏது? பால்யம், யௌவனம் இவற்றின் பலத்தால் உடனே கண்களுக்குக் கெடுதி நேரிடாதிருக்கலாம். ஆனால் பிறகு வட்டியும் முதலுமாக வாங்கப்படுமென்பதை மனதிற்கொள்ளுங்கள். இராக்கண் பகற்கண் விழித்துப் படித்துத்தான் ஜான் மில்ட்டன் இரு கண்களும் கெட்டுக் குருடானார். படித்தாயிற்று? படித்ததைத் தெரிந்து கொள்ளுங்கள்.

---

## அச்சுக்கலைப்பு.

(விடைப்பொருள்.)

வெள்ளையொரு காகிதமும் பென்சலும் எடுத்துக் கொள்ளுங்கள். முன் பக்கத்தில் கண்ட "அச்சுக்கலைப்பு" என்பதிலுள்ள எழுத்துக்களைக் காகிதத்தின் மேலே எழுதிக்கொண்டு அதற்கு அடியில் பின்வருகிறபடி எழுதுக:—



| | |
|---|---|
| 1. பாரதம். | 4. பாரத வருஷம். |
| 2. இந்தியா. | 5. ஆரியா வர்த்தம். |
| 3. ஜன்ம பூமி. | 6. பரதகண்டம். |

அச்சுக் கலைப்பில் ஒரு (ப) என்கிற எழுத்தையும், விடைப் பொருளில் ஒரு (ப) என்கிற எழுத்தையும் எடுத்துக் கொண்டு இரண்டையும் பென்ஸலால் அடித்துவிடுங்கள். இப்படியே இரண்டு (ம) இரண்டு (ய) இவ்விதமாக எல்லாவற்றையும் அடித்துவிட்டுப் பார்த்தால் இங்கே காட்டியிருக்கும் 6 பெயர்களுக்கும் அச்சுக் கலைப்புக்குமுள்ள பொருத்தத்தை யறிந்து கொள்ளலாம்.

—:o:—

## துணி நெசவுத் தொழில்.

மனிதர்களின் அவசியப் பொருள்களுக்கேனும், போக வஸ்துக்களுக்கேனும், பயன் படக்கூடிய கைத்தொழில்களிலே நெசவுத் தொழிலைப்போல, அத்தனை புராதனமானது வேறொன்றுமில்லை. "கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே நெசவுத்தொழில் இந்தியாவில் மிகுந்த உன்னத நிலை பெற்றுக் கீர்த்தியுடன் விளங்கிற்று. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிலேயிருந்த நெசவு முயற்சியின் நிலைமையைப்பற்றி கிரேக்க சரித்திரக் காரரொருவர் குறிப்பிட்டிருக்கின்றாராயினும், அதற்கு முன்னாகவே எண்ணற்ற காலமாக இந்நாட்டில் இக் கைத்தொழில் நடைபெற்றுவந்த தென்பதற்கும் பல அத்தாக்ஷிகள் இருக்கின்றன. எனினும் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்பட்டுத்தான் சில, அருகி தேசங்களுக்கு அத்தொழில் பட்டதாயிற்று என்பதாக பருத்தித்தொழில் வளர்ச்சியை ஆரம்ப முதல் கற்றுத்தேர்ந்தவராகிய பேய்ன்ஸ்(Bains) பண்டிதர் சொல்

வியிருக்கின்றார். ரோம் நகரத்தார் இந்தியாவிலிருந்து கொண்டு
வந்த வஸ்துக்களிலே பஞ்சு வஸ்திரத்தையும் சேர்த்து, ஏரியன்
(Arrian) புராதன சரித்திரக்காரர் பேசியிருக்கின்றார். நமது நாட்
டில் முற்காலத்திலே நெசவுக்கு உபயோகப் படுத்திவந்த கருவி
கள் நாகரீக மற்றனவாயும், முரடாயும் அன்னியர்களால் கருதப்
பட்ட போதிலும், இன்றுவரை ஐரோப்பியர்கள் எவ்வித யந்தி
ரங்களினாலும் நமது முன்னோர்கள் செய்த துணிகளைப்போல
அத்தனை நயங்கொண்ட, அழகிய துணிகள் செய்ய முடியவில்லை.
சில நூற்றாண்டுகளின் முன்பு இந்தியாவை வந்து பார்வையிட்ட
"ஓரம்" என்ற பண்டிதர் பின்வருமாறு எழுதுகிறார்.

"பட்டணங்களை விட்டு கிராம வாசங்களிலே போய்ப்பார்த்
தால், ஆண், பெண், குழந்தை அடங்கலாக எல்லா ஜனங்களும்
நெசவுத் தொழில் நடத்திவராத கிராமம் ஒன்றேனையும் காண
வில்லை" என்கிறார். டக்கா மஸ்லின்களின் கீர்த்தியைக் கேட்டறியா
தோர் ஒருவருமில்லை. புலவர்கள் அந்த வஸ்திரங்களைக் "காற்றால்
நெய்யப்பட்ட வஸ்திரங்கள்" என்று கற்பனை செய்து புகழ்ந்தார்
கள். சென்னை மாகாணப் பிரதேசத்திலேயும் நேர்த்தியான துணி
வகைகள் செய்யப் பெற்று வந்தன. மசூலிப் பட்டணத்தின் கா
லிகோத் துணிகள் இணை சொல்லமுடியாது விளங்கின. சூரத்திலே
முரட்டு வஸ்திரங்களும் புடவைகளும் ஏராளமாகச் செய்யப்பட்
டன. பாட்னா (பாடலீபுத்ர) நகரத்திலே உயர்தரமான மேஜை
வஸ்திரங்கள் செய்யப்பட்டன. ரிற்பாடு யந்திரங்கள் கண்டுபி
டித்து கைத்தொழில்களில் உபயோகமாகத் தொடங்கவே தொ
ழில் முறையின் தன்மை முழுதும் மாறுபாடடைந்து விட்டது.
இதுவரை முயற்சியையே பெரும்பாலும் பற்றி நின்ற தொழில்
களெல்லாம், பணமுதலின் அளவைப் பொறுத்து நிற்கலாய் விட்
டன். பதினெட்டாம் நூற்றாண்டிலே கூட இந்தியா, ஐரோப்பிய
தேசங்கள் பலவற்றைக் காட்டிலும் கைத்தொழில்களிலே சிறப்பு
மிஞ்சி நின்றது. முக்கியமாகப் பஞ்சு வஸ்திரங்கள், பட்டு வஸ்தி
ரங்கள், உலோகத் தொழில்கள் முதலியவற்றுக்கு இந்தியாவே
மேற்கு நாடுகளுக்கெல்லாம் வழி காட்டியாகவும், அன்னையாகவும்



விளங்கிற்று. 1708-ம் வருஷத்திலே டீபோ (Doford) என்ற ஆங்
கிலேய நூலாசிரியர் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குத் துணி
கள் வந்து நிறைவதைப் பற்றி முறையிட்டெழுதியிருக்கிறார்.
அக்காலத்திலிருந்த ராணியும், பிரபு குடும்ப ஸ்திரீகளும், இந்தி
யாவிலிருந்து காலிகோ வஸ்திரங்களும், மஸ்லின்களும் தருவித்து
உடுத்துவதே பெருமையாகக் கொண்டிருந்தார்கள். திரைகள்,
படுக்கை வஸ்திரங்கள் முதலியவைகள் அங்கிலேய ஸ்திரீகளுக்கு
இந்தியாவிலிருந்துதான் சென்று கொண்டிருந்தன.

இந்தியாவின் பூர்வகாலத்து அபூர்வ நெசவுகளைப் பற்றிப்
பேசி வருங்காலத்து ஓர் ஐரோப்பிய துரை பின்வரும் விநோத
மான சமாசாரம் தெரிவிக்கிறார்:—

"4 அல்லது 5 நூற்றாண்டுகளின் முன்பெல்லாம் தோல், ச
ணல், ஆட்டுரோமம், பட்டு என்பவற்றால் செய்யப்பட்ட உடைக
ளையே தரித்து வந்தனர். அவர்கள் பருத்தியைப் பார்த்ததே
கிடையாது. ஆனால் அக்காலத்தில் ஏஷியா கண்ட யாத்திரை செய்
து வந்தவர்களெல்லாம் "ஏஷியாவில் பருத்திச்செடி என்பதாக
ஓர் அபூர்வச் செடி இருக்கிறது. அதன் பழத்திலே ஆட்டு ரோ
மம் போன்ற ரோமம் உண்டாயிருக்கிறது" என்று விநோதக்
கதைகள் சொல்வதுண்டு. அக்காலத்துப் பழம் புத்தகங்களில்
இச்செடியின் வர்ணனைகள் செய்யப் பட்டிருப்பதுடன் பருத்திச்
செடியின் சித்திரங்களு மெழுதப்பட் டிருக்கின்றன. இச்சித்தி
ரமெழுதினோர் தமது ஜன்மத்திலே பருத்திச் செடியைக் கண்ட
தில்லை. சொந்த யுக்தியைக் கைக்கொண்டு தான் சித்திரம்
வரைந்தார்கள். மேற்படி செடியின் காய்கள் சிறு சிறு ஆடுகள்
போலத் தொங்குவதாக மேற்படி புத்தகங்களிலே சித்திரிக்கப்
பட்டிருக்கின்றன!" என்கிறார். புராதன நிலைமை இவ்வாறாக,
அதனுடன் தற்கால நிலைமையையும் வைத்து ஒப்பிட்டுப் பாருங்
கள்!

# நித்திய பிரார்த்தனை.

ஓ! அருள் நிறைந்த கடவுளே! நின்னை யணுகி நின்து சாந்நித்திய வைபவத்தை யுணர அருள் புரிவாய். ஓ பேரொளியே! பெரு நட்பே! எங்கும் நிறைகின்ற பொருளே! நீ எமது கண்ணுக்குப் புலப்படுகிற யாவற்றிலும் வியாபித்து எமதுள்ளங் குடி கொண்டிருக்கின்றனை. நினதருள் விலாச முகாரவிந்தம் எங்கும் ஒளி வீச, நின் கருணை ஹஸ்தங்கள் எவற்றையும் சூழ்கின்றன. நினது ஸர்வ வியாபக சித்விலாசத்தில் எமதான்மாக்கள் லயமாகி நின் தெய்விகத்தையும், பரிசுத்தியத்தையும், உணர்ந்திடவும் பிரதி துராசையும், உலக வாஞ்சையும் ஒழிய எமதுணர்வும், கருத்தும் உன் பாதாரவிந்தங்களையே பற்றும்படிக்கும் உதவி செய்வாய். உனது சந்நிதியில் யாங்கள் அடையுமானந்தம் க்ஷணமாத்திரையுடையதாகாமல் எமது வாழ்நாள் முழுமையும் உடையதாகி என்றும் நின்னை எங்களுக்குப் பிரியப்படுத்துவதாக. என்றும் எம்மை நின் ரக்ஷணைச் சாயையிலிருத்தி முள் நிறைந்த உலக வழியில் எம்மைத் தீமை யணுகாது நடாத்தாய். துக்கமும், துன்பமும் உற்றுழி எமக்கு உற்சாகமாவாய். இவ்வுலக இருள் தன்னில் எம்தொளியாய் நில்லாய். இவ்வுலக மோகங்களினின்றும் இன்பங்களினின்றும் எம்மைக் காக்கும் ஒப்பற்ற உன்னத கவசமும் நீயே. எம்முள் பரஸ்பர நேசத்தையும் அன்பையும் வளர்த்தி, எமது வியவஹாரங்களனைத்தையும் உசிதப்படுத்தி யாங்கள் நிஷ்களங்க சகோதர வாஞ்சையை அடைய வருளாய். நின் திருவுள்ளத்திற் கிசைந்த நன்மை செய்வதில் யாங்கள் ஒருவரை யொருவர் நேசித்துப் பரலோக நித்திய நிர்மல ஆனந்தங்களை யடைய முயல்வோமாக.

ஓ அன்புள்ள பிதாவே! என்றும் எம்முடனிருந்து எமது நட்புக் கோணாது வளரும்படி கிருபை செய்வாயாக. யாவரும் ஸமயாதீத ஸத்திய மார்க்க ரக்ஷணையைப் பெறுவாராக. உன் திருநாமமும்ருதம் ஒவ்வொரு நாவும் தெவிட்டாது நுகர அவ்வவர் அகத்தில் நீ குடிகொள்வாயாக. சர்வ சாம்பிராஜ்ய நித்திய பிரபுத்துவம் நின்னுடைய தென்று யாமுணர்வதாக. ஓம் தத்ஸத்.



# கணிகையரது கபடஜாலம்.

ஒரு கணிகைக்கு இரு உபநாயகர்களிருந்தனர். அவர்களுள் ஒருவனுடன் ஸல்லாபித்து நிற்குஞ் சமயம் அவனிருப்பதறியாத இன்னொருவன் இவர்களிருக்கும் அறைக்குவருகிறான். அவனது காலடி ஓசையைக் கவனித்த விலைமாது, தன்னுடன் ஸரஸித்துக்கொண்டிருந்தவனின் கண்களை ஒருகையால் மூடிக்கொண்டு இன்னொருகையால் வந்தவனுக்குப் பிரியமானவள் போன்ற சைகை உணர்த்திக் கட்டிலின் கீழ் பதுங்கிக் கொள்ளும்படி தூண்டுகின்றாள். இனிக் கட்டிலின் மேல் ஸரஸித்து நின்ற புருடன் கண்களைப் பொத்தியதற்குக் காரணம் கேட்கின்றான். ஒரு பிராயத்துக் கண்ணாமூச்சி விளையாட்டு ஞாபகம் செய்த வேடிக்கையென்று கூறி நிகழ்ந்ததை மறைக்கின்றாள். இதையே இச்சித்திரத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.

ஒருத்தி ஒருவனிடம் அன்பு பாராட்டினால் அந்த அன்பு உள்ளன்பாயும் கபடமற்றதாயும் பரிசுத்தமுள்ளதாயும் இருக்கலாம். அந்த அன்பை இருவரிடத்துக் காட்டும்போது ஒருவித கபடகுணம் அவள் மனதில் உற்பத்தி பெறுகிறது. இதற்கு உதாரணம் தேவையானால் இரண்டு பெண்டாட்டிக்காரன் கதையை எடுத்துக்கொள். ஒரு மனைவியுடன் கூடி வாழ்ந்தபோது இருந்த பரிசுத்தமான எண்ணமும் களங்கமற்ற அன்பும் இப்போது அவனிடம் காணப்படுகிறதா என்பதை நன்றாகக் கவனித்துப்பார். எத்தனை பொய் இருவரிடத்தும் சொல்லுகிறான். எத்தனை கபடங்களை மனதிலிருந்து உண்டாக்குகிறான். அப்படிப்போலவே இரு புருடர்களை உபநாயகர்களாகக் கொண்டுள்ள பெண்ணும் கபடத்துடன்தான் இருப்பாள். இரண்டு பெண்டாட்டிக்கே புருஷன் சங்கதி இப்படியானால், எண்ணிக்கையில்லாத புருஷ சம்பந்தங் கொண்டுள்ள ஒரு பெண் எத்தனை ஆட்களிடத்தான் தனது அன்பைக் காட்டப்போகிறாள். அப்படி அன்பு காட்டத்தான் அவளிடம் அன்பு எங்கே இருக்கப் போகிறது? சட்டியில் மாவு இருந்தாலல்லவோ அகப்பைக்கு வரும். பல புருஷ சம்பந்தமுள்ள மாதர்கள் என்னமோ அன்பு காட்டுவதில்லைதான், அன்பு காட்டவும் அவர்களால் முடிகிறதில்லைதான். ஆனால், அவளிடத்து இந்த புத்திக் குறைவுள்ள ஆடவர்கள் ஆரம்ப காலத்திலே வைத்துவிடுகிற பலமும், உறுதியுமான அன்பானது, அவர்கள் ஆயிரம் விகற்பம் செய்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாதிருக்கும்படி செய்துவிடுகிறது.

இதைப்பற்றி வேறொருமாதிரியாக நீதிநூலில் சொல்லப் பட்டிருக்கிறது. அதுவும் இந்த சந்தர்ப்பத்துக்குப் பொருத்த முள்ளதா யிருத்தலால் கீழே பதிப்பித்திருக்கிறோம்.



வண்ணமல ரமளியின்மே லிருக்கையிலோர் பரபுருடன் வரவு [நோக்கிப்]
பண்ணமரு மொழிமின்னாள் விளையாடல் போற்றன்னைப் பது [மத்தாலேன்]
கண்ணாதனை மூடிவிடேனென நகைத்தாள் வேற்றொரார் கள்ளி [யென்றேன்]
கண்ணாடிபோற் றிகழுமென்றன் கபோலமதி லுன்னுருவைக் [கண்டாயென்றாள்.]

அழகிய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட மெத்தையின் பேரில் நானும் என்னுடைய நாயகியும் இருக்கும் பொழுது மற்றொரு பரபுருஷன் வருவதைக் கண்டு, வீணைவாத்தியத் தொனியுள்ள அந்த விலைமாதானவள், விளையாடுவது போலத் தன்னுடைய தாமரைப் புஷ்பத்துக் கொப்பாகிய கைகளினால் என்னுடைய கண்களை மூடிக்கொண்டு விடமாட்டேனென்று சிரித்தாள். அடி கள்ளி, இங்கு வந்த வேற்று மனிதன் யாரென்று கேட்டேன்; ஒருவருமில்லை; கண்ணாடியைப் போல் பிரகாசிக்கிற என்னுடைய கன்னத்தில் உன்னுடைய ரூபத்தையே கண்டாயென்றாள்.



## சமயோசிதந் தெரியாத ஓர் வித்வான்.

திரவியாபேக்ஷையால் தேசசஞ்சாரம் செய்துகொண்டிருந்த ஓர் வித்வான் அதிக தனவந்தரான ஓர் பிரபுவைக் காணச்சென்றார். அதற்கு முதல் நாள் இரவில் ஒரு சாமர்த்தியத்திருடன் அப்பிரபுவின் அறையில் கன்னம் வைத்து லக்ஷம் ரூபாய் பெறுமான ஆபரணங்கள் அடங்கிய நகைப்பெட்டியைக் கொண்டுபோய்விட்டான். நமது வித்வான் பிரபுவைக் காணச்சென்ற சமயம் அவர் அக்களவுவைப்பற்றி அதிகமான விசாரத்துடன் விசாரணை செய்துகொண்டிருந்தார். சமயோசிதம் தெரியாத புலவர் பெருமான் தமது சாதுர்யத்தைக் காண்பித்துக்கொள்ள அதுதான் தக்க தருணமென்று ஆரம்பித்தார். முதலாவதாக அக்கள்வன் நகைப்பெட்டியுடன் ஓடின ஓட்டத்தைப்பற்றி வர்ணனை செய்யத் தொடங்கினார்.

கச்சேரி உத்தியோகஸ்தர்கள் போதாய்விட்டால் ஓடிப்போகிறதுபோல ஓடினான்—வீதியில் மேளதாளத்துடன் ஊர்வலம் வந்தால் சிறுவர்கள் எவ்விதம் ஓடுவார்களோ—ரமணியானவள் புஷ்பவதியானால் அவளுடைய ரூபத்தின் இலக்ஷண காந்தியானது நான்கு திக்குகளுக்கும் எப்படி வியாபிக்கிறதோ—புஷ்பத்தினுடைய ஸௌரபவாஸனையானது குளிர்ந்த காற்றுப்பட்ட மாத்திரத்தில் நாலுதிக்குகளுக்கும் எப்படிப்போகிறதோ—நதிக்கரைகளில் இருக்கும்போது இருட்டிவிட்டால் குலஸ்திரீகள் பாதி அச்சத்தினால் தங்களுடைய சுந்தரமான முகத்தை மூடிக்கொண்டு மாமியார் நாத்தனார்களுடைய திரஸ்கார பயத்தினால் வீட்டின் பக்கமாய் எப்படிச் சீக்கிரம் சீக்கிரமாய்ப்போகிறார்களோ—வக்கீல் பிரபுக்கள் அவர்கள் ஆசையைக்காட்டிலும் கக்ஷிக்காரர்கள் அதிக பீஸ் கொடுத்தால் (அப்பேர்ப்பட்ட சம்பவமே எங்கும் கிடையாது) மனச்சந்தோஷத்துடன் எப்படி சீக்கிரமாய்க் கோர்ட்டுக்குப் புறப்படுவார்களோ—புதிதாய்க் கல்யாணமான பெண்டாட்டி அபாயமான வியாதியில் பிராண பயத்திலிருப்பதாய்ச் சமாசாரம் வந்தால் அந்நிய தேசத்தில் இருக்கும் கணவன் தன்னுடைய தேசத்தின் புறமாய் [illegible]த் தடபுடலாய்ப் புறப்படுவானோ—எங்கேயாவது ஒரு வேலை காலியானால் மனுக்கள் மஹா வேகத்தினால் தப்படிப் புறப்படுகிறதோ—யாராவது ஒரு பெரிய மனுஷருடைய புத்திரர்கள் பெரிய பதவிக்கு வந்தால் அவர்களுடைய பணக்குவியல்களை ஷாப்புக்கடைகளுக்கும் தாஸி வீடுகளுக்கும் எப்படிச்

சந்தோஷத்துடன் ஓடுகிறதோ—அன்றியும் அவர்களுடைய தரிசனப் பிரார்த்தனைக்காக எப்படி மேல் மூச்சினால் ஓடிவருவார்களோ—புஷ்பமானது மலர்ந்தால் அதன் ரஸத்தைக் குடிக்கும் ஆசையினால் வண்டுகள் எப்படி ரீங்காரம் செய்துகொண்டு பறந்து வருகின்றனவோ—புதிதாய்க் கல்யாணமானவளுடைய புருஷன் எப்படி மாமனார் வீட்டைக்குறித்து அவசரத்தினால் ஓடுவானோ—பெரியகடைவீதிகளில் சரக்குகளுடைய சொந்தக்காரர்கள் போய்க்கொண்டிருந்தால் தரகர்கள் அநேக வார்த்தைகளைச்செலவு செய்துகொண்டு எப்படி அவர் பின் தொடர்ந்து ஓடுவார்களோ—கச்சேரியில் துரைகள் வந்து சொந்தமாய்ப் பார்க்கும்போது ரைட்டர் குமாஸ்தாக்களுடைய பேனாக்கள் எவ்விதம் அக்ஷரங்களை கரகரவென்ற சப்தம் செய்துகொண்டு புறப்படுகிறதோ—எங்கேபா[illegible] பிரார்த்தனாதிகள் ஆனால் பிராமண மஹாஜனங்களுடைய பிரவாகமானது எப்படிப்பேராசைகொண்டு புறப்படுகிறதோ—பழிப்பு வார்த்தைகள் காற்றைவிட முன்னால் எப்படி ஜனங்கள் வாயினின்றும் முன்பின் யோசனையில்லாமல் வெளிப்படுகிறதோ—புது தம்பதிகளுடைய முதலும் கடைசியுமில்லாத பேச்சுக் கதைகள் கொசுவலைக்குள் ராத்திரியெல்லாம் பூர்த்தியாகாமல் எப்படிப் புறப்பட்டுக் கொண்டிருக்குமோ — பயணத்தில் மேகத்தினால் மூடப்பட்ட ஆகாசத்தைப் பார்த்தவுடன் பயணம் செய்பவர்கள் தமதிருப்பிடத்தை தேடிக்கொண்டு எப்படி ஓடிப்போவார்களோ—வீதியில் குரங்கு கரடி மற்றும் தெம்மங்கூத்தாடிகளுடைய ஆட்டத்திற்கு மத்தள சப்தம் கேட்டால் அந்தபக்கத்திற்கு குழந்தைகள் உற்சாகத்தினால் எப்படி ஓடிப்போவார்களோ—சீட்டாட்டத்திற்கு உட்கார்ந்தால் அசட்டு அம்மாஞ்சியினுடைய துட்டுகளெல்லாம் எப்படிக் கைவிட்டுப்போய்க் காலியாகுமோ—யுவதியான பதிவிரதையினுடைய தேகம் பாரமானால், பதியினுடைய சரீரத்திலெல்லாம் எப்படி வியர்வை வெளிவந்து ஓடுமோ—எலெக்ஷன் சமயத்தில் கம்மிஷனர் ஆகவேண்டுமென்று அபேக்ஷிக்கிறவர்களெல்லாரும் ஓட்டுக்காகக் கிராமவாசிகளினுடைய வீட்டுப்பிரதி வாசல்களுக்கும் எப்படிக் கையில் லாந்தர்களைப் பிடித்துக்கொண்டு ஓடிப்போகிறார்களோ—ஆகாசத்தில் பூர்ணசந்திரன் இருப்பதைப்பார்த்தால், கோகிலங்கள் பஞ்சமராகமான "கூகூ" சப்தத்தைக்கேட்டால், வசந்தகாலத்து தென்றல்காற்றுடன் தேகத்தில் ஸ்பரிசமானால், விரகிணியின் மனது தூரவாஸியான பதியைக் குறித்து, அல்லது விரகனுடைய மனது தூரத்திலிருக்கும் மனைவியைக்குறித்து எப்படி வியாகூலத்தினால் போகுதோ அதுபோலத் திருடனும் ஓடினான் நகைப்பெட்டியோடு ஓடினான்.



நமது கவிராயர் தமது சாதுர்யத்தைக்காட்டி வர்ணனையைப் பூர்த்தி செய்வதற்குள்ளாகப் பிரபுவுக்கு அதிகமான எரிச்சல் உண்டாய்விட்டது. இரண்டு உதைகள் கொடுத்து வெளியில் தள்ளும்படி உத்தரவு செய்யலானார். அந்த மரியாதைகளைப்பெற்றுக்கொண்டு ஒரு கலியாண வீட்டுக்குச்சென்றார். அப்போது தான் மாங்கல்யதாரண சந்தர்ப்பமாயிருந்தது. உடனே புலவரும் தமது வீணையை மீட்டி "இலங்கணி மடிந்தாளே—அநுமானுடை கையால் பலங்கெட முடிந்தாளே" என்று பாடத்தொடங்கினார். இதென்னடா அவசகுனம்போல இவனொருபக்கம் என்று காறியுமிழ்ந்து கழுத்தைப்பிடித்து வெளியில் தள்ளினர். பிறகு இன்னொரு புது வீட்டிற்குச் சென்றார். அன்று தான் அவ்வீட்டிற்குக் கிரகப்பிரவேசம் செய்தமையால் ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தது. வித்வான் தமது சங்கீதத்தைத் தொடங்கிக்கொண்டார். "பற்றிக்கொண்டது லங்கை—அநுமான் இட்ட அனல் சுற்றிக்கொண்டது லங்கையை" என்று பாடவும் அங்குள்ளவர்கள் தக்க உதைகளும் குத்துகளும் திவ்யமாகக் கொடுத்து வெளியில் தள்ளிக்கதவை மூடினார்கள். கவிராயர் குய்யோ முறையோ என்று கூவிக்கொண்டு ஓடுவாராயினார்.

---

## ஹிந்து சங்கீதம்.

ஹிந்து சங்கீதம் ஆதியில் தேவாராதனையில் உபயோகப்படுத்தப்பட்டு, பாரமார்த்திக பிரயோசனத்தை உடைத்தாயிருக்க, இப்போது கெட்ட நெறியிலுள்ள பெண்களும் ஜனங்கள் மதிப்புக்கு இயலாத நாடகங்களை நடத்துவோரும் அதை உபயோகித்து, அதன் யோக்கியதையைக் குறைத்துவிட்டார்கள். நாடக சாலைகள் சில காலத்துக்கு முன்னால் இங்கிலாந்தில் யோக்கியர்களுக்குப் பொருந்ாதனவென்றும், அவைகளுடைய சம்பந்தம் மனிதருடைய கௌரவத்தைக் குறைத்துவிடுமென்றும், எண்ணப்பட்டதோ[illegible], இப்போது அவைகள் யோக்கியர்களுக்கும் கௌரவப்பட்டவர்களுக்கும் உரியனவென்று கருதப்படுகின்றன. அப்படியே இந்தியாவிலும் ஆகும். மேல் நாடுகளில் சங்கீதமானது ஹார்மொனி—அல்லது பல தொனிகள் ஒன்றாய்ச்சேர்ந்து அமைதல்—என்ற குணத்தால் விசேஷப்பட்டு வெகு பேருக்குக் கேட்கத்தக்கதாயிருக்க, இந்தியாவிலோ சங்கீதமானது ஒரே ராகத்தை [illegible]றினதாய்ப் பாடுவோருக்கே அல்லது அவருடனேகூடியவர்களில் [illegible] சந்தோஷம் உண்டுபண்ணுவதாயிருக்கிறது. மேல் நாட்டு [illegible]ங்கீதம் மனுஷனுடைய சாதாரண குணங்களை உற்சாக

ப்படுத்தி அவனை வேலை செய்யத் தூண்டுகிறது. இத்தேசத்துச் சங்கீதமோவென்றால், மனிதனுடைய உயர்ந்த குணத்தை உற்சாகப்படுத்தி ஈஸ்வரத்தியானம் செய்ய உதவுகின்றது. இந்த வித்தியாசம் இப்படியிருக்க, ஹிந்து சங்கீதமானது எழுத்துக் குறிப்பினால் நிலைபெறும் பட்சத்தில் அது ஸ்திரத்துக்கும் விரிவுக்கும் இடங்கொடுக்கும். அது இல்லாததினால் பழைய காலத்துச் சங்கீதம் தற்காலத்து மனிதர்களுக்குத் தெரியாமற் போயிருக்கிறது. கெட்ட வழிகளில் பிரவேசித்துள்ள பெண்களிடத்திலிருந்து சங்கீதத்தை மீட்குமாறு ஹிந்து குடும்பங்களில் ஸ்திரீகளும் புருஷர்களும் சங்கீதம் கற்கவேண்டும்.

## சூரிய கிரணங்களின் சக்தி.

மூக்குக்கண்ணாடி வில்லை ஒன்றை வெயிலில் காட்டி அதன் கீழ் நம் புறங்கையை வைத்துச் சூரியபிரதிபிம்பமானது ஒரு சிறு துவாரம் பருப்பளவாகும் வரை கண்ணாடியை அங்குமிங்கும் தள்ளிச் சரிப்படுத்தினோமானால், உஷ்ணம் பொறுக்கமாட்டாமல் நாம் உடனே கையை சரேலென்று இழுத்துக் கொள்ளுகிறோம். நம் கையிருந்தவிடத்தில் காட்டுமுட்டைப் பொடியையாவது பஞ்சையாவது, நெருப்புக்குச்சியையாவது; அல்லது சுலபமாய்த் தீப்பற்றக்கூடிய எந்த வஸ்துவையாவது வைத்தால் உடனே அது புகைந்து பற்றி எரிவதை நாம் பலமுறையுங் காண்கிறோமல்லவா?

இதற்குக் காரணமென்ன? கண்ணாடிக்கு வெளிச்சத்தைத் தன் மூலமாய் விடும்படியான குணம் உண்டென்பது தெரிந்த விஷயமே. ஆனால் அப்பம்போல நடுபாகம் கனமாயும் ஓரம் சிறுத்தும் இருக்கும் கண்ணாடியின் குணம் என்னவென்றால் அதன் மீது விழுங் கிரணங்களெல்லாம் அதன் மூலமாய்ச்சென்று மறுபக்கத்தில் சிறிது தூரத்தில் எல்லாக்கிரணங்களும் ஒன்றாய்ச்சேர்ந்து விடுகின்றன. சமகனமான கண்ணாடி வில்லையில் இம்மாதிரி உண்டாவதில்லை. கிரணங்கள் சிதறாமல் எல்லாம் ஒரே இடத்தில் சேருவதால், அவ்விடத்தில் உஷ்ணம் அதிகமாகிப் பஞ்சு முதலானவை பற்றிக்கொள்ளுகின்றன.

பூர்வத்தில் உரோமாபுரியின் அதிகாரம் உலகெங்கும் பரவியிருந்த காலத்தில், உரோமர்களுக்கு எதிரிகளைச்சேர்ந்த 'ஆர்க்கிமிடிஸ்' என்னும் ஓர் சாஸ்திர நிபுணர், மேற்சொன்னமாதிரியான பெரிய கண்ணாடிகளைச் சேர்த்து வெயிலில் வைத்து அவற்றின் உதவியினால் சமுத்திரத்தில் மிதந்துகொண்டிருந்த உரோமர்களி



ன் கப்பல்களையெல்லாம் ஓர் நொடியில் கொளுத்திவிட்டாராம். இதைச்சந்தேகிக்க யாதொரு காரணமுங்கிடையாது.

இப்பேர்ப்பட்ட குணம் தண்ணீருக்கும் உண்டென்று இப்பொழுது தெளிவாய்க் காண்பிக்கப்பட்டிருக்கிறது. தண்ணீரின் மூலமாய் நெருப்பு செல்லுமென்று நாம் நம்பமுடியுமா? ஆனால் கண்ணால் கண்டதை நம்பத்தானே வேண்டும். ஸர் வில்லியம் ராம்ஸே, என்னும் பிரசித்திபெற்ற ரஸாயன சாஸ்திரி, ஒரு நாள் ஒரு தண்ணீர்ப்புட்டியைத் தன் மேஜையின் மீது வைத்துக்கொண்டு தம் மாணாக்கர்களுக்கு உபந்நியாசம் செய்துகொண்டிருந்தபொழுது, சூரிய கிரணங்கள் தண்ணீர் மூலமாய்ச்சென்று ஓரிடத்தில் ஒன்றாய்க் கூடவே, மேஜை திடீரென்று பற்றிக்கொண்டதாம். அதனால் மேஜையில் ஒரு *ரந்திரம் கூட உண்டாச்சுதாம்.

## மலையாளத்து மந்திரவாதம்.

கருவைக்குறித்துக் கண்டிப்பாய்ப் பேசுவதானால், அது மனிதர்களுடையவோ அல்லது பற்பல பிராணிகளுடையவோ பிண்டத்திலிருந்து எடுக்கப்படும் ஓர் தைலபக்குவமாம். இந்த அருவருப்பான தைலத்தின் உதவியால் அவனுடைய தொழிலின் எவ்வித விஷயங்களும் கைகூடிவருவதாக மந்திரவாதிகள் எண்ணுகின்றார்கள். கருவைத் தனியாகவோ அல்லது யந்திரமும் அக்ஷரமும் வரைந்த தகட்டின் மேல் வைத்துப் பூஜித்த பிறகோ இவ்விதம் உபயோகிக்கப்படுகின்றது. தேவதைகளை ஆராதிக்கும் மந்திரவாதிகள் மாத்திரம் இவ்வித பயங்கரமான சாதனைகளைச் செய்கின்றார்கள். முன் சொன்ன இரண்டு மாதிரிகளில் முதல் மாதிரி சரீர பலத்தைக் குறைக்கின்றது. ஆனாலது இரண்டாவதைப்போல அவ்வளவு பயனுடையதல்லவென்று எண்ணப்படுகின்றது. அக்கருவுடன் ஏராளமான பாமர மருந்துகளும் சேர்க்கப்படுகின்றன. இன்பவீடாகவிருப்பதற்குப் பதிலாக திருப்தியின்மையும் நேசமின்மையுமுடைய வனமாக்க முயலும் மாமியார், மைத்துனிமார், மருமக்கள்மார் முதலிய பற்பல எதிரிகள் அவ்வீட்டில் ஒன்றாய் வாழ்வதனால் ஓர் இந்து குடும்பத்தில் எளிதிலடையக்கூடாத புருஷனுடைய பிரீதியையடைய ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் பெண்களிடம் தங்கள் நாயகர் கைவசமாக இந்த மருந்தைக்கொடுத்த அனேக சங்கதிகளை நானறிந்திருக்கிறேன். இதனால் அவருடைய அனேக கணவர்கள் பித்தர் ஆவதற்கோ அல்லது

* ரந்திரம் — துவாரம்.

ஆரோக்கிய நிலை சிதறிப்போவதற்கோர் காரணமாகி அவர்களுடைய மனைவிகள் முற்றிலும் இடுக்கணுடையோராவதற்கும் அம்மனைவிகளுடைய தாய் தந்தையர்களுக்கும் நீடித்தகாலம் கலக்கமுண்டாவதற்கும் இடமாகின்றது.

ஸ்திரீகள் விசேஷமாய் பைசாசங்களுடைய உபத்திரவத்திற்கு வசப்படத்தக்கவர் என்று எண்ணப்படுகின்றது. மனுஷ சரீரத்தில் பிரவேசிப்பதற்கு பைசாசங்களுக்கு விசேஷ அநுகூலமுடைய காலம் அருணோதயம், மத்தியானம், சாயங்காலம், நடுராத்திரியுமாம். ஓர் தினத்தின் இந்த வேளைகள் விசேஷமாய் அவர்களுக்குரியதென்று கொள்ளப்படுகின்றது. ஒரு வாரத்திற்குரிய ஏழு தினங்களுள் வெள்ளிக்கிழமையென்றும் செவ்வாய்க்கிழமையென்றும் துர்தேவதைகள் விசேஷ சக்தியையுடைத்தாயிருக்கின்றன. அந்நாட்களில் ஸ்திரீகள் அவர்களுடைய வீட்டில் நின்று வெளியே போவதற்குக்கூடவும் பயப்படுகின்றார்கள். விசேஷமாக பிசாசுகளை வரவழைக்கக்கூடிய வாசனைத்திரவியம் புஷ்பம் முதலியவைகளை அணியாது செல்லுவார்கள்.

இவைகளைத் தவிர மற்ற ஆராதனைகளுமுண்டு; ஆனால் அவைகளை விரித்துரைக்கின் அருவருப்பாகவிருக்கும்.

நம்மவர்களுள் பெரும்பான்மையோரும் இன்னும் அமிழ்ந்திருக்கின்ற அஞ்ஞானங்களில் இவைகள் சிலவாம். இம்மனிதர்களைக்குறித்துப் பேசும்போது சமஸ்கிருதத்தில் பிரசித்த பண்டிதராகிய காலஞ்சென்ற ராஜேந்திர லாலமித்திரா என்பவர் உபயோகித்திருக்கும் கடுஞ்சொற்களை உபயோகிக்க யாருக்கும் அவாதோன்றும். இங்கிலாண்டிலும் ஸ்காட்லண்டிலும் வசிக்கும் ஜனங்கள் தற்காலத்தில் நம்பி வருகிற இப்பழைய அஞ்ஞானங்களில் கல்வி பயின்றோர் எத்தனைபேர் நம்பிக்கை வைத்திருக்கின்றனரென்று அறிவது நலமாயிருக்காதா என்று எனது அரிய நண்பரொருவர் ஓர் வினா என்னிடம் கேட்டிருக்கிறார். மிக சிரேஷ்டமுடையதும் நவீனமாய்ப் பிரசுரிக்கப்பட்டதுமான (பிளாக்கீஸ்) என்னும் நானாசாஸ்திரவகராதி மூலமாக நாகரீகமடைந்த இங்கிலாண்டு தேசத்தில் கூடவும் இன்னுமிவ்வித அஞ்ஞானங்களிருக்கின்றன என்று தெரியவருகிறது.

---

ஒரு பழைய ஆசாமி சில ரூபாய்களைத் திருடியதற்காகவும் இதர பழைய குற்றங்களுக்காகவும் 14 வருஷம் கடுங்காவல் விதிக்கப்பட்டான், 1898-ம் வருஷத்தில் அவன் தண்டனை முடிந்து விடுவிக்கப்பட்டதும் அவன் ஒரு கடை வைத்து வியாபாரஞ்செய்ய ஆரம்பித்தபோது கடைக்கு முன்பாக "14 வருஷம் கவர்ன்மெண்டு வேலை" தான் செய்ததாக எழுதி ஒரு போர்டு போட்டுக்கொண்டானும்!



# தமிழ் மொழியின் இனிமை.

பொதுவாக இந்நாட்டில் ஸ்வபாஷாபிமானம் என்பது மிகவுங் குன்றியிருப்பதுமன்றி, அதன் நயமறியாது திட்டுவதைக் கேட்கும்போது நமக்கு வருத்தமுண்டாகிறது. இதன் சம்பந்தமாக சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மஹாவித்வான் சாமிநாத அய்யர் சொல்லிய வார்த்தை யொன்று நமது நெஞ்சைவிட்டு ஒருபோதும் அகலமாட்டாது. ஷை காலேஜ் தமிழ்ச்சங்கத்தில் ஓர் கூட்டம் நடந்தது. தமிழ்ப் பாஷையின் அருமையைப்பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தது. அப்போது சாமிநாத அய்யரவர்கள் எழுந்து பின் வருமாறு கூறினார்:— ஆங்கிலேய பாஷையின் இலக்கிய நூல்கள் எத்தனையோ அருமையான கருத்துகள் ததும்பிக்கிடப்பதாகச் சொல்கிறார்கள்: அந்த பாஷை எனக்குத்தெரியாது. ஆதலால் அவ்விஷயத்தில் ஒருவிதமான அபிப்பிராயமும் என்னால் கொடுக்கமுடியாது என்றபோதிலும், மேற்கண்டவாறு சொல்வோர் தமிழ்ப்பாஷையிலே அவ்விதமான அருமையான விஷயங்கள் இல்லையென்று சொல்லும்போது உடன் எனக்கு வருத்தமுண்டாகிறது. இவ்வகுப்பினர்களுடன் நான் எத்தனையோ முறை சம்பாஷணை செய்திருக்கிறேன்; அந்த சமயங்களிலே நான் இவர்களுடைய தமிழ் வன்மையைப் பரிசோதனை புரிந்திருக்கிறேன். இவர்கள் அத்தனை சிறந்த பண்டிதர்களென்று எனக்குப் புலப்படவில்லை. பழங்காலத்துத் தமிழ் நூல்களிற் பயிற்சியில்லாத இவர்கள் அவற்றைப்பற்றி இழிவான அபிப்பிராயங் கொடுப்பது தான் வெறுக்கத்தக்கதாக இருக்கின்றது என்று அப்பண்டிதர் முறையிட்டார். வாஸ்தவம் தானே? சூரியனையே பார்த்திராத குருடன் அதன் நிறமுதலியவற்றைப்பற்றி என் அபிப்பிராயம் கொடுக்கவேண்டும்?

பாற்கடலிலே பிறந்த மீன்கள் பாலைப் பெரிதாகப் பாராட்டுவது வழக்கமே கிடையாதென்பது நெடுங்காலமாக வழங்கப்பட்டு வரும் உவமையாகும். அவ்வசனக்கருத்து முற்றிலும் மெய்யென்பதற்குச் சிறிது காலத்தின் முன்பு டாக்டர் போப் (போப்பையர்) லண்டனில் ராயல் ஏஷியாடிக் சபையார் முன்பு செய்த உபந்நியாசத்திலே நல்லதோர் திருஷ்டாந்தம் அகப்பட்டது. திருக்குறள்; திருவாசகம் என்னும் தெய்வீக நூல்களை இங்கிலீஷிலே மொழிபெயர்த்தவரும், அநேக இலக்கண நூல்கள் பிரசுரித்திருப்பவரும் ஆகிய டாக்டர் போப்பை தமிழ் நாட்டாரிற் பெரும்பான்மையார் நன்கு அறிவார்கள். இவர் சொல்லுகிறார்:—"அநேக

கர் (அதாவது அநேக ஆங்கிலேயர்கள்) பிரெஞ்ச், ஜெர்மன்,
இடாலியன் முதலிய பாஷைகளைப்போரப் படித்துக்கொண்டு இ
டார்படுகிறார்கள். இப்படிச் செலவிடப்படும் காலத்தை தமிழ் கற்
பதிலே செலவிட்டால் எவ்வளவோ விசேஷமாகும். நான் அநே
க (ஆங்கில) மாதர்களுக்குத் தமிழ் கற்பித்திருக்கிறேன். அவர்க
ளுடைய இதழ் நயத்திற்கும், செவி நுட்பத்திற்கும் அபிருசிக்கும்
இந்தப் பாஷைபோல எந்தப் பாஷையும் ஒத்து வருவதில்லை"
என்றார். இன்னும் இவர் தமிழ்ப்பாஷையின் இனிமையையும்
பெருமையையும் குறித்து எவ்வளவோ சிலாக்கியமாகப் பேசியி
ருக்கிறார். ஆனால் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்த நம்மவர்
களோ அந்தப்பாஷையின் இனிமையைப்பாதுகாக்க வேண்டுமெ
ன்றேனும், அபிவிருத்தி செய்யவேண்டுமென்றேனும் சிறிதே
னும் முயல்வதில்லை. தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களிற் சிறு
பாலார் தமிழ்ப்பாஷை விஷயத்தில் ஒரு விதமான அபிமானம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலேயம் கற்றுணர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் தமது கடமையை முற்றிலும் மறந்து
விடுகிறார்கள். இவர்கள் தமிழ்ப்பாஷை விஷயத்தில் கொண்டிரு
க்கும் எண்ணத்தையும், அவ்விஷயத்தில் இவர்கள் வகிக்கும் சிரத்
தையும் டாக்டர் போப்பைப்போன்ற ஆங்கிலேயர்கள் அறியும்
பக்ஷத்தில் இவர்களிருக்கும் திசையை நோக்கிக் காறியுமிழும் வண்
ணமாக நம்மவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள்.

---

# விநோதம்.

ஒரு சிறைச்சாலையில் வேடிக்கை பார்க்க வந்தவர் "நீயேன
டா சிறையிலிருக்கிறாய்?" என்று ஆங்குள்ள ஒருவனைப்பார்த்துக்
கேட்டார். அதற்கவன் "தும்மினேன், ஐயா" என்றான்.
"என்ன? நீ தும்மினதற்காகவா, உன்னைச்சிறையிலடைத்தா
ர்கள்?" என்று அவர் மீட்டுங்கேட்டார். அதற்கவன் "ஆம் ஐயா,
நடுநிசியில் ஒரு பிரபுவின் வீட்டிற்சென்று தும்மினேன், அப்
பிரபுவும் விழித்துக்கொண்டு என்னை உடனே பிடித்துக்கொண்
டார்" என்றான்.

---

"பெண்களின் அன்பும் நம்பிக்கையும் மணல் மேலெழுத்தை
யொக்கும்".
—ஸ்காட்டு.

"புருஷனுக்கு உலகம் அவன் மனமும், பெண்களுக்கு அவள் ம
னம் உலகமுமாக இருக்கின்றது".
—லேடி. பிளஸிங்டன்.

"பெண்கள் மனதும் மாரிகாலக்காற்றும் எப்பொழுதும் மாறுதல
டைந்துகொண்டேயிருக்கும்".
—போப்.



"சீவர்மேற் கருணை செய்வது கடனே" என்பது வேதசம்மதம்
வேதம் சீவகாருண்யத்தையே சிறப்பித்துப் பேசும். சீவகாருண்யமென்பது
மற்ற உயிர்களிடத்து இரக்கமுடைமை. சீவகாருணிய மென்று பொதுப்படக்
கூறியதனால் இன்ன உயிர்களிடத்துத்தான் இரங்கவேண்டு மென்னும் நியதி
யில்லை. தன் கண்முன் வருந்தும் எல்லா உயிர்களிடத்தும் ஒருவன் இரங்க
வேண்டுமென்பதே விதி. உயிர்கள் பலவகை. வருத்தம் ஒன்றே. கூழுக்கு
உப்பில்லை யென்பார்க்கும் பாலுக்குச் சர்க்கரையில்லை யென்பார்க்கும் வருத்த
மொன்றே யென்பதுபோல அவரவர் சக்திக்கியன்றவரையும் வருத்தமும் எல்
லார்க்கும் ஒன்றேயாய் முடியும். பல்லாயிரம் உயிர்களைக்காக்கும் ஒரு பெரிய
சக்ரவர்த்திக்குத் தன்னுடைய தேசத்தை மாற்றாசன் வெல்லவருங்கால் உண்
டாகும் வருத்தமே உண்ணச்சோறற்று வருந்தும் ஏழைப்பரதேசிக்குண்டாகும்
வருத்தம். சக்ரவர்த்தியின் அளவுகடந்த செல்வத்திற்கு அது வருத்தமாவது
போல உண்ண வழியற்றிருக்கும் ஏழைப்பரதேசிக்கு ஒரு கவளம் சோறு இல்லா
திருத்தலும் வருத்தமாய் முடியும். ஆதலின் வருத்தத்தில் செல்வர்களை ஒத்த
பரம்தரித்திரர்களுக்கும் ஊத்தகை வாயில்லாப் பிராணிகளெல்லா வற்றிற்கும்
இரங்கவேண்டுவது அவசியமெனப்படும். இவர் பகைவர், இவர் உறவர், இவர்
சிநேகர், இவர் யாரோவென்று வித்தியாசப்படாத சீவகாருணியமே சிறந்தது.
பிறருக்குண்டாகும் வருத்தத்தை ஒருவன் காணுங்கால் முன் தனக்குண்டா
யிருந்த அத்தகைய வருத்தத்தை ஆலோசித்தல்வேண்டும். அப்பொழுது பிறர்
படும் வருத்தம் இவ்வளவு கொடியதென்பதும், தான் அதற்கு உதவவேண்டு
மென்பதும் விளங்கும். டம்பம், புகழ், பொருள், புண்ணியம் முதலியவற்றைக்
கருதி ஒருவன் மற்றவர்மீது இரங்குவானாயின் அவ்விரக்கம் பயன் பெறாது
எல்லாச் சீவர்களையும் ஒப்ப நோக்கி வற்ற காலத்தில் ஏற்றவிதமாய் உதவவேண்
டும். ஐயோ, நமக்குண்டாயிருந்த வருத்தத்தைப்போலத்தானே இவனுக்கு
அல்லது இந்தப்பிராணிக்கு இவ்வருத்தம் உண்டாகுமென்று கருதி அது தீர்ந்து

அவனுக்கு அல்லது அந்தப்பிராணிக்குச் சுகமுண்டாக்குவதே நமது கடமையென்று இரங்கும் இரக்கமே சிறந்தது. சிபிச் சக்ரவர்த்தி தன்னை அடைக்கலம் புகுந்த புறவுக்கு இரங்கினது பயத்தைக் கருதியன்று, புகழைக்கருதியன்று, பொருளைக்கருதியன்று, புண்ணியத்தைக் கருதியன்று. பின்னை எதைக்கருதி? அதன் துன்பத்தைத் துடைப்பதொன்றைக் கருதியேயென்க.

* *
*

"பச்சிலையுங்கிள்ளப்படுமோ பராபரமே" என்றார் தாயுமானவரும். ஏன்? சிவபெருமானுக்குப் பத்திர அருச்சனையில் (பத்திரம்-பச்சிலை) விருப்பம் அதிகமாயினும் அப்பத்திரத்தைக் கிள்ளும்பொழுது அதிலுள்ள புழுக்கள் இறந்துபோகு மென்பதுபற்றியே அவ்வாறு கூறினார். எல்லாம்வல்ல சிவபெருமானுக்கே அது விருப்பமான பொருளாயிருந்தும் அவ்விருப்பத்தினும் சீவகாருணியமே சிறந்ததாயிற்று. சிவபெருமானுக்குப் பத்திர புஷ்பமெடுத்து அருச்சித்தலே சிவஞானச் செய்கையென்று உணர்ந்த வியாக்கிரபாதரும் தான் பத்திர புட்பமெடுக்கும்பொழுது அவற்றிலுள்ள புழுக்கள் இறந்துபட்டொழியுமோவென்றஞ்சி அவற்றிற்கு யாதொரு வருத்தமுமின்றி எடுக்கக்கருதி அது பற்றியே புலிநகத்தைத் தவஞ்செய்து பெற்றுக்கொண்டார்.

* *
*

"ஐயமிட்டார் கெட்டார்" என்பது ஒரு பழமொழி. ஆராயாமல் இந்தப்பழமொழியை நிந்தித்தொதுக்குவாருமுளர். அது அறியாமை. ஐயமிட்டார் கெட்டார் என்பதனைப் பிச்சையிட்டவர்கள் கெட்டார்கள் என்று பொருள் பண்ணாது ஐயமிட்டு ஆர் கெட்டார் எனக்கொள்ளுதலே தகுதி. நாமும் கேட்போம், ஐயமிட்டு ஆர் கெட்டார்? ஒருவருமில்லை. தனக்குள்ள பொருள் முழுவதையும் பிச்சையிட்டால் பொருளெல்லாமழிந்து அவர்களுங் கெட்டுவிடுவார்களேயென்றுசொன்னாலும் கெட்டு விடுவதொரு புறமிருக்கட்டும். முழுவதையும் பிச்சையிடச் சொன்னவர் யார்? ஒருவருமில்லை. கையிலுள்ள பொருளையெல்லாம் பிச்சையிட்டழிக்கும்படி ஒரு நூலிலும் சொல்லப்படவில்லை. அளவறிந்து செலவிடவேண்டுமென்பதே நீதி.

* *
*

"வளவனாயினும் அளவறிந்தழித்துண்" என்பது முதுமொழி. அளவு கடந்த செல்வத்தையுடைய வளவனைப் (வளவன்-சோழன்) போன்ற செல்வனாயினும், தன்னிடத்துள்ள பொருளின் அளவினை யறிந்து அவ்வளவிற்கேற்ப இயன்றவளாயில் பிச்சையிடவேண்டுமென்பதே நீதி. வருவாயுட் கால் வழங்கி வாழ்தல் என்றார் பெரியோர். அதாவது தனக்கு வரும் வருவாயில் (சம்பாத்தியத்தில்) அல்லது தனக்குள்ள சொத்தில் நாலிலொரு பங்கெடுத்து அந்த ஒரு பங்கைத் தர்மத்திற் செலவிடவேண்டுமென்பதே கட்டளை. "ஆனமுதலில் அதிகஞ் செலவானால் மானமழிந்து மதிகெட்டுப் போனதிசை, யெல்லார்க்குங் கள்ளனாய்



ஏழ்பிறப்புந் தீயனாய், நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" என்னும் நல்வழியைக் கடைப்பிடித்து அளவறிந்துதான் செலவிடவேண்டும். அளவறியாமல் தன் கையிலுள்ள பொருள்முழுவதையும் செலவிட்டால் பின் ஒரு காலத்தில் அது தனக்கே தீங்காய் முடிவதும் நிச்சயம். அப்படியிருந்தும் உண்மையும் உறுபுமுணர்ந்து தருமத்திலேயே கருத்துடையனாய் வேறெல்லா உலககாரியங்களையும் அதற்கிணையில்லை யென்றொதுக்கித் தருமத்தையே பெரிதெனக்கருதிச் செய்து தன்பொருள் முழுவதையும் அதற்கென்றே செலவிடினும் அந்தத் தருமமே அவன் கேடுகாலத்தில் அவனுக்கு உதவிசெய்யும். இதற்கு ஒரு கதையுண்டு.

* *
*

"நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல், நாளைக்கென்செய்குவாய் நல்குரவே-(நல்குரவு-தரித்திரம்) காளத்தி, நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே, இன்றைக்கே சற்றேயிரு" என்று ஒரு புலவர் பாடினார். அதாவது தொண்டைநாட்டில் ஒரூரில் காளத்திப் பிள்ளையென்பவர் ஒருவரிருந்தார். அவர் கல்வி கேள்விகளில் வல்லவர். நிறைந்த கல்வியுடையாரிடத்துச் செல்வம் நிலைக்காது என்பது அவருக்கு விரோதம். கல்வியோடுகூடச் செல்வமும் நிறைந்துள்ளவர். தன் செல்வமுழுதும் வித்துவான்களுக்கும் தன்னையாசிக்கு மற்றவர்களுக்கு மென்றே கருதியிருந்தார். வந்தவர்களுக்கெல்லாம் மாறாமற் கொடுத்துக்கொண்டு வந்தார். இவர் கொடுக்கும் கொடையால் அவ்வூராளும் அரசனுக்கு அவமானம் மிகுதியு முண்டாயிற்று. அந்த அவமானங் காரணமாகக் காளத்திப்பிள்ளையின் செல்வத்தைப் பலவிதத்தும் அழிக்கத் தலைப்பட்டான்.

* *
*

"அரசனே நீனைந்தால் ஆகாதுண்டா" காளத்திப் பிள்ளையின் செல்வமெல்லாம் அழிந்துவிட்டது. அன்றாடம் வயிறு வளர்த்தற்கே அவரால் முடியாத பக்குவத்தில் வந்துவிட்டது. பெருஞ்செல்வர், என்செய்வார் பாவம்! அவருடைய சத்திரங்களே இன்றும் அங்கங்கே விளங்கிக்கொண்டிருக்க அவருக்கு வயிற்றுக்கில்லையென்றால் அது ஆருக்குத்தான் மனஞ்சகிக்கும்! பரிதாபம் பரிதாபம்! அவர் அந்த ஊரில் வசிக்க மனஞ் சம்மதியாது மனைவியுடன் வேறோர் தேசஞ்சென்றுவது வாழலாமென்று கருதினார்.

* *
*

"வாழ்ந்தவன் கெட்டால் வரையோட்டிற்கு மாகானே".—ஒருநாளிரவில் ஒருவருக்குந் தெரியாமல் மனைவியுந்தானும் புறப்பட்டுப் பத்து மைலுக்கப்பாலுள்ள தம்முடைய சத்திரத்திலேயே மறைந்து போய்ப் படுத்திருந்தார்கள். விடியுமுன் போய்விடலாமென்பது கருத்து. அப்படிப் படுத்திருக்குங்கால் அவர்கள் பக்கத்தில் ஒரு பிரயாணியும் படுத்திருந்தான். சுமார் 11-மணி இருக்கும். அப்பொழுதுதான் அவன் வந்தான் போலிருக்கிறது. 11-மணிக்குச் சத்திரத்திற் சாதம் ஏது? இவனுக்கோ பசியதிகம். பரமதரித்திரன், பாவம்! என்

செய்வான்? வயிறு பசிவந்துவிட்டது. சோற்றிற்கோ வேறு வழியில்லை. கையிலோ காசுமில்லை. கடன் கொடுப்பாரோ ஆருமில்லை! நிசிவேளை! பசியால் நித்திரையும் வரவில்லை! அரை நித்திரை. புலம்புகின்றான். "நீளத் திரிந்துழன்றாயே நீங்கா நிழல்போல், நாளைக்கென் செய்குவாய் நல்குரவே-காளத்தி, நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே, யின்றைக்கே சற்றே யிரு" வென்றான். இப்பொழுதுதான் நமக்கு இவரை இன்னாரென்று தெரிந்தது. இவர் ஒரு வித்துவான். வித்துவான்களுக்குத்தான் தரித்திரமியல்பாயிற்றே. தமது தரித்திரக் கொடுமையால் நமது காளத்திப்பிள்ளை அவர்கள்மீது ஏதோ பிரபந்தம்பாடி வந்திருக்கிறார் போலிருக்கிறது. அவருக்கு நமது காளத்திப்பிள்ளை யவர்களின் தற்கால நிலமை தெரியாதிருக்கலாம். தெரிந்தால் ஏன் எடுத்தடி வைப்பார்? எத்தனைநாள் பட்டினியோ பாவம். இவர் தரித்திரம் இங்கும்விட்டொழியவில்லையே. சத்திரத்து சாதத்திற்குக்கூடவா சனியன் பிடிக்கவேண்டும். இப்படி இவர் புலம்பலே அரை நித்திரையிலிருந்த நமது காளத்திப் பிள்ளையின் காதில் விழுந்தது. ஐயோ! அவர் மனம் பட்டபாட்டை நாமென்னென்று சொல்லுவோம். ஜீவகாருண்ணிய சிந்தையுடையவர் எப்படிப் பிறர் வருத்தம் பொறுப்பார். பிறர் வருத்தம் பார்த்தும் திடத்தோடிருக்கும் பேதைலோபிகளைப் போலவா நமது காளத்திப் பிள்ளையவர்கள். மனநொந்து மனைவியைச் சத்தப்படாமல் எழுப்பிக் கேட்டனையா இவர் பாட்டையென்றார். ஐயோ! இந்தச் சண்டாளி இந்த வயிற்றெரிச்சலைக் கேட்கவுங் காலம்வந்ததே. என்செய்வேன் என்று அவரும் வருந்தினார். இவர்கள் வருந்திப் பயனென்ன? வழியொன்றுமில்லையே. இல்லாதிருந்தாலும்,

* *
*

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" யல்லவா? என்னகெட்டும் இவர்களுக்கு இன்னும் ஜீவகாருணியம் கெட்டொழிந்ததில்லை. பெண்ணே யென்செய்யலாமென்றார். பெண் என்ன செய்வாள்? கழுத்தில் தாலி ஒன்று தவிர மற்றெல்லாமிழந்த மகராசியாயிருக்கிறாள். ஐயோ தாலி ஒன்று தவிர வேறொன்றுமில்லையே யென்றாள். வித்துவானோ நம்மை நம்பி வந்துவிட்டார். தன்னை நெடுநாட் பகைசாதிக்கும் தரித்திரத்தோடு வாதுகூறி வீரம் பேசுவது நம்முடைய பலத்தை நம்பியே. ஏதோ பிரபந்தம் பாடிவருகிறார் போலுமிருக்கிறது. விடிந்தால் அவர் நமதூருக்குக் கட்டாயமாய்ப் போய்ப் பார்ப்பார். — அங்கு நாமில்லாதது தெரிந்து வயிறெரிந்து போவாரே அவரை அங்கே உபசரித்து ஒருவேளை அன்னமிட்டாவது அனுப்பினால் நன்றாயிருக்குமே. அதற்கும் நம்மிடத்தில் வழியில்லையே என்று காளத்திப்பிள்ளை விசனித்தார். அதற்கென்றால் என் கழுத்தில் கிடக்கும் தாலியை விற்றாவது சரிப்படுத்தலாம் வாருங்கள் போவோமென்று சொல்ல, இருவரும் அந்த இராத்திரியிலேயே புறப்பட்டுத் தம்மூர்சென்று விடிந்தவுடன் தாலியைக்கழற்றி விற்றுச் சாமான்கள் வாங்கி வைத்துக்கொண்டு வித்துவானை எதிர்பார்த்திருக்கிறார்கள்



வித்துவானும் வந்தார். கண்டுகொண்டார். தான் காளத்திப்பிள்ளையவர்கள்மீது பாடிவந்த பிரபந்தத்தையும் படித்துக்காட்டினார். ஸ்நான முதலியனவும் நடந்தன. சாப்பாடு முடிந்தது. கூடத்தில்வந்து உட்கார்ந்தார்கள். பிரபந்தம்பாடின வித்துவானுக்கு மரியாதை செய்யவேண்டுமே. காளத்திப்பிள்ளை இப்பொழுது என்ன செய்வார். விழிக்கிறார் இந்தக்காலமாயிருந்தால் 'போங்காணும் போம், உமது பாட்டுமாச்சு நீருமாச்சு' என்று போவார்கள். நமது காளத்திப்பிள்ளையவர்களா, யோசிக்கத் தொடங்கினார். இதற்கென்ன செய்யலாம். இவரோ நம்மை நம்பி வந்துவிட்டார். வறுமையால் மிக மெலிந்திருக்கிறாரென்றும் தெரிகிறது. நமது கையிலோ ஒன்றுமில்லை. இல்லையென்று சும்மா அவரை அனுப்புதலுங்கூடாது. அதைவிட நாம் உயிரை விடுவதே நல்லது என்று கருதி இருங்கள் வருகிறேனென்று சொல்லிவிட்டு உள் நுழைந்தார். தனக்குப் பரிசளிக்கப் போயிருக்கிறாரென்று வித்துவான் நினைத்துக்கொண்டிருக்கிறார். குறைந்தது ஐந்நூறு ரூபாயாவது வரும். சே! நூறுரூபாயாவது கொடுப்பார். தக்கபிரபு பார்ப்போமென்றிருக்கிறார். உள்நுழைந்த பிள்ளையவர்களோ கொல்லைக்குப்போய் அங்கிருந்த ஒரு பாம்புப் புற்றில் தமது கையைவிட்டு ஏ! ஸர்ப்பமே, நான் பரமதரித்திரனாய் விட்டேன். இல்லையென்று வந்தோர்க்கு இல்லை யென்னும் ஏழ்மையில் நாணி ருப்பதைவிட இறந்துபோவதே நலமென்று கருதிவிட்டேன். நீ தயைசெய்து என்னைக் கடித்துக் கொன்றுவிடுவாயானால் என் துன்பமெல்லா மின்றோடே யொழியும் என்றார்.

* *
*

"தர்மம் தலைகாக்குமே"—சற்று நேரத்திற்கெல்லாம் அவர் கையில் ஒரு கட்டியிருப்பதாகத் தெரிந்து கையை மேலே இழுத்தார். அக்கட்டி ஒரு நாகரத்தினமாயிருந்தது. பிள்ளையவர்களுக்குங் கேட்பானேன். தலைதெரியாத சந்தோஷம் பிறந்துவிட்டது. எதுபற்றி? நம்பி வருந்திவந்த வித்துவானைச் சந்தோஷப்படுத்தி விட்டோமென்னும் களிப்பால். அங்கிருந்து ஓடோடிவந்து வித்துவானிடம் உட்கார்ந்து தாம்பூலத்தில் அந்தரத்தினத்தை வைத்துக்கொடுத்தார். வித்துவானைப் பேசவும் வேண்டுமா? அதைக்கண்டார். அவருக்குண்டான சந்தோஷத்திற்களவில்லை. அவர் நேற்றிரவில் சத்திரத்திற பேசியபடி தரித்திரமும்;

* *
*

"நீயெங்கே நானெங்கே" என்றொழிந்தது. வித்துவான் இரத்தினத்தை வாங்கிக்கொண்டு புறப்பட்டார். இதை விற்கவேண்டுமே, யார் வாங்குவார் என்று தேடிக்கொண்டு அவ்வூர் அரசனிடம் போய்க்காட்டினார். அவன் இது எப்படி உமக்குக் கிடைத்ததென்றான். காளத்திப்பிள்ளையவர்கள் தந்ததென்றார். காளத்திப்பிள்ளை இன்னும் இது தரத்தக்க செல்வனோ வென்றையுற்று வித்துவானைப் பயமுறுத்தி இது நம்முடைய அரண்மனையிலிருந்தது. காளத்தி திருடினான்போலும். அவனைக் கொண்டுவாருங்கள் என்று ஆளனுப்பி அவரைக்

கேட்க அவர் அது தமக்கு வந்த விதத்தை யுணர்த்தினர். அவன் நம்பாது அவ்வனமாயின் அந்த நாகம் நீ இன்னொருமுறை போய்க்கேட்டால் தனது ஜீவரத்தினத்தையுங் கொடுக்கலாமே. கொடுத்தால் நீ சொல்வது உண்மைதானென்றான். பின்னை அவர்கள் அதற்குடன்பட்டு,

"கொடுங்கோன்மன்னர் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங் காடுநன்றே"

இவன் கீழ்ப்பட வாழ்வதினின்றும் இறந்து விடுவதே உத்தமம். என்று கருதி முன் பாம்புப்புற்றிற்போய் சர்ப்பமே இம்முறையாவது என்னைத் தயைசெய்து கொன்றுவிடு. இராசனிப்படிச் சொன்னான் என்று வேண்டிக்கொண்டு புற்றிற் கையைவிட்டார். சற்று நேரத்தில் ஜீவரத்தினமுங் கையிலிருந்தது. அதையுங் கொண்டுவந்து அரசனிடம் கொடுத்தார். அரசனுக்கு நமது பிள்ளையவர்களிடத்தில் அச்சமும் அன்பும் வந்து, 'நீயே செல்வன், நீயே சிவகாருண்யச் செல்வன், உனக்கு நானுயிணையல்லேன், உனக்கு நான் செய்த கொடுமையால் மீளாத்துன்பம் அநுபவிப்பேன். உன் செல்வமெல்லாந் தந்தேன் பெற்றுக்கொள். நீ விரும்பியபடி முன்போல உன் கொடைத்தொழிலைத் தொடங்கிக்கொள். மேலும் உனக்கு எனது சமஸ்தானத்திலிருந்து வேண்டுமுதவிசெய்வேன் என்று வேண்டிக்கொண்டான். வித்வானுக்கும் வேண்டிய திரவியங் கொடுத்தனுப்பினான். நமது காளத்திப்பிள்ளையவர்களின் தருமசிந்தை அவருக்குப் பின் எவ்வளவு அநுகூலத்தைச் செய்ததுபாருங்கள். ஆதலிற் சிவகாருண்யமே எல்லாத்தர்மங்களிலும் சிறந்தது.

## எலிஜபத் அரசியார்

சில வருடங்களுக்கு முன் வரைக்கும் சக்ரவர்த்தினியாராயிருந்த மாட்சிமைதங்கிய விக்டோரியா சக்ரவர்த்தினி அவர்களின் பெருமையைப் பற்றியும் புகழைப்பற்றியும் நம்மனைவருக்கும் நன்கு தெரிந்தேயிருக்கிறது. இப் பெண்ணரசியாருக்கு முன் பெண்ணரசியாயிருந்த எலிஜபெத் பெருமாட்டியாருடைய சரித்திரத்தில் நமக்குவேண்டிய வெகு சிறிய பாகமே நாம் இப்போது குறிப்பிட உத்தேசித்திருக்கின்றோம். அவருடைய சரித்திரத்தைப் பற்றி விரிவாய்ப் பேச நமக்கு வேண்டிய சாவகாசமும் இப்போது கிடையாது; அதற்கு இன்றியமையாத சாதகமும் இப்போது தோன்றுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. என்றாலும், எலிஜபத் அரசியாருடைய ஆட்சி பல வகைகளால் பிரசித்தியடைந்ததாயிருந்தாலும், அவருடைய காலம் முதல் தான் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தமேற்பட்டதாலும் சில குறிப்புகள் மட்டுமே இங்குக் காட்டிவிடுவதாய்த் தீர்மானித்தே சில குறிப்புகளைப் பதிக்கத் துணிந்தோம்.

எலிஜபெத் அரசியாருடைய ஆளுகை கி. பி. 1558-முதல் கி. பி. 1603-வருடம் வரையில் நடந்தது. அவர் பிறந்தது கி. பி. 1532-ம் வருஷம். எட்டாவது ஹென்றியுடைய புதல்வியாகிய எலிஜபெத் பட்டத்திற்கு வரும்போதே



அனேகர் வெகு சந்தோஷசித்தர்களானார்கள். அதற்கு முன் தாங்களனுபவித்த கஷ்டங்களும் நஷ்டங்களும் மாறி இஷ்டப்பிரகாரம் சந்தோஷத்தோடு நாளைக் கழிக்கலாமென்னும் உவகை அனேகர் மனத்தில் தோன்றியது.

எலிஜபெத் ஆளுகையில் அதிக வியாபாரமும் தேசயாத்திரைகளும் விசேஷித்தன. வெகுதூரம் தேசசஞ்சாரஞ் செய்து அங்கங்கே வியாபாரங்கள் செய்து செல்வம் குவிப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் அப்போதுதான் செய்யப்பட்டன. துருக்கி தேசத்தில் வியாபாரஞ் செய்வதற்காகத் துருக்க கம்பெனி ஒன்றும் ருஷியாவில் வியாபாரஞ் செய்வதற்காக ருஷியா கம்பெனி ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டன. முக்கியமாய் நாம் இங்குக் கவனிக்கவேண்டியது நம் இந்தியாவுக்கு ஆங்கிலேயர்கள் வியாபாரஞ் செய்வதற்கு வேண்டிய கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டது தான். கி. பி. 1600-ம் வருஷக்கடைசியில் ஈஸ்ட் இந்தியா கம்பெனிஸ்தாபிக்கப் பட்டது. இதன் வழியாகத்தான் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து படிப்படியாகத் தங்கள் அதிகாரத்தைச் செலுத்த ஆரம்பித்து வியாபாரத்தை விருத்திசெய்து ராஜாங்கத்தை நிலைப்படுத்தினார்கள். ஆகவே மாட்சிமைதங்கிய அங்கில அரசாட்சிக்கு அஸ்திவாரம் போட்டு இன்றைக்குச் சற்றேறக் குறைய முந்நூறு வருடங்களாகின்றன. இத்தனை நாள் இந்தியாவை இடையறாது ஆண்டவர்கள் இதற்குமுன் எவருமிலர்.

எலிஜபத் ராணியுடைய குணங்கள் முழுமையும் அவ்வளவாய் உயர்ந்தவையென்று சொல்வதற்கிடமில்லாவிட்டாலும், சில நல்ல குணங்கள் அவரிடம் மிக மேன்மையாய்க் காணப்பட்டன. விடாமுயற்சி செய்வதிலும், உறுதியான எண்ணமுடைமையிலும், கற்றோரை ஆதரிப்பதிலும், அதிக தைரியங்கொண்டிருத்தலிலும் சமயந்தெரிந்து இதராளுடைய அபிப்பிராயங்களுக்கு இணங்கி நடத்தலிலும் அவர் ஒப்புயர்வற்றவராயிருந்தார். இதனால் அவருடைய ராஜ்யபாரத்தில் அனேக பெரிய மனிதர்களும் ராஜ தந்திரிகளும் விஞ்ஞானசாஸ்திரிகளும் கவீஸ்வரர்களும் விளங்கினார்கள். பிரசித்த கவீஸ்வரரான ஷேக்ஸ்பியர் முதலிய அறிவாளிகளும் எலிஜபத் சீமாட்டியாரால் ஆதரிக்கப்பட்டவர்தாம்.

## மன்னவர்க்கழகு செங்கோன் முறைமை

பூர்வகாலத்தில் தன்னுடைய தருமகுணமுள்ள அநேக செய்கைகளினால் தீனதயாளன் என்று அழைக்கப்படும் ஓர் உயர்குலவேந்தன் இருந்தான். அவன் தன்னுடைய அரண்மனையில் வாரமொருமுறை எல்லா ஏழை ஜனங்களையும் வரவழைத்து அவர்களுடைய கஷ்ட சுகங்களை விசாரித்து அவரவர்களுடைய அவசியத்துக்குத் தக்கபடி சகாயம் செய்துவருகிற ஒழுங்கான வழக்கத்தை வைத்திருந்தான். ஒருநாள் ஒரு ஏழை விதவை பதினைந்து வயதுள்ள சௌந்தரியவதியான தன் ஏகபுத்திரியுடன் அரசன் கொலுமண்டபத்திற்கு வந்தாள். அநேக மனுதாரர்களுடைய கூட்டத்தில் அவளுடைய முறை வந்த

போது அரசன் அவளுடையவும், அவள் குமாரத்தியினுடையவும், அபூர்வமான மரியாதையையும், கற்புத்தன்மையையும், அவர்கள் நடக்கும் கோலத்திலும் நோக்கத்திலும் கண்டுகொண்டு, தாராளமாய் அவளுடைய குறைகளைச் சொல்லிக் கொள்ளும்படி தேறுதல் வார்த்தைகளைச் சொன்னான். அவள் அதிக நாணத்துடன் கண்ணீர் சோர அடியில்கண்டபடி அரசனைப் பார்த்துச் சொல்லவாரம்பித்தாள். கிருபா சமுத்திரமாகிய வேந்தனே! என் வீட்டு வாடகைக்குப் பாக்கி நான் ஐந்துபொன் கொடுக்கவேண்டியிருக்கிறது. என் நிர்ப்பாக்கியமானது அதைச் செலுத்துவதற்கு எனக்கு வேறு வழியில்லாமலிருக்கிறது. என் புத்திரியாகிய இந்தப்பெண்ணை இது பரியந்திரம் அதிசக்கவலை எடுத்துக்கொண்டு நீதி ஒழுக்கமான மார்க்கத்தில் படிப்பித்து வந்திருக்கிறேன். நான் குடியிருக்கும் வீட்டிற்குச் சொந்தக்காரன் என் குமாரத்தியைச் சோர மார்க்கத்திற்குக் கட்டாயப்படுத்த வேணுமாய் பயமுறுத்துகிறான். அது என் நெஞ்சைப் பிளக்கிறது. அவனுடைய வாடகைப் பணத்தை எங்கள் நாணயமான உழைப்பினால் நாங்கள் சம்பாதித்து அவனுக்குச் செலுத்துகிற பரியந்திரம், இந்தக் கொடிய மனிதனுடைய துராகிருதத்திலிருந்து எங்களைக் காப்பாற்றும்படி உத்திரவு செய்யவேண்டுகிறேனென்றாள். அவளுடைய மாசற்ற கற்புநிலைமையையும், மரியாதையையும் அரசன் பார்த்து ஆச்சரியப்பட்டு அதைரியப்பட வேண்டாமென்று சொல்லி உடனே ஒரு சீட்டு எழுதி அவள் கையில் கொடுத்து அதைக் கொண்டுபோய் தன் காரியஸ்தனிடம் கொடுத்தால் அவன் ஐந்துபொன் கொடுப்பான்; அதை வாங்கி வீட்டு வாடகைப் பாக்கியைச்செலுத்தி விடு என்றான். உடனே அந்த ஏழைவிதவைக்கு அதிக சந்தோஷமுண்டாய் அரசனுக்கு அநேகமுறை வந்தனம் செய்துவிட்டுஅவன் காரியஸ்தனிடம்போய் அந்தச்சீட்டைக்கொடுத்தாள். அவன் அதைப் பார்த்து 500-பொன் கொடுத்தான். அவனுடைய செய்கைகளுக்கு அவள் ஆச்சரியப்பட்டு இது தன் நாணயத்தைப் பரிசோதிப்பதற்குச் செய்த ஒரு தந்திரமென்று பயந்து ஐந்துபொன்னுக்கு மேல் ஒருகாசுகூட வாங்கமாட்டேனென்றாள். அரசனுடைய உத்திரவின்படி 500-பொன் கொடுத்திருப்பதாய் காரியஸ்தன் பிடிவாதமாய் வற்புறுத்தியும், அவள் புத்தியிற்படவில்லை. கடைசியாகக் காரியஸ்தன் அவளை அரசன்முன் கொண்டுபோய் நடந்த சங்கதிகளைச் சவிஸ்தாரமாய்ச் சொன்னான். அந்த உதாரகுணமுள்ள அரசன் இவைகளைக்கேட்டு, உண்மைதான் 500-பொன் என்றுதைப்பிசகாய் எழுதிவிட்டேன், அந்தச் சீட்டைக்கொடு நான் திருத்திக்கொடுக்கிறேனென்று சொல்லி மறுபடியும் அந்தச் சீட்டில் எழுதி, அந்த ஏழை விதவையைப்பார்த்து, உன் மனசுத்தத்திற்கும், ஒழுக்கத்திற்கும் தகுந்த பிரதிப்பிரயோஜனத்திற்குப் பாத்திரமுள்ளவளாயிருப்பதால் உனக்கு 1000-பொன் கொடுக்கும்படி உத்திரவு செய்திருக்கிறேன்; அதில் உன்னால் எவ்வளவு மீத்துவைக்கக்கூடுமோ அதை உன்மகள் கலியாண காலத்தில் சீதனமாக அவளுக்குக்கொடு என்றான்.

MA IPAS : THE GUARDIAN PRESS, MOUNT ROAD



ஈஜிப்ட்டு தேசத்து அரசனாகிய செசோஸ்ட்டிரிஸ் என்பவன் தான் சிறையில் வைத்திருந்த நான்கு அரசர்களையும் தன் இரதத்தை இழுக்கும்படி செய்தான். அந்த நால்வரில் ஒருவன் சதா அந்த இரதத்தின் சக்கரத்தைப் பார்த்தவண்ணமாயிருந்ததை, ஈஜிப்ட்டு அரசன் கருத்தாய்ப்பார்த்து, அப்படிப் பார்ப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்க, அவ்வரசன், ஐயா சக்கரம் சுற்றுவதை நான் பார்க்குமிடத்து, இப்போது கீழேயிருக்கும் பாகம் தக்ஷணம் மேலாவதும், மேலாக இருக்கும் பாகம் உடனே கீழாவதும், நம்முடைய செல்வம் நிலையாமை யென்பதற்கு அறிகுறியாயிருக்கிறதென்றான். ஈஜிப்ட்டு அரசன் அதிக கருத்துள்ளவனானபடியால், அந்தச் சொல்லைத் தீர்க்கமாய் யோசித்து உடனே அந்த நான்கு அரசர்களையும் விடுதலைசெய்து அவர்களுடைய தேசத்திற்கு அனுப்பிவிட்டான்.

## பட்டபாதரின் குருபக்தி

இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் நமது பரதகண்டத்தில் பௌத்த மதம் அதிகமாய்ப் பரவிக்கொண்டிருந்தது. அநேக அரசர்கள் இம்மதத்தை அநுஸரித்தனர். ஜனங்களெல்லாம் கடவுளே இல்லையென்று நிரீசுவரவாதம்செய்யலானார்கள். பிராமணமதம் க்ஷீணதசையை யடைந்தது. இந்துமதத்தின் ஸித்தாந்தம் தெரிந்தவர்கள் அகப்படுவதே அரிதாயிருந்தது. இக்காலத்தில் காசுமீரதேசத்திலிருந்து பட்டபாதர் என்னும் பிராமணர் அந்தப் பிராந்தியத்திலுள்ள யோகாசாரியரென்னும் பௌத்த வித்வாம்சரிடம் வித்யார்த்தியாய் மதஸித்தாந்தங்களைப் படித்துவந்தார். சில நாளைக்கெல்லாம் இவர் பூர்ணபண்டிதராய் விளங்கினார். ஒருநாள் குருவுக்குத் தைலம் தேய்த்துக்கொண்டிருக்கையில் "குரோ! கடவுள் என்னும் பதார்த்தமுண்டா? ஜகத்துக்கு அது ஆதாரமாயிருக்கிறதா? என்ற விஷயமாய்ச் சர்ச்சை செய்கையில் பௌத்தமதஸ்தியாய் குரு மகாராஜ் ஸ்ருஷ்டி ஸ்திதி லயாதிகட்குக் காரணர் ஈசுவரன் ஒருவர்தான் உண்டென; பட்டபாதர் அதன் விஷயமாய் சில தர்க்கம் செய்ய குருவும் அவ்விதமே வாதித்தார். இதனால் பட்டபாதரின் கண்ணில் நீர் பெருகியது. இதையறிந்த அங்குள்ள சிஷ்யர்கள் இவர் பிராமணரென்றும் இவருக்கு இனிப்பாடம் சொல்லித்தரக்கூடாதென்றும் சொல்ல பட்டபாதர் அந்த க்ஷணத்திலேயே புறப்பட்டுத் தன்தேசம் வந்து மண்டனமிச்ரர் முதலியவர்களைச் சாஸ்திராப்பியாஸத்தில் நிபுணர்களாகச் செய்தார்.

இவ்விதம் காலம் கழிந்து வருகையில் ஒருநாள் பட்டபாதர் குருவோடு தான் சொல்லிய வார்த்தைகளை நினைத்து அந்தத் தோஷ பரிகாரத்துக்காக ஒரு குழியிலுட்கார்ந்து நெருப்பை வைத்துக்கொண்டார். அவ்வேளையில் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் தாம் செய்த பிரம்மஸூத்ர பாஷ்யத்தை யோக்யரான பட்டபாதரிடம் காண்பிக்கவந்தார். பட்டபாதரின் நிலைமையைப் பார்த்து "ஸ்வாமி! நான் கொண்டுவந்த கிரந்தத்தைத் தாங்கள் ஸரிப்படுத்தவேண்டும்" என பட்டபாதர் "ஸ்வாமி! நான் பரலோகம் செல்லத் தயாராயிருக்கிறேன். நான் எப்படிப் பார்க்கமுடியு"மென்றார். அதற்கு ஆசாரிய ஸ்வாமிகள் என் கமண்டலோதகத்தால் நான் அக்நியைச் சீதளமாக்குகிறேன், ஞானிகளான தாங்கள் இவ்விதம் ஆத்மதண்டனை செய்துகொள்வது அழகல்ல என, பட்டபாதர் நான் செய்துகொள்ளும் தண்டனை போதாது. என் குருவின் ஸமுகத்தில் நான் செய்த வாதத்துக்கு இந்தச் சிக்ஷைசெய்து பாபத்தைப் பரிகரித்துக் கொள்கிறேன். ஸர்வக்ஞராகிய நீங்கள் என் சிஷ்யராகிய மண்டனமிச்ரரிடத்தில் இக்கிரந்தத்தைக் காட்டலாமென்று ஸமாதானம் செய்து தாம் யக்ஞேசுவர

னிடத்தில் பஸ்மமானர். பட்டபாதர் குருவோடு தர்க்கித்தது நியாயமானாலும் அவ்வார்த்தை குருவுக்கு விரோதமாயும் கர்ணகடோமாயுமிருந்ததால் தன்னைக் குரூரமான தண்டனைக்குட் படுத்திக்கொண்டார். இந்தச் சரித்திரத்தால் குருவிடத்தில் எக்காலத்திலும் எவ்விதமான அபராதத்தையும் செய்யப்படாதென்றறிகிறோம். குருவின் மனம் துயரமடையும்படி செய்வது மகாபாதகமென்றும் அதற்குப் பரிகாரம் சரீரத்தை அக்கினிக்கு அர்ப்பணம் செய்வதுதான் தக்கதென்றும் தெரியவருகிறது.

## நல்லவனாவதெப்படி?

நல்லவனாவதெப்படியென்று ஒருவன் கேட்டதற்கு, பெயர் பெற்ற ஆங்கில விற்பன்னரொருவர் அடியில் வருமாறு கூறினார்.—எந்த மனுஷ்யன் எந்த விஷயத்தில் விருப்பங் கொள்ளுகிறானோ அதற்கேற்றபடி பேசுவதும் நடிப்பதும் நல்லவனென்ற பெயரைக்கொண்டு வந்துகொடுப்பதற்குத் தக்க வழியாமென்றார். இதை இங்கிலீஷிலுள்ளபடியே மொழி பெயர்த்தோம். இதன் பொருளைச் சில உதாரணங்களால் விளக்கிக் கூறுவோம். ஒருவன் நாடகப் பிரியனாயிருந்தால் அவனிடம் நல்லவனென்ற பெயரைப் பெறவேண்டி நாம் நாடகத்தைப் புகழ்ந்து பேசவேண்டும். உண்மையில் நமக்கு நாடகத்தின்மீது வெறுப்பு உண்டாயினும் அதை யவனிடம் காட்டாமல் விருப்பமிருப்பதுபோல், பாவனை செய்யவேண்டும். மற்றொருவன் ஆலயந்தொழுவதில் ஆசை கொண்டவனாயின் நாம் அவனுடைய விசுவாஸத்தை யடைவதற்காகக் கோயிலுக்குப்போகத் தயாராயிருக்கவேண்டும். எவருக்கு எதில் இஷ்டமோ அதை வெறுத்துக் கூறுவது அப்பிரியத்துக்கிடம். இதனால் இச்சகம் பேசுவோன் என்ற கெட்ட பெயரை நாம் அடைவோமென்று பயப்படலாகாது. இச்சகம் பேசல் கெடுதலாயினும் இச்சகத்தில் நல்லவனென்ற பெயரைப்பெற விரும்புவோன் இச்சகம் பேசாமலிருக்க முடியாது. ஆனால் இச்சகம் பேசுவதால் நம்மையும் பிறரையும் பாபத்துக்குள்ளாக்காதபடி மாத்திரம் நாம் தடுத்துக்கொள்வது அவசியம். யாருடைய சகவாசத்தால் ஜீவனுக்குத் தீங்குவிளையுமோ அவருடைய ஸகவாஸத்தைமட்டும் ஒழித்து மற்றவருடைய நட்பைக் கொள்வதும் அவர்கட்கேற்றபடி நடப்பதும் குற்றமாகாது. அதனால் நற்பெயருண்டாகும்.

## மரணக்கோர்ட்டு

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. பாம்புக்கே யிவ்வாறானால் 'சாவு' என்பதற்கு உலகமே நடுங்கும் என்று சொல்வதில் யாது தடை? எறும்பு முதல் பிரமன் வரைக்கும் இந்த 'சாவு' அல்லது 'சாதல்' என்னும் விஷயத்திற்கு அஞ்சி நடுங்கி அகம் கலங்காதவர்கள் யாவராயினும் அல்லது எவையாயினும் இருக்கின்றனரா இருக்கின்றவையா என்று ஆலோசித்துப் பார்த்தால் இல்லவேயில்லை என்று ஏற்படுகிறது.

'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்' என்றார், இணையாருமில்லாத மணிவாசகப் பெருமான். இறப்பு என்பது வெருகுறுகுறப்புடன் உற்றார் பெற்றார் மக்கள் மனைவி முதலானவர்களுடைய கண்ணின் அழுகையையும், கவலையின் குரலையும் கவனிக்காது சொக்குப்பொடிக்காரன் சொக்காய்ப் பறிப்பதுபோல், உடலினின்றும் உயிரைப்பறித்து ஒரே ஓட்டமாய் ஓடி ஆநந்தியம் விளைக்கும் ஆகா வழிப்பயல். மரணதேவதையாகிய மகா பாதகன் வருகிற சமயமும் தெரியாது, போகிற வேளையும் தெரியாது. இருந்தாற்



போலிருந்து வந்தாலும் வருவான். ஆறுமாதம் ஆசாத்தியங் காட்டி நோயாளிகளைப் பாயும்படுக்கையுமாய் அழவைத்து அவஸ்தைப்படுத்தி வந்தாலும் வருவான். அவன் செயல் இன்னதென்று தெரியாது. இதனால்தான், பின்னால் தர்மம் செய்வோம், தள்ளாத வயதில் தர்மம் செய்வோம், ரத்தத்திமிரில் மெத்த அக்கிரமஞ் செய்தாலும், போகப்போகப் பார்த்துக்கொள்ளலாம், என்று தாமதஞ் செய்தலாகாது; அப்போதைக்கு அப்போதே தர்மம் செய்ய வேண்டும், கடவுளைத் துதிக்கவேண்டும் என்று பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்.

'அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன் அரங்கமா நகருளானே' என்றார், பெரியாழ்வாரெனப் பெயர்கொண்ட பேருளாளர். 'மரண வேதனை சொல்லமுடியாத துன்பம் கொடுப்பதென்றாதலால் அத்தருணம் உன்னைச் சிந்தனை செய்ய முடியாது; ஆதலால் என் குறைகளை இப்போதே உன்னிடம் முறையிட்டுக் கொள்கிறேன். கேட்டு ஆதரிக்க வேண்டும்' என்று அவர் பிரார்த்திக்கிறார். மரணம் என்பது நம் கழுத்தின் மீது கத்தியைப்போல் எந்நேரமும் தொங்கிக் கொண்டிருக்கிற மகிமையை அறிந்தவர்கள் யார் தாம் உலகத்தையே பெரிதென்று மதித்து உலகத்திலுள்ள துச்ச வஸ்துக்களை உச்சந்தலைமேல் வைத்துக்கொள்வார்கள்? உலக விஷயங்களில் விரக்தி மிகவும் பூண்ட திறிஸ்தவப் பிரசங்கியார், எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து, எல்லாம் பலனற்றது என்று ஒதுக்கி விடுகிறார்; மிருகங்களை விட மனிதர்கள் எந்த விஷயத்தில் மேன்மை யுடையவர்களென்று பைபிலில் அனுதாபப்படுகிறார். அப்பெருந்துறவியார் அறவுபதேசம் மிகவும் ஸ்லாகிக்கத்தக்கது.

'முதுகாட்டிற் காக்கை யுகக்கும் பிணம்' என்கிறபடி மஹா கொடூரமான மரண தேவதைக்கு மஹா சமர்த்தனான காரியஸ்தன் யாவனென்றும், எவன் பேரில் அத்தேவதை மஹா அன்பு வைத்திருக்கிறதென்றும், நாம் அறியவேண்டியதல்லவா? நமக்கு உதவியாக யாவராகிய ஜீ என்னும் ஆங்கிலப் பெரியோர் ஒரு சிறு கதைகொண்டு நம் சந்தேகத்தை ஒழிக்கிறார். அஃது யாதென்று பார்ப்போம்.

மரணக்கோர்ட்டில் மஹாசபையொன்று கூடிற்றாம்.—மரணதேவதை மஹா அட்டகாசத்தோடும் ஆர்ப்பாட்டத்தோடும் கொலுவமர்ந்ததாம். அஞ்சா நெஞ்சு படைத்த அரசனுக்கெதிரில் பார்க்கப் பதகுறையான பாதகநோய்களும் நினைக்க நினைக்க நெஞ்சை வருத்தும் நீங்காத நோய்களும் எல்லாவித நோய்களும் உல்லாசமாக உட்கார்ந்து கூட்டம் கூடின. மஹாராஜனாகிற மரண தேவதை கையில் ஒரு தந்தத்தடியைக்காட்டி, 'யாவன் இன்று எனக்கு மந்திரியாக நியமிக்கப்படுகிறானோ அவனுக்கு இந்தத் தந்தத்தடி கொடுக்கப்படும். அவனவன் சாதகங்களை அவனவன் கூறட்டும். எவன் தக்கவனோ மிக்கவனோ அவனை நான் தேர்ந்தெடுக்கிறேன்' என்று கூறிற்று.

'ஆசைக்களவில்லை' என்கிறபடி அரிய மந்திரிப் பட்டத்தை உரியபடி பெற்றுக்கொள்ள அநேகர் ஆசைப்பட்டவர்களில், ஜுரமென்னும் கொடுங்கோலையன் முதன்மை பெற்றவனென்று தன்னைத் தான் கருதி 'என் பெருமை தெரியாதவனும் உலகத்திலிருக்கிறானோ? எந்தநோய் வந்தாலும் என் நோய் கூடவே யில்லாது ஒரு காரியமும் சாயாது. வாரவாரம் கணக்கெடுத்துப் பார்த்தால் எந்த நோய் முந்தியதென்றும், எந்த நோய் ஆவேசத்தோடும் விடாமுயற்சியோடும் பீடிக்கிறதென்றும் நன்றாய்த் தெரியவரும். ஆதலால், எனக்கு மந்திரி வேலை கொடுக்கவேண்டும்' என்று பிரசங்கஞ் செய்து மனுப்பண்ணிக் கொண்டது.

இதைக்கேட்டதும், அக்கிரத்தோடும் தோத்திரஞ்செய்து கீல் வாயு என்னும் பகிர் நோயும் தன் பெருமை பேசத் தலைப்பட்டது. "மஹாராஜா, என் பெருமை உனக்கன்றி யாவர்க்குத் தெரியும்? காலிலிருந்து தலைக்கு ஓடுவதும், தலையிலிருந்து காலுக்கோடுவதும், உலகமெங்குஞ் சஞ்சரித்து ஊர்கோலம் வருவதும், கணுக்களில் தங்கிக் கவலை விளைப்பதும், ஒன்று மில்லாததுபோலிருந்து ஒரே யடியில் சரேலென்று கிளம்புவதும் பட்டவர்களுக்குத் தெரியும், உனக்குத் தெரியும், ஆதலால் மந்திரி வேலைக்கு நானே லாயக்கானவன்" என்று மூடக்குவாய்வு திடச்சித்தத்தோடும் கூறியது.

'என் சாகஸம் எவனுக்கு வரும்?' என்று தள்ளாடி மெள்ள எழுந்தது, நையாடியான க்ஷய ரோயும். 'ஆக்கிரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பார்கள். அதுபோல், தலை விரித்துக்கொண்டு நிலை தெரியாமலாடுகின்ற சுர நோய்க்கும் வாத நோய்க்கும் என்ன தெரியும்? அடங்காப்பிடாரிக்கு ராஜா மூங்கில் தடி என்கிறபடி பலத்த மருந்தைப் பக்குவமாயேற்றிவிட்டால், மந்திரக்காரனிடம் பேயடங்குவதுபோல், ஆட்டம் அடங்கி ஓட்டம் ஒடுங்கி வாட்டம் தொடங்க வேண்டியதுதான். நான் அப்படி யல்லன். மெள்ள மெள்ள இருமித் துள்ளத் துள்ள உயிரை உண்பேன். எந்த வைத்தியனாலும் என்னை வெல்ல முடியாது; எந்த மந்திரக்காரனாலும் என்னைக் கட்டுப்படுத்த ஆகாது. எனக்கே மந்திரிவேலை கொடுக்கவேண்டும்" என்று கூறிற்று. பினைக்கும் வாந்திபேதியும் 'எம் வன்மை யாவர்க்கு வரும்? ஒரு க்ஷணநேரத்தில் ஊரையெல்லாம் நாசப்படுத்த மாட்டோமா? எங்களது வன்மை யாவருக்கு வரும்?' என்று தம்மைப் புகழ்ந்து கொண்டன.

அதிக புத்திசாலியாகிய மஹாராஜா மரண தேவதை 'உங்களுக்கெல்லாம் ஏது? மந்திரிவேலை கொடுப்பதில்லை. உங்களையெல்லாம் மனிதர்களெல்லாரும் விரோதிகளாய்ப் பாவிக்கிறார்கள். குடி, மித்ரமற்ற குடியே, சகுனி மாமனைப்போல், ஒக்க இருந்து ஊரைக்கெடுப்பதாகும்; மனிதர்களுடைய உத்ஸவங்களிலும் கொண்டாட்டங்களிலும் கூட இருந்து குளிர்ந்து குலாவிக்கோல்லுகிற மேன்மையான கருவி; அதனாலேயே உங்களுக்கெல்லாம் வேலை யேற்படுகிறது. குடியின் சாகஸம் உங்களுக்கெல்லாம் வராததலால், மந்திரி வேலை அதற்கே கொடுத்தேன்" என்று தீர்மானஞ் செய்துவிட்டது.

## தைரியசாலியான போர்வீரன்

சில தினங்களுக்கு முன் அமெரிக்காக் கண்டத்து ஸம்யுக்த ஸமஸ்தானங்களைச் சேர்ந்த ஒரு பட்டணத்தில் சில பழைய சிபாய்கள் தங்கள் காலத்தில் நடந்திருந்த ஒரு யுத்தத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அந்தயுத்தத்தில் பராக்கிரமத்தையும் தைர்யத்தையும் யார் காட்டினார்களென்ற கேள்வி பிறந்தது. ஒவ்வொருவரும் தத்தம் வீரத்தைப் புகழ்ந்துகொண்டனர், அவற்றைக் கேட்ட வேறொருவன் அடியில் வருமாறு சொல்லுகிறான்.

நாற்பது வருஷங்களுக்கு முன் ஐக்கிய மாகாணங்களில் ஒரு யுத்தம் நடந்தது. அந்த ஸமஸ்தானங்களில் உத்தர பாகத்தைச் சேர்ந்தவர்கள் அடிமை வியாபாரம் மிகவும் ஹீனமானதென்று அபிப்பிராயப்பட்டனர். தக்ஷிண பாகத்தார் பெரிய பெரிய ஜமீன்களை வைத்துக்கொண்டு கரும்பு புகையிலை முதலிய பயிர்களை வளர்த்துத் தனிகர்களானவர். இந்த ஜமீன்களில் காரியம் செய்வதற்காக ஆபிரிகா கண்டத்திலிருந்து அடிமைகளை வரவழைத்தவர்களாதலின் அவர்களை விட்டுவிட உடன்படாமல் மறுதலித்தனர். பரஸ்பரம் வாக்கு



வாதங்கள் நடந்து கடைசியில் கோர யுத்தமுண்டாயிற்று. உத்தர ஸமஸ்தானங்களின் ஸைன்யத்தில் ஜெனரல் கிராண்டன் ஸேனாபதியாயிருந்தான். இவன் சத்துரு ஸைன்யத்தாரைத் துரத்திக்கொண்டு போகையில் எதிரிகள் கிராண்டனுடைய குண்டடி தாளமாட்டாமல் பள்ளங்களை நோண்டி அதற்குள் மறைந்துகொண்டு அங்கிருந்தபடியே வெடிகளைப்போட்டனர். சத்ரு பக்ஷத்தாரில் அநேகர் இறந்துபோயினர். காயமடைந்து எழுந்திருக்கமுடியாமலிருந்த ஒருவன் பக்கித்தார் தாகத்தால் அதிக கஷ்டமடைந்து ஜலம் கொண்டுவந்து கொடுப்பவர் யாருமில்லையோ என்று கல்நெஞ்சும் கரையும்படி முறையிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குச் சிறிது தூரத்திலுள்ள பள்ளத்தில் ஒளிந்திருக்கும் சிபாய்களிலொருவன் இளம்பருவமுடையோன். குரூபி, பார்ப்பதற்குக் கொஞ்சம்கூட லக்ஷணம் வாய்ந்தவனல்ல. அனுபவசாலியுமன்று. ஆனால் ஸமயம் வந்தால் யாருக்கும் ஸகாயம் செய்யும் குணமுடையவன். அந்தப் பரிதாபகரமான சப்தம் இவன் காதில் விழுந்தது. அவன் ஸைன்யத்தில் சேர்ந்து கொஞ்சகாலந்தான் ஆயிற்று. ஆகிலும் அவன் தன் நேசர்களைப் பார்த்து "அப்பா இனிநான் ஸகிக்கமாட்டேன். என் பங்குக்குரிய ஜலத்தை அவனுக்குக் கொடுத்து வருகிறேன்" என்றான். இவர்கள் அடே பைத்தியக்காரா உன் தலையை வெளியில் நீட்டினால் அதைக் குண்டுகள் சல்லடைக் கண்கள்போல் துளைத்துவிடும். இதோ பார் என்று ஒரு குல்லாவை எடுத்துப் பள்ளத்தின்மேல் தூக்கினார்கள். அந்தக்ஷணத்தில் 15-குண்டுகள் வெகு ஸபதத்தோடு வந்தன. இதைப்பார்த்த யௌவன புருஷன் லக்ஷியம் செய்யாமல் உபகாரம் செய்வதிலேயே மனம்கொண்டு பள்ளத்தைவிட்டு எழுந்திருந்து மெள்ள படுத்தமாதிரியாகவே மார்பால் நகர்ந்துகொண்டு போனான். குண்டுகள் மழையைப்போல் வருஷிக்கின்றன. வழிமுழுவதும் போகக்கூடாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. ஹெஸ்ஸேதாரிடம் இவன் செல்ல ஸாத்தியப்படாததால் பெரிய குச்சியில் ஜலபாத்திரத்தைக் கட்டி சாகப்போகிறவனிடம் நீட்டினான். ஹெஸ்ஸேதாருடைய நன்றியறிவை என்னவென்று சொல்வோம். ஜலம் கொடுத்த உபகாரியை இன்னானென்றறியாவிட்டாலும் தன்னிடமிருந்த விலையுயர்ந்த தங்க கெடியாரத்தை அதே குச்சியில் மறுபடி அவனிடம் நீட்ட அந்தச் சிபாய் அதற்கு உடன்படாமல் பின் திரும்பிப் பள்ளத்தில்போய்க் குதித்தான். இவனுடைய காரியத்தைக் கூட விருந்தவர்கள் கண்ணுற்று ஆச்சரியமடைந்து அப்பா உனக்கிந்தத் தைரியம் எங்கிருந்து வந்தது, என்று வினவ, அவன் என் தாய் எனக்குக் கற்றுக்கொடுத்த ஒரு வார்த்தை நினைவுக்கு வந்தது. என்ன செய்தாலும் அதை மறக்க முடியவில்லை. "தாகத்தோடு வருந்தினேன். எனக்கு ஜலம் கொண்டுவந்து கொடுத்தீர்கள்" என்று பைபிலில் சொல்லியிருக்கும் அந்த வார்த்தை ஹெஸ்ஸேதாருடைய ஆர்த்தஸ்வரத்தைக்கேட்கும்போது என்னைக் கட்டாயப்படுத்தியது. அதனால் நான் பொறுக்கமுடியாமல் அவனிடம் சென்றேனென்று விடையளித்தான்.

## ஜகன்னாத கவி

ஜகன்னாத கவியே பண்டிதராஜா என்பவர். இவர் திரைலிங்க வம்சஸ்தராகிய பேர்பெற்ற வித்வாம்சரின் புத்திரர். இவர் அதிபால்யத்திலேயே தர்க்கம், வியாகரணம், சந்தஸ், மீமாம்ஸம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களில் அதிக பாண்டித்யமென்று பிரஸித்தி பெற்றிருந்தார். இவர் பார்ஸி தேசத்தில் பண்டிதராயிருந்து அத்தேச பாஷையில் அநேக கிரந்தங்களை எழுதி வைத்தார். இவர் 1627-ம் வருஷத்திலிருந்து 1658-வரையில் ஷாஜிஹான் என்னும் மொகலாய சக்கிரவர்த்தியினிடம் டில்லி பட்டணத்தில் மட்

கவிகளை ஜெயித்து அந்தச் சக்கிரவர்த்தியினிடத்திலேயே பண்டித ராஜனென்ற பெயரைப் படைத்தார். இவர் செய்த கிரந்தங்களும் சரித்திரங்களும் வெகு மனோகரமாயும் ரஸா கௌசலமாயும் நீதி மார்க்கமாயு முள்ளது. இவர் விஷயத்தில் சில ஸங்கதிகள் தெரிவருகின்றன. டில்லியிலிருக்கையில் அதிஸுந்தரியாயும் உத்தம குலோத்பன்னையாயும் இவருக்கு ஸமானமான பண்டிதையாயுமிருந்த யவனகன்யை இவரை இஷ்டத்தோடு விவாகம் செய்துகொள்ள ஸம்மதித்ததை யறிந்த இவர், ஆதர பூர்வமாய் அவளைக் கிரகணம் செய்தார். சில பிராமணர்கள் இவரைக் கங்கையைத் தொடக்கூடாதென்று நிந்திக்க இவர் எதற்காகக் கங்கையைத் தொடக்கூடாதென்று தாஷிக்கிறீர்களென்றும் காரணத்தைச் சொல்லி ருஜுப்படுத்த வேண்டுமென்றும் கேட்டார். அவர்களுக்குத் தகுந்த நியாயங்களால் நிரூபிக்கச்சக்தியில்லாதிருக்கக்கண்டு காசீ மண்டலத்தில் பெரிய பண்டிதரென்று பெயர்பெற்ற அப்பதீக்ஷிதரிடம் போய் நான் கங்கையை ஸ்பரிசிக்கக் கூடாதென்று உங்கள் சிஷ்யர்கள் சொன்னார்களே? அதன் காரணத்தை எனக்குத் தெரியப்படுத்துங்களென்று சொல்லவே, அப்பண்டிதர் அகங்காரத்தோடு இவரை திரஸ்கரித்தார். இவர் அந்தப்பண்டிதர் பேரில் கோபங்கொண்டு அவர் செய்துள்ள சித்திர மீமாம்ஸம் விருத்தி வார்த்திக மென்னும் கிரந்தங்களைக் கண்டனை செய்வதற்காக ரஸகங்காதரமென்னும் மகா கிரந்தத்தை யுண்டுபண்ணி அதின்படியே கண்டித்தும் விட்டனர். சிலகாலம் சென்றதும் விரக்தராய் காசி க்ஷேத்திரம் போய் அங்குள்ள பிராமண மண்டலத்தைக் கங்கையின் கரையில் வைத்துக்கொண்டு தான் நிர்தோஷியென்று நிரூபிக்கக்கங்கையை பியூஷலஹரீ, என்னும் ஸ்தோத்திரத்தைச் சொல்லியழைக்கவே கங்கை பொங்கி பிரவாகத்தின் மத்யத்தில் ஒரு ஸ்திரீயைப்போல் ஸகலருக்கும் தோன்றினாள். உடனே பிராமணர்கள் இவரைக் கொண்டாடினார்கள். ஜகன்னாத கவி யவன கன்யையோடு கங்காப்பிரவேசம் செய்தனர். இவருடைய கிரந்தங்களெல்லாம் வெகு உத்கிருஷ்டமானவை.

## நம்மவர் பரம்பரை யுணர்ச்சி

இவ்வுலகில் வெண்மையான கடிதத்திற்குச்சமானமான மனத்துடன் எவனும் பிறக்கவில்லை. தேகவேற்றுமையுடன் பிறப்பதைப்போலக் குணவேற்றுமையும் அவனிடத்தேயிருக்கும். 'மகனறிவு தந்தையறிவு' என்னும் பழமொழி மநுவின் காலத்ததே. அந்தணத்தந்தைக்கும் வைசியத்தாய்க்கும் பிறந்த மகன் வைத்தியனாவான் என்று அறநூல் வகுத்தவர் கூறுவது இக்கொள்கையை வலியுறுத்துகின்றது. வியாதியை இன்னதெனத் தெரிதற்குப் பிராமண உணர்ச்சியும் இரணவைத்தியஞ்செய்வதற்கு வைசியவுணர்ச்சியும் வைத்தியனுக்கு இன்றியமையாக் குணங்களெனக்கொண்டே அவ்வாறு அவர் கூறினார் போலும். முதல் வாழ்ந்துவந்தும் க்ஷத்திரியனான துஷ்யந்தன்மீது காண்டவுடன் காமுற்ற மனை விழைதலைக்காண்டு மன்றோ! அறிவிற்குங் குணத்திற்குஞ் சம்பந்தமில்லை. அறிவிலான் நல்லொழுக்க முடையவனாதலும் அறிவுடையோன் தீயொழுக்க முடையவன் ஆதலும் இயல்பாயிருக்கின்றது. ஒழுக்கம் முக்கியமாய்ப் பரம்பரை யுணர்ச்சியினலேயே ஆக்கப்படுகின்றது. தனி மாந்தரிடத்து உண்மையாக நிரூபிக்கப்பட்டது. தேசத்தவரிடத்தும் அவ்வாறேயாம். தனி மாந்தரிடஞ் சில சமயங்களில் பரம்பரையுணர்ச்சி வெளித்தோன்றாமல் அப்பொழுது சகவாசத்தினலடைந்த பாவனைகளால் மூடுண்டிருக்கும். மிகவும் புத்தி



175

சாலியான தந்தைக்கு மூடமகன் பிறக்கின்றான். இஃதுண்மையில் பரம்பரையுணர்ச்சி தொடரும் என்ற கொள்கைக்கு ஒருவிலக்கே என்பர் சிலர். ஆயினுந் தாயினுடைய புத்திசாலித்தனமும், மூதாதைகளின் அறிவும் மகனிடத்துப் பிரதிபிம்பித்ததென்றுங் கூறலாகும். மேலும் மகன் தன் அறிவை வெளியில் தோற்றுவிக்கச் சமயம் வாய்க்கவில்லை யென்றாவது வேறு காரணங்களால் பரம்பரையுணர்ச்சி தொடரவில்லை யென்றாவது கொள்ளவேண்டும். ஆனால் ஜன சமூகத்திற்கு இத்தகைய விலக்குகள் நேரிடுவதில்லை. விசாலமாக ஓடும் நதி அதிகமாக வளைந்து போகாது. பரம்பரையுணர்ச்சியினால் ஒவ்வொரு தேசத்தவர்க்கும் தனியான நடவடிக்கைகளிருக்கின்றன. அந்நடவடிக்கைகள் தேசத்தின் குளிர்வெப்பநிலையினாலும், சமயவுணர்ச்சியினாலும், வழக்கங்களினாலும் தோன்றுகின்றன.

இப்பரம்பரையுணர்ச்சி முக்கியமாய் நம்மவர் சமயவுணர்ச்சியிலும் பொது நடவடிக்கைகளிலுமே பெரிதும் விளங்கும். பரம்பரையுணர்ச்சியானது மனிதர் ஒருவிதமாக எண்ணுதலையும் ஒருவகையான ஒழுக்கமுடைமையையும், உண்டாக்குகின்றது.

நம்முன்னோர்கள் செய்த நூல்களைப்போன்றே இப்பொழுது நாமும் நூல் செய்ய வல்லுநராகின்றோம். புதியவகையான நூல்களைச்செய்ய நாம் ஆற்றலிலராகின்றோம். ஒரு தமிழ்ப்புலவன் புராணம்பாட ஆற்றலுடையவனாகின்றானேயொழிய இயற்கைப்பொருள்களை யுள்ளவாறு வருணித்துரைக்கத் திறமையிலனாகின்றான். இது பரம்பரை ஞானத்தைப் பற்றியதே.

தேக சௌக்யத்திற்சிறிதுங் குறைவில்லாத ஒருவனுக்குப் போதுமான செல்வம் அதிர்ஷ்டவசத்தாற் கிடைக்குமாயின் அவன் நோயுற்று அழிகின்றான்; தேக சௌக்கியத்தைப் பிறகு அடைய முயலுவதில்லையாகலான். அம்மாதிரியாகவே பரம்பரையுணர்ச்சி சிலகாலங்களுக்குப் பின்னர் தேசத்தவர்க்குக் கேட்டினையும் விளைக்கின்றது. பொதுநன்மையைக் கவனியாமல் தங்களுக்குத் தோன்றியவாறெலாம் ஒவ்வொருவரும் ஒழுகுகின்றனராகலான், உலகத்தவர் நன்மையைத்தேடுவது பிணத்திற்கலங்காரஞ் செய்வதை நிகர்க்கும் என்று சிலர் கூறுகின்றனர்.

சாதிவேற்றுமை முதலில் மிக்க நலத்தை யுண்டுபண்ணிற்று என்பதற்கு ஐயமேயில்லை. பிராமணர் தாமே அறிவை யடைதற்கு உரிமை பாராட்டினாராகலின் அவர் பொறுமை பாராட்ட யாவருமிலர். பிறகு அவர் மேலும் மேலும் கல்வியை விருத்தி செய்ய முயலாதொழிந்தனர். க்ஷத்திரியர்களும், சூத்திரர்களும் அப்படியே. நம் தேசத்தின் தற்கால நிலைமைக்குப் பலகாரணங்களிருப்பினும் சாதிவேற்றுமையுமொரு காரணமே. இதனாலேயே நம் ஒற்றுமை நீங்கிற்று. நம்மினுமிழிய சாதியாருடன் கலக்கப்பிரியப்படுவதில்லை. இவ்வுணர்ச்சியும் பரம்பரையுணர்ச்சியே.

பாலியவிவாகமும் நம் அடிமைநிலைமைக்கு ஒருகாரணமாம். நம்மவர் ஏன் பாலியவிவாகஞ் செய்கின்றனர்? மற்றைச்சாதியாரினும் நம்மவர் வலிய காதலையுடையாராகலின் மணஞ் சீக்கிரஞ் செய்துகொள்கின்றனர் என்று சிலர் கூறுகின்றனர். தேசத்தின்குளிர் வெப்பநிலைமையும் இதற்குக்காரணமெனல் மூடத்தனமே. இவ்வழக்கம் பரம்பரையாக வருதலினாற்றான் என்று நினைக்கவேண்டியிருக்கின்றது. பெண்களை ஆடுமாடுகளாக நினைத்தலிற்றான் இத்தீவழக்கமும் உண்டாயிற்று. பெண்களையடிமைகளாக நினைத்தலால் ஒருவன் தனக்கு எத்தனை வேண்டுமோ அத்தனை ஸ்திரீகளை மணக்கின்றான். பிறகு அவர்களுக்குச் சுதந்

திரங் கொடுக்க முடிவதில்லை. ஏனெனின், அச்சுதந்திரத்தைத் தீய வழியில்
பாராட்டுவாராகலின். மேலும் தன் தந்தையின் கொடிய ஆளுகையினின்றுந்
தப்பிக்கொள்வதன்முன் மணஞ்செய்துவிட்டால் அவள் அடிமைத்தனத்தை நீக்க
முயலாதொழிகின்றாள். இத்தீய நடவடிக்கைகளெல்லாம் உண்டானமை நம்மவர்
சுறுசுறுப்புத்தனத்தை விட்டுச்சுகமே சிலகாலம் வாழ்ந்து வந்ததனாற்றான். ஒரு
தேசம் எப்பொழுதும் ஒருவகையான நிலைமையில் இருக்குமாயின் அஃது
எப்பொழுதுந் தொடர்ந்தேவரும். இதுவும் பரம்பரை யுணர்ச்சியைப்பற்றி
யதே. இக்காலத்தில் நம்மவர் கூடுணதசையைப்பற்றிக் கூறுவோரெல்லாம்
பரம்பரையுணர்ச்சியினாலேயே எதுவும் நடக்கின்றதென்றறியக் கடவர்.

## குளவி தன்னிற மாக்குமா?

இப்பழமொழியைச்சாதாரணமாக அநேகர் உபயோகிக்கின்றார்கள். வழக்க
மாய்ப் பிழைசெய்யப்பட்ட ஒரு சிறுவன் ஏதாவது ஒரு பொருளைக்கெடுத்தால்
குளவி தன்னிறமாக்கி விட்டது என்று அநேகர் சொல்லுகிறதைக் கேள்விப்பட்
டிருக்கின்றோம். மேற்குறித்த வாக்கியத்திற்கு என்ன அர்த்தம் என்று அவர்
களை நான் விசாரித்ததில், குளவி புழுக்களைத் தன் கூட்டிற்குக் கொண்டுபோய்
வைத்து, சிறிது சிறிதாக அப்புழுவினின்று தன்னைப்போன்ற ஒரு குளவியை
உற்பத்தி செய்கிறதென்று சொல்லுகின்றனர். இஃது உண்மையேயக
என்று ஆராயலாம்.

புழுவிலிருந்து குளவி உண்டாகுமா? அதாவது ஒரு ஜந்துவினின்று சிறி
தும் அதற்கு ஒற்றுமையில்லாத மற்றோர் ஜந்து உற்பத்தியாகுமா? இந்தக்
கேள்வி கற்றறிந்த முன்னோர்களாலும், இப்பொழுதுள்ள தத்துவ சாஸ்திரிக
ளாலும் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றது.

சில பிராணிகள் அழுகுகிற வஸ்துக்களினின்று உண்டாவதாகவும் சில
பூச்சிகள் செடிகளின் மீது மழைத்துளிகள் விழுவதனால் உற்பத்தியாகிறதாக
வும், வயிற்றிலுள்ள நாக்குப்பூச்சிகள் கிணறுகளிலுள்ள சேற்றினின்றும் ஓடு
கிற ஜலத்தினின்றும் ஜனிப்பதாகவும் அரிஸ்டாடில் (Aristotle) சொல்லியிருக்
கின்றனர். மேலும் உடம்பின் அழுக்கினின்று மூட்டைப்பூச்சியும் மாம்சத்தி
லிருந்து பேன்களும் பிறப்பதாகச் சிலர் சொல்லுவார்கள். அன்றியும் மூன்றாவது
கள் அழுகுகிற வஸ்துக்களினின்று, உண்டாகுமா என்று ஒருவர் (Sir
Thomas Lrowne) சந்தேகிக்கும்போது பாலடைக்கட்டி ப ரம் முதலியவைகளி
னின்றும் புழுக்கள் உண்டாகுமோ? சாணியினின்று வண்டுகளும், குளவிகளும்,
வண்ணாத்திப் (தேவிடியாப்) பூச்சிகளும் ஈக்களும் உற்பத்தியாகுமோ என்றும்
இனிச் சந்தேகிப்பார் போலும் என்று வேறொரு ஆங்கிலேயர் சுமார் 200-வரு
ஷங்களுக்குமுன் பரிகசித்திருக்கின்றனர். மேலும் சந்தேக நிவர்த்தியாக வேண்டு
மானால் ஆபிரிகா கண்டத்திலுள்ள நயில் (Nile) நதியின் சேற்றினின்று தினம்
தினம் கூட்டம் கூட்டமாய்ப்புறப்பட்டு இஜிப்ட் (Egypt) முதலிய நாடுகளை
அழிக்கும் சுண்டெலிக் கூட்டத்தை அவர் கவனிக்கக்கடவர் என்று மிகுந்த
ஆவேசத்துடன் சொல்லுகின்றார்.

இவ்வகைப்பட்ட புதுமைத் தோற்றத்தைப்பற்றி நம் நாட்டவரும் தத்
தமக்குத் தோன்றியவாறெல்லாம் கூறியிருக்கின்றார். உதாரணமாக வாழைக்
குருத்தைத் தின்றாலும் கொடுக்காப்புளியைத்தின்றாலும் நாக்குப்பூச்சி ஜனிக்கும்
எனவோர் கொள்கை நம் கிழவிகளிடத்துக் குடிகொண்டிருக்கின்றது.



யதார்த்தமான விசாரணைகளின் பயன்களால் இத்தகைப்புதுமைத் தோற்
றம் பொய்; மேற்கூறிய வஸ்துக்களினின்று மேற்கூறிய ஜந்துக்களும், பூச்சி
களும், புழுக்களும் சிற்சில சந்தர்ப்பங்களில் உற்பத்தியாகிறதில்லை என ரெடி,
(Redi) பாஸ்டர், (Pasteur) பர்சி பிராங்க்லெண்ட் (Percy Frankland) முத
லிய உயிர்நூற்புலவர்கள் வெளிப்படுத்தி யிருக்கின்றனர். அதாவது பெரிய
ஜந்துக்கள் தாயினின்றல்லாமல் மற்றைய வஸ்துக்களினின்றும் பிறப்பதில்லை
என நிச்சயிக்கப்பட்டது.

ஆனால் வாந்திபேதி, கொள்ளைநோய் முதலியவைகளுக்குக் காரணமான
சில விஷப்பூச்சிகளின் விஷயத்தில் சில கற்றறிந்தோர் புதுமைத் தோற்ற
மென்றே அபிப்பிராயப்படுகின்றார்கள். காபி, தேயிலைத்தண்ணீர், ஜவ்வரிசி,
சோளமைக்கஞ்சி முதலியவைகளை அநேக நாழிகை குளிரும்படியாகத் திறந்தாகி
லும் மூடியாகிலும் வைத்திருந்தால் மேற்சொன்ன விஷப்பூச்சிகளின் சாதி
யைச் சேர்ந்த சில பிராணிகள் ஜனிக்கின்றன. [இதுபற்றியே ஆங்கில வைத்
தியர்கள் அவ்வகை உணவுகளைச் சூட்டுடன் உட்கொள்ள வேண்டுமென்று
சொல்லுகின்றார்கள்.] தாயின்றி அவைகள் உற்பத்தியாகிறபடியால் பிராணி
களில் புதுமைத் தோற்றம் உண்டெனச் சிலரால் நம்பப்படுகின்றது. இது
தவறே. காற்றில் இப்பூச்சிகளின் அணுப்பிரமாணமான முட்டைகள் இங்கு
மங்கும் பறக்கின்றதனாலும், மேற்கூறிய தண்ணீர்களும் கஞ்சிகளும் குளிர்ச்சி
அடைந்தால் அம்முட்டைகளிலிருந்து பூச்சிகள் உண்டாவதற்குத் தகுந்த இடமா
யிருப்பதனாலும், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழிக்கேற்ப
அவைகள் தங்கித் தங்கள் சாதியை அபிவிருத்தி செய்கின்றன. இது பரி
சோதனையினால் உண்மையாக அறியப்பட்டவிஷயம்.

இதுநிற்க. பழமொழியின் அர்த்தத்தைப் பரிசோதிக்கலாம். குளவி
எறும்பு முதலிய பூச்சிகள் மிக்க சுபாவ உணர்ச்சியுள்ளன. பெண்குளவிகள்
முட்டை வைப்பதற்குமுன் மரங்களிலாவது, அல்லது சுவர்களில் மூலைமுடுக்கு
களிலாவது மண்ணினால் குழல்போன்ற கூடுகளைக்கட்டும். தன் குஞ்சுகளின்
இரைக்காக ஏதாவது ஒரு புழுவைத்தேடி எடுத்து வந்து அக்கூட்டில் வைக்கும்.
புழுவின் ஞானமும் ஸ்மரணையும் இல்லாதபடி தன் பின்புறத்திலுள்ள விஷக்
கொடுக்கினால் அப்புழுவின் மூளையில் கொட்டி அதன் புத்தியைக்கெடுக்கும். இந்
தச் செயலின் விளைவு என்னவென்றால், புழுவினுக்குப் பாரிசவாயுவு உண்டா
கிறது; நகருகிறதற்கு முடியாது. இரை வேண்டுமென்கிற உணர்வு கெடும்.
அது உயிர் துறக்காது; அதன் சதை முதலியன அழுகாது. [புழுவில்லாமல்
தத்துக்கிளிமுதலிய அநேக ஜந்துக்களையும் உபயோகப்படுத்தும்.] பின்பு அப்
புழுவின் உடம்பில் ஓரிடத்தில் காயம் பண்ணி, அந்தக் காயத்தில் தன் முட்
டையை வைக்கும். இக்காரியங்களை யெல்லாம் செய்தபின்பு, அக்கூட்டை நன்
றாகக் களிமண்ணினால் மூடித் தத்தம் திருகருமங்களில் முன்போல ஊக்க
மாயிருக்கும்.

சில நாளைக்குப்பின் முட்டை வெடிப்பதனால் உள்ளிருந்து ஒருபுழு உண்
டாகும். அதற்கு உணவு முன்னிருந்த பாரிசவாயுவுப் . புழுவே. பசித்த
போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தனக்கு வேண்டியவளவு தின்று தினம்
தினம் சரீரத்திலும் வர்ணத்திலும் வேறுபாடு உண்டாகி, தாய்போன்ற நிறமும்
லக்ஷணமுமடைந்து கூட்டினின்று சிறிய குளவியாக வெளிப்படுகின்றது. இப்
படி வெளிப்படும் சமயம் வரையில் தாய் வைத்துப்போன உணவு உபயோகப்
படுகின்றது. வேண்டிய உணவு சேகரித்து வைக்கும் தாயினறிவு மிக்க ஆச்
சரியப்படத்தக்கதே!

ஆசையால் குளவி தன்னிறமாக்கும் என்ற பழமொழியைப் பற்றிச் சாதாரண பாந்தர் சொல்லுபவை பிழையாமென்று யாவரும் அறியத்தக்கது.

# மகம்மதுவும் மக்கா நகரமும்

நமது இந்து தேசத்துக்கு மேற்கே நெடுந்தூரத்துக்கப்பால் மகம்மதிய மதம் செழித்தோங்குமிடமான அரேபியா என்று பிரசித்திபெற்ற பரியாயத்தீவு ஒன்று இருக்கிறதல்லவா? அது வெகுவாக மணல் வெளியாகி நாகரிகத்தேர்ச்சி பெற்ற தேசங்களோடு சம்பந்தப்படாமலிருப்பதனால் அதன் உள் நாட்டைப் பற்றிப் பிறதேசத்தார்க்கு முற்காலத்தில் யாதொன்றும் தெரியாமலேயிருந்தது. இக்காலத்திலும் அத்தேசத்தில் பலவிடங்கள் ஒருவர்க்கும் நன்றாய்த் தெரியாது. நெடுங்காலமாய் ஒட்டைகளும் ஆடுமாடுகளும் மேய்த்து ஜீவிப்பவர்களே அத்தேசத்தில் பலவிடங்களிலே வசித்துக்கொண்டிருந்தனர். அக்காலத்தில் அவர்களுக்கு நிலையான இருப்பிடம் ஒன்றும் கிடையாது; தமக்கும் தமது ஒட்டை முதலியவைகளுக்கும் உணவு தேடிக்கொண்டு அவர்கள் அம்மணல் வெளிகளில் அல்லாடிக் கொண்டேயிருப்பார்கள். போகும்போது தங்கள் தட்டு முட்டு கூடாரம் முதலிய சாமான்கள் எல்லாவற்றையும் அவர்கள் கூடவே எடுத்துக் கொண்டுபோய்த் தங்களுக்கு இஷ்டமான இடங்களில் கூடார மடித்துச் சில நாள் தங்கியிருந்து மறுபடி அங்கிருந்து அப்புறம் போய்விடுவார்கள். அவர்கள் தமது தலைவன் ஒருவன் தவிர மற்றெவர்க்கும் கீழ்ப்படிவதில்லை; மூர்க்ககுணமும் முரட்டுத்தனமும் உள்ளவர்களாய்க் கொள்ளையடிப்பதே தமக்கு முக்கியமான தொழிலாகக் கொண்டிருந்தனர்.

அவ்வாறிருக்க நாளடைவிலே சிலவிடங்களில் நிலையாய் நல்ல ஜீவனம் கிடைத்தது கண்டு அவ்விடங்களிலேயே சிலர் வசிக்கவேண்டுமென விருப்பம் கொண்டவர்களாகி அங்கங்கே கிராமங்களும் நகரங்களும் கட்டிக்கொள்ளலானார்கள். இவ்விதமாக அரபிதேசத்தில் ஆதியில் ஏற்பட்ட நகரங்களுள் மக்கா, மெதீனா முதலியவை மிகப் பிரசித்தமானவைகளாம்.

இந்த மக்கா நகரமானது மகம்மது பிறப்பதற்கு வெகுநாள் முன்னமே அரபிதேசத்தில் மதவிஷயங்கள் செழித்தோங்குவதற்கு மத்தியஸ்தானமாயிருந்தது. ஆயினும் கிறிஸ்து பிறந்த 5-வது நூற்றாண்டிலேதான் அதன் உண்மையான சரித்திரம் ஆரம்பமாகின்றது. அங்குள்ள காபா என்னும் ஆலயத்தில் நீலநிறமான கல்விக்கிரகமொன்று உண்டு. அதை அங்குள்ளவர்களெல்லாம் கடவுளே தம்மிடத்தில் கருணைகூர்ந்து தந்தருளியதென்று மிகுந்த பயபக்தியுடனே ஆராதித்துக்கொண்டிருந்தனர். அங்கிருந்த கொரிஷ் என்னும் வமிசத்தார் தாங்களே அசலான இஸ்மேல் ஜாதியாரென்று சொல்லி, அந்த ஆலயத்திற்கு அதிபதியானார்கள். அந்த வம்சத்தில் பிறந்தவர்தாம் மகம்மது. அந்தக் கோயிலுக்கு அரபிஜாதியார் வெகுகாலமாகக் காணிக்கைகள் கொண்டுவந்து கொடுப்பதும், வருஷந்தோறும் தேசா தேசங்களிலுமிருந்து திவ்விய தேச யாத்திரையாக வந்து தரிசிப்பதுமாயிருந்தனர். அதனால் அந்த ஆலயத்திற்கு விசேஷமான ஆபரணங்களும் திரவியங்களும் சேர்ந்துபோயின. கொரிஷ் வமிசத்தார் அந்த ஆலயத்திற்கு விசாரணைத்தலைவராயிருந்தது மாத்திரமன்றி, அத்தேசத்து மற்றசாதியார் அனைவருக்கும் அவர்களே மதாசாரியர்களானதுமன்றி, அக்கோவிலின் ஸ்திதிகளுக்கெல்லாம் யஜமானர்களுமாயினர். ஒருகாலத்தில் அக்கோவிலின் திறவுகோல் ஈமென் ராஜாக்களுடைய ஆதீனத்திலிருந்தது. அதை எப்படியோ கொரிஷ்வமிசத்தார் கைப்பற்றிக்கொண்டார்கள். பிறகு எத்தனையோ பேர் படையெடுத்து வந்து போர்செய்தும், எவ்வளவு கலகங்கள்



உண்டாகியும், வெகுகாலம் வரையில் அவர்கள் அதைக் கைவிடாமலே பத்திரமாய்க் காப்பாற்றிக்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் அபிசீனியர்களும், கிறிஸ்தவர்களும் படையெடுத்துப் போராடிய போராட்டங்களே அரபிதேச சரித்திரத்தில் முக்கியமான விஷயங்களாயிருக்கின்றன.

இந்த மக்கா நகரமானது செங்கடற்கரைக்கு 50 மைல் தூரத்தில் சுற்றி உன்னதமான மலைகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் அமைந்திருக்கின்றது. அந்நகரம் தூரத்துப்பார்வைக்கு அத்தனை அதிசயமாகத்தோன்றாது. வீடுகளெல்லாம் வெகுவாய்க் கற்கட்டடம், திருத்தமில்லாமல் கரடுமுரடான கற்களால் கட்டப்பட்டு வெள்ளையடித்து வெள்ளை வெளேலென்று காணப்படும். இப்படி மூலைக்குமூலை வெவ்வேறளவாகக் கட்டப்பட்ட வீடுகள் அமைந்து ஒழுங்கில்லாமல் கோணலும் குறுகலுமாய் விகாரமான வீதிகளுடன் அந்நகரம் காபா என்னும் ஆலயத்தைச் சுற்றியிருக்கின்றது.

இந்த மக்கா நகரத்திலே தான், ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்னே மகம்மது என்னும் மதாசாரியர் தோன்றினார். அவர் பிறப்பதற்கு முன்னமே அவருடைய தந்தை இறந்துபோக, கைம்பெண்ணான தாய் தன் மாமனாருடைய வீட்டிலே வந்து வசித்துக்கொண்டிருந்தார். அவரும் மருமகளையும் பேரப்பிள்ளையையும் அன்புடன் ஆதரித்துவந்தார்.

மகம்மது இளங்குழந்தையாயிருக்கையில் ஒரு தாதி அவரையெடுத்துவைத்துக்கொண்டு வளர்த்தாள். அவரும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய்த் தேக சவுக்கியமும் திடசரீரமுமுள்ளவராக வளர்ந்துவந்தார். பிறகு அவர் பெரியவராய்ப் போன பிறகும் இளமையில் தம்முடன் பழகியவர்களிடத்தில் அவருக்கு அபிமானம் சிறிதும் மாறவில்லை. பின் ஒரு காலத்தில் சிலர் சிறையாகப் பிடிபட்டு அவரிடத்தில் வர, அவர்களை அவர் மிகவும் பிரீதியாக நடத்தினராம். அப்படிச் சிறையாய் வந்தவர்களுள் ஒருபெண், "நாம் கூடப் பிறந்தவர்கள்போலச் சிறுபருவத்தில் ஒன்றாய் விளையாடினோமே. அந்த விசுவாசம் வைத்து என்னை விடுதலை செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள். அதுகேட்டு மகம்மது, அப்படி நாம் ஒன்றாய் விளையாடினோமென்பதற்கு அடையாளமென்ன வென்று கேட்க, அப்பெண், தன் முதுகிலிருந்த ஒரு காயத்தைக்காட்டி, இதோ பாரும், ஒருநாள் நான் உம்மை முதுகின்மேல் தூக்கிக்கொண்டு போனபோது நீர் என்னைக் கடித்தீரே, அந்த வடு இன்னும் மறையவில்லையென்றாள். அதைக் கேட்டவுடனே அவருக்கு அப்போது முன்னே நடந்த செய்தி நினைவு வந்ததுபோலும்; உடனே அவளைப் பிரீதியாக விடுதலை செய்தார்.

அவருக்கு ஏழுவயதிலேயே தாய் இறந்துபோயினாள். அவள் போன இரண்டு வருஷத்திற்கெல்லாம் பாட்டனாரும் இறந்துபோயினார். ஆனால் அப்பாட்டனார் இறக்கும்போது தமது மற்றொரு மகன் வசத்தில் அக்குழந்தையை ஒப்புவித்து, அவனை ஒருபோதும் கைவிடாமல் காப்பாற்றும்படி உறுதியாய்ச் சொல்லிவிட்டு இறந்து போயினார். அந்தச் சிற்றப்பனும் அப்படியே அதிக விசுவாசமாய் அச்சிறுவனை ஆதரித்துவந்தார். அம்மகவு ஒரு நிமிஷங்கூடச் சிற்றப்பனைவிட்டுப் பிரிந்திருக்கப் பொறுக்கவில்லையென்றால், அவர் அக்குழந்தையை ஆதரித்த ஆதரவுக்கு இதைவிட வேறு நிதர்சனம் வேண்டுமோ

ஒரு சமயத்தில் அபூதாலெப் என்னும் அந்தச் சிற்றப்பன் மகம்மதுவுக்குத் தெரியாமல் அவரை அங்கேயே விட்டுவிட்டுத் தாம் மாத்திரம் சிரியாதேசம் போய்வரவேண்டுமென்று புறப்பட்டார். அப்போது மகம்மது தம் தோழர்

களுடன்கூடி விளையாடிக்கொண்டிருந்தார். விளையாடுகையில் அவர் ஒருபடியோ சிற்றப்பன் ஒட்டகத்தின்மேலேறுவதைக் குறிப்பாய்ப் பார்த்து ஓடிவந்து, என்னையுங்கூடவே அழைத்துக்கொண்டு போகவேண்டும்; உம்மைவிட்டு நான் இங்கே அரைநிமிஷங்கூட நிற்கமாட்டேன் என்று பிடிவாதம் செய்ய, அவர் வேறுவழியில்லாமல் அச்சிறுவனையுங்கூடவே அழைத்துக்கொண்டு போயினார்.

ஒருநாள் ஒருயோகி மகம்மதுவின் முகக்குறியைப்பார்த்து, இவனிடத்தில் மகா புருஷலக்ஷணங்கள் அமைந்திருக்கின்றனவெனத் தெரிந்து சிற்றப்பனை நோக்கி, நீர் இக்குழந்தையை ஜாக்கிரதையாகக் காப்பாற்றும்; மற்றப் பிள்ளைகளைப்போல நினைத்து உபேக்ஷை செய்யவேண்டாம். இவன் ஒருகாலத்தில் தன் தேசமெல்லாம் பரிபாலிக்கத்தக்க பெருமையுடையவனாவான் என்று கூறினார். அப்போது அம்மொழிகள் அவருக்கு மிகவும் அலக்ஷியமாகவே தோன்றின. ஆயினும் பிற்காலத்தில் எல்லாம் அவர் சொன்னபடியே உண்மையாய்ப் பலிக்கக்கண்டு சிற்றப்பன் ஆதியில் யோகி சொன்ன சொற்களை நினைத்துக்கொண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார் என்கிறார்கள்.

மகம்மதுவினது இளமைப்பருவத்தைப்பற்றி விவரமான விருத்தாந்தமொன்றும் செவ்வையாய்த் தெரியவில்லை. அவர் சிற்றப்பனோடு கூடவேயிருந்து, காபா என்னுங் கோயில் பரிபாலன விஷயத்தில் அவருக்கு உதவியாயிருந்தாரென்பதுமாத்திரம் தெரியவருகின்றது. காபா என்பது மக்காவில் எப்பிராஹாம் கட்டிய அநாதியான ஆலயமாம். அதற்கு இவர்களுடைய வம்சத்தாரே பரம்பரையாய்ப் பரிபாலகராயிருந்தவர்களாதலால் அவ்வதிகாரம் மகம்மதுவின் சிற்றப்பனுக்குக் கிடைத்தது.

சிறு பருவத்திலேயே மகம்மது வாய்மையைக் கைவிடாதவராய் உண்மை தவறாத உத்தமனென்று அனைவராலும் கொண்டாடத்தக்கவராயினார். நுட்ப புத்தியும் விவேகமும் அவருக்கு மிகவும் அதிகம். அதனால் அவர் கணப்பொழுதேனும் சும்மா இராமல் ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டேயிருப்பார். கூடப்படிக்கும் பிள்ளைகள் விளையாட வரும்படி அழைத்தால் அப்போது அவர், இவ்வாறு விளையாடி வீண்பொழுது போக்குவதற்கல்ல, கடவுள் இப்பூமியில் மனிதர்களைப் பிறப்பித்தது; இதைப்பார்க்கிலும் மிகப்பெரிய காரியம் வேறொன்று இருக்கின்றது என்று சொல்லி விட்டுத் தன் காரியத்திலேயே கண்ணாயிருப்பார்.

அவருக்கு யோக்கியவயது வந்த பிறகு அந்நகரத்திலிருந்த கைம்பெண்ணான செல்வச்சீமாட்டி ஒருத்தி தன்னுடைய வர்த்தகசாலைக்கு மகம்மதுவைத் தலைவராக நியமித்துக் கொண்டாள். மகம்மது சிறந்த புத்தியும் சாமர்த்தியமும் உடையவராதலால், அந்த வர்த்தகசாலையின் வியாபாரங்களை வெகு திறமையாக நடத்திவந்தார். அவருடைய திறமையையும் நன்னடக்கையையும் கண்டு அச்சீமாட்டி மிகவும் மனமுவந்து அவரையே தனக்குக் கணவனாக வரித்துக்



கொண்டாள். இவள் ஒருத்தியன்றியும் இன்னும் பல பத்தினிகள் அவருக்கு இருந்ததாகச் சொல்லுகிறார்கள்.

மகம்மது காலத்திற்கு முன்னே அரபி தேசத்தில் பலமதஸ்தர்களும் பிரவேசித்து, அவரவர் தங்கள் தங்கள் தெய்வங்களை விக்கிரகங்களாக வைத்து ஆராதித்துக்கொண்டிருந்தார்களெனத் தெரியவருகின்றது. விக்கிரகங்களைப் பார்க்கப் பொறாமல் அவைகளிடத்தில் முதல் முதல் பொறாமை கொண்டது மகம்மதுவே. எவ்வகையிலாயினும் விக்கிரகாராதனம் செய்யும் வழக்கத்தை மாற்றிப் புதுமாதிரியான மதமொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்று அதற்காகவே மகம்மது முக்கியமாகப் பாடுபட்டுவந்தார். ஆயினும் விவாகமான பதினைந்து வருஷம் வரையில் அவர் குறிப்பான காரியம் ஒன்றும் செய்யாமல் ஏற்றசமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு, ஏகாந்தமான இடங்களுக்குச் சென்று ஆலோசனை செய்துகொண்டிருந்தார்.

இதற்குள் அவர்க்கு நாற்பது வயதாயிற்று. அதற்குப் பிறகுதான் ஒருநாள் “நீ ஊக்கமுடையவனாகி உன் பிரஜைகளுக்கு எச்சரிக்கை செய்” என்று அசரீரிவாக்கு ஒன்று அவர்க்குக் கேட்டதாகச் சொல்லுகிறார்கள். அதைச் செவியுற்று, அவர் தாம் எதிர்பார்த்திருந்த சமயம் வாய்த்து விட்டதென்று சந்தோஷமடைந்து அச்செய்தியைத் தக்ஷணமே தம் மனையாட்டியுடன் சொன்னார். அவள் அதுகேட்டு இவ்வாறு செய்வதனால் ஏதாவது அபாயம் நேரிடுமேயென்று முதலில் சிறிது அச்சங்கொண்டாளாயினும் உடனே தைரியமடைந்து, அப்படியே செய்யலாம்; இவ்விதமான நல்ல காரியம் நாம் செய்யப் புகுந்தால் கடவுள் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டாரென்று தன் புருஷனுக்கும் தைரியம் சொல்லி, இனிநான் உங்களைத் தீர்க்கதரிசியாக மதிக்கிறேனென்று கூறினாளாம்.

பிறகு மகம்மதுவின் சிற்றப்பன் மகனான ஆலி என்பவனையும் அவர்கள் தங்கள் கோட்பாட்டுக்குள் சேர்த்துக்கொண்டனர். இவ்வாறு இம்மூன்றுபேரும் ஒரே கருத்தாயிருக்கையில் மகம்மது ஒருநாள் தம் சிற்றப்பனை நோக்கித் தமது கருத்தை வெளியிட்டு, இந்தக் கோட்பாடு எங்கும் பரவும்படி செய்யவேண்டுமென வேண்டிக்கொள்ள, அவர் அப்போது வயதுசென்ற கிழவராயிருந்ததனால், தாம் வெகுநாளாய்ச் செய்துவந்த விக்கிரகாராதனையை விட்டுவிடுவது உசிதமல்லவென்று மயங்கி அதற்கு உடன்படாமலேயிருந்தார்.

அதன்பிறகு மகம்மது தமது கருத்தையெடுத்து வெளிப்படையாகவே எங்கும் உபந்நியாசம் செய்யத் தொடங்கியாவரையும் தம்மதத்திற்கு இசைந்தவராக்க முயன்றார். அதுகண்டு அவருடைய இனத்தாரே அநேகர் அவர்மேல் கோபங்கொண்டு காபா என்னும் கோவிலைவிட்டு அவரை வெளியே துரத்திவிட்டார்கள். பித்தம் பிடித்தவனென்று கண்டவர்களெல்லாம் அவர்மேல் கல்லெடுத் தெறி

யத் தொடங்கினார்கள். அதுகண்டு அவர் தம் மதத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் அடுத்த கிராமத்திலே போய்ப் பதுங்கிக்கொண்டிருக்கும்படி சொல்லி, தாம் மாத்திரம் மக்காவிலேயே யிருந்து, பின்னும் பலருக்கும் போதனை செய்துகொண்டிருந்தார். அது மக்காவுக்குப் பலர் யாத்திரையாக வருகிற சமயம். அதனால் அப்போது பிறதேசத்தவர் பலர் அவ்விடத்திற்கு வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களுக்கெல்லாம் மகம்மது தமது மதத்தைப் போதித்து அவர்களையும் அதிற் சேரும்படி வேண்டிக்கொண்டிருந்தார்.

இவ்வாறு மகம்மது செய்துவரும் சாகஸமான காரியங்களையெல்லாம் பார்க்கப் பொறாமல் மக்காவிலுள்ள சிலர் அவரை அடித்துக் கொன்றுவிடுவதாகக்கூட நிச்சயித்தார்கள். அப்போது அலி யென்பவன் மகம்மதுவை மாறுவேஷம் பூண்டு ஓடிப்போகும்படி செய்திராவிட்டால் அவர் அன்றைக்கே இறந்துபோனவர் தாமென்கிறார்கள். அங்கிருந்து ஓடிப்போன மகம்மது தம் நேசரான அபூபெகர் என்பவருடன் ஒரு மலைக்குகையில் ஒளித்துக்கொண்டிருந்தார். அங்கே அவர்கள் ஒளித்திருக்கும்போது ஒருநாள் யாரோ வருவதுபோலக் காலடியோசை கேட்க, பெகர், நாம் இரண்டுபேரா யிருக்கிறோமே; யாராவது வந்தாலென்ன செய்கிறது என்று பயந்து சொல்ல, மகம்மது, ஏன் இரண்டுபேர் என்கிறாய், மூன்றுபேரல்லவா? கடவுளிருப்பதை மறந்துபோனாய் போலும் என்று பக்தியுடன் பேசினாராம். உடனே அந்தக்காலடியோசை கேளாமல் போய்விட்டதாம். இவ்வாறு மகம்மது மக்காவினின்றும் ஓடிப்போன நாள்தான் மகம்மது சகத்திற்கு முதனாளாகக் கருதப்பட்டிருக்கின்றது.

இங்கே சிறியகதையொன்று சொல்லுகின்றனர். மகம்மது தம்தோழனுடன் அந்தக் குகைக்குள் புகுந்துகொண்டவுடனே அதன் வாயிலில் குறுக்காய்ச் சிலந்தி வலையொன்று பின்னப்பட்டு அதற்குள் ஒருவரும் புகாததுபோல வெளியார்க்குத் தோன்றும்படி யிருந்ததென்கிறார்கள்.

மூன்றுநாள் அவ்விடத்திலிருந்து பிறகு அவர்கள் அங்கிருந்து யாத்ரப் என்னும் நகரம்போய்ச் சேர்ந்தார்கள். அந்நகரத்தாரெல்லாரும் மகம்மதுவின் மதத்திற்கு உட்பட்டவர்களாகி அவரை ஆதரவுடன் வரவழைத்து அவர் சொற்படி கேட்டு நடந்தார்கள். உடனே அவ்விடத்தில் சோலையொன்று கட்டப்பட்டது. சிறிதுகாலம் அங்கேயே அவர் சுகமாயிருந்து பின்னும் பலவிடங்களிலும் தம்மதம் பரவுவதற்கு வேண்டிய வழிகளைத் தேடிக்கொண்டிருந்தார்.

இவ்விதமாக மகம்மது செய்துவரும் முயற்சியைக் கேட்டு விக்கிரகாராதனை செய்யும் யூதர்கள் அநேகர், இனி நாம் சும்மா இருந்தால் அநர்த்தம் விளையுமென்று அவர்மேல் படையெடுக்க எத்தனித்து, மக்காவிலுள்ள சேனைகளையும் கூட்டிக்கொண்டு சென்றார்கள். ஆயினும் கடைசியில் அவரை வெல்லமுடியாமல் அவர்கள் தோற்றுப் போயினர்.



பின்பு ஒருகால் மகம்மது மறுபடியும் தமது பிறப்பிடமான மக்காநகரத்தைப் பார்த்துவரவேண்டுமென்று தம் கூட்டத்தாருடன் செல்ல, மக்காவிலுள்ளவர்கள் அவர்களை வரக்கூடாதென்று மறுத்தது மாத்திரமேயன்றி மேலே கல்லெடுத்தெறிந்து தூரத்தவும் ஆரம்பித்தார்கள். ஆயினும் பிறகு வெகுநேரம் தர்க்கம் பேசியதன்மேல், மறுவருஷம் வந்தால் நாங்கள் ஒன்றும் செய்வதில்லை, மூன்றுநாள் இங்கே வந்திருந்து போகலாமென்று அவர்கள் அனுமதியளித்தார்கள். அப்படியே ஆகட்டுமென்று மகம்மது மறுவருஷம் அவ்விடத்துக்குச் செல்ல, மக்காநகரத்தார் தாம் வாக்கு அளித்தபடியே அவர்களை வரவழைத்துக் கொண்டனராயினும், கடைசியில் அநேகரைக் கொடுமையாய்க் கொலைசெய்துவிட்டார்கள். அந்த அக்கிரமத்தைப் பார்த்து மகம்மது அவர்கள்மேல் மிகக்கோபங்கொண்டு, வெளியேபோய்ப் பெரும்படை கூட்டிக்கொண்டுவந்து ஜயசீலராய் மக்காநகரத்தில் பிரவேசித்தார். பிறகு அவரை வெல்வதற்கு ஒருவராலும் சாத்தியப்படவில்லை. அங்குள்ள காபா என்னும் ஆலயமும் அவர்க்குச் சுவாதீனமாயிற்று. அதற்குள் புகுந்தவுடனே மகம்மது அங்குள்ள விக்கிரகங்களையெல்லாம் நாசமாக்கிவிட்டு அதைத் தம் மதம் பரவுவதற்கு மூலஸ்தானமாக வைத்துப் பிரசங்கம் செய்துகொண்டிருந்து கடைசியில் நோயினால் வருந்தி அறுபத்துமூன்றாவது வயதில் இறந்துபோயினர்.

மகம்மது மரணமடைந்தது மதீனாநகரத்தில். அங்கே அவரிறந்த விடத்தில் சிறந்தகோரி ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. மகம்மதிய மதாபிமானிகள் அநேகர் பல தேசங்களிலுமிருந்து அவ்விடத்துக்கு யாத்திரைபோய் வருகின்றனர். மகம்மது மரணகாலத்தில் நோயினால் பட்ட வருத்தம் கொஞ்சநஞ்சமல்ல; ஆயினும் அவர் அவற்றால் சிறிதும் மனஞ்சலியாமல், இப்பொழுது நான் இவ்விடத்தில் எவ்வளவு சங்கடம் அனுபவிக்கிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு மேலுலகத்தில் மேலான சுகங்களைப்பெற்று வாழ்வேன் என்றே சொல்லிக்கொண்டிருந்தார். இவ்வுலகத்தில் நாம் அனுபவிக்கும் பல துன்பங்களும் நமது பலவகையான பழவினைகளும் கழிவதற்காகவே என்னும் உண்மை அவர் உள்ளத்தில் உறுதியாயிருந்தது போலும்.

மகம்மதுவைப்பற்றி ஆச்சரியமான பலகதைகள் கூறுகின்றனர். ஆயினும் அவர் அப்படிப்பட்ட அற்புதமான சக்திகள் தம்மிடத்தில் அமைந்திருப்பதாகவாவது, தாம் முக்காலமும் உணர்ந்த முனிவர் என்றாவது வெளியிட்டதாகத் தெரியவரவில்லை. கடவுளுடைய கட்டளையினால் நன்மையைப் போதிக்க வந்தவன் என்று மாத்திரம் சொல்லிக்கொண்டிருந்தார். கடவுள் ஒருவர் உண்டென்பதை நம்பி அவருக்குப் பயந்து அவரே தமக்குத் தஞ்சமென்று உறுதியாகக் கொண்டு நியாயமார்க்கத்தில் நடப்பவர்களைக் கடவுள் ஒருபோதும் கைவிடார் என்பதையே தமக்குச் சித்தாந்தமாகக்கொண்டு அந்தத் தத்துவத்தையே அவர் யாவர்க்கும் உபதேசித்து வந்தார். அன்றியும் நேசர்களிடத்தில் நன்றி

மறவாதிருக்க வேண்டுமென்றும், சத்துருவாயினும் அவனுக்கும் நாம் கெடுதி நினையாமல் நன்மையே நினைக்கவேண்டுமென்றும், எல்லாப் பிராணிகளிடத்தும் அன்பும் அருளும் உடையவர்களா யிருக்கவேண்டுமென்றும் இத்தன்மையான நீதிகளையே யாவர்க்கும் உபதேசிக்கலானார்.

மகம்மது காலத்திற்குப்பிறகு அவர்பட்டத்திற்குவந்த அவருடைய நண்பரான அபூபெகர் என்பவர் அவர் அப்பப்போது சொன்ன நீதி மொழிகளையெல்லாம் திரட்டிச் சேர்த்துக் குரான் என்னும் மகம்மதிய வேதபுத்தகமாக்கினார். அந்தக் குரானை ஆய்ந்து பார்க்குமளவில், மகம்மது தாமே சொல்லிய தம்முடைய சரித்திரமாகவே யிருக்கின்றது. ஆதியில் இந்த மகம்மதுவுக்கு இருந்த எண்ணங்களெல்லாம் நல்ல எண்ணங்களாகவேயிருக்கலாம். ஆயினும் கடைசியில் மதாபிமானத்தினால் அவையாவும் வேறுமுகமாக மாறி அவர் யாவரையும் வற்புறுத்தித் தம் மதமாக்க முயன்று தாமும் பல தொல்லைகள் அனுபவித்துப் பிறரையும் துன்பப்படுத்தினார்.

அவருடைய வடிவம் பார்த்தாலும் பசிதீரும்படி அத்தனை கம்பீரமான தோற்றமுடையது. அவரிடத்தில் சவுலப்பியம் முதலிய மேன்மக்களுக்குரிய பல நற்குணங்களும், வெகு சாதுரியமாய்ப் பேசுந்திறமையும் பூரணமாய் அமைந்திருந்தன. இவைகளெல்லாவற்றிலும் அவரிடமிருந்த உதாரகுணம் மிகவும் விசேஷம். ஒருவன் வருந்துவதைப் பார்த்தாச் சிறிதும் பொறுக்கமாட்டார். ஸ்நேகிதர் விஷயத்தில் அவருக்கு ஆதரணை மிகவும் அதிகம். இத்தன்மையான பல நற்குணங்களின் நடுவே சில துர்க்குணமும் அவரிடத்திலிருந்தன வென்கிறார்கள். "புல்லிதழ்பூவிற்குமுண்டு" என்றபடிக் குற்றம் யாரிடத்திலில்லை ஆயினும்,

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்."

என்றபடி அவற்றுள் மிகைபட்டிருக்கின்ற நற்குணங்களையே நாடி நன்கு மதிப்பது நல்லோர் கடனாம்.

மகம்மதிய வேதமாகிய குரானில் நீதி போதகமான சிறந்த மொழிகள் அநேகம் அமைந்திருக்கின்றன. கடவுள் ஒருவர் உண்டென்பதும், அவரைத் தொழுவது அவசியமென்பதும் மகம்மதிய மதஸ்தர் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. மத்தியபானம் செய்வது கூடாதென்றும், அதற்கு விரோதமாய்க் குடிப்பவர்கள் உண்மையான மகம்மதியர் ஆகாரென்றும் குரான் முறையிடுகிறது. இவை தவிர வேறுவிதமான விபரீதங்கள் அம்மதாசாரங்களில் சொல்லப்படவில்லை. அம்மதத்தில் எவையாயினும் விரோதமான நடத்தைகள் உண்டானால் அவையாவும் அந்தந்தக்காலத்திலிருந்த ராஜாங்கங்களின் பேதங்களாலும், அவரவரது அறியாமையாலும் விளைந்தவையே யன்றி வேறல்ல.

185

# திரிச்சிராப்பள்ளியின் புராதன விருத்தாந்தங்கள்

Copyright Registered] [விலை அணா 1.

[திரிசிரபுரம் பண்டிதர் T. S. இராஜம் ஐயரவர்கள் இயற்றியது.]

பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போயினவே!

## 1. பூர்வீக ஜாதியார்

முன்னர் ஈயும் நுழையக்கூடாத ஆரண்யமாய் ஆகாயத்தை அளாவிய விருக்ஷராசிகள் நிறைந்து பலவித புள்ளினங்கள் அவற்றின்மீது வாஸம்செய்து வந்தன. அக்கானகத்தில் நரமாமிஸபக்ஷணிகளான மிருகவர்க்கங்கள் அநேகம் அலைந்து திரிந்தன. அதில் தற்செயலாய் எவனாயினு மொருமனிதன் உள் நுழைந்து கண்ணோக்குவானாயின்; அவனது திருஷ்டிக்கு ஆதித்யன் ஒளியின்றி அந்தகாரமே குடிகொண்டிருக்கிற அவ்வன மத்தியில் ஓர் சிறிய குன்றும், மழைக்காலங்களில் அலைமோதி இருகரையும் பிரவகிக்கும் ஜீவநதியொன்றும் தோன்றும். அந்த அடவியின் சுற்றுப்புரங்களில் மரங்களின் மீது பரண் கட்டிக்கொண்டு கள்வர், மறவர் முதலிய நாகரீகமற்ற ஜாதியார் வாஸம் செய்து வந்தனர். அவர்கள் அக்கானகத்தைச்சுற்றியுள்ள மிருகங்களை வேட்டையாடியும், தேன்கூட்டைக் கலைத்துத் தேன் எடுத்துப் புசித்தும் ஜீவனம் செய்து வந்தனர். அரையில் ஆடை கட்டிக்கொள்ளும் வழக்கம் அக்காலத்திலுமிருந்தது. நம்மைப்போல பருத்தி வஸ்திரங்களும், பட்டாடைகளும் இல்லையாயினும், நல்ல நயமான மரப்பட்டாடைகளையே உபயோகித்து வந்தனர். பெண்பாலாரின் ஆடைகளும் இவ்வாறே. அவர்கள் கிளிஞ்சல், சங்கு, நத்தாங்கூடு முதலியனவற்றைப் பல ஆபரணங்களாகச் செய்துகொள்வார்கள். மார்பின்மீது உடை தரிப்பதில்லை. தற்காலத்திலுங்கூட அநேக கீழ் ஜாதியார்கள் மார்பை மறைப்பதே கிடையாது. இவர்களுக்குப் பிரதானமான தலைவன் ஒருவன் இருப்பான். எவ்வித வியவகாரம் வந்தபோதிலும் அத்தலைவன் மற்றும் நான்கு பேர்களுடன் சேர்ந்து விசாரணைசெய்து முடிவுகட்டுவான். இதற்கே தற்காலத்தில் பஞ்சாயத்து என்கிறார்கள். விவாகம் முதலிய விசேஷித்த

சடங்குகளைச் செய்துகொள்வதும் அத்தலைவன் முன்புதான் நடக்கும். அவனுக்குத் தளைகளாலும் பூங்கொத்துகளாலும் அழகிய மகுடமொன்று செய்து அனுப்புவது மற்றவர்களின் கடமையாயிருந்தது. இவர்கள் கருத்த நிறத்தினர். அம்பு, வில் முதலியவைகளை உபயோகப்படுத்துவதில் மகா சூரர்கள். கத்தி கேடயம் என்பதே இவர்களுக்கு ஒரு நூதனப் பெயராகும்.

## 2. சேர சோழ பாண்டியர்கள்

இவர்கள் இவ்வாறிருக்கையில் பூர்வீக கீழ்வங்காள வாசிகளும், சைன தேசத்தார்களும் வாஸம் செய்யத்தக்க இடமின்றித் தெற்கே வந்து சேர்ந்தனர். அவர்கள்தான் ஆதியில் நாகரீகமுடையவர்கள். கத்தி கேடயம் ஏந்தி யுத்தஞ் செய்வதில் தேர்ந்தவர்கள். கொஞ்சங் கொஞ்சமாகப் பிரயாணம்செய்து காவேரியின் கரையையும் அடைந்தனர். அந்நதியின் பிரவகிப்பையும், நிலத்தின் வளப்பத்தையும் கண்டு இதுவே வாஸம் செய்யத்தகுந்த இடமென மதித்து, அநேக காடுகளை அழித்துச் சிறு சிறு கிராமங்களாக்கினார்கள். இவர்களின் நாகரீகம் முதலியவைகள் ஆரியருடையதே. எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். மிக்க வனப்பு வாய்ந்தவர்கள். தலையில் அடர்ந்த கூந்தலையுடையவர்கள். இவர்கள் கி. மு. 300-ல் ஜெயங்கொண்ட சோழபுரம் என்னும் ஊரில் * மவுரியர்களோடு சண்டைசெய்து வெற்றி பெற்றனர். அவ்விடத்தையே ராஜதானிப் பட்டணமாகக் கி. மு. 267-ல் செய்துகொண்டு எதிர்த்த வீரர்களையெல்லாம் வென்று வந்தனர். கி மு. 250-ல் † ஆந்திரேயர்களையும் தோற்கடித்தனர். இதை அரசாண்ட வேந்தன் உயிர்துறக்கவே இவன் மூன்று குமாரர்களாகிய சேரன், சோழன், பாண்டியன் இம்மூவரும் ராஜ்யத்தைமுறையே பங்கிட்டுக்கொண்டு அரசாண்டுவந்தனர். சோழன் கி. மு. 247-ல் இலங்கையின்மீது படையெடுத்து வெற்றி பெற்றனன். கி. மு. 240-ல் உறையூரை ராஜதானியாக வைத்துக்கொண்டு அநேக மால்களும், ஆராமமண்டபங்களும்புதுக்கினன். கொலுமாலின் மத்தியில் சோபித்த கொலுமண்டபம் அடியில் வெள்ளைச்சலவைக் கல்லினால் கட்டப்பட்டுக் கறுப்புத் தூண்கள் நிறுத்தப்பெறறிருந்தன. அதன் படிகளில் பல் விலை உயர்ந்த நவரத்தினங்களும் இழைக்கப் பெற்றிருந்ததாகப் பெரியோர்கள் உரைக்கின்றனர்.

## 3. புராதன ராஜவைபவம்

அம்மண்டபமத்தியில் ஸ்வர்ணகசிதமான சிம்ஹாஸனமொன்றும், அதைச் சுற்றிலும் பற்பலச் சிற்றரசர்களது ஆசனங்களும் அமையப்பெற்றுச் சோபிக்க அங்கு அரசன் அதிக வைபவமாகக்கொலு வீற்றிருந்து இராஜரீகம் செய்துவருவது வழக்கமாக இருந்தது. இந்த மஹாலில் வித்வான்கள் வீற்றிருக்கும் இடம் வேறு, தாசிகள் நடனம் புரியும் இடம் வேறு, வாத்தியக்காரர்கள் நின்று வாத்யம் செய்யும் இடம் வேறு, சேனைவீரர்கள் உருவிய கத்திகளுடன் இராஜாக்ஞைக்கு எதிர்பார்த்திருக்குமிடம் வேறுவேறாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதற்குப் பின்புறத்தில் அதிக சித்திரவேலைப்பாடுடைய இருப்புக் கதவுக

* மவுரியர் என்பதற்கு மயிலைப்போன்ற வனப்புவாய்ந்தவர்களென்பது தாத்பரியம். இவர்கள் நந்த வம்சத்திற்குப் பிறகு மகத ராஜ்யத்தை ஆண்டுவந்த க்ஷாத்ரியர்கள்.

† ஆந்திரேயர்கள் சந்திரவம்சத்தைச் சேர்ந்தவர்கள். விக்கிரமாதித்யனுக்கு முன் மகத ராஜ்யத்தை அரசாண்ட மன்னர்கள்.



ளிரண்டுண்டு. அதைத் திறந்துஉட்சென்றால் அங்கோர் ஸபாமண்டபமும் அதில் ஐந்து சோபாக்களும் காணப்படும். இதற்கே மந்திராலோசனை ஸபாமண்டபமெனப்பெயர். உன்னதாஸனத்தில் அரசன் வீற்றிருக்க,மற்ற நான்கு சோபாக்களிலும் அமைச்ச சிரோமணிகள் அமர்ந்திருந்து அந்தரங்க காரியங்களை ஆலோசனை புரிவார்கள். இவ்விரண்டு மூன்று கட்டுகளையும் கடந்து உட்சென்றால் நவரத்தினங்கள் பதித்த மணிகள் ஊசலாடிய பெரிய இரட்டைக் கதவுகள் தோன்றும். அதின் வாயிலில் நீண்ட தாடிகளுடைய இரண்டு போர் வீரர்கள் ஆயுதபாணிகளாய் பாராக்குக் காட்டிக்கொண்டு நிற்பார்கள். அந்யர்கள் எவரும் அவ்விடம் பிரவேசிக்கக் கூடாதென்பதை அத்துவாரபாலகர்களின் கோரதிருஷ்டி வெகு செம்மையாகத் தெரிவித்துக் கொண்டிருந்தது. அக்கதவைத் திறந்து உட்சென்றால் முன்சொன்ன வீரர்களைப்போன்ற ஆயுததாரிகளாக நிற்கும் ஸ்திரீ பரிவாரங்கள் தென்படும். இவ்வளவையும் பார்த்துவிட்டு இதை இராஜஸ்திரீகளின் அந்தப்புரமென்று வியாக்கியானிக்க வேண்டியதில்லை. அதில் அநேக மாடங்களும், அம்மாடங்களில் விலையுயர்ந்த கற்களிழைத்து, பால சூரியனை நிகர்த்த பலமணி விளக்குகளும், பற்பல இடங்களில் தொங்கிய சரவிளக்குகளும், ஒவ்வொரு மூலைகளிலும் அத்யந்த மனோகரமாய்ப் பிரகாசிக்கின்ற தூங்கா விளக்குகளும் வெகு நேத்திராநந்தமாய் அமைக்கப்பட்டிருந்தன. அவ்விடத்திற்கு ஸமீபமாக இரண்டு கதவுகளுடன்கூடிய சிறியதும் அழகியதுமான கூடமொன்றும், அங்கு பலமாதர்கள் காவலிருந்து காத்துவரும் சீரும் பார்க்கலாம். அக்கூடத்தின் நாற்புறங்களிலும் நான்கு வாயில்களும்,அதன் மத்தியில்ஸப்திக்கின்றமணிகளுடன் சோபிக்கும் நவரத்னகசிதமானபொன்னூஞ்சலும்காணப்படும். முன்தெரிவித்த அந்நான்குவாயில்களில் ஒன்று அரண்மனைத் தோழிகள் வாஸம் செய்யுமிடத்துக்குக் கொண்டு செல்லும். அங்கு எண்ணற்ற விநோத சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு பொழுது போக்குவதற்கு மனோல்லாஸந் தருவதான பற்பல வேடிக்கை விசேஷங்களுடன் கூடியிருந்தது. வடபுறத்து வாயில் நேரே ஸய்யாகிருகத்துக்குக் கொண்டுபோய் விடும். அங்கு விசாலமான ஐந்து அறைகள் உள்ளன. சிரம பரிகாரத்துக்கு வேண்டிய சாதனங்களெல்லாம் சன்னத்தமாயிருக்கும். தென்புறத்து வாயிலின்வழியே சென்றால்மனோகந்மான உத்தியானமும் அதில் ரமணீயகரமான தடாகமும், அதன் கரையோரத்தில் சலவைக் கற்களால் செதுக்கிய இரண்டு ஸந்திரகாந்த மண்டபங்களும், அம்மண்டபங்களை யணுகியதாய் இரண்டு லதாக்கிருகங்களும் இருந்தன. இச் சகல வைபவங்களோடும் அரசாண்டுவந்தான் ஓர் சோழன். இவனுக்குப்பிறகு இரண்டே சோழர்கள் தான் உறையூரில் அரசாண்டனர். மூன்றாவன் அதிக ஸாமர்த்தியசாலியாயினும், விதியை யாவராலும் வெல்ல முடியாதல்லவா; இவனது ஆளுகையில் திடீரென்று ஓர்நாள் சூராவளிக்காற்றெடுத்து மண்ணைக் கொண்டுவந்து மூன்றுநாள் வரையில் அடிக்கவே இப்பட்டண முழுமையும் மண்மேடாயிற்று. எண்ணற்ற ஜனங்கள் இந்த விபத்தில் சிக்கிக்கொண்டு பிராணனையிழந்தனர். இதற்குப் புராண ஐதீகமான கதை ஒன்று சொல்வதுண்டு. இது கர்ண பரம்பரை.

## 4. மண்மாரி பொழிந்த வரலாறு

இச்சோழனுக்கு ஓர் சோர நாயகி இருந்தாள். அவளது வேலைக்காரன் பிரதி நித்யமும் சாரமா முனிவர் மாதுர்பூதேஸ்வரரது பூஜைக்காக வளர்த்திருந்த செவந்திப் பூக்களைக் களவாடுவதிலேயே கண்ணாயிருந்தான். பிரதிதினமும் புஷ்பங்கள் கொள்ளை போவதைப்பற்றி வியஸனித்தவராய் ஒருநாள் மறைந்திருந்து கள்வனைக் கண்டுபிடித்து ராஜஸமுகம் சேர்ப்பிக்கவே அரசன் கடுங்

கோபங்கொண்டு அவன் தலையை வாங்கும்படி ஆக்ஞை செய்தான். ஆயினும் சோழநாயகியின் மீதுள்ள அபிமானத்தால் அந்தக் கட்டளையை ஊர்ஜிதப் படுத்தி விடாமல் பாராமுகமாக இருந்து விட்டான். புஷ்பங்களும் இரண்டு மூன்று நாட்கள் களவாடப்படவில்லை. நான்கா நாள் மீண்டும் திருடப்படவே சாரமாமுனிவர் மனது தாளாதவராய் அத்யந்த துயரத்துடன் தாயுமானவர் முன்னிலையில் பிரலாபிக்கவே பகவத்ஸங்கல்பத்தால் மண்மாரி பொழிந்து யாவும் நாசமாயின. தற்செயலாய் மாமனார் இல்லத்திற்கு ஏகியிருந்த மேற் சொன்ன சோழனது தநயனான கரிகாலச் சோழன் மட்டுமே உயிர்ப்பிழைத் தனன். மேற்சொன்ன புராணகதையை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர்.

## 5. கரிகாலச் சோழன்

இக்கரிகாலச் சோழனது காலில் கரி இருந்தமையாலும், (கரி = யானை) கரிகளைக்காலைப்பிடித்து வாரி யடிக்கக்கூடிய வல்லமை அமையப் பெற்றவனான தாலும் கரிகாலன் அதாவது யானைகளுக்கு எமன் என்பதாக வழங்கப் பட்டு வந்ததாம். இவன் கி. பி. 50 - முதல் 95 வரையிலும் அரசாண்டான். சோழதேசத்துக்கு முக்கிய துறைமுகப்பட்டணமாக விளங்கியது காவேரிப் பட்டணம் (காவேரிப்பூம்பட்டணம்). இங்கு அநேக வியாபாரிகளும் செட்டி வகுப்பினர்களும் கோமுட்டிகளும் இருந்தனர். இவர்களுள் பலர் "திரைகடலோடி" மீண்டனர். அக்காலத்தில் தற்போதுள்ளதுபோல நீராவிப்புகைக்கப்பல்கள் கிடையாவானதால் அன்னோர் அதிகதூர தேசப்பிரயாணத் துக்குப் பின் வாங்கியிருந்தார்களெனவும் பேசலாம். கரிகாலச் சோழன் ஜெயங் கொண்ட சோழபுரத்தை இராஜதானியாக வைத்துக்கொண்டான். இவன் மகா சிவபக்தன். திரிகாலமும் சிவதரிசனம் தவறான். இதற்கென்றே பெரிய தேவாலயமொன்றும் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் புதுக்கினான். அது இப் பொழுதும் பார்க்கத்தக்கது. சிவபக்தியில் மேம்பட்டிருந்ததுபோலவே ராஜதந் திரத்திலும் மிகுதியான பாண்டித்தியம் வாய்க்கப்பெற்ற சாதுர்யசாலி. மகாபுத்தி மான். கரிகாலச்சோழன் கி. பி. 51-ல் சேரன் பாண்டியன் இவர்களுடன் போர் புரிந்து * வளநாட்டைச் சார்ந்த வெண்ணில் என்னுமிடத்தில் வெற்றி கொண்டான். அந்த யுத்தகளத்திலேயே சேரன் வெட்கமேலீட்டால் தன் உடைவாளுக்கிரையாயினான். கரிகாலச் சோழனது வீரத்வத்தைக்கருதி வட இந்தியாவை யாண்ட மன்னர்களிற் பலரும் இவனது நட்பாளராயினர். இவர் களுள் முதன்மையானவர்கள் அவந்தி வஜ்ரா, மகத முதலிய பேர்பெற்ற தேசங் களின் மன்னர்களாவர்.

பல நாட்களுக்குப்பிறகு கரிகாலச்சோழனுக்கு ஓர் ஆண் சந்ததி யுண்டா யிற்று. அவனுக்கு நல்லான்கிள்ளை என நாமகரணம் செய்தனர். கரிக்கா லச் சோழன் தன் ராஜதானியைக் கொஞ்சநாளைக்குப்பின் துறைமுகப்பட்டண மாகிய காவிரிப்பூம்பட்டிணத்திற்கு மாற்றிக்கொண்டு அங்குமிங்கும் அரசாண்டு வந்தான். இவன் கி. பி. 95ல் உயிர் துறக்கவே நல்லான்கிள்ளைச் சோழன் ராஜ்யபாரத்தை வகித்தான். இவன் அதிக தைரியசாலியாயினும் தற்புகழ்ச்சி யில் பிரியமுள்ளவன். இவனை ஸ்தோத்திரம் செய்தே பலரும் அநேக பொருள் களைக் கைக்கொண்டுசென்றனர். மஹா சிற்றின்பப்பிரியன். பல விலைமாதர் கள் இவனால் ஜீவனம் செய்துவந்தார்கள். இப்பேர்க்கொத்த மன்னனுக்கு ராஜ்ய பரிபாலனம் செய்யப் போதுமான நேரமில்லை என்பது வியக்கத் தக்கதன்று. ஆயினும் எம்மன்னனும் இவன்மீது படையெடுக்கவில்லை.

* தஞ்சாவூர்-சோழவளநாடு எனவும் வழங்கப்பட்டு வந்தது.



கி. பி. 105-ல் இவன் குமாரன் கிள்ளைவள்ளவச் சோழன் ராஜனானான். இவன் சகல சற்குண சம்பன்னன். அதிக ஆசாரசீலன்; நீதிமான்; தன் தந்தை யைப்புகழ்ந்து காலக்ஷேபம் செய்து வந்தவர்களுக்குக் கடுமையான வேலைகளைக் கொடுக்கவே, அவ்வேலைகளைச் செய்யமுடியாமல் உத்தியோகத்தை விட்டோ டினார்கள்.

இவன் 16 வயதுள்ள சிறுவனாக விருக்கையில் இலங்கைப் பிராந்தியத்தி லுள்ள கண்மயூருக்கு போயிருந்தான். அவ்வூர் அரசனுக்குச் சுமார் பன்னிரண்டு வயதுள்ள பத்மினி என்னும் பாலை யொருத்தி யிருந்தாள். அங்குத் தங்கியிருந்த காலையில் அப்பெண்மணி இவன் மனதைக் கொள்ளைகொண்டாள். அவ்வங்கனை மணியும் "மணம் புரிந்தால் சோழனை மணப்பதென்றும்" இல்லையாகில் கன்னிக் கழியாமலிருப்பதே உறுதி என்றுமிருந்ததை அறிந்த கிள்ளைவள்ளவன் தான் ராஜ்யபாரத்தை வகித்தவுடன் பத்மினியை மணம் புரிந்துகொண்டான். இவனுக்குச் சந்ததி யற்றுப்போகவே இவன் இளைய சகோதரனான பெருநார் கிள்ளைச்சோழன் பட்டம் கட்டப்பெற்றான்.

பெருநார்கிள்ளை கி. பி. 150-வரையிலும் அரசாண்டான். இவன் கி. பி. 140-ல் சேர பாண்டியர்களை வென்று ராஜஸூய யாகம் செய்தான். இவனுக்கு ராஜதானிப் பட்டணம் ஜெயங்கொண்ட சோழபுரம். இவன் அடிக்கடி மலையி லுள்ள தாயுமானவரை வந்து தெரிசித்துப் போவது வழக்கம். இப்பொழுது தான் இம்மலையைச் சுற்றிப் பல குடிசைகள் உண்டாயின.

இவனுக்குப்பிறகு இவன் குமாரனான கோச்சிங்கண்ணன் அரசாள ஆரம்பித்தான். இவன் பல சைவ வைஷ்ணவ ஆலயங்களைப் புதுப்பித்து அவைகளுக்குப் பல மான்யங்களையும் விடுத்தான். இவன்காலத்தில் போர்வீரர் களுக்குச் சண்டை என்னும் பதத்திற்குத் தாத்பர்யமும் தெரியாது. கோச்சிங் கண்ணனுக்குப்பின் கோக்கிள்ளைச் சோழன் சிம்மாதனமேறினான்.

## 6. பூர்வீக நாகர்களது ஆசாரனை

பூர்வீக ஜாதியார்களில் நாகர் என்னும் ஓர் வகுப்பினருண்டு. இவர்களும் இந்துக்களே. கற்சிலையில் நாகப்பாம்புகளைப் பேர்வெழுதி அதையே பணிந்துவந்தமையால் இப்பெயர் இவர்களுக்குப் பொருந்தியது. வருஷத்திற்கோர் முறை அவர்களனைவரும் ஒன்று சேர்ந்து பால் பழம் முதலானவைகளோடு காட்டிற்குச் சென்று, அங்குத் தோன்றும் பாம்பின் புற்றிற்குப் பாலால் அபிஷேகம் செய்து சந்தனம் குங்குமம் பூ முதலிய வைகளால் அலங்கரித்து தேங்காய் வாழைப்பழங்களை நைவேத்யம் செய்து, அக்காட்டிலேயே எல்லோருமாகச் சேர்ந்து சமையல் செய்து உண்டு சந்தோஷ மாய் ஓடியாடித் திரிந்து பொழுது சாயுமுன் வீட்டை நோக்கித் திரும்புவார்கள். இவர்கள் பூர்வீக ஜாதியார்களாயினும் அங்குக் குடியேறிய நூதன ஜாதியாரின் நடை நொடி பாவனைகளையே கைக்கொண்டு சற்று நாகரீகமுடையவர்களெனக் காணப்படுவர். அநேகமாய்க் கருத்த நிறமாக விருப்பார்கள். இவர்கள் முக்கிய மாக மலைப்பிராந்தியங்களிலேயே வாசம்செய்து வந்தனர்.

இந்தக் கோக்கிள்ளைச் சோழன் ஓர் நாகஜாதிப் பெண்ணை மணந்ததாகத் தொன்னூலொன்று கூறினும் அதை யூகித்துப் பார்க்குமிடத்தில் அப்பெண் மணி பாண்டியனது மகளெனவே நன்றாக விளங்கும்.

ஓர் நாள் பாண்டியனது அரண்மனையில் பல திருடர் நுழைந்துக்கொள்ளை இட்டுக்கொண்டு திரும்புகையில் அங்கு தொட்டிலில் கிடந்த குழந்தை அலற ஆரம்பித்தது. அக்கள்வர்கள் எங்குப்பிடிபட்டு விடுவமோ வெனப்பயந்து அவ்விளங் குழவியையும் எடுத்துப்போயினர்.

அவர்கள் அநேக நாள் பிரயாணம் செய்து கொடும்பாளூர் என்னும் ஓர் குடிச்சேரியை அணுகி அங்கிருந்த திம்மன் என்போனிடம் குழந்தையை ஒப்புவித்துச் சென்றனர். அவனுக்குக் குழந்தைகள் இல்லாமையால் அப்பெண் சிசுவை அன்போடு வளர்த்து வந்தான்.

கொடும்பாளூர் என்பது ஓர் சிறிய கிராமம். அதில் சுமார் இருபது வீடுகளே இருந்தன. இக்கதை ஆரம்பிப்பதற்குப் பல வருஷங்களுக்கு முன்னர் அக்கிராமத்தில் அக்கினிபகவான் புகுந்து வயிறு நிறைப் புசித்துப்போயினர். உடனே அநேகர் தத்தம் குழந்தை குட்டிகளோடு வெளியூருக்குப் போயினர். சிலர் ஆங்காங்குக் குடிசைகளைக் கட்டிக்கொண்டு வாசம் செய்துவந்தனர். இத்திம்மனேவென்றால் யாது காரணத்தினாலோ தன் பழயவீடு இருந்த விடத்திலேயே வேறோர் வீடொன்று புதுக்கித் தன் பெண்சாதியுடன் வசித்துவந்தான். இந்த சந்தர்ப்பத்தில் தான் குழந்தையைக் கள்வர்கள் இவனிடம் விட்டுச்சென்றனர். இவனுக்குப் பைரவி யென்னும் ஓர் பத்தினியுமிருந்தனள். பிறருடைய இளங் குழவிகளைக் கண்டமாத்திரத்திலேயே அதிக ஆசையுடன் வாரியணைத்துக் கொள்பவளுக்குச் சொந்தமாக ஓர் அழகிற்சிறந்த அப்பெண் கிடைத்தால் அதை எவ்விதம் வளர்த்துவந்தா ளென்பதைச் சொல்லத்திறனற்றவனாக இருக்கிறேன்.

அப்பொழுது அக்குழந்தைக்கு இரண்டாவது வயது நடந்துகொண்டிருந்தது. அம்மாவென்றுமட்டும் சொல்லத்தெரியும். இந்தக் குழந்தைக்குக் கௌரி என்னும் ஓர் திவ்ய நாமகரணமிட்டு வளர்த்து வந்தார்கள். கௌரியும் நாளாக ஆகப் பேசவும் விளையாடவும் கற்றுக்கொண்டாள். இவர்களைக் கௌரி தன்சொந்தப் பெற்றோர்களெனவே எண்ணியிருந்தாள். திம்மன் வித்தையற்றவனேனும், இவள் வீட்டிற்குச் சற்றுத் தூரத்திலிருந்த ஓர் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் கொண்டு சேர்த்தான். கௌரியை இருவேளையும் பாடசாலைக்கு அழைத்துப் போவதும் அங்கிருந்து வீட்டிற்குக் கூட்டிவருவதுமே திம்மனின் முக்கிய காரியமாகப் பாவித்துவந்தான். அங்கு படிக்கும் சகல குழந்தைகளையும்விட அழகிலாகுலுஞ்சரி வித்தையிலாகுலுஞ்சரி கௌரியே மேம்பட்டு விளங்கினாள். எல்லாப்பிள்ளைகளும் இவளிடம் அதிகப் பிரியம் பாராட்டிவருவதாயினர். இவளது சொல்லே அவர்களுக்குத் தெய்வ வாக்காக வழங்கிவந்தது. இக்காலங்களைப்போல காகிதம் இறகு இல்லையாயினும் எழுத்தாணியும் ஓலைபுமே இவைகளுக்குமேல் விளங்கி வந்தன.

இவ்வோலைச்சுவடிவழக்கங்கள் தற்காலத்திலும் அநேகநாட்டுப்புறங்களில் வெகு சகஜமாயும், நாட்டுக்கோட்டை முதலிய செட்டி நாடுகளில் அதிகமாகவும் விளங்குகிறது. இப்போர்க்கொத்த ஓலைச்சுவடிகளில் அநேக நீதிநூற்களைக் கற்றுவந்த கௌரிக்கு வயதும் பன்னிரண்டாயது. எடுத்த சுவடியைப்படிக்கவும், பாமாலைகளைப் பாடவும் தேறவே இனிப் பள்ளிக்கு அனுப்புவதில்லை யென்று நிறுத்திக்கொண்ட பைரவி, அவளுக்குக் குடும்பப்பாதுகாப்பைப் பற்றியும், தன் கணவனுக்குச் சிசுருஷை யெவ்விதஞ்செய்து சந்தோஷப்படுத்துவ தென்பதைப் பற்றியும், குழந்தைகளை சம்ரக்ஷிக்கும் வகைகளைப்பற்றியும் நன்றே அவ்வப் போது எடுத்துப் போதித்து வந்தாள்.



ஓர் சுபதினத்தில் கௌரி புஷ்பவதி யாயினள். பார்த்தால் பத்தரைமாற்றுத்தங்கத்துக்கு நிகராக விளங்கிவருகிறாள். இவள் நாகஜாதிக்கே ஓர் திலகம் போல் விளங்கினாள். அந்தஜாதி ஆண்பிள்ளைகள் அனைவரும் அவளைப்பார்த்து "எட்டாக்கனிக்குக் கொட்டாவி விட்டுப் பயனென்ன?" என்பது போல் எண்ணியதோடு இப்பெண்மணியை மணக்க எந்தப் புண்ணிய புருஷமூர்த்தி அவதரித்திருக்கின்றானோ வென்றும் பேசிக் கொண்டிருந்தனர்.

இங்கிவ்வாறிருக்கையில் ஓர்நாள் வேட்டைக்குச் சென்ற கோக்கிள்ளிச் சோழன் கானகத்தில் வேட்டையாடி வெயர்த்து, தாகசாந்தி செய்துகொள்ள ஓர் குடிசையில் நுழையுந் தருணம் திரும்பிப் பார்க்கையில் கௌரீ மின்னொளி போற் றோன்றி மறைந்தாள். மன்னன் மதிமயங்கினான்.

உடனேசோழன் யாரென்றறிய அவ்வழியே செல்லுகையில் திம்மனது இல்லத்தைக்கண்டு சற்றே தயங்கிநிற்கையில் கௌரி ஓர் அறையினின்றும் மற்றோர் அறைக்குப் போனதைக்கண்டு சந்தேக நிவர்த்தி செய்துகொண்டான். பிறகு இவன் அவ்வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்துகொண்டு தான் சோழனிடம் ஓர் போர் வீரனென்றும், இராஜனோடு வேட்டையாட வந்ததில் அவரைப் பிரிந்துபோய் விட்டுத் தாகவிடாய்த் தணித்துக்கொள்ளத் தனி இடமின்றி அங்கே வந்ததாகவும் சொல்லித் தண்ணீர் சாப்பிட்டுக் களைப்பாறித் தன் ராஜதானியை அடைந்தான். இவள்மேற் கொண்டகாதல் நாளுக்கு நாள்வளர்ந்தமையால் அவளை நாகஜாதிப்பெண் என்று தெரிந்தும் மணம் செய்துகொண்டான். ஓர்நாள் திம்மனிடமிருந்து கௌரியின் விருத்தாந்தங்களைத் தெரிந்த மன்னன் முன்னினும் பதின்மடங்கு அதிக சந்தோஷங்கொண்டு பாண்டியனுக்கும் சொல்லியனுப்பி இருவர் பாந்தவ்யங்களையும் விளக்கிக் கொண்டார்கள்.

இம்மன்னனுக்கு அநேக நாள் புத்திரப்பேறின்றிக் கடைசியாக அக்குல விருத்திக்காக ஓர் பெண்மணி உற்பவித்தனள். அவள் பெயர் நவமாலிகா. இவள் தன் தாய் மாமன் மகனை பாண்டியனது குமாரனை மணமுடித்துக் கொண்டாள். இவர்களது ஆளுகையில் சோழநாடும் பாண்டியநாடும் ஒன்று சேர்க்கப்பட்டது. அப்பொழுது யாது காரணத்தினாலோ பாண்டிய நாட்டு மன்னர்கள் வைஷ்ணவர்களாக இருந்தனர். நவமாலிகா தன் தந்தையின் அத்யந்தநண்பரான திருஞானசம்பந்தஸ்வாமிகளுடைய உதவியால் தன் நாயகனைச் சைவமாக்கினாள். இம்மஹான் ஓர் சிவபக்தர். அநேக சிவஸ்தல யாத்திரைசெய்து அங்கங்கே தேவாரஸ்தோத்திரங்களும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

## 7. திரிச்சியில் ராஜதானி ஸ்தாபனம்

சோழர்கள் அநேக வருஷங்களாகப் பல்லவர்களுக்குச் சிற்றரசராகவே இருந்தனர். இதற்குப்பலர் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். சண்டை செய்யச் சக்தியற்றவர்களாய் எதிர்த்தோர்க்கெல்லாம் பணங்கொடுத்துக் கொண்டிருந்தனர். அதில் சற்று சாதுர்யசாலியாகிய ஒருவன், பலருக்கும் இலஞ்சங்கொடுப்பதைவிட ஒருவனுக்குச் சிற்றரசனாக இருப்பதே மேலென்றெண்ணி இவ்வேற்பாடு செய்தானாம். ஒன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் அதாவது கி. பி. 870 முதல் கி. பி. 894 வருஷம்வரையிலும் விஜயாலயன் அரசாட்சி செய்துவந்தான். இவனே திருச்சியில் பலமாடமாளிகைகள் கட்டிக் கொண்டு ராஜதானிப் பட்டணமாக்கினான். இவ்வருஷம் முதற்கொண்டே திரிச்சியின் சரித்திரம் நன்குவிளங்குகின்றது.

விஜயாலயனுக்குப்பின் கி. பி. 894 முதல் கி. பி. 914 வரையிலும் 1-வது ஆதித்யவர்மன் அரசாண்டான். இவனது அரசாக்ஷியில் சோழதேசம் அமோகமாயிருந்தது. பல்லவர்களை ஜெயித்துக் கப்பம் கொடாமல் நிறுத்தியது மன்றியில் அவர்களிடமிருந்தும் கப்பம் வாங்க ஆரம்பித்தான். கி. பி. 895-ல் கொங்கண தேசத்தைக் கைப்பற்றினன். மஹாதைர்யசாலி. இவனுக்குப்பின் கந்தராதித்யன். கி. பி. 914 ஷூமுதல் 920 வரையில் ராஜ்யபரிபாலனம் செய்தான்: இவன் மஹாசாது. சண்டையென்றால் நடுக்கமே. இவனது வல்லமையை அறிந்த கொங்கண மன்னன் தன் கப்பத்தை நிறுத்தித் தனி ராஜ்யமாக்கிக் கொண்டான். பிறகு தொண்டமண்டலவாசிகளாகிய பல்லவர்களும் அவ்வாறே செய்துகொண்டனர். இவனது ஆளுகையாகிய ஆறு வருஷங்களுக்குள் இவன் தந்தையாகிய ஆதித்யவர்மனால் ஜெயிக்கப்பட்ட சகல நாடுகளும் போயின.

கி. பி. 920 முதல் 932 வரையில் இவன் குமாரனான ஹரிதேவான் ராஜ்யபாரத்தை வகித்தான். கி. பி. 925 ல் தொண்டமண்டலத்தைக் கைப்பற்றினன். திரிச்சியிலேயே அரசாண்டு வந்தான். இவன் மூல ஜுரத்தால் உயிர்துறக்கவும் பராந்தகன் ராஜரீகத்தைக் கைக்கொண்டான்.

பராந்தகன் கி.பி. 932 முதல் 960 வருஷம்வரை அரசுசெலுத்தி வந்தான். இவன் வேறு ஆதனமாகிய யாதொரு ராஜ்யமும் ஜெயிக்காமலிருந்தபோதிலும் தன் ராஜ்யத்தின்மீது படையெடுத்தோர்களை வென்றே வந்தான். பராந்தகனது குமாரனான ராஜகேசரிவர்மன் சிங்காதனமேறினன்.

ராஜகேசரிவர்மன் கி.பி. 960 வருஷமுதல் கி. பி. 1010 வரையில் செங்கோல் செலுத்திவந்தான். இவனுக்கும் ராஜதானிப்பட்டணம் திருச்சியே. இவன் ஆளுகையில் முதல் மூன்று வருஷங்களிலும் தைர்யசாலிகளாகிய பல போர்வீரர்களைப் பல தந்திரமான யுத்தங்களில் தேர்ந்தவர்களாகச் செய்தான். தினே தினே ராணுவத்தைப் பலப்படுத்தினன். ராணுவம் பலப்படவே முதல் முதல் கொங்கணத்தை ஜெயித்தான். அதற்கு மேற்கே இருந்த பற்பல சிற்றரசர்களையும் ஜெயித்துக் கப்பத்திற்கு ஏற்பாடு செய்தான். பல வருஷங்களாய்ப் பாக்கியில் இருந்த கப்பத்தொகையைப் பல்லவர்களிடமிருந்து வசூல் செய்தான். இன்னும் வடக்கில் அநேக அரசர்களோடு போர் புரிந்து வெற்றிபெற்றான். அதாவது 40 வருஷங்களுக்குள்ளாகக் கிழக்கில்கீழ் சமுத்திரமும், தெற்கில் கன்யாகுமாரியும் இலங்கையும், வடக்கே ஒரிசா வரையிலுமுள்ள சகல ராஜ்யங்களும் இவனது ஆளுகையின் கீழ் அடங்கிற்று. இவன் இங்கு போர்செய்து ஜெயங்கொண்டு வாழ்கையில் இவனது மருமகனான குலத்துங்கன், பல சைன்யங்களுடன் கடல் மார்க்கமாகச் சென்று பர்மா தேசத்தில் சில பாகத்தையும், மலேயா தீவின் ஓர் பக்கத்தையும் ஜெயித்துத் தன் மாமனது ஆளுகைக்குள் ஆக்கினன். இப்பொழுதே சோழர்களுடைய பெயர் இந்தியாவில் பல மகுடதாரிகளாலும் புகழப்பட்டு வருகிறது. ராஜகேசரியின் சாதுர்ய சாமர்த்தியங்களுக்கு மெச்சி இந்தியாவின் பல சக்ரவர்த்திகள் சேர்ந்து ராஜ ராஜன் என்னும் பட்டப்பெயரை யளித்தனர். இவன் 1010-ல் உயிர் நீங்கவும் இவனது குமாரனான ராஜேந்திரச் சோழன் அரசனாக்கப் பட்டான்.

இராஜேந்திரச்சோழன் கி. பி. 1010 முதல் கி.பி. 1044 வரையில் அரசாக்ஷி செய்தான். “புலிக்குப் பிறந்தது பூனை யாகாததுபோல” இவனும் தன்னுடைய தந்தையின் எண்ணங்களையும் யுக்திகளையும் கடைபிடித்து மற்றுமிருந்த பல அரசர்களை வென்று கங்கைக்கரை வரையிலுள்ள தேசங்களைத் தன்குடைக்



குக்கீழாக்கிக் கொண்டான். அதினால் இவனுக்குக் கங்கைகண்டசோழன் எனவும் ஓர் நாமதேயமுண்டானது.

இவன் செங்கோல் செலுத்தியது முப்பத்துநான்கு வருஷங்களேயாயினும் இருபது வருஷங்கள் சண்டைசெய்து ஜெயம் பெற்றுத் தன் கீர்த்தியை உலகெங்கும் பரவவைத்து மீதியுள்ள 14 வருஷங்களும் சுகமே குடிகளுடைய க்ஷேமத்திற்கு ஹேதுவான மார்க்கங்களை அபிவிர்த்தி செய்துவந்தான். இவன் புத்திரப்பேறின்றி உயிர் துறக்கவே அவனது ஸ்வீகாரபுத்திரனான ராஜாதிராஜதேவன் ராஜ்யபாரத்தை வகித்தான்.

இராஜாதிராஜதேவன் கி. பி. 1044 ஷூமுதல் 1053வரையில் அரசாண்டான். தன் ஸ்வீகார தந்தையால் ஜெயிக்கப்பட்ட சகல தேசங்களையும் அடக்கி ஆண்டுவந்தான் என்பதை ஓர் அஸ்வமேத யாகத்தால் வெளிப்படுத்தினன். இவனும் புத்திரசந்தான மற்றிறக்கவே இவனது இளைய சகோதரனான ராஜேந்திரதேவன் மன்னனாயினன்.

இராஜேந்திரதேவன். கி. பி. 1053 ஷூமுதல் 1064 ஷூவரையில் செங்கோல் செலுத்திவந்தான். இவன் யாதுவிசேஷமும் செய்ததாகக் காட்டக்கூடிய யாதொரு கிரந்தமும் காணகிலோம்; இவனுக்குப் பிறகு இவன் தனயனான வீரராஜேந்திரச்சோழன் மகுடம் தரித்தான்.

வீரராஜேந்திரச்சோழன் கி. பி. 1064 ஷூமுதல் 1069 ஷூவரையில் ராஜ்யபரிபாலனம் செய்தான். இவனுக்கும் ராஜதானிப்பட்டணம் திருச்சிராப்பள்ளியே. கி. பி. 1065 ஷூல் பம்பாய் வாசிகளாகிய சாளுக்யர்களோடு போர் புரிந்து துங்கபத்ரா நதிக்கரையில் தோற்கடித்தான். அவர்களை வென்றதன் ஞாபகார்த்தமாக அத்துங்கபத்திரா நதிக்கரையிலேயே 100அடி உயரமுள்ள ஓர் கம்பம் ஸ்தாபித்து அதில் தன் பிரதாபத்தோடு தன் துவஜமாகிய புலிக்கொடியையும் காட்டினன்.

## 3. சோழதேசம் க்ஷீணதிசை அடைய ஆரம்பித்தமை

வீரராஜேந்திரன்கி. பி. 1069-ல் இறக்கவே அநேக சிற்றரசர்கள் தங்கள் பகுதியை நிறுத்தியதுமன்னியில் இறந்த அரசன் மகனான ஆதிராஜேந்திரனையும் அரசனாக ஒப்புக்கொள்ளாமல் அவரவர்கள் இட்டது கட்டளையாக நடத்தி வந்தார்கள். இறந்த வீரராஜேந்திரனுக்கு மருமகனும் கொங்கணம் முதலிய தேசங்களுக்கு அரசனாகவுமிருந்த III-வது விக்ரமாதித்யன் (இவன் உஜ்ஜினியில் அரசாண்ட விக்ரமாதித்யனோ, அவன் சந்ததியானோ நன்கு விளங்கவில்லை) திருச்சியை யடைந்து தன் மைத்துனனான ஆதிராஜேந்திரனுக்கு முடிசூட்டி வைத்து அங்கங்கே நடந்த கலகங்களையும் அடக்கித் தன் தேசம் சென்றான்.

ஆதிராஜேந்திரன் கி பி. 1070-முதல் கி. பி. 1073-வரையிலும் அரசனாகஇருந்தான். விக்கிரமாதித்யன் தன்தேசம்சென்றது தான் தாமதம்; மறுபடியும் அங்கங்கே வெட்டுக்குத்துகள் நடக்க ஆரம்பித்தன. அவைகளை அடக்கயாவோ சக்தியின்றிச் சிற்றின்பப்பிரியனாக இருந்தான். நாளுக்குநாள் கலகங்கள் விருத்தியாயிற்றே யன்றி ராஜ்ய விருத்திக்கு மார்க்கம் காணப்படவில்லை. இவன் இருப்பதிலும் இறப்பதே மேலெனக்கண்ட அமைச்சருள் ஒருவன் இவனது குமாரனான ஆதிராஜேந்திரனை 1073-ல் எமபுர மனுப்பினன். உடனே குலோத்துங்கன் அரசனாக்கப்பட்டான்.

குலோத்துங்கன் கி.பி. 1073-முதல் 1118-வரையில் அரசாண்டான். இவனுடைய ஆளுகையில் இலங்கை தனி ராஜ்யமாகப் போயிற்று. குலத்துங்கன் அதிக தெய்வபக்தியுடையவன். ஆசார சீலன். "அஹிம்ஸாப்ரதமோதர்மஹ" என்னும் வாக்கியத்திற்கு இவனே உதாரணம். பிறருக்கு ஹிம்சையைச் செய்ய மனம் பொறான். கி. பி. 1118-ல் தன் குமாரனை விக்ரமச்சோழனுக்குப் பட்டம் கட்டிவைத்து கி. பி. 1120-ல் சிவபதம் அடைந்தான்.

விக்ரமச்சோழன் கி. பி. 1118-ஆம் முதல் கி. பி. 1135-வரையில் மகுடதாரியாக விளங்கினான். இவனுக்கு ராஜதானிப்பட்டணம் ஜெயங்கொண்ட சோழபுரமே. இவனுக்குப்பின் இவன் தனயன் II வது குலத்துங்கன் பட்டம் கட்டப்பெற்றான்.

II-வது குலத்துங்கன் கி. பி. 1135ஆம் முதல் 1146 வரையில் அரசு செலுத்தி வந்தான். இவன் திருச்சியிலேயே அரசாண்டான்.

II-வது ராஜராஜன் தன் தகப்பனுக்குப்பின் ராஜ்யபாரத்தை வகித்து 1146ஆம் முதல் 1171ஆம் வரையில் அரசனாக இருந்தான். இவனுக்குப்பிறகு II-வது ராஜாதிராஜன் முடி சூட்டப்பட்டான்.

II-வது ராஜாதிராஜன். தன் தந்தை இறந்த மறுவருஷமாகிய கி. பி. 1172ஆம் முதல் 1178 வரையிலும் அரசுசெலுத்தினான். மேற் சொன்ன சகல மன்னருக்கும் ராஜதானிப்பட்டணம் திருச்சியே. அவர்கள் மஹா தீதிமான்கள். சண்டையென்றால் நடுங்குவார்கள். ஆனால் நல்லகுணத்தினாலும் தானதர்மாதிகளினால் தங்கள் புகழை நாடுமுழுவதும் நாட்டிச்சென்றனர். ராஜாதிராஜனுக்குப்பின் அவன் மகனை III-வது குலத்துங்கன் சிம்மாதனம் ஏறினான்.

III-வது குலத்துங்கன் கி. பி. 1178 முதல் கி. பி. 1215ஆம்வரையில் ஆண்டான் இவன் தன் தந்தையைப்போலில்லாமல் தான் பட்டத்திற்குவந்தநாள் முதலே சேனைகளைச் சீர்திருத்திக்கொண்டு கி.பி. 1185 ஆல் இலங்கையின் மீது படையெடுத்துக் கண்டிஎன்னும் ஊரில்வெற்றி பெற்றான். கி. பி. 1197ல் பாண்டியனோடு சண்டைசெய்து ஜெயமடைந்தபடியால் தன்பிரதிநிதி ஒருவனை மதுரையில் நியமனம் செய்தான். இவனது காலத்தில்தான் மகா கவியாகிய கம்பன் வாழ்ந்தது. இவர் வரகவி. கி. பி. 1205ஆம் உய்யக்கொண்டான் கால்வாயைப் பெட்டவாத்தலைஎன்னுமிடத்தில் காவேரிஆற்றினின்றும் வெட்டிவைத்தான். அது அநேக கிராமங்களை செழிப்பித்துக்கொண்டு திருச்சியை அடுத்த வாளவந்தான்கோட்டைஎன்னும் கிராமத்தின் ஏரியில்சங்கமமாகிறது. இவன் புத்திரன் III-வது ராஜராஜன் தன் தந்தைக்குப் பின் அரசனானான்.

III-வது ராஜராஜன் குலத்துங்கன் குமாரனேனும் அவனது வீரசூரபராக்கிரமங்கள் இவனிடம் பிரதிபலிக்காமல் போனதே அதிக ஆச்சரியம். தரத்தக்கது. அராஜ்யமாகப் போய்விடாவண்ணம் கி. பி. 1216 வருஷமுதல் 1244 வருஷம் வரையில் அரசு செலுத்தி வந்தான். மதுரையை அரசாண்ட சுந்தர பாண்டியன் ராஜராஜனது தைர்யவீனத்தைக் கண்டு தான் கட்ட வேண்டிய கப்பத்தை நிறுத்தியதோடு ஓர் சைன்யத்துடன் போய்த் தஞ்சாவூரைத்தாக்கிக் கி.பி. 1223 ல் அதையும் தான் கைக்கொண்டான். தற்காலத்தில் தஞ்சைமாநகரைத் தழைக்கச்செய்வதற்கோர் துணைக்கருவியாக விளங்கும் கல்லணைக்கட்டு பதின்மூன்றாம் நூற்றாண்டில் காவேரியின்மீது கட்டப்பட்டது. கி. பி. 1224ஆம் முதலே சோழதேசம் க்ஷீணதசையடைய ஆரம்பித்தது. ராஜராஜனுக்குப் பின் பல சோழர்கள் அரசாண்டார்களேனும் அவர்களது நாமதேயம் நன்கு விளங்கவில்லை. தஞ்சைமாநகரும் இவர்களைவிட்டு போனதானது ஒற்றைக்கண்



ணைப்பிடுங்கியதுபோலாய்விட்டது. தடி எடுத்தவன் தண்டற்காரன் என்பது போல அங்கங்கே அநேக சிற்றரசர்களாயினர். இந்த ஆதிதன் ராஜாக்கள் சண்டைச்சச் சரவு இல்லாதவரையில் ராஜ்யத்தை நடத்துவதும் வெடிமருந்தின் ஓசையைக் கேட்டமாத்திரத்தில் "தான்பிழைத்தது தம்பிரான் புண்ணியமென்" றெண்ணி ஓடுவதுமாக இருந்தனர்.

## 9. சோழதேசம் கொள்ளையிடப் பட்டமை

மாலிக்காபர் என்னும் மகம்மதிய அரசன் கி. பி. 1310ஆம்த்தில்தென் இந்தியாவின்மீது படையெடுத்துச் சோழ பாண்டியர்களை வென்று அவர்களது ஏராளமான திரவியங்களைக் கொள்ளை கொண்டு போனதோடு சுந்தரவதிகளான பல மாதர்களையும் களவாடிச் சென்றான். இவன் இத்துடன் மட்டும் போகாமல் ஸ்ரீரங்கத்தில் நுழைந்து உத்ஸவவிக்ரஹையும் எடுத்துப் போயினான். கொஞ்ச காலத்திற்குப்பின் ராமதாஸ் என்னும் ஓர்பக்தனால் கொண்டுவரப்பட்டு நித்யோத்ஸவம் நடந்தேறத் தொடங்கிற்று. மாலிக்காபர் தென் இந்தியாவை விட்டுச்செல்லுகையில் இரண்டு மஹம்மதிய சிற்றரசர்களை மதுரையிலும் திருச்சியிலும் விட்டுச் சென்றான். நமதுவரர்களை ஆண்ட சிம்மாதனத்தின்மீது அன்னிய மகம்மதியன் உட்கார்ந்தான். இங்கிருந்து துரத்தப்பட்ட சோழ பாண்டியர்கள் அப்பொழுது மகத்தாகிய ஐஸ்வர்யங்களுக்கும் ஆஸ்தானமாக இருந்த விஜயநகரத்திற்குச் சென்று சிலநாட்கள் தங்கியிருந்து பிற்பாடு பலத்த பல சேனைகளுடன் வந்து கி. பி. 1374ஆம் நவாப்புகளைத் தாக்கி அரைநொடியில் ஜெயம் பெற்றார்கள். இந்த ஒத்தாசை செய்ததற்காகச் சோழ பாண்டியர்கள் விஜயநகரத்தரசனுக்குக் கப்பம் கட்டி வந்தனர். இவர்களுக்குப் பூர்ணபலமிருந்தபோதிலும், யானைக்கு எவ்வளவோ மனிதர்களைக் கொல்லவும் பலத்த அநேக மரங்களை முறிக்கவும் வலிமை யிருந்தும் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுப் பாகன் சொன்னபடி எல்லாம் ஒருமுழ மூங்கில் தடிக்கு அஞ்சி நடப்பதுபோல, விஜயநகரத்திற்குக் கப்பம் கட்டிவந்தனர்.

## 10. நாயுடுகாரு சமஸ்தானம்.

கி. பி. 1516ஆம்த்தில் அரசாண்டு வந்த சோழன், பாண்டியன்மீது படையெடுத்துத் தோற்கடித்தான். உடனே பாண்டியன் விஜயநகரத்தின் சிற்றரசனாகிய நாகம்மநாயக்கன் என்போனுடன் சேர்ந்து சோழனை வென்றான். பாண்டியன் நாகம்ம நாயக்கனுக்குத் திருச்சியை இனாமாகக் கொடுத்தான். கொஞ்சகாலத்திற்குப் பிறகு பாண்டியன் ஆண்சந்ததியற்று உயிர்நீங்கவே தனது சைன்யபலத்தால் பாண்டிய நாட்டையும் நாகம்ம நாயக்கன் கைப்பற்றினான். இவனுக்குப் பிறகு இவன் குமாரன் விஸ்வநாதநாயக்கன் அரசனானான்.

விஸ்வநாத நாயக்கன் கி. பி. 1550ஆம் முதல் 1563வரையில் அரசு செலுத்திவந்தான். இவன் கி. பி. 1559ஆம்த்தில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் அரசு செலுத்திவந்த சோழனை வென்று இருந்த இடந்தெரியாமல் செய்துவிட்டான். 1560 வருஷத்திற்குப் பிறகு சோழர்கள் அரசாகவே கிடையாதாகையால் இதுவே சோழர்களுடைய அந்திய சரித்திரம். விஸ்வநாத நாயக்கன் அதிதைர்யசாலி, புத்தி நுட்பமுடையவன். சோழர்களை வென்றமாத்திரத்தில் திருச்சியைச் சுற்றிலும் கோட்டை கட்ட எண்ணினான். உடனே ஆரம்பமும் செய்து விட்டான். கோட்டை மதில்சுவர்கள் சுமார் 45-அடி உயரமும் இருபதடி அகலமுமாகக் கட்டப்பட்டது. இதைக் கற்பாறைகளாலும் சுண்ணாம்பு சாந்தாலுமே கட்டிமுடிக்க மூன்று வருஷங்களாய்விட்டன. மதில்

சுவர்களை யொட்டி நாற்புறமும் 60-அடி ஆழமும் சுமார் 20-அல்லது 25-அடி அகலமுமாக வெட்டிக் கரைகள் கரையாவண்ணம் கட்டிக் காவிரி ஜலத்தைக் கொண்டே நிறப்பினான். இவனுக்கு முன் பல மன்னர்கள் அரசாண்டபோதி லும் அநேக மண்டபங்களும் மால்களும் இவனே புதுக்கியுள்ளான். வடக்குக் கோட்டை வாசலினின்றும் வெகுதூரம் சென்றால் மேல்வாசலை அணுகிய அரண்மனையும், அதின் பலமாகிய இரண்டு வாயில்களையும் கடந்து உள்சென்றால் கொலுமண்டபத்தையும் அடையலாம். இம்மண்டபத்தில் மந்திரிபிரதானியுடன் அரசன் கொலுவிலமர்ந்து ராஜ்யபரிபாலனம் செய்வான். இக்கொலுமண்டபத் தின் வடபாரிசத்தில் ராஜவம்ஸத்தைச் சேர்ந்த ஆடவர்கள் வசிக்கும் மால்க ளும் மண்டபங்களும் அவர்கள் ஸ்நானம் செய்ய யோக்யமாக நன்னீர்த்தடாக மொன்றும் உண்டு; முன்சொன்ன கொலுமண்டபத்தின் மேற்குத் திசையில் பட்டமஹிஷியின் அந்தப்புரமும் அதில் அவளது பல பாங்கியர்கள் வசிக்கும் இடமும் நன்றே அமைப்புற்றிருந்ததோடு இவ்வந்தப்புரத்தை அணுகி வெகு சமீபமாய் ஓர் பூங்காவும் அதில் ராஜஸ்திரீகள் ஜலக்கிரீடை செய்ய உபயோகமுள்ள சிறியதோர் தடாகமும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பட்ட மஹிஷியின் அந்தப்புரத்திற்கும் கொலுமண்டபத்திற்கும் தெற்கில் மூன் றடுக்கு உப்பரிக்கைகளையுடையனவாக விளங்கும். இதில்தனித்தனியான 50 மால்களிருந்தன. ஒவ்வோர் மால்களிலும் அரசனது மற்றமனைவியர்கள் தத்தம் பாங்கியரோடு வசித்து வருவார்கள். இவ்வரண்மனையை ஒட்டி ஓர் பெரிய உபவனமும் அதனுள் மூன்றுபெரிய ஸரோவரங்களும், அத்தடாகங்களின் கரை களில் மல்லிகை முல்லையாதி கொடிகளும் மற்றும் பயிர் செய்யப்பட்டு தெங்கு, கமுகு, மா, பலா, முதலிய விருக்ஷங்கள் அவ்வுபவனத்திலே தினகரனொளிபடா வண்ணம் காக்கும் நேர்மையும் நேத்ரானந்தத்தைக் கொடுக்கும். இதனுடைய சிறப்பைக்கண்டே "சிருங்காரத்தோட்டம்" என்னும் பெயர் இன்னும் விளங் கிவருகிறது. இவ்வளவு ஏற்பாடுகளும் செய்ததோடு மலைக்கோட்டைக்கென்று ஓர் தெப்பக்குளமும் வெட்டிவைத்தான். இவன் தனது ராஜ்யத்தை முழுமை யும் பல பாளயக்காரர்களுக்குப் பிரித்துக்கொடுத்து அவர்களிடமிருந்து பகுதி வசூலித்து வந்ததோடுபுஜபலபராக்ரமம் பொருந்திய அநேகசேனைவீரர்களையும் பலசைன்யங்களையும் ஆதரித்துவந்தான். ராஜரீகம் செய்வதில் மற்றவர்கள் எல் லோரும் இவனிடமே கற்றுக்கொள்ளவேணும். இன்னும் சொந்தசரீரைக்கு இவனைப் பூலோகத்தில் விட மனமில்லாத அந்தகன் விஸ்வநாதநாயக்கனை கி.பி 1563 ஷத்தில் அழைத்துக்கொண்டான். இவனுக்குப்பின் குமார கிருஷ்ணப்பநாயக்கன் ராஜ்யபாரத்தை வகித்தான்.

குமாரகிருஷ்ணப்பநாயக்கன்:—இவன் கி. பி. 1563 ஷு முதல்1573ஷு வரையில் அரசாண்டுவந்தான். இவன் கோட்டை வாசல்களைப் பலப்படுத்தி அங்கங்கே அநேகரைக் காவல் வைத்தான். பாளயக்காரர்களுக்கு ஓர் சிம்ம மாகத் தோன்றினான். 1573 ல் உயிர் நீங்கவே இவன் புத்திரனை பெரிய வீரம்ம கிருஷ்ணய்ய நாயுடு முடிசூட்டப்பட்டான்.

பெரிய வீரம்மகிருஷ்ணய்ய நாயடு கி.பி. 1573ஷு முதல் 1595 வருஷம் வரையில் செங்கோல் நடத்திவந்தனன். இவன் கோட்டை மதில்களைப்பழுது பார்த்து வேண்டிய இடங்களைச் சரிப்படுத்தியும் வந்தான். பிறகு லிங்கம நாயடுகீந வாகிய பழைய அரசனின் ஜேஷ்ட குமாரன் ராஜ்யபாரத்தை வகித் தான். இவன் (1595 ஷு முதல் 1602) கோட்டைக்குள் மற்றோர் சுற்றுக்கோ ட்டை கட்டினான். அது 20 அடி உயரமும் 10 அடி அகலமுமே. அநேக கோபுரங்களில் செய்துவைத்திருந்த சித்திரவேலையைக் கண்ணோக்கில் அவர் களது சித்திரப்பயிற்சியும் புத்தி நுட்பமும் நன்றேதெரியவரும். ஒவ்வோர்



நாய்க்கரும் சேனைகளையும் கோட்டையையும் இருகண்களாகப் பாவித்து வந் தமையால் மேன்மேலும் ராஜ்ஜியம் விருத்தியாயிற்று. எம்மன்னனும் எதிர்க்கத் துணியான்.

## 11. இராமநாதபுரத்தின் பூர்வீகசரித்திரம்

லிங்கம்மநாயுடு 1602-ஷுல் பரமபதமடையவே அவர்புத்திரன் முத்து கிருஷ்ணப்ப நாயுடு அரசனாக்கப்பட்டார்.

முத்துகிருஷ்ணப்ப நாயுடு கி. பி. 1602ஷு முதல் 1609 வரையில் ராஜ ரீகம் செய்துவந்தார். இவர்செய்த பேருதவிக்கு என்றும் இந்தியவாசிகள் வந்த னம்செய்யக் கடமைப்பட்டவர்களே. இவர் காலத்துக்கு முன்னர் சேதுயாத்திரை செய்வோர்கள் திருடரிடம் பட்ட கஷ்ட நஷ்டங்களைச் சொல்லமுடியாது. நடுப் பகலிலும் நடமாடுவது கஷ்டமே. இதைக்கேட்ட முத்துகிருஷ்ணப்ப நாயுடு மரவர் என்னும் ஜாதியாருக்கு ராமநாதபுரம் முதலிய இடங்களை இனமாகக் கொடுத்து யாத்ரீகர்கள் கள்வரிடமிருந்து தப்புவிக்கும் மார்க்கத்தையும் அவர் களுக்கு ஒத்தாசையாகவிருந்து வழிநெடுக அநேக அன்னதான சத்திரங்களும் அங்கங்கே சமஸ்தானக் காவலாளிகள் அநேகரையும் நியமனம் செய்தான். அகப் பட்ட திருடர்களைக் கடுமையான தெண்டனைக்குள்ளாக்கவே வெகு சீக்கிரத்தில் கொள்ளைக்காரர் இருந்த இடமே தெரியவில்லை. ஆனால் தற்காலம் கோடிக் கரைவரையில் சுமந்துபோகும் சாதனங்களை ஏற்பாடு செய்து இருக்கிற தென் இந்திய ரயில்வே கம்பேனி யாருக்கு, நாம், எவ்வளவுகடமைப்பட்டவர்கள் என்பதை அவரவர்களே உணர்வார்கள். முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் 1609ஷு உயிர் துறக்கவே இவர்மகனாகிய முத்துவீரப்பன் செங்கோல் செலுத்தஆரம்பித் தான். முத்துவீரப்பநாயுடு கி. பி. 1609-ஷு முதல் 1623-வரையில் மதுரையிலும் திருச்சியிலுமாக அரசாண்டு வந்தான். இவன் சரித்திர சம்மந்தமான யாதொரு காரியமும் செய்திலன். இவனுக்குப்பின் இவன் குமாரனை திருமலைநாயக்கன் ராஜ்ய பாரத்தை வகித்தான்.

## 12. சிங்கக்குட்டி திருமலை

திருமலைநாய்க்கன் கி. பி. 1623-ஷு முதல் 1659 வரையில் அரசாக்ஷி செய்தான். இதுவரையில் அரசு செலுத்திய எல்லா நாயக்கர்களும் விஜயநகரத் திறகுக் கப்பம் கட்டி வந்தனர். திருமலை நாய்க்கனோ வென்றால் தான் பட்டத் திற்கு வந்த மறு வருஷமே கட்டவேண்டிய பகுதியை நிறுத்தியதோடு விஜய நகரத்துடன் பல யுத்தங்கள் செய்து வெற்றிப்பெற்றான். கி. பி. 1638ல் சந்திர கிரிக்கு அரசனை ரெங்கராஜனைத் தோற்கடித்து தன் சிற்றரசனுக்கிக் கொ ண்டு கப்பம் வசூலித்தான். திருமலை நாய்க்கன் 1640-ஷுமும் 1642-ஷுமும் இருமுறை மைசூர்மன்னனை முறியடித்தான். திருமலைநாய்க்கன் மதுரையிலேயே மண்டபங்களும் மால்களும் நூதனமாகக் கட்டிக்கொண்டு அரசாண்டுவந்தான் திருச்சியைத் திரும்பியும் பார்க்கவில்லை. இவன் நாய்க்கர் வம்ஸத்திற்கு ஓர் சிம்மமாகவே விளங்கினான். திருமலை நாய்க்கன் கி. பி. 1659ல் உயிர் துறக்கை யில் திருச்சி மதுரை, சிவகெங்கை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம் புத்தூர், சேலம், புதுக்கோட்டையும் திருவனந்தபுரத்தில் ஓர் பாகமும் இவனது ஆளுகைக்கு உள்ளடங்கியிருந்தன. இவனுக்கு மனைவியர் இருநூற்றுவர். அநேகர் இவன் சவத்தோடு உடன்கட்டை ஏறினர். திருமலை நாய்க்கனுக்குப் பிறகு அவன் குமாரன் முத்துஅழகிரி நாயக்கன் பட்டம் கட்டப்பட்டான்.

முத்து அழகிரி நாயக்கன் கி.பி 1659 ஷு முதல் 1662 வரையில் செங்

கோல் செலுத்திவந்தான். இவனும் மதுரையிலேயே பட்டம் கட்டப்பட்டானேனும் திருச்சியிலேயே ராஜரீகம் செய்தான். இவன் மூதாதையான விஸ்வநாத நாயக்கனால் கட்டப்பட்ட திருச்சிக்கோட்டையைக் குண்டுபோட்டு பரீக்ஷித்துப்பார்த்து தேவையான இடத்தில் தகுந்தபடி பலப்படுத்தினான். இவனுக்குப்பின் இவன் தனயன் சொக்கநாதநாயக்கன் அரசனானான்.

சொக்கநாத நாயக்கன் கி. பி. 1662௵ முதல் 1682 வரையில் அரசாண்டான். இவன் இராக்காலங்களில் மாறுவேடம்பூண்டு, குடிகளின் எண்ணங்களை அறிந்து அவர்கள் குறையைத்தீர்த்து வந்தான். அப்பொழுது தஞ்சையை அரசாண்ட அரங்கநாத நாயக்கனைப் பெண் கேட்கவும் அவன் கொடாததால் பல சைன்யங்களோடு சென்று யுத்தம் செய்து வெற்றியடைந்து உள்நுழைந்து பார்க்கையில் ராஜஸ்திரீகளின் அந்தப்புரம் தீப்பட்டு எரிந்துபோய் பெண்பிள்ளைகள் யாவும் பிணமாகக்கிடந்தன. அந்த யுத்தத்தில் ரெங்கநாத நாயக்கன் அவன் குமாரன் எவ்வோரும் உயிர் துறந்தமையால் தன் * தமயனை அழகிரிநாயக்கனை அங்கே அரசாளும்படி ஆக்ஞாபித்தான். ரெங்கமுத்து கிருஷ்ண வீரப்பநாயக்கன் தன் தந்தைக்குப் பின் செங்கோல் செலுத்த ஆரம்பித்தான்.

ரெங்கமுத்துகிருஷ்ணவீரப்பநாயக்கன் கி. பி. 1682 வருஷம் முதல் 1687 வருஷம் வரையில் ராஜ்யபரிபாலனம் செய்தான். இவனது 15-வது வயதில் பட்டம் கட்டப்பட்டமையால் ஆரம்பத்தில் ராஜ்யம் கஷ்ட தசையை அடைய ஆரம்பித்தபோதிலும் நாளாவர்த்தியில் இழந்த தேசங்களைக் கைப்பற்றினான். கலகக்காரர்களை அடக்கிக் கொடுந்தண்டனைகளுக்கு ஆளாக்கினான். இவனது 22 வது வயதில் வைசூரியினால் உயிர்நீங்கினான். வயதில் சிறியவனாயினும் புத்தியில் பெரியவனே. இன்னும் கொஞ்சநாள் உயிருடன் இருந்திருப்பானேல் திருமலைநாயக்கன் புகழுங் குன்றும்படியான அத்தனை சீர்திருத்தங்களைச் செய்வான் என்றே பலர் உரைத்தனர்.

## 13. பெண்ணரசிகள்

இறந்த அரசன் அன்னையான மங்கம்மாள் ராஜ்யபாரத்தை வகித்து கி. பி 1689௵ முதல் 1704 வரையில் செங்கோலோச்சிவந்தாள். இவள் அநேக தர்மசத்திரங்கள் கட்டிவைத்தாள். ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் விளங்கும் அம்மாமண்டபம் இவளுடைய தர்மமே. திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்குப்போகும் வழியில் இன்றும் அன்னதானம் நடந்துவருகிற அம்மாசத்திரமும் இவளுடைய தர்மமே. இவள் பட்டத்திற்கு வந்ததின் ஞாபகார்த்தமாய் ஓர் ஆராக்ஷிமண்டபம் புதுக்கினாள். அதையே இப்பொழுது மங்கம்மாள் ஹால் அல்லது • ஷீன்வால் என்னும் திவ்யநாமதேயத்தோடு விளங்காநிற்கின்றன. திருமலை நாயக்கனைவிட அதிக நேர்மையாக அரசுசெய்யா விடினும் இவளது ஆளுகை எந்தவிதத்திலும் யாதும் குறைவில்லை. மங்கம்மாளுக்குப்பின் விஜயரங்கச்சொக்கப்பநாயக்கன் மன்னனாக ஆக்கப்பட்டான்.

விஜயரெங்கச் சொக்கப்பநாயக்கன் இறந்தமங்கம்மாளின் பேரன். இவன் கி. பி. 1704௵முதல் 1731 வரையில் ராஜ்யபரிபாலனம் செய்தான். இவனுக்குப்பட்டாபிஷேகம் மதுரையிலேயே ஆயினும் திருச்சியிலேயே அரசுபுரிந்து வந்தான். இவனுக்குப்பின் ஆண்சந்ததி யில்லாமையால் இவனது மனைவியாகிய மீனாக்ஷியம்மை ராஜ்யபாரத்தை வகித்தாள்,

* சொந்தத்தமயனல்லன் தன் தந்தையால் வளர்க்கப்பட்டவன் அழகிரிநாயக்கன்



மீனாக்ஷியம்மை கி. பி. 1731௵ முதல் 1736 வரையில் அரசியாக இருந்தாள். இவள் பங்காரு திருமலைநாயக்கன் குமாரனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். கி. பி. 1734௵த்தில் பங்காரு திருமலைநாயக்கன் தானே மைனர் கார்டியன் என்றும் ராஜ்யத்தைத் தன்வசம் ஒப்புவிக்கும் படிக்கும் பலதந்திரங்கள் செய்தும் பயனின்றிப் போனதால் முப்பதுலக்ஷ ரூபாய் மகம்மதியர்களுக்குக் கொடுப்பதென்றும் அவர்கள் மீனாக்ஷியைத் தோற்கடித்து ராஜ்யத்தை இவன் வசம் ஆக்குகிறதென்றும் பேசிமுடித்தான்.

## 14. மஹம்மதியர்களின் வருகை

பங்காரு திருமலையும் மஹம்மதியர்களும் செய்துகொண்ட உடன்படிக்கையை அறிந்த மீனாக்ஷியம்மை கோடிரூபாய் சந்தாசாகிப்புவுக்குக் கொடுத்து எதிரிகள் கையினின்று தப்புவிக்கும்படி கேட்டுக்கொண்டாள். அந்தப்படியே அவனும் சம்மதித்தான். ஏங்கு ஒருக்கால் மோசஞ்செய்து விடுவானோ என்ற பயத்தினால் பிரமாணம் செய்து கொடுக்கும்படி மீனாக்ஷியம்மாள் வேண்டவே அவனும்கொரான்மீது துணியைப்போட்டுத் தான் அவளுக்கு ஒருபொழுதும் துரோகம் செய்வதில்லை என்று சத்யம் செய்து கொடுத்தான். பிறகே சந்தா சாகிபு திருச்சிக் கோட்டைக்குள் பகிரங்கமாகச் சென்று மீனாக்ஷியம்மாளுடன் அரசாண்டு வந்தான்.

அவனது சிவந்தமேனியும் பரந்தகண்களும் விரிந்தமார்பும் மீனாக்ஷியம்மையின் மனதைக் கொள்ளைகொண்டது. அக்காலை சந்தாசாகிபுவுக்கு வயது இருபத்தெட்டு. அதிக வனப்புவாய்ந்தவனாக விருந்தான். அயல்நாட்டு நாகரீகம் பரவாத அக்காலமானபடியால் மீனாக்ஷியம்மாள் பல சமயங்களில் தன் ஜாதியின் பெருமையையும் அவனது நீசஜாதியின் ஆசாரங்களையும் யோஜித்துக்கண்டிக்க எண்ணுவாள். ஆயினும் யாவும் அவன் மாட்டு பயன்படவில்லை. விதிப்பயனை வெல்லுதற்கு யாவராலும் முடியாத காரியமாகையால் தன் ஆசைக்கு அடிமையாயினாள். பெயருக்குமட்டும் அரசி மீனாக்ஷி, மற்ற சகல அரசாங்ககாரியங்களையும் தன்மனதுக்குகந்த அரசனிடம் ஒப்புவித்தாள். அவன் இட்டதுகட்டளையாக இருந்தது. கி. பி 1738-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் நம்பிக்கை துரோகியாகிய சந்தாசாகிப் அவளைச் சிறையிலிட்டுத்தானே அரசனானான். கொரானில் செய்து கொடுத்தசத்தியத்திற்குப் பிறழலாமாவென்று மீனாக்ஷி விசாரிக்குங் காலையில் அவன் சத்தியம் செய்து கொடுத்தது கொரான் அல்லவென்றும் செங்கல்லின் மீது துணியைப்போட்டுச் செய்துகொடுத்தான் என்பதும் வியக்தமாயது. பாவம் மீனாக்ஷியம்மை சிறைச்சாலையிலேயே உயிர்துறந்தாள்.

சந்தாசாகிபு கி. பி. 1738-வருஷ முதல் 1740-வரையில் அரசாண்டான். பலனாய் பழிவாங்கக் காத்துக்கொண்டிருந்த பங்காரு திருமலை நாயக்கன் தஞ்சை நாயக்கனோடு சேர்ந்து, மஹா தைர்யசாலிகளாயுள்ள பம்பாய் மஹாராஷ்டிரர்களைத் துணையாகக் கொண்டு திருச்சியை முற்றுகைபோட்டனர். 1741-௵த்தில் சந்தா சாகிப்புவைத் திருச்சியில் தோற்கடித்து அவன் இருசகோதரர்களையும் எமபுரம் அனுப்பினர். உடனே சந்தா சாகிபையும் கைதியாக்கிச் சதாராவுக்கு அனுப்பினார்கள். இந்தச் சண்டையில் பங்காரு திருமலை நாயக்கன் உயிர்துறக்கவே திருச்சியை ஆள்வதற்கு மஹாராட்டிர பிரதிநிதியாக மொரா. ராவ் என்னும் ஓர் தலைவனை நியமனம் செய்தார்கள். தஞ்சாவூர் நாய்க்கன் மதுரையில் போய் அரசாளவும் மஹாராட்டிரர்கள் தஞ்சையில் 1741-௵ முதல் அரசு செலுத்தலாயினர். அன்று முதலே தஞ்சையில் மஹாராஷ்டிர ராஜ்யம் ஸ்தாபிதம் ஆனது.

திருச்சியை அரசாண்ட மொராரி ராவ் அரண்மனை முழுவதும் அந்தணர் மயமாக்கி யாது காரணத்தாலோ கி. பி. 1743-ம் வருஷத்தில் ராஜாங்கத்தை விட்டு விலகினீர். இவருக்குப்பின் அநேக மந்திரிகளாகிய மறையோா மஹாராட்டிரர்களுக்குட்பட்டுத் திருச்சியை அரசாண்டு வந்தனர்.

கி. பி. 1748-ல் சந்தாசாகிப் விடுபடவும் ஆற்காட்டின் பழய நவாபு இறக்கவே (சந்தா சாகிப்) இவன் ஆற்காட்டுக்கு அரசனாயினான். பழய அரச குமாரனான மஹம்மதாலி சந்தா சாகிபுவுடன் சண்டைசெய்ய முடியாமல் "தான் பிழைத்தது யார்செய்த புண்ணியமோ" என்று மதித்து தெற்கிலோடி வருகையில் திருச்சியில் தகுந்த மன்னனில்லாததால் உட்புகுந்துகொண்டான்.

## 15. ஆங்கிலேயர்கள் பிரவேசம்

1751ளுத்தில் சந்தாசாகிபுவின் சைன்யங்களால் திருச்சி முற்றுகை போடப்பட்டது. ஆனால் ஆங்கிலேயர்களது உதவியால் 1752 ல் மீட்டுக்கொடுக்கப்பட்டது. சந்தாசாகிப்புவுக்கு ஒத்தாசையாய் பிராஞ்சுக்காரர்கள் வந்தனர். கி. பி. 1751ளு முதல் 1763 வரையிலும் திருச்சியில் ஆங்கிலேயர்களுக்கும் சண்டை நடந்துகொண்டே இருந்தது. ஆனால் 1763ம் ஆண்டில் பிரான்சு தேசத்தைச் சேர்ந்த பாரீஸ் என்னும் ஊரில் நடந்த உடன்படிக்கையினால் மஹமதாலிக்குத் திருச்சினாப்பள்ளி நிலைத்தது. 1781ளுல் மைசூர் நவாபாகிய ஹைதரும் 1790-ல் அவன் குமாரனாகிய டிப்புவும் திருச்சியை முற்றுகைபோட்டும் ஆங்கிலேயர்களது பின்பலத்தால் மஹம்மதாலியே வெற்றியடைந்தான்.

கி. பி. 1792வருஷத்தில் ஆங்கிலேயருக்கும் மஹம்மதாலிக்கும் ஓர் உடன்படிக்கை நடந்தது. அதாவது—"திருச்சி நவாபாகிய மஹமதாலியின் ஒத்தாசைக்காக ராணுவங்கள் காக்கப்படவேணும் என்றும், அதின் வருஷச்செலவாகிய ஒன்பதுலக்ஷம் விராகன்களும் நவாபினது பாளயக்காரர்களிடமிருந்து ஆங்கிலேயர்களே வசூல்செய்து கொள்ளுகிறதென்றும், அவ்வாறு கொடுக்கத் தவறினால் ஷை ஒன்பதுகோடி விராகன்கள் வருஷவருமானம் வரக்கூடிய சில ஜில்லாக்களை ஆங்கிலேயர்களே அடைகிறதென்றும் எழுதித்தீர்ந்தது."

கி. பி. 1795 ல் மஹமதாலி உயிர் நீங்கவும், மஹமதாலியும் திப்புவும் ஏதோ உடன்படிக்கை ஒன்று ஆங்கிலேயர்களுக்குத் தெரியாமல் செய்து கொண்டமையால் அவன் மகனுக்குப் பட்டம் கொடாமல் இறந்த மன்னனின் சகோதரன் குமாரனான அஸிமுலா தௌலா என்பவனுக்கு முடிசூட்டினார்கள்.

அஸிமுலா தௌலா கி.பி.1795ளு முதல் 1801 வரையில் மன்னனாக இருந்தான். கி. பி.1801 வருஷத்தில் ஆங்கிலேயர் அவனுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து அவ்வருஷம் ஜுலை மாதம் 31 ந் தேதியன்று ஓர் ஆங்கிலக் கலெக்டரையும் நியமனம் செய்தார்கள்.

1878-ல் திருச்சி முன்சிபல் டவுனாக மாறியதால் பழயகோட்டைகளும் அகழிகளும் சுகாதாரத்திற்குக் கெடுதலைச் செய்யும் என்று கோட்டைகளை இடித்து அகழிகளையும் தூர்த்தனர். தென் இந்தியாவில் திருச்சிக்கோட்டைக்கு நிகர் யாதுமில்லை என்றும் எந்த விரோதியும் கோட்டையை இடித்து உள் நுழையவில்லை என்றும் தெரியவருகிறது. விஸ்வநாத நாயக்கனால் கட்டப்பட்ட கோட்டை அகழி முதலியவைகள் போயினபோதிலும் மேல்வாசல்மட்டும் இடிக்கப்படாமல் விட்டு வைத்திருப்பது இப்போதும் பார்க்கத்தக்கது. அக்காலத்தில் அகழிகளாக விளங்கியவைகள் தாம் இப்போது புலிவார்ட்ரோட் எனப்படுகிறது.

புராதனப் பெருமை முற்றிற்று.

Printed by G. C. Loganadham Brds., at the Guardian Press, Mount Road, Madras, & Published by S. U. Ramangjalu Naidu Editor "Prajanukoolan" Trichinopoly 1st June 1911.

# வைத்தியக் கைம்முறைகள்.

இல்வாழ்க்கை யெனும் ரதம் இனிது நடை பெறுதற்குப் பிரதானமாயுள்ள பயிற்சிகளுள் வைத்தியாப்பியாசமும் ஒன்றும். ஒரு குடும்பத்தில் ஸ்திரீ புருஷர்கள் இருவருக்குள் எவருக்கேனும் வைத்திய சாஸ்திரத்தில் இயன்றவரை பரிச்சயம் ஏற்பட்டிருக்க வேண்டும். புருஷர்களை விட மாதர்களுக்கு வைத்திய போதனை இன்றியமையாதது. பெண்களுக்குப் படிப்பு அவசியமென்று ஒப்புக்கொள்ளப்பட்டும் போயிற்றே தவிர அவர்களை இன்னவிதமாகத்தான் பயிற்றுவிப்ப தென்பதைப் பற்றி ஒரு நிச்சயமான முடிவும் அதற்கேற்ற ஒழுங்குகளும் இன்னும் ஏற்படவில்லை. உலகம் சீர்படாததற்கு ஒரு முகாந்தரம், எந்த மனிதனும் பிறர் நற்கிரியையை யாரம்பிக்கட்டும் என்று எதிர் பார்க்கிறதே யன்றி தானாக அதைத் தொடங்கத் துணியாததுதான்.

இப்போது நாம் வைத்திய விஷயமாக எழுத ஆரம்பித்திருப்பதில், அதை நான்கு பாகங்களாகப் பிரித்திருக்கிறோம். மூலிகைகளைக்குறித்து முதல் பாகத்திலும், உலோகங்களால் ஆகக்கூடிய அவிழ்தங்களைக் குறித்து இரண்டாம் பாகத்திலும், மிருக ஜாதி வஸ்துக்களிடமிருந்து வைத்திய பாகத்திற்குக் கிடைக்கக்கூடிய மருந்துகளைக் குறித்து மூன்றாவது பாகத்திலும், நான்காவது பாகத்தில் திராவகம், உப்பு வகைகளிலிருந்து ஔஷதம் செய்யும் முறைகளைக் குறித்தும் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் அனைவருக்கும் பயன்படும் வண்ணமாக மருந்துகளைக்குறித்து விவரித்திருப்பதில் அவைகளின் குணங்களையும் சேர்மானங்களையும் பிரமாணங்களையும் நன்றாக எடுத்து விளக்கியிருக்கிறோம். அநேக இடங்களில் சரக்குகளின் உற்பத்தி முதலானவைகளைக் குறித்தும் கண்டிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் அவைகளின் பெயரை, இந்துஸ்தானி, இங்கிலீஷ், தமிழ் இம்மூன்று பாஷைகளிலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இடைகளைக் குறித்தும் அளவுகளைக் குறித்தும் ஒரு குறிப்பு இக

ன் கீழ் கொடுத்திருக்கிறோமானாலும், முக்கியமான ஔஷதங்களைக் கூட்டுகிற விஷயத்திலும், பிரமாணங்கள் ஆகிற விஷயத்திலும், இந்நூலில் குறித்திருக்கிற இங்கிலீஷ் இடைகளுக்கும் அளவுகளுக்கும், அவைகளுக்குச் சமானமான இந்த நாட்டில் வழங்குகிற இடைகளையும் அளவுகளையும் தொடர்ச்சியாய் எழுதிக்கொண்டு வந்திருக்கிறோம். இதனால் இந்நூலை வாசிக்கிறவர்களுக்கு, இடைகள் அளவுகளைக் குறித்து கணக்குப்பார்ப்பதிலும் ஒத்துப்பார்ப்பதிலும் உண்டாகக்கூடிய கஷ்டம் குறைவாகின்றது இத்துடன் குழந்தைகள், ஸ்திரீகள், விருத்தாப்பியர்களுக்கும் சில முக்கியமான ஔஷதங்களின் பிரமாணங்களும் அளவும் தெரிந்திருக்க வேண்டியது முக்கியமாதலால் அதனை முதலில் எழுதியிருக்கிறோம்.

## அளவுகள்.

இப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் எடைபாகங்கள் எல்லாம் பெரியவர்களுக்கு உபயோகிக்க வேண்டும். சிறுவர் பெண்கள், விருத்தர் இவர்களுக்கு அடியில் எழுதப்பட்டிருப்பதை அனுசரித்துக் கொடுக்கவேண்டும்.

இரண்டு மாதத்திய குழந்தைக்கு ஒரு பாகத்தை 15 பாகஞ்செய்து இதில் ஒருபாகமெடை கொடுக்கலாம்.

7-மாதத்திய குழந்தைக்கு ஒரு பாகத்தை 12-பாகஞ் செய்து இதில் ஒரு பாகமெடை கொடுக்கலாம்.

14-மாதத்திய குழந்தைக்கு ஒரு பாகத்தை 8-பாகஞ் செய்து இதில் ஒரு பாகமெடை கொடுக்கலாம்.

20-மாதத்திய குழந்தைக்கு ஒரு பாகத்தை 6-பாகஞ் செய்து இதில் ஒரு பாகமெடை கொடுக்கலாம்.

28-மாதத்திய குழந்தைக்கு ஒரு பாகத்தை 5-பாகஞ் செய்து இதில் ஒரு பாகமெடை கொடுக்கலாம்.

3-வருஷத்திய சிறுவனுக்கு ஒரு பாகத்தை 4-பாகஞ் செய்து இதில் ஒரு பாகமெடை கொடுக்கலாம்.



7-வருஷத்திய சிறுவனுக்கு ஒரு பாகத்தை 2-பாகஞ் செய்து இதில் ஒரு பாகமெடை கொடுக்கலாம்.

14-வருஷத்திய பையனுக்கு ஒரு பாகத்தை 3-பாகஞ் செய்து இதில் இரண்டு பாகமெடை கொடுக்கலாம்.

16-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முழுப்பாகமும் கொடுக்கலாம்.

50-வருஷத்திய மனிதனுக்கு ஒரு பாகத்தை 12-பாகஞ் செய்து இதில் 11-பாகமெடை கொடுக்கலாம்.

65 வருஷத்திய கிழவனுக்கு ஒரு பாகத்தை 6-பாகஞ் செய்து இதில் 5-பாகமெடை கொடுக்கலாம்

பெண்களுக்கு மேற் சொல்லிய 14-வருஷத்திய பையனுக்குக் கொடுக்கும் இடையில் கொஞ்சம் குறைவு செய்து கொடுக்கலாம். பெரும்பாலும் புருஷர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிற இடைகளே பெண்பாலருக்கும் பொருந்தும். ஆகிலும் மனிதருடைய தேக வலிவறிந்து மருந்துகளைக் கொடுக்க வேண்டியது.

கெந்தகம்:—பெரியவருக்கு ஒரு டிராம், அல்லது ஒரு வராகனெடை, அல்லது 32-குன்றிமணி இடை கொடுக்கலாம் ☞ இரண்டு மாதத்திய பெண்குழந்தைக்கு இரண்டுகுன்றிமணி இடை, அல்லது வீசம் வராகனெடை கொடுக்கலாம்

ஆமணக்கெண்ணெய்:—பெண்களுக்கு 6-டிராம் முதல் 8 டிராம் அல்லது 6-வராகனிடை முதல் 8-வராகனிடை வரையிற் கொடுக்கலாம். ☞ ஏழு வருஷத்திய பெண்குழந்தைக்கு 6, 7, 8, டிராம், அல்லது 6, 7, 8-வராகனிடை; இதை 12 பாகஞ் செய்து இதில் ஒரு பாகமிடை கொடுக்கலாம்.

லாடனம்:—பெரியவர்களுக்கு 30-துளி வரையிற் கொடுக்கிறது. ☞ 14-மாதத்திய குழந்தைக்கு 30-துளியை 8-பாகஞ் செய்து ஒருபாகம் கொடுக்கலாம்.

ஒபின்:—பெரியவர்களுக்கு 2-கிரைன், அல்லது ஒரு

குண்டுமணி இடை கொடுக்கிறது. ☞ மூன்று வருஷத்திய சிறுவனுக்கு 2-கிரைன், அல்லது ஒரு குன்றுமணி எடையை 8-பாகஞ் செய்து ஒரு பாகமிடை கொடுக்கலாம்.

க்லோரோவாள மாத்திரை:—பெரியவர்களுக்கு இரண்டு மாத்திரை கொடுக்கிறது. ஏழு வருஷத்திய பையனுக்கு அரை மாத்திரை கொடுக்கலாம்.

கலம்பாத்தூள்:—பெரியவர்களுக்கு அரை டிராம் அல்லது அரை வராகனிடை கொடுக்கலாம். ☞ 10-வருஷத்திய பையன்களுக்கு ஒரு வராகனிடையை மூன்று பாகஞ் செய்து இதில் இரண்டு பாகமிடை கொடுக்கலாம்.

## எடைகள்.

இங்கிலீஷ் பாஷையில் உள்ள இடைகளின் விவரம்.

1-கிரைன் என்பது அரை குண்டுமணி, அல்லது காணி விராகனிடை.

1-ஸ்குருபல் என்பது 10 குண்டுமணி, அல்லது காலே வீசம் விராகனிடை.

1-டிராம் என்பது 32-குன்றுமணி அல்லது ஒரு வராகனிடை.

1-பவுன் என்பது 13-பலம்.

1-மினிம் என்பது 1-துளி.

1-அவுன்சு என்பது [illegible]-வராகனிடை.

1-பயின்டு என்பது 160-வராகனிடை.

1-காலன் என்பது 1280-வராகனிடை.

காணி $\frac{1}{80}$. வீசம் $\frac{1}{16}$. முவ்வீசம் $\frac{3}{16}$. காலேவீசம் $\frac{5}{16}$. காலேஅரைக்கால் $\frac{3}{8}$. காலேமுவ்வீசம் $\frac{7}{16}$. அரையேவீசம் $\frac{9}{16}$. அரையேஅரைக்கால் $\frac{10}{16}$ அல்லது $\frac{5}{8}$. அரையேமுவ்வீசம் $\frac{11}{16}$. முக்கால் $\frac{12}{16}$ அல்லது $\frac{3}{4}$. முக்காலேவீசம் $\frac{13}{16}$. முக்காலேஅரைக்கால் $\frac{14}{16}$ அல்லது $\frac{7}{8}$. முக்காலேமுவ்வீசம் $\frac{15}{16}$.



# வைத்திய கைம்முறைகள்.

## மூலிகை மர்மங்கள்.

### 1. மாசக்காய். OAK GALLS.

[அதிசாரத்துக்கும், மூறைக்காய்ச்சலுக்கும், தொண்டை சிதளத்தால் வீக்கினதற்கும், மூலத்திற்கும், அபினி, காபி இவைகளுக்கு முறிவாகவும், பிரமேக ரோகங்களுக்குக் கழுவுகிற மருந்தாகவும் உபயோகப்படுத்தலாம்.]

மாசக்காய் என்பதற்கு இங்கிலீஷில் ஓக் கால்ஸ் என்றும் இந்துஸ்தானியில் மாபல் என்றும் பெயர். ஓர் செடியின் மெதுவான இலைகளையுடைய கிளைகளில் ஓர் விதப் புழு முட்டையிடும். சில நாள் சென்றபின் அதில் பாலுண்டாகி முட்டைமேல் மூடிக்கொள்ளும். அது உலர்ந்து முட்டைமேல் தோணாகிவிடும். இதை அரபி பாஷையில் மாஜூபல் என்று சொல்லப்படும். சிலவற்றில் புழுவானது தின்று வெளிவந்துவிடும். காய் துளை பட்டிருக்கும்: அதுதான் மாசக்காய்.

மாசிக்காய்த் தூளால் சிதாத்தம் நின்று தண்ணீர்போல் பேதியாகும். அதிசாரத்துக்கும் மூறைக்காய்ச்சலுக்கும் கொடுக்கும் விதம்:—

10-கிரைன் முதல் 20-கிரைன், அல்லது 5-குன்றுமணி முதல் காலே வீசம் வராகனிடை வரையில் கொடுக்கலாம்.

மாசிக்காய் கஷாயம் செய்து கொடுக்கும் விதம்:—மாசிக்காய் தூள் 2-டிராம் அல்லது 2-வராகனெடை, வெந்நீர் 1-பவுன், அல்லது 13-பலத்தில் போட்டு நான்கு ஜாமம் வைத்து பின் வடிகட்டிக்கொள்க. இதற்கு இன்பியூஷன் என்று இங்கிலீஷில் பெயர். அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சு அல்லது 4-வராகனெடை முதல் 8-வராகனெடை வரையில் தொண்டை சிதளத்தால் வீக்கினால் கொப்பளிக்கக் குணமாகும். ரணங்களைக் கழுவுவதற்கும் உபயோகமாகிறது.

மூலத்துக்கு மாசிக்காய் களிம்பு செய்யும் விதம்:—

மாசிக்காய் தூள் 1-டிராம் அல்லது ஒரு வராகனெடை, அபினி ½ ஸ்குருபல் அல்லது 5-குன்றுமணி எடை, இரண்டும் ஆட்டுக் கொழுப்பில் நன்றாயரைத்து அபினியில்லாமலும் செய்யலாம். இதை இந்துஸ்தானி பாஷையில் மாபல்கா மரஹம் என்று சொல்லப்படும்.

பிரமேக ரோகங்களுக்கு:—அரைப்பலம் மாசக்காயும் அதே அளவு படிக்காரமும் கால்பலம் காசுக்கட்டியும சேர்த்து ஒரு படி ஜலத்தில் போட்டு அரைப்படியாகச் சுண்டச் செய்து பிரதி தினமும் காலை மாலை வேளைகளில் நீர்த் தாரைகளில் பீச்சிக் கழுவவேண்டும்.

## 2. கருப்பூரம். CAMPHOR

[இளைத்துத் துற்பலத்திலிருக்கும் வியாதிக்கும்; அபினி கொடாத சுரத்துக்கும்; அம்மை சம்பந்தப்பட்ட சுரங்கட்கும்; காக்காவலி, விக்கலுக்கும்; வாய்நோய், இடுப்புவலிக்கும்; கீல்வாய்வு, தண்டத்தில் கட்டுமுடி வீக்கத்துக்கும்; சொப்பனஸ்கலிதம், இன்னும் அநேக வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். மற்றக் குணங்கள் அபினியைப் பற்றிச் சொல்லுமிடத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.]

இந்துஸ்தானியில் காபூர் என்றும், இங்கிலீஷில் கயான்பர என்றும் பெயர். ஜப்பான், சீனு தேசங்களில் ஒருவிதமான விருக்ஷங்கள் உற்பத்தியாகின்றன. அதின் கட்டை, வேர், ஜலம் இம்மூன்றையும் சேர்த்து அத்தர் இறக்குவதுபோல இரண்டுபகல் ஒரு இரவுவரை நெருப்பிலிட்டு எரிக்க அதிலிருந்து இறங்கும் ஜலம் ஏற்கனவே பாண்டத்தில் வைக்கப்பட்டிருக்கிற வைக்கோலில் நெய் போலொத்த அணுக்கள் ரூபமாகப் பரவும். இது இறங்கிய பின்பு கருப்பூரமென்று பெயர் பெறும். இது வெள்ளை நிறமாக இருக்கும். கண்ணிலிடக்கரிக்கும் ஆல்கோல் சாராயத்திலும் எண்ணெயிலும் கரையும். ஜலத்தில் மூழ்கிறதில்லை, கரைகிறதுமில்லை. தின்றால் தேகஞ் சூடாயிருக்கும். நாடி மெதுவு படும்,



நாடி உறுதியாய்த் துடிதுடித்து ஓடும். பலவீனமும் உண்டாகி எவ்வித நோயாயிலும் தலைசுற்றல், நடுக்கல், தூக்கத்தில் எகிறிவிழுதல் பலவிதப் பேச்சுகள், சொக்கியிருக்கிற அபினி கொடாத சுரத்துக்குக் கொடுக்கக் குணம்தரும். வாய்வு, ஜனகவாய்வு, அம்மை கண்டு வயிற்றில் இறங்கிவிட்டால் அதற்கும் தர வெளிவரும். அம்மை கண்ட பிறகு சுரம் நீங்காவிட்டால் அப்போதும் கொடுத்துச் சுகப்பட்டதுண்டு. இவ்வித நோய்களுக்கு கருப்பூரபானம் பின்வருகிற முறைப்படி செய்து தரவேண்டும்:—

கருப்பூரபானம் செய்யும் விதம்: கருப்பூரம் ஒருதிராம் அல்லது ஒரு வராகனெடை, ஆல்கொல் சாராயம் அகப்படாவிட்டால் சாராயம் 10-துளி, கற்கண்டு அரை அவுன்சு அல்லது 4-வராகனெடை, நிறுத்து எடுத்துக்கொள்ளவும். முதலில் ஆல்கொல் சாராயத்தில் கருப்பூரத்தைக் கரைத்துப் பிறகு கற்கண்டு கூட்டி, அதற்குப் பிற்பாடு சுத்தஜலம் 16-அவுன்சு அல்லது 13-பலம் வரையில் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக்கலந்து ஒன்றான பிறகு வஸ்திரத்தில் வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். இதற்கு இங்கிலீஷில் கம்பவுன் கயான்பர் மிச்சர் என்றும், இந்துஸ்தானியில் காபூரிகா ஷரபத் என்றும் பெயர்.

இன்னொரு விதமான கருப்பூரபானம் செய்யும் விதம்:—

கருப்பூரம் ஒரு ஸ்குருபல் அல்லது கால்வீசம் வராகனெடை, பாதம்பருப்பு 2-டிராம் அல்லது 2-வராகனெடை, கற்கண்டு ஒரு திராம் அல்லது ஒருவராகனெடை, ஜலம் 6-அவுன்ஸ் அல்லது 5-பலம் சேர்த்து கலந்து கொள்ளவும். இதில் அரை அவுன்ஸ் முதல் ஒரு அவுன்ஸ் வரையில் அதாவது 4-வராகனெடை முதல் 8-வராகனெடை வரையில் நாழிகைக்கு ஒரு தரம் கொடுக்கலாம். இதற்கு இந்துஸ்தானியில் காபூரி பாதமகா ஷரபத் என்றும், இங்கிலீஷில் கயான்பர் இம்மலஷன் என்றும் சொல்வர்.

காக்காவலிக்கு கருப்பூரமாத்திரை:—

ஆல்கொல சாராயம் 6-துளி, பெருங்காயம் 4-ஸ்குருபல் அதாவது 2-குன்றுமணி எடை, கருப்பூரம் 2-ஸ்குருபல் அதாவது 1-குன்றுமணி எடை, இம்மூன்றையும் வேலம்பிசின் இளகலிலரைத்து மாத்திரை அளவாக 30-செய்துகொண்டுநாழிக்கு ஒருதரமாக 2, 3 மாத்திரைவீதம் கொடுக்கலாம்.

கருப்பூரம் எண்ணெய் செய்யும் விதம் :—
அரை அவுன்ஸ் அதாவது 4-வராகனெடை கருப்பூரத்துடன் ஆல்கொல் சாராயம் 15-துளி சேர்த்து, 3-அவுன்ஸ் அதாவது $2\frac{1}{2}$-பலம் எள்ளெண்ணெய்யுடன் கூட்டிக்கலந்து கொள்ளவும். இதற்கு கயாம்புறைட்டயில் என்று இங்கிலீஷிலும், காபுரிகாத்தேல் என்று இந்துஸ்தானியிலும் சொல்லப்படும். இந்த எண்ணெய் சுளுக்கு நோய்களுக்குத் தடவ உதவும்.

கருப்பூரம் அரை அவுன்ஸ் அதாவது 4-வராகனெடை இதை ஆல்கொல் சாராயத்தில் கரைத்து வாய்வு நோய் இடுப்புவலி இவைகளுக்குத் தேய்க்கக் குணமாகும். இம்மருந்திற்கு காபுரி ஆல்கோல் என்று இந்துஸ்தானியிலும் கயாம்புறைட்டடு என்று இங்கிலீஷிலும் சொல்லப்படும்.

## 3. நஞ்சு முறிச்சான். TYLOPHORA ASTHMATICA.

[இதை வாந்தி எடுப்பதற்கு உபயோகிக்கலாம். இதை நஞ்சறுப்பான் என்று கூடச்சொல்வதுண்டு.]

நஞ்சுமுறிச்சான் என்பது ஓர் செடி. இது இத்தேசத்தில் உண்டாகிறது. வாந்தியாகிற மருந்துகளுக்கெல்லாம் இது வெகுநலமான வாந்தியாகும். இதை இந்துஸ்தானியில் ஜங்கிலி பிக்வான் என்றும், தக்னி பாஷையில் பித்காடி என்றும், இங்கிலீஷில் டைலொபொரா ஆஸ்மொடிகா என்றும், கண்டிரி இப்பிக்காகியுஅ (Country Ipecacuanha) என்றும் பெயர்



## நஞ்சு முறிச்சான்.

நஞ்சு முறிச்சான் இலைத்தூளுக்கும் கொடித்தூளுக்கும் ஒரேவித குணந்தான். ஆயினும் இலைதான் சிலாக்கியமானது. கீரிப்பிள்ளையும் பாம்பும் சண்டை செய்து பாம்பினால் கீரிப்பிள்ளைக்கு விஷமேறினால் நஞ்சு முறிச்சான் செடியை யென்று தின்று அவ்விஷத்தை நீக்கிக்கொள்ளுகிறதென்று பாம்பாட்டிகள் சொல்லுகிறார்கள். ஆனால் அச்செடி குணத்தால் நம்பத்தக்கதாயிருக்கிறது.

நஞ்சு முறிச்சான் வேரை இடித்துத் தூளாக்கி வஸ்திரகாயம் பண்ணி 30-கிரைன் முதல் 40-கிரைன் வரையில் அதாவது காலே மூன்று வீசம் அரை வீசம் வராகனெடை முதல் அரையே அரைக்கால் வராகனெடை வரையில் ஜலத்தில் சேர்த்துக் கொடுத்துப் பின்பு ஜலம் கொடுக்க வாந்தியாகும்.

## 4. வெள்ளைப்பூண்டு. (*Gralic.*)

[செவிடு, இரைப்பு, மண்ணீரலில் வீக்கம், இருமல், சுவாசகாசம், கிருமிகள், வாய்வு நோய் கட்டிய இவைக்கும் பயன்படும். மற்ற விவரங்கள் பூசாம்பாம் இடமறிக.]

வெள்ளைப்பூண்டு இத்தேசத்தில் எங்கும் உண்டாகும். அதன் ரசம் தேகத்தில் தடவினால் கொப்பளிக்கும். கடுகு குணம் போலிருக்கும். குழம்பில் சேர்க்கப்படுகிறது. ஜீரணிக்கச் செய்கிற குணமுண்டு. அதிகமாயின் தலைவலி, வயிறுப்புதல், தாகமெடுத்தல், தேகம் சூடாதல், பேதியுடன் ரத்தங்காணல் இவை நேரிடும். இங்கிலீஷில் க்யார்லிக் என்றும் இந்துஸ்தானியில் லசன் என்றும் பெயர்.

தலையில் ரத்தம் அதிகரித்தால் பாதங்கீழ் தேய்க்கலாம். காது மந்தப்பட்டுக் கேள்விகுறைந்தால் பஞ்சியில் துவட்டி நாளொன்றுக்கு 4, 5, 6, வேளை பஞ்சை மாற்றிவைத்தால் குணமாகும். வெள்ளைப்பூண்டினால் எண்ணெய் உண்டாகும். அந்த எண்ணெயை வாய்வு நோய் கட்டிய இவைக்கும், அவ்வெண்ணெ

யுடன் எள்ளெண்ணெய் கலந்து தோல்மேல் உண்டாகும் ஒவ்வொரு வியாதிக்கும் தேய்க்கலாம் தடவலாம். தேகத்தில் வலிவு குறைந்து இரத்தங் குறைந்து சுவாசம் மெதுவாகில் பூண்டு கொடுக்கக் குணமாகும். முறைக்காய்ச்சலில் தேகவலிவு குறைந்தால் பூண்டைச் சிறிபதாய் அறுத்து ஒரு வராகனெடை முதல் 2 வராகனெடை வரையில் ஜலத்துடன் சேர்த்துக்கொடுக்கவும். ஆனால் மெல்லலாகாது. இப்படியே இறைப்புக்குங் கொடுக்கலாம்; குணமாகும். ஜலோதர வியாதிக்கு பூண்டு ஒரு வராகனெடை, ரஸபல்பம் ஒரு குன்றுமணி எடை, இரண்டையும் அரைத்து மாத்திரை செய்து நாளொன்றுக்கு 2-வேளை கொடுக்கலாம். மண்ணீரலில் வீக்கமுண்டாகில் எல்லா மருந்தை விட இனி வரும் மருந்து பெரிதானது. அம்மருந்து செய்து கொடுக்கும் விதம்:— பூண்டு கிரி—20, மூசாம்பரம் 8 வராகனெடை, இரண்டையும் அரைத்து ஆல்கொல் சாராயம் அகப்படாவிட்டால் சாராயத்தில் கலந்து புட்டியில் விட்டு 2, 3, நாள் வரை வெய்யலில் வைத்து அடிக்கடி குலுக்கிவரக் கலந்தொன்றாகும். வாத சரீரத்துக்கு நாளொன்றுக்கு 2, 3, வேளை அல்லது காலை மாலை 2-வராகனெடை வரையில் கொடுக்கவும். பேதியானால் குறைக்கவும். ஆகாவிடில் அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

## 5. ஈளச்சக்கிரை. (*Pepperment.*)

இங்கிலீஷில் பிபர்மெண்ட் என்றும் இந்துஸ்தானியில் புதியனு என்றும் பெயர். புதியனு வாய்வுகளைத் தூரத்தும். புதியனு இலைத்தூள் காலே வீசம் வராகனெடை முதல் அரை வராகனெடை வரையில் கொடுக்கலாம். புதியனு பச்சை இலையை ஜலத்தில் போட்டால் அச்சலம் ருசியாயிருக்கும். குடிக்கத் தாகமடங்கும்.

## 6. ஆமணக்கன். (*Caster Oil Seeds.*)

இந்துஸ்தானியில் இரண்டி என்றும் இங்கிலீஷில் க்யாஸ்டர் ஆயில் சீட்ஸ் என்றும் பெயர். ஆமணக்கன் ஓர் செடி. இத்தேச மெங்கு முண்டாகும். விரையால் எண்ணெய் செய்யலாம்.



எண்ணெய் பேதியாகும். வயிற்று வாய்வுக்கு மெத்த நலமாயிருக்கும். மூத்திரதாரை வெள்ளை வியாதிக்கு எண்ணெய் கொடுக்கப் பயமில்லாத மருந்தாகும். தாது உடைந்தாலும் சிறுவர்க்குக் கொடுக்கப்பயமில்லை. ஜலம் வடித்த கஞ்சி, பிசின் இளகல் இதுகளுடன் எண்ணெய் கலந்து 6-வராகனெடை முதல் 8-வராகனெடை வரையில் கொடுக்கலாம். மற்ற குணம் போஸ்துக்கவிடம் அறியலாம். ஆமணக்கெண்ணெய் (Caster Oil) ஆமணக்கம் விரை, அல்லது ஆமணக்கமுத்து என்று சொல்லப்படும். ஆமணக்கமுத்தால் எண்ணெய் செய்யும் விதம்:— ஆமணக்கமுத்து 5 சேர், ஒரு இராத்திரி ஜலத்தில் நனைத்துவைத்து காலையில் நன்றாய்க்கழுவி முத்தைப்பாண்டத்திற் போட்டு ஜலம் விட்டு இரண்டு நாழிகை வரையில் வேகவைத்து பின் ஜலத்தை ஊற்றிவிட்டு முத்தை 3-நாள் வரையில் உலர்த்தியபின் உரலிற்போட்டு இடித்து அதற்குப் பத்துப் பங்கு ஜலம் விட்டுக் காய்ச்சும்போது கொம்பால் துளாவிக் கொண்டிருக்க எண்ணெய் கக்கி ஜலத்தின் மேல் வரும். அப்பாண்டத்தை இறக்கி ஆறினபின் எண்ணெயை சீசாவில் பதனம் பண்ணவும். ஆமணக்கன் வேர் தோல் பேதிக்காகும். அப்பேதி செய்யும் விதம்:—மிளகாய், புகையிலை, ஆமணக்கன் வேர் தோல் இம்மூன்றும் அரைத்து மாத்திரை காட்டெலுமிச்சங்காயளவு செய்து குதிரைக்குக் கொடுக்க வாய்வு போகும். தோல்மேல் வரும் வியாதிக்கு தேகத்திலும் வாய்வுக்காக வயிற்றிலும் தேய்க்கக் குணமாகும்.

## 7. பால்சாம்பராணி. (*Benzoin.*)

இது சுமத்திரா தீவிலிருந்து இந்நாட்டிற்கு வருகிறது. நிறம் வெள்ளை, கொஞ்சம் அழுக்கடைந்திருக்கும். சாம்பராணித்தூளை பாண்டத்தில் போட்டு வாயைக் கடிதத்தால் மூடி, மற்றொரு பாண்டத்தில் மணற்கொட்டி அடுப்பில் வைத்து அதின்மேல் முன்பாண்டம் வைத்துத் தீயிட மணற் சூட்டால் சாம்பராணி வெந்து புகை கடிதத்தில் படியும். அது சாம்பராணிப்பூ. இந்துஸ்தானியில் ஊத்காபூல் என்றும், இங்கிலீஷில் பிளோரா ஆப் பெஞ்ஜிமன் என்றுஞ் சொல்லப்படும். சாம்பராணிப்பூ, பெரி

காரிக் இல்லிக்சர் செய்யும் பாகத்துக் குதவும். மற்ற குணம் போஸ்துக்காயிடம் அறியலாம். இரைப்பு, ரத்தகாசம், வாயால் நுரையும், ரத்தமுங்கண்டு தேகமுலர்ந்தாலும், காச சுரமிருந்தாலும் சாம்பராணிப்பூ கொடுக்கக் குணமாகும்.

## 8. கம்நாயகம். (Gum Ammoniac.)

அரபி பாஷையில் உஷக் என்று பெயர். கம்நாயகம் ஒரு மரத்தின் பிசின். செடி யாருக்கும் நன்றாய்த் தெரியவில்லை. இத்தேசத்திற்கு பெரிய பெரிய கட்டியாய் வரும். அதில் சிறியதாய் வெள்ளை நிறமுள்ள கட்டிகள் கலந்திருக்கும்; எதன்பேரில் பூசினாலும் மாநிறமுண்டாகும். சூட்டில் கொஞ்ச மெதுவாகவும் கரைகிறதில்லை. இருமலில் கோழை யெடுக்க கம்நாயகம் கொடுக்கலாம். ஜலோதர வியாதியில் கொடுக்க நீர் இறங்கும். வாய்வினால் வயிற்றில் நொந்தால் பேதிக்குக் கொடுத்துக் குணப்படாவிட்டால் கம்நாயகம் கொடுக்கலாம். கம்நாயகம் மல்ஷன் செய்து கொடுக்கும் விதம்:—கம்நாயகம் 2 வராகனெடை, இதை 64 வராகனெடை ஜலத்தில் கரைக்க பால்போன்ற நிறமுண்டாகும். இதை இங்கிலீஷ் பாஷையில் கம் அமோனியாக் இம்மல்ஷன் என்று சொல்லப்படும். 4 வராகனெடை முதல் 8 வராகனெடை வரையில் ஒரு நாளைக்கு 3-4-வேளை கொடுக்கலாம். கம்நாயகத்தால் பற்று செய்யும் விதம்:—கம் நாயகம், காடி இரண்டையும் அரைத்து கூழ்போல் செய்து வீக்கம் முடக்கல் வியாதிக்குப் பற்றுப்போடக் குணமாகும். இரைப்பு வியாதிக்குக் கம்நாயக மாத்திரை நல்ல மருந்தாகும். அம்மாத்திரை செய்து கொடுக்கும் விதம்:—கம் நாயகம் $1\frac{1}{2}$ குண்டுமணி எடை, நரிவெங்காயம் $\frac{1}{2}$ குண்டுமணி எடை, இரண்டும் அரைத்து ஒரு மாத்திரை செய்து ஒரு நாளைக்கு 3 மாத்திரை 3-வேளைக்குக் கொடுக்கலாம்.



1. காகம்.
2. ஆந்தை.
3. பருந்து.
4. கவுதாரி.
5. கருடன்.
6. கழுகு.
7. மயில்
8. குயில்.
9. அன்னம்.
10. காடை.
11. கோழி.
12. ஊர்க்குருவி.
13. வானம்பாடி.
14. சுரும்புறு.
15. மைனு.

ஒரு மனிதன் வைத்திருந்த மொத்தப் பவுன்கள் 2519.

## ஹிந்துக்களின் அநுஷ்டானங்களும் ஆசாரங்களும்.

கபார யோக்கியமான புராதனப் பெருமையினின்றும் நழுவிவிட்டதற்கப்பால் ஹிந்துக்களின் அநுஷ்டானங்களிலே சில மிகவும் தப்பிதமாகவும் அருத்த மில்லாமலும் ஏற்பட்டு விட்டன. இதனால் ஷை அநுஷ்டானங்களிலே நமக்குப் பொருள் விளங்காதனவை யெல்லாம் மூடத்தனமானவை யென்று சொல்லிவிடுதல் பிழையாகும். ஒரு சங்கதியை ஆழ்ந்து ஆலோசியாமல் மேலெழுந்தவாருகப் பார்த்துவிட்டுக் கண்டனை செய்துவிடும் வழக்கம் இக்காலத்திலே மிகுதியாய் விட்டது. ஓர் சிறிய திருஷ்டாந்தமெடுத்துக் கொள்வோம். ஹிந்துக்களுக்குள்ளே வைதிகர்கள் ஜலம் வைத்துக்கொள்ளும் பொருட்டுத் தாமிரப் பாத்திரங்களையே வைத்துக்கொள்வது வழக்கம். அதனால் ஜலத்திலே உலோக விஷம் கலந்து விடுகிறதென்றும், எனமல், கண்ணாடி முதலிய நாகரிகப் பாத்திரங்களிருக்கும்போது தாமிரப்பாத்திரங்களை உபயோகித்தல் சுத்த மூடத்தனமெனவும் நம்மவர்களில் சிலர் சொல்லத் தலைப்பட்டார்கள். தாமிரப் பாத்திரங்களை நமது புராதனர்கள் வழங்கி வந்தமை வெறும் மூட ஆசாரமில்லையென்றும் அரிய சாஸ்திர நுட்பம் பற்றிய செய்கையென்றும் பின்வரும் ஆதாரங்களால் விளங்குகின்றது.

1904-ம் வருஷத்திய ரிவ்யு ஆப்ரிவியூஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் டிசம்பர்-மீ சஞ்சிகை தாம்ரம் ஜலத்தைச் சுத்தப்படுத்துகிறதென்று தெரிவிக்கிறது. இது தற்காலத்து சாஸ்திரக்ஞர்கள் புதிதாகக் கண்டுபிடித்த விஷயங்களிலொன்று. "விஷமுள்ள நுண்ணுயிர் (microbes) களைத் தாம்ரம் கொல்லுகின்றது. அஸ்திஜ்வரம், விஷபேதி முதலான பல நோய்களுக்குத் தாம்ரம் முதற்றரமான மாற்றாக விருக்கிறது."

பருகு நீர் நிறைந்துள்ள ஊருணிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதில் ஏராளமான பணஞ்செலவிடுவதோடு நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அது யாதெனில், பத்து லக்ஷம் காலன் ஜலத்தைப் பரிசுத்தப்படுத்த ஒரு ரூபா எட்டணா விலையுள்ள துருசே போதுமென்று சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகின்றார்கள் என்பதே.

பின்வருவனும் ரிவ்யூஸ் என்ற பத்திரிகையிலிருந்தே எடுத்தெழுதப்பட்டது:—"கண்ணிற்குப் புலப்படாத நுண்ணிய உயிர்கள் அற்பமான தாம்ரவாடைக்குப் பயந்து சுருங்குகின்றன என்று பல தடவைகளில் ருசுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகலின் டாக்டர் மூர் (Dr. Moore) நமது நகரங்களில் ஜனங்கள் பருகும் நீரில் நிறைந்துள்ள அஸ்திஜ்வரம் விஷபேதி முதலான நோய்களை வளர்க்கும் நுண்ணிய பரமாணுச் சிற்றுயிர்களை நசிப்பிக்க இவ்விதமான தாம்ரத்தையே பிரயோகித்தல் நலமென்கிறார்............இரசாயனச் சோதனைக்கு உபயோகிக்கும் கண்ணாடிக்குழல்களில் நீரை எடுத்தும், பெரிய தடாகங்களிலுள்ள நீரிலும் பலவிதமான சோதனைகள் செய்தார்கள். அஸ்திஜ்வரம் விஷபேதி முதலான நோய்களுக்குத் தாயாகும் பரமாணுச் சிற்றுயிர்கள் கோடானுகோடியாய்க் குடிகொண்ட ஜலத்தை நாலு ஐந்து மணிகளில் சுத்தஞ்செய்துவிடலாம். எப்படியென்றால் அந்த ஜலத்தை முதலே னிற்காலத்தில் அளந்து நீர் எவ்வளவு வெதுவெதுப்பாய் இருக்கிறதோ அவ்வளவு சூடேறச்செய்து, லக்ஷம் பங்கு ஜலத்துக்கு ஒருபங்கு தாம்ரமாகச் சேர்த்த திராவகத்தை அந்த அசுத்த ஜலத்திற் கலந்தால் பரமாணுச் சிற்றுயிர்கள் மரித்துப் போகின்



றன. இந்தியாவு போலீஸ் என்ற நகரத்தில் கடைசியாக வாந்திபேதி பரவியகாலத்தில், அந்நகராதிகாரிகள் அந்நகரவீதிகளையும் வீடுகளையும் துருசுகரைத்த நீரால் மெழுகி அந்நோயைத் துடைத்தனர். தங்கநாணயங்களிலும் வெள்ளிநாணயங்களிலும் நோய்ப்பரமாணுச் சிற்றுயிர்கள் மல்குகின்றன. தாம்ர நாணயங்களைக் கண்டமாத்திரத்தில் விஷபேதிப் பரமாணுச்சிற்றுயிர்கள் விலகுகின்றன...............நாற்றமெடுக்கின்ற குப்பைகள் சூழ்ந்திருந்தும் சீனர்கள் விஷபேதியால் மாள்வதில்லை! ஏனெனில் அவர்கள் தாங்கள் குடிக்கும் நீரைத் தாம்ரத்தொட்டிகளிலேயே வைத்திருக்கின்றனர்.

---

## உப்பை உபயோகித்தற்குத் தேகதர்ம நியாயங்கள்.

உணவிற்கு உப்பு வெகு அவசியமானதென்று அனைவருக்கும் தெரியும். எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாலு பருக்கையும் இரண்டு உப்புமாவது இருந்தால் போதும், மற்றவைகளைப்பற்றி அவசியமில்லை என்று சர்வ சாதாரணமாய்ச் சொல்லிக்கொள்வதை நாம் பலதடவைகளில் கேட்டிருக்கிறோம். உப்பில்லாத பண்டம் உளுத்துப் போவதுபோல் என்று பழமொழியாகப் பலர் உபயோகப்படுத்துவதையும் நாம் அறிந்திருக்கிறோம். அதேமாதிரி ஆங்கிலத்தில் 'உப்பில்லாத முட்டை' என்றால் உபயோகமற்றதும் ருசியற்றதும் என்று பொருள்படும். ஜனங்கள் மிருகங்களுக்குச் சமானராய் நாகரீகமென்பதேயில்லாது நடந்து வந்த காலத்தில் உப்பின் அவசியம் அவ்வளவாய்த் தோன்றியிராது.

புலி சிங்கத்தைப்போலவும் ஓநாய் சிறுத்தையைப்போலவும் பச்சை மாமிஸத்தைப் பதக்கென்று கடித்துத் தின்பதனால் அதற்கு உப்பு அவசியமிருந்திருக்காது. மாமிஸத்தை வேவித்துத்தின்னவும், காய்கறி பதார்த்தத்தைக் கண்டறிந்து தின்னவும் நாகரீகம் ஏற்பட்ட பின்னர் உப்பினுடைய பெருமையும் உப்பினுடைய உபயோகமும் உப்பினுடைய இன்றியமையா இயற்கையும் வெகு நன்றாய்த்தெரியவந்தது. இதனாலல்லவா, நம்மவர்கள் உப்புக்கும் உணர்வுக்கும் ஒருவித சம்பந்தம் உண்டாக்கினார்கள்? உப்புப்போட்டு தின்னவில்லையா, உணர்ச்சிகெட்டவனே! என்று நம்மவர்கள் பலர் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோமல்லவா? உப்பைப்

போட்டுத் தின்றுவிட்டால், உணர்ச்சியில்லாத மிருகத்தன்மை பூண்ட நிலைமையிலிருக்கிறோமென்றும், பகுத்தறிவுண்டாய் மனிதத்தன்மை மேலும் மேலும் விகசித்துக்கொண்டு வரும்போது உப்பைக்கட்டாயம் உபயோகிக்க நேரிடுகிறதென்றும் மேற்கூறிய பழமொழிகளின் பொருளாகிறது.

இந்த உப்பினுடைய உபயோகம் யாது என்று நாம் யோசிக்குங்கால் அது பலவிதமாகிறது. நாவில் ஊறுகிற ஜலத்திற்கு 'ஸலைவா' என்று ஸைன்ஸ் பெயர். இந்த 'ஸலைவா' ஜலத்தால், நாம் சாப்பிடுகிற உணவை நன்றாய் ஊறவைத்து மென்று விழுங்கச் சாத்தியப்படுகிறது. மேலும் நாம் சாப்பிடுகிற உணவு நன்றாய் ஜீரணிப்பதற்கு மிகவும் ஏற்ற கருவியாய் இந்த ஸலைவா விளங்குகிறது. உப்பு நாக்கில் படுவதினால் நாக்கு நரம்புகள் மீது தாக்கி, 'ஸலைவா' என்னும் உமிழ் நீர் அல்லது எச்சில் என்று சாதாரணமாய்ச் சொல்லும் ஜலத்தைப் பெருக்குகிறது.

'உப்பில்லாத பண்டம் உளுப்பதுபோல்' என்று அடிக்கடி நாம் சொல்கிறோம். உப்பில்லாவிட்டால் பண்டம் கெட்டு அழிந்து கேடுண்டாய் விடும். அதைத் தின்பதினாலும் உடம்பிற்கு எவ்வளவோ கெடுதியும் சம்பவிக்கும். இதனாலேயே ஊறுகாய் முதலியவைகளுக்கும் நாம் உப்பிட்டே வைக்கிறோம். பல்லிடுக்குகளி லகப்பட்டுக்கொண்ட சாதம் அல்லது கறித்துணுக்கைகள் கெட்டுப்போய் துர்நாற்றம் எடுக்காமலிருக்கும்படிக்கும் உணவிலிட்ட உப்பே அதைக் காக்கிறது.

இரைப்பையில் ஜீரணத்திற்கு வேண்டிய முக்கிய கருவிகளாயுள்ளது, 'காஸ்ட்ரிக் ஜ்யூஸ்' என்னும் ஒருவித ஜலம்போன்ற வஸ்து. இது எவ்வளவு மிகுதியாயும் நல்ல ஸ்திதியிலுமிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நம் ஆகாரம் ஜீரணமாய் நமக்குப் பசியெடுக்கும். அது எவ்வளவுக் கெவ்வளவு குறைவாயிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஜீரணமின்மையும் பசிக்குறைவும் நேரிடும். இதைத்தான் நம்மவர்கள் வயிற்றில் அக்கினியென்றும், பசி தீபனம் என்றும் சொல்லுவார்கள். வயிற்றில் என்ன போட்டாலும் பஸ்பமாய் விடுகிறதே, கல்லைத் தின்று கல்லைச் செரிப்பித்துக் கொள்கிறேனே என்று நம்மவர்கள் குறிப்பாகச் சொல்வது இந்த 'பசிதீபனத்திரவம்' என்று சொல்லக்கூடிய 'காஸ்ட்ரிக்ஜ்யூ'ஸையே காட்டும். உப்புக்கும் இதற்கும் மிகவும் சம்பந்தம் உண்டு. உப்பினால் பசிதீபனம் அதிகமாக உண்டாகிறது.



மேலும் குடலில் உணவு நாசமடைந்து அழுகி துர்நாற்ற முண்டாகிக் கெட்டவாயுக்களாகி யாதொரு கெடுதி செய்யாதிருக்கவும் உப்பே ஒத்தாசை செய்கிறது. இரத்தத்திலுள்ள தசையிலுள்ள சில வஸ்துக்கள் தக்கபடி ஜலத்தில் கரைந்து சேர்வதற்கும் உப்பே காரணமாயிருக்கிறது.

வாந்திபேதி முதலிய கொள்ளைநோய்க் காலங்களில் உப்பை அதிகமாய் உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்வது வழக்கம். இதனால் ஜீரணசக்தி மிகவும் விருத்தியாவதோடும், வயிற்றில் கெட்ட வாயுக்கள் சேராமலும் உண்ட உணவு கெட்டுப் போகாமலு மிருப்பதற்கு ஏதுவுண்டாகும். இதனால் தான் கொடிய வாந்திபேதிக்காலங்களில் உப்பை அதிகமாய் உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்வது. ஹாலண்டு தேசத்தில் குற்றவாளிகளுக்கு உப்பில்லாமல் தீனிபோடுவது ஒரு பெருத்த தண்டனையாயிருந்ததாம். அந்த குளிர்தேசத்தில் உப்பில்லாததினுடைய பலன் வெகு நன்றாய்த் தெரிந்ததென்று சொல்லப்படுகிறது. வயிற்றில் போன உண்டியெல்லாம் புழுவாக மாறி கணக்கு வழக்கில்லாமல் அவைகள் பெருத்து உடம்பைத்தின்ன ஆரம்பித்து விட்டனவாம். இதனால், குற்றவாளிகள் பட்ட இம்சை இவ்வள வெவ்வளவென்று சொல்ல முடியாதாம். 'உப்பில்லாப் பண்டம் உளுத்துப் போகும்' என்பதுபோல் 'உப்பில்லா உடலம் ஒன்றுக்கும் உதவாது' என்னும் உண்மை ஹாலண்டு என்கிற உலாந்த தேசத்தில் நன்றாய்க் காட்டினது போலும். சென்ற 1870–71 இந்த வருஷங்களில் ஜர்மன் தேசத்துப் படைகள் போராடப்போயிருந்தபொழுது பகைவர் தேசத்தில் அச்சேனைக்குச் சிறிதும் உப்பு அகப்படவொட்டாமல் செய்து விட்டார்கள். அப்பன் மாண்டால் அப்பன் அருமை தெரியும்; உப்பில்லாவிட்டால் உப்பின் அருமை தெரியும் என்று ஒரு பழமொழியுமுண்டு.

---

## பாண்டியம்.

மதுரைச் "செந்தமிழ்" பத்திராசிரியரான ஸ்ரீமான் திருநாராயணையங்காரவர்கள் தமிழ் மொழிக்கு ஒரு புதிய லிபி யொன்று கண்டுபிடித்திருக்கின்றார். இங்கிலீஷ் பாஷையிலே அச்செழுத்து லிபி (A. a.) என்றும், கையெழுத்து லிபி (a.) என்றும் இருவகையுள்ளன. அதுபோலவே தமிழ் லிபியிலும் ஒரு புதுத்திருத்தம் கற்பிப்பதற்கு இப்பாண்டியம் உபயோகப்படுமென்று நினைக்கிறோம். அச்செழுத்து லிபிக்கு தமிழில் ஏற்கனவே யுள்ள (அ. ஆ.) இந்த லிபியையும் கையெழுத்து

லிபிக்கு அடியில் பதிப்பிக்கப்பட்டுள்ள பாண்டியம் லிபியையும் கொண்டாலொன்றென்று தோன்றுகிறது. இங்கிலீஷ் கையெழுத்து லிபியைப் போலவே இப் பாண்டிய லிபியையும் விரைவாக எழுதிக்கொண்டுபோவதற்குக் கூடியவிதமாக அமைத்திருக்கும் சாதுரியம் பாராட்டற்பாலது. பாஷாபிமான பரோபகார பாக்கியவான் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களின் உதவியைக் கொண்டு இது முடிக்கப்பட்டதாதலின் இதற்குப் பாண்டியம் எனப் பெயரிடப்பட்டதென்று அறிகிறோம். அவ்வாறு செய்தமை பொருத்தமுடையதேயாகும். இப்பாண்டியம் முழுமையுமே இத்துடன் சேர்த்தனுப்பப்படவேண்டுமென்பது நமது உத்தேசமாயிருந்தும் அதற்கு சாத்தியமில்லாமற்போனபடியால் நமது நண்பர்களின் மனத்திருப்திக்காக அப் பாண்டியம் லிபி இன்னவாறாகத்தான் அமைக்கப்பட்டிருக்கிறதென்பதை யுணர்ந்து கொள்ளும்பொருட்டு முக்கியமான சில எழுத்துகளின் உருவங்களைக் கீழே பதிப்பித்திருக்கிறோம்.



அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ



க ச ஞ ட ண த ந ப ம ய ர ல



வ ழ ள ற ன ஜ ஷ ஸ ஹ க்க ங்க

இப்பாண்டியம் தனிப்புஸ்தகமாகப் பதிப்பிக்கப்பட்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்படுகின்றது. அதின் கிரயம் அணா நான்கு. இது அதிகமில்லையென்று நினைக்கிறோம். ஜனங்களுக்குள்ளே பரவவேண்டிய நூலாதலின் அரை அணா வைத்தால் பொருத்தமாயிருக்குமென்று தோன்றுகிறது. இதை நமது பார்வைக்கு விடுத்தமைக்கு நன்றி பாராட்டுகிறோம்.

---

## நிலக்கரி.

அநேகமாயிரம் [வருஷங்களுக்கு] முன்னே பூமியின் மீதிருந்த மரஞ் செடிகள் சிலகாரணங்களால் பூமிக்குள் புதைக்கப்பட்டு பூமிக்குள்



ளட்சில வேறுபாடுகளுண்டானதின் மூலமாக நிலக்கரியாகிவந்து பூமியின் கீழ் ஏற்பட்டது. நிலக்கரியானது மரஞ்செடிகளின் சேஷமென்பதை வெகு எளிதாய் ரூபிக்கலாம். நிலக்கரி வெட்டி யெடுக்கப்படும் சுரங்கங்களுட் சென்று சுரங்கங்களைச் சுற்றியும் சுரங்கங்களின் முகட்டையும் சற்று கவனித்துப் பார்த்தால் அங்கே மரங்களின் கொப்பு, இலை, கொடி, தழை, முதலானவை மூடியிருப்பதைத் தெளிவாய்ப் பார்க்கலாம். அல்லது ஒரு துண்டு நிலக்கரியை யெடுத்து அதில் லேசான தகடு ஒன்று சீவி அதை உற்றுப் பார்த்தால் அதில் கூட இலைகளையும் இலைகளின் நரம்புகளையும் தெளிவாய்க் காணலாம். நிலக்கரியிலிருந்துண்டாகும் வஸ்துக்களில் முக்கியமானது நிலக்கரிவாய்வுதான். இந்த வாய்வைக் கொளுத்தினால் வெகு பிரகாசமாக எரியும். கொளும்பு லண்டன் முதலான பெரிய பட்டணங்களில் தெருலாந்தர்களிலும் வீட்டு விளக்குகளிலும் இந்த வாய்வைத்தான் எரிக்கிறார்கள். இந்த வாய்வை நிலக்கரி யிலிருந்துண்டாக்குவது வெகு சுலபம்.

இந்தியாவிற்கு இயற்கையாயேற்பட்டுள்ள செல்வங்கள் ஏராளமானவை. இவைகளில் நிலக்கரியுமொன்று. இங்கிலாந்து தேசமொன்று தவிர, பிரிட்டிஷ் ராஜ்யமுழுவதிலும் நிலக்கரி உற்பத்தியில் முதன்மையாய் நிற்பது இந்தியாவே.

---

## பெண்களின் பிரிவு.

சிக்கந்தராபாத்தில் பிரசுரமாகும் ஓர் மாதாந்த ஹிந்துஸ்தானிப் பத்திரிகை கூறுகிறது.—ஸ்திரீ சிருஷ்டியைப்பற்றி ஓர் பூர்வகவி சொல்லுகிறதாவது,—எல்லாவித சடப்பொருள்களையும் ஓரிடத்தில் திரட்டி அவை அவிந்து புளித்தபின் உண்டான திரட்சியிலிருந்து பெண்களைக் கடவுள் சிருஷ்டி செய்தார். சிருஷ்டியான பெண் ஆத்மாக்கள் 10 வகையாம். (1) சதா அழுக்கடைந்தவைகளான பன்றிக்குச் சமானமானவர்கள் (2) அதிக சாமர்த்தியமுள்ள குள்ளநரிக்கு ஒப்பானவர்கள் (3) சதா சுறுசுறுப்பும் இடைவிடாது குரைத்துக்கொண்டிருக்கிற பெண்நாயைப் போன்றவர்கள் (4) சோம்பலாயும் விசாரமாயுமிருந்து சேற்றின் சுபாவமுடையவர்கள் (5) நிலைபற்ற குணமும், சேஷ்டையும் பெற்று கடலைப்போன்றவர்கள் (6) சோம்பலாயும், பிடிவாதமாயு

மிருக்கும் கணவனின் தூண்டுதலால் வேலைசெய்து வருவதால் பெண்கழுதையைப் போன்றவர்கள் (8) கணவனை விட்டோட முயற்சியும், மாய்மாலமும், கள்ளத்தனமும், நிறைந்து மார்ஜாலத்தைப் போன்றவர்கள் (8) வெளியாடம்பரமாய் கோவேறு கழுதையைப் போன்றவர்கள் (இவர்கள் தனிகர்களுக்குத்தக்க பொம்மைகளே யொழிய ஏழைகளுக்குப் பெரிய சனியன்களே) (9) முற்றிலும் அவலக்ஷணமும் சண்டாளத்தனமுமுள்ளவர்கள் (10) தேனீயைப் போலிருந்து கணவன்மாருக்கு மிக்க அதிர்ஷ்டத்தையுண்டாக்கத் தக்கவர்கள்.

---

## சட்டப்பிரயோகங்கள்.

புருஷனுடைய சொத்து விதவைக்கு ஸங்கிரமித்தபிறகு அந்த விதவை வியபிசார விருத்தியில் இருந்தால் அந்த சொத்தின் பாத்தியதை இழந்து விடமாட்டாள் என்று, அதாவது அந்த சொத்தை அனுபவிக்கலாம் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்.

ஒருவனுக்கு சொத்து சங்கிரமித்தபிறகு பைத்தியம் பிடித்த காரணத்தினால் அவனுடைய பாத்தியதையை இழந்துவிடமாட்டான் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்.

பிதுரார்ஜித ஸ்திதி பூர்த்தியாய் தனக்கு ஸங்கிரமித்தபிறகு ஒரு ஹிந்து மற்றொரு குடும்பத்துக்கு ஸ்வீகாரம் போகிறான். இந்த ஸ்வீகாரத்தினால் தன்னுடைய ஜனக (Natural father) குடும்பத்தில் மேலே சொல்லியபடி தான் அடைந்த சொத்தில் தனக்கு இருக்கும் பாத்தியதையைத்தான் இழந்துவிடமாட்டான் என்று, அதாவது இந்த இரண்டு குடும்ப சொத்திலும் அவனுக்கு பாத்தியம் உண்டென்று 1905-ம் வருஷத்தின் மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்.

ஒரு சூத்திரன் ஒரு தாசியை வைத்துக் கொண்டிருந்து இறந்துபோனான். அந்த வைப்பாட்டி அவன் இறந்தபிறகு மேற்



படியானுடைய வார்சுகளின் பேரில் ஜீவனாம்சத்துக்கு வழக்கு தாக்கல் செய்தாள். அந்த தாசி ப்ரபுருஷனுடைய அதாவது அயலானுடைய முகத்தைப் பாராமல் பதிவிரதைபோல் இருந்தால், அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியதென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்.

வெளி ஜில்லாக்களில் அமுலில் இருக்கும் முனிசிபல் ஆக்டு 63-வது பிரிவு, இன்னும் இதர பிரிவுகளின் படிக்கு வீட்டுவரியானது வருஷாந்திர வரியென்றும், சௌகரியத்துக்காக இரண்டு கிஸ்திகளாய் செலுத்தப்பட வேண்டியதாக விதி யேற்பட்டிருக்கிறதென்றும், வீட்டுவரி போடப்பட்ட பிறகு மேற்படி வீட்டை வாங்கினவன் அந்த வருஷம் பூராவரியைச் செலுத்தவேண்டியதென்றும், தான் வீட்டை வாங்கினதற்கு முன்னமே கிஸ்தி வாயிதா கடந்துவிட்டாலும் கடந்துபோன கிஸ்தியை மேற்படி வாங்கினவனே செலுத்தவேண்டுமென்றும், ஒரு கிஸ்தி வரியை வீட்டை விற்றவனிடத்திலேயும், இரண்டாவது கிஸ்தியை வீட்டை வாங்கினவனிடத்திலேயும் இந்த மாதிரி கிஸ்தியைப் பங்கிட்டு ஆசாமிகளிடத்தில் வசூல் செய்யவேண்டிய நிமித்தம் முனிசிபாலிட்டியாருக்கு வேண்டியதில்லையென்றும் மதராஸ் ஹைகோர்ட் ஜட்ஜி மணி அய்யர் அவர்கள் இப்பால் தீர்ப்பு செய்திருக்கிறார்.

கலியாணகாலத்தில் புருஷனுக்குக் கொடுக்கப்பட்ட ரொக்க திரவ்யம் அவிபக்த குடும்ப சொத்து ஆகாதென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் இப்பால் தீர்ப்பு செய்திருக்கிறார்.

பர்த்தாவும் குமாரர்களும் குடும்ப சொத்தை பாகித்துக் கொள்ளும்பொழுது ஒரு ஸ்திரீக்கு விடப்பட்ட சொத்து ஸ்திரீதனம் (Sreedhan) ஆய்விடுகிறது. அந்த சொத்து அந்த ஸ்திரீக்குப்பிறகு அவளுடைய குமாரத்திகளுக்கே ஸங்கிரமிக்கிறது; குமாரர்களுக்கு ஸங்கிரமிக்காது என்றும், அந்தத்தாயாரானவள் தன் பாகத்துக்கு வந்த ஸ்திதியை அடைமானம் வைக்கலாமென்றும், அவள்பேரில் ஆயிருக்கும் டிக்கிரி பாக்கிக்காக அவளுடைய பாகத்தை ஜப்தி செய்து ஏலம் போடலாம் என்றும் அலஹாபாது ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

ஒருவனுக்கு இரண்டு பெண்டுகள். அவன் இறந்தான். அவனுடைய ஆஸ்தியை மேற்படி இரண்டு விதவைகளும் பங்கிட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு விதவையும் தன் பாகத்திற்கு வந்த ஸ்திதியைப் பராதீனம் செய்யலாம் என்றும், அந்தப்பராதீனமா

னது அவள் ஜீவதசை வரையில் மட்டும் செல்லும் என்றும், அவள் இறந்தபிறகு அந்த பாகம் மற்ற விதவைக்கு ஸங்கிரமிக்கிறதென்றும் பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

---

## நானா தேச விசேஷம்.

ஜெகந்நாதம் கோவில் 652 அடி நீளமும், 644 அடி அகலமும் உள்ளது. கோபுரத்தின் உயரம் 192 அடி. இந்த ஸ்தலத்தில் ரதோத்ஸவந்தான் வெகு விசேஷமானது. இங்கு வசிக்கும் ஜனங்களுக்கு ஊரியர்கள் என்று பெயர். அவர்கள் பேசுவது ஒடியா பாஷை. இதை ஒட்டிரபாஷை, ஊரியா பாஷை என்று சொல்வதுமுண்டு. இந்த ஜெகந்நாதம் கடகம் டிவிஷனைச் சேர்ந்தது. இங்கு ஜெயப்பூர், கள்ளிக்கோட்டை, தாரகோடா, மந்தாஸா, பர்லாகிமிடி முதலிய ஜமீன்களுண்டு. மேலே கூறிய ராஜ்யங்களெல்லாம் மலைப்பிரதேசங்களாயும், பார்ப்பதற்கு வேடிக்கையாயுமிருக்கின்றன.

பர்மா:—பர்மியர்களுக்கு மதாபிமானம் கிடையாது. இந்து ஸ்திரீகளைக் காட்டிலும் பர்மிய மாதர்கள் அழகிற் சிறந்தவர். ஆனால் கற்போ நிச்சயமில்லை. அந்நியர்களை ஆதரிப்பதில் அதிக ஆர்வமுள்ளவர்கள். பெரிய மட்சால்களில் மீனையும் இடையிடையே உப்பையும் கொட்டி மூடி பூமியில் 3-மாதம் புதைத்தெடுத்து அம்மாமிசங்கள் நிறைய இருக்கிற புழுக்கள் சகிதமாக உரலிற் போட்டு இடித்து அதில் ஊறிய தண்ணீரை வேறாக எடுத்துக் கொள்வர். இதற்கு நம்பி என்று பெயர். இதைப்பர்மியர்கள் நெய்யைப்போலக் கருதி எல்லா பதார்த்தங்களுக்கும் உபயோகப் படுத்துவர். பாம்பைக் கண்டால் உடனே தலையை வெட்டிவிட்டு பாம்புக்கறி சமைத்து விடுவார்கள். மனித ஜீவன் ஒன்றுபோக மற்றதெல்லாம் அவர்கள் வயிற்றுக்குத்தான். பர்மிய ஸ்திரீகளைப் புருஷ அவதாரமென்றே சொல்லவேண்டும்.

புங்கிகள்:—புங்கிகள் என்றால் இன்னதென்று நம்மவர் அறியார். இந்துக்களில் ஸந்நியாசிகள் போல, பர்மியரில் புங்கிகள். பர்மியர்களுக்குள் ஒவ்வொரு குடும்பத்தாரும் முதலிற் பிறந்தது ஆணானாலும் பெண்ணானாலும் அதைப் புங்கியாக்கி விடுவது அவர்கள் நியமனம். ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்கள் முதற்பிள்ளையைப் புங்கியாக்கினால் இந்த புங்கிகளின் தொகை சொல்லவும்வேண்டுமா? இந்தப் புங்கிகளை ஆதரிக்க எத்தனை பாங்கி (Bank) களிருந்தாலும் போதாதுதானே!



கோரியா தேசம்:—பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலியவற்றின் மீது அதிக நம்பிக்கையுண்டு. இங்கு மாதர்கள் முகத்தை மட்டும் மறைத்துக் கொள்வார்களேயன்றி மார்பின்மேல் துணி போடமாட்டார்கள். விவாகம் நிச்சயமானவுடன் மணப்பெண் தன் புருஷனைப் பாராமலிருக்கும்படியாகக் கண்ணிமைகளில் ஒருவிதமான கோந்து போட்டு ஒட்டிவிடுவார்கள். கோரியாவின் ஜனத்தொகை 1,20,00,000 என்று சொல்லப்படுகிறது.

---

## கர்னல் ஆல்காட்.

கர்னல் ஆல்காட் அமெரிகாவிலே 1832-ம் வருஷம் பிறந்து கல்வியிலும், திறமையிலும் மிகுந்தவராகிச் சிறிது காலம் பத்திராசிரியராகவும், சிறிது காலம் படைத்தலைவராகவும், விசாரணையுத்தியோகஸ்தராகவும் இருந்து மிக்கப் புகழ்வாங்கினார். பிறகு ருஷியாவிலே உயர்ந்த குடும்பத்திலே தோன்றி வளர்ந்த பிளாவட்ஸ்கி அம்மை என்ற மாது தனது இனத்தாரை விட்டுப் பிரிந்து தேசங்கள் தோறும் சுற்றித்திரிந்து சித்துத்தொழில்களிலேயும் ஞானவித்தைகளிலேயும் பயிற்சி கொண்டவளாகி அமெரிக்காவுக்கு வந்தவிடத்தில் அங்கே கர்னல் ஆல்காட்டுக்கும் அவளுக்கும்பழக்கம் ஏற்பட்டது. அவ்விருவர்களுமாகச் சேர்ந்து 1875-ம் வருஷத்திலே தியஸாபிகல் சங்கத்தை ஸ்தாபித்தார்கள். அப்பால், அவர்களின் சபையின் நோக்கங்கள் சரியாக நடப்பதற்கு இந்தியாவே நல்ல இடமென்று அவர்களுக்குத் தோன்றிவிட்டபடியால் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள். 1891-ம் வருஷத்திலே பிளாவட்ஸ் அம்மை இறந்து போய்விட்டாள். அதற்கப்பால் மிஸஸ் பெஸாண்ட் அம்மையைத் துணையாகக்கொண்டு மரணகால வரை, கர்னல் ஆல்காட் அந்த சபையின் அபிவிருத்தியின் பொருட்டு மிகுந்த பிரயாசை யெடுத்திருக்கிறார். இப்போது இந்த தேசத்தில் (அதிலும் முக்கியமாக சென்னை மாகாணத்தில்) தியஸாபிகல் சங்கம் இவ்வளவு பலமாக நிற்பதற்கு கர்னல் ஆல்காட் செய்த முயற்சி கொஞ்சமன்று. இவருக்கப்பால் சங்கத்தலைமை மிஸஸ் பெஸாண்ட் அம்மைக்கே கொடுக்கப் பட்டிருக்கிறது. கர்னல் ஆல்காட் இறந்தவுடனே அவருடைய பிரேதம் வெகு கவுரவத்துடன் கொண்டு எரிக்கப்பட்டது. ஹைகோர்ட் ஜட்ஜி

சுப்பிரமணிய அய்யர் முதலிய பிராமணர்கள், பவுத்தர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எத்தனையோ ஜனங்கள் சென்றிருந்தார்கள். பிரேதத்தைச் சுமந்து சென்றவர்களிலே 6 பேர் பிராமணர்களென்று மிஸஸ் அன்னி பெஸாண்ட் எழுதியிருக்கிறார். காலஞ்சென்ற கர்னல் ஆல்காட்டின் தியாஸபி சம்பந்தமான கோட்பாடுகளைப்பற்றி எத்தனையோ அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. என்றபோதிலும், இவருடைய மனோபலம் சரீரதிடம், தயாகுணம் முதலியவற்றை எல்லோரும் ஒருங்கே புகழ்ந்து பேசுவார்களென்பதில் சந்தேகமில்லை. இவரை சூக்ஷ்ம லோகத்திலிருந்து ரஜபுத்ரவேஷம் கொண்ட கூட்ஹூமி என்ற மஹாத்மாவும், வேறு பல மஹாத்மாக்களும், பிளாவட்ஸ்கி அம்மையும் சூக்ஷ்ம சரீரிகளாக வந்து கர்னல் ஆல்காட்டை அழைத்துச் சென்றதாக மிஸஸ் அன்னிபெஸாண்ட் அம்மை எழுதுகின்றார். இது முற்றிலும் வடிகட்டின பொய் என்கின்றார் ஒருசாரார்.

---

## சிலாசாஸன ஆராய்ச்சி.

நமது நண்பர் பண்டிதர் T. S. இராஜம் ஐயர் அவர்கள் "திருச்சிராப்பள்ளியின் புராதன விருத்தாந்தங்கள்" என்ற ஒரு புஸ்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கின்றார். அதினால் சரித்திர பூர்வகமான பல விஷயங்கள் தெரியவருகின்றன. தாசில்தார் ஆபீசின் பின்புறத்திலும், கார்னேஷன் தோட்டத்தின் மத்தியிலும் காணப்படுகிற குளங்கள் சரித்திர சம்பந்த முள்ளவைகளென்று தோன்றுகிறது. அவை விசுவநாத நாயக்கரால் கட்டப்பட்டதாயிருக்கலாமோவென்றும் உத்தேசிக்க நேர்கின்றது. மங்கம்மாளால் கட்டிவைக்கப்பட்ட தர்ம சத்திரங்களின் கெதி எல்லாம் அதோகெதியே. அநேகம் இடிந்துபோயின. தெய்வபலத்தால் இடியாமலிருக்கிற சத்திரங்களில் பிராமணோத்தமர் சோற்றுக்கடை வைத்து ஆதரித்து வருகின்றனர். இதை நிதர்சனமாய்க் காண விரும்புவோர் மதுரை ரெயில்வே ஸ்டேஷனுக்கு எதிரேயுள்ள மங்கம்மாள் சத்திரம் என்னும் பட்டபெயருடன் விளங்குவதைப் பார்த்தோருக்கு அதிகம் சொல்லவேண்



டியதில்லை. திருச்சியில் அவளால் ஸ்தாபிக்கப்பட்ட ஹால், உத்திரங்களின்றி கட்டப்பட்டு சப் மேஜிஸ்திரேட் ஆபீஸோடு விளங்குகின்றது. அதற்கே இப்பொழுது டவுன்ஹால் என்று நாமதேயம்.

பின்னும் இப்புஸ்தகத்தில் சோழசேர பாண்டியர்களின் பிரஸ்தாபங்களும், பல்லவ அரசர்களைப்பற்றிய குறிப்புகளும் அடங்கிக்கிடத்தலால்; அது சம்பந்தமான சில புதிய விசேஷங்கள் 1905—1906-ம் வருஷத்து சிலாசாஸன பரிசோதனை ரிப்போர்ட்டிலே ஸர்க்கார் சிலாசாஸன பரிசோதகராகிய மிஸ்டர் வெங்கய்யா அறிவித்திருக்கிறார்; அது இந்த சந்தர்ப்பத்திற்கு மிகவும் பொருத்தமுள்ள விஷயமாயிருக்கிறது. சோழ ராஜனாகிய ராஜேந்திர சோழன் I என்பவனுடைய காலத்தினவாகிய சில திருவாலங்காட்டுச் சிலைபெழுத்துக்கள் கிடைத்திருப்பதே இவ்வருஷத்தில் மிகவும் அருமையானதென்று கருதப்படுகின்றது. உறையூர் விஜயாலய சோழனே முதலில் தஞ்சாவூரைப் பிடித்தானென்று ஓர் சிலை பெழுத்தால் தெரிகிறது. இவன் மகன் ஆதித்யசோழன் I என்பவன் கங்கபல்லவ அரசனாகிய அபராஜிதனை வென்று அவனுடைய நாடுகளையும் கைப்பற்றிக் கொண்டான். இவன் காலத்திலே தான் பல்லவ அரசு கடைசியாக வீழ்ச்சி பெற்றது. ஆதித்ய சோழனுடைய மகன் பராந்தகச் சோழன் I கி. பி. 907-ம் ஆண்டிலே பட்டம் பெற்றான். இவன் இலங்கையையும் மதுரையையும் வென்று சிதம்பரத்திலே ஆலயத்திற்குப் பொன்னைப் பணிசெய்வித்தான். இவன் வழியிலே தோன்றிய பராந்தகச் சோழன் II என்பவனையே ஜனங்கள் மனுவின் அவதாரமாகத் தோன்றிய சுந்தரசோழன் என்று கூறுவர். இச்சோழன் இறந்தபோது இவன் மனைவியாகிய வானவன் மாதேவியார் என்பவள் தானும் உடன்கட்டை ஏறி விட்டதாக அறிகிறோம். இவனது மகனாகிய ஆதித்தியன் II மதுரைப் பாண்டியராஜனைக் கொன்று மதுரையிலே வெற்றிக் கம்பம் நாட்டினான். இத்துடன் பல்லவ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் சோழ மன்னர்களே அதிபர்களாய் விட்டனர். ஆதித்தியனுடைய சகோதரர்களில் ஒருவனாகிய ராஜேந்திர சே

தீனில், புத்த தேவரிருத்தற்காக இந்திரனால் நிருமிக்கப்பட்ட ஆசனமொன்று இருந்ததென்றும், அத்தீவதிலகை யென்னும் தெய்வமங்கையால் காக்கப்பட்டிருந்ததென்றும், தன்னைத் தரிசித்தோர்க்கு அவர்களுடைய பழம் பிறப்பில் நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்துத் தன்னுடைய தெய்வத்தன்மையைப் புலப்படுத்தியதென்றும், அதனால் பலதேயத்துமுள்ள பௌத்தர்களால் வணங்கப்பட்டு வந்ததென்றும் மணிமேகலையால் தெரிகின்றன.

---

## முன்னோக்கிச் செல்லுதலும் புராதன நாகரிகமும்.

முன்னோக்குக்கொண்ட எத்தேசமும் அன்னியரைப் பார்த்துக் கற்றுக்கொள்வது சகஜம். ஆதியில் கிரேக்குஜாதியார் இந்தியரையும் அரேபியரையும் பார்த்துக்கற்றுக்கொண்டார்கள். ரோமானியர் கிரேக்கரைப்பார்த்துக் கற்றுக்கொண்டார்கள். கிறிஸ்துவரான ஸ்பெயின் தேசத்தார் மகம்மதியரான மூர்ஜாதியாரைப்பார்த்துக் கற்றுக்கொண்டார்கள். ஸரஸேனியரைப் பார்த்து ஐரோப்பிய ஜாதியார் மத்தியகாலத்தில் ஷிவல்ரி என்கிற க்ஷத்திரிய தர்மத்தைக் கற்றுக்கொண்டு அதை ஒரு ஸ்தாபனமாக்கி அநுஷ்டித்து வந்தார்கள். தற்காலம் ஹிந்துக்களாகிய நாம் மேல்நாட்டாரைப்பார்த்து எவ்வளவோ புதுமைகளைக் கற்று வருகிறோம்! புதுமைகளை ஏற்க இணங்காமல் பூர்விக அநுஷ்டானங்களையே தற்காலத்திலும் பின்பற்றிவந்த சைனா தேசத்தாரின் கதியென்ன? ஆகலால், அயலாரைப் பார்த்துக் கற்றுக் கொள்வதில் நன்மையேயொழிய தீமையில்லை. ஆயினும் அந்தந்த ஜனங்களுக்கு ஆதிகாலமுதல் இயற்கையால் அமைந்து வந்த நாகரிகம் அப்போதைக்கப்போது உசிதமாய்த்தோன்றும் புதுமைகளால் உருமாறுவது அவசியமல்ல. ஜப்பான்தேசம் எவ்வளவு விஷயங்களில் அன்னியரைப்பார்த்து அப்போதைக்கப்போது உசிதமெனத் தோன்றுவனவற்றைக் கற்றுக்கொண்டாலும் அப்படி கற்றுக்கொண்டவற்றை யெல்லாம் அத்தேசத்தார் தங்கள் நாகரிகத்தில் அடக்கிக்கலந்து அந்த நாகரிகத்தைப் புதுப்பித்துக் கொள்வார்களேயன்றி மாற்றிவிடமாட்டார்கள்.

## பரிமளா.

ஓர் நுட்பு அறியும் இனிய தமிழ் நாவல்.

பிரஜாநுகூலன் பத்திராதிபரவர்களால் வெளியிடப்பட்டது. 42 அத்தியாயங்களும் ஏழ் படங்களும் ஒன்று சேர்ந்து அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. முதற்பதிப்பு 1907-ம் வருஷத்தில் வெளியாயிற்று. அப்பதிப்பின் இரண்டாயிரம் பிரதிகளும் செலவழிந்து இரண்டாவது பதிப்பு வெளியிடப்பட்டிருப்பதே இப்புத்தகத்தின் சிலாக்கியத்தை நன்கு விளக்கும். கதை பாஷை ரூபமாய் அதிக இனிமையாய் எழுதப்பட்டிருக்கிறது. வங்காளத்தில் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி எழுதிய இப்பரிமளத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து சந்தோஷப்படுங்கள். விலை அணா 40.

# பிரஜாநுகூலன்.

இச்சிறந்த மாதாந்தரப் பத்திரிகை 1904-ம் வருஷமுதல் நடந்து வருகிறது. தடவைதோறும் சித்திரப்படங்கள் உள்ளதாய் சுமார் 40-பக்கங்களுடன் உயர்ந்த கடிதத்தில் நல்ல விஷயங்களோடு வெளி வருகின்றது. பிரதி தடவையும் சுவை ததும்பிய கதை ஒன்று காணலாம். ஒவ்வொரு தடவையும் ஆயிரம் பிரதிகள் வரை அச்சிடப்பட்டு தமிழ்நாடுகள் முழுமைக்கும் அனுப்பப்படுகிறது. வருடசந்தா ரூ 1—4—0 தான. வெகுகாலமாக நடந்து வரும் பத்திரிகை. பிரியத்துடன் ஆதரியுங்கள். மாதிரி பத்திரிகைக்கு 2- அணா ஸ்டாம்பு அனுப்பாமல் கார்டுமட்டும் எழுதுகிறவர்கட்கு பத்திரிகை கண்டிப்பாய் அனுப்பப்படமாட்டா தென்பதைக் கவனிக்கவேண்டுகிறோம். வெளிநாடுகட்கு ரூபாய் 1—8—0.

பிரஜாநுகூலன் பத்திராதிபரவர்கள் இயற்றிய
பிரபஞ்ச விலாஸம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புஸ்தகம் 1 | ஆசையின் முடிவு | .... | 0 | 0 | 9 |
| „ 2 | சகாத யுக்தி | .... | 0 | 0 | 3 |
| „ 3 | இராஜேந்திர ரத்தினம் | .... | 0 | 2 | 6 |
| „ 4 | புராதன திரிசிரபுரம் | .... | 0 | 1 | 0 |
| „ 5 | வித்தியாசவேதம் | .... | 0 | 14 | 0 |
| „ 6 | ஜனகா மோஹனசாதுரியம் | .. | 0 | 5 | 0 |
| „ 7 | நாகரீக பாரிஜாதம் | .... | 0 | 4 | 0 |
| „ 8 | சுகுமார திலகம் | .... | 0 | 2 | 0 |

எல்லா விபரங்களுக்கும் பின் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

**எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,**
பிரஜாநுகூலன் பத்திராதிபர், திரிச்சிராப்பள்ளி.